T.8.21

ஓம்

சரவணபவ:

சிதம்பரதேவர்சரிதம்.

இஃது

சென்னை ஸிவில் மெடிகல் ஸர்விஸ்

சப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்

வி. எஸ். அருணாசலப்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1911

விலை ரூபா 1.

[Copyright Registered.]

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
17	21	நான்	நாள்.
25	30	எதிர்பார்த்திருந்தனர்	எதிர்பார்த்திருந்தனள்
43	25	சொல்லுவதுபோலத	சொல்வதுபோலத்
77	5	கலைகிரனே	கலைகிறனே
120	23	உபஸ்தன்	உபஸ்தம்
118	3	நடந்	நடந்து
136	9	இராஜ்ஜிபத	இராஜபத
149	24	பிரகாசத்தல்	பிரகாசத்தில்
,,	30	எனப்படுவது?	எனப்படுவது.
168	22	வேலைகளிலொன்று.	வேலைகளிலொன்று,

Preface.

—:o:—

The object of the writer is nothing more than to place before the general novel reader an idea of some spiritual thoughts, such as What was he before? What is he now? and What will he be hereafter? in the attempt to satisfy his appetite for superficial reading.

Of late, Tamil Novels of higher character have been brought out on the western lines to attract the attention, and simplify the valuable time, of the reader, from the pen of even eminent scholars, and each of them has for its object some morals to teach: but, many lack much in character to turn the reader's mind to something supreme.

The writer has not the slightest intention to pretend to claim any practical knowledge of the subject treated herein, and he may be pardoned for mixing up the principles of Vedantha Philosophy with the ordinary novel reading, in as much as the teaching of the principles of the former, is intented to be in the sole keeping of the sages of practical realization: and as such the reader is advised to look for the higher circles to realize any object of his search, if such be the lot of this little volume, to awaken in his mind, an idea of that nature.

The book is also intented to contain some lessons to show how unity can exist between brothers and sisters, devotion and loyalty in the ruled, sympathy, righteousness and affection in the rulers, shrewdness, dexterity, and faithfulness in servitude &c, the merits and demerits of which the reader is left at liberty to judge.

The writer thanks warmly the authors of "Kaivalya Navaneetham," "Sapthaprakaranam", "Yoga Gnanubhava Deepika", "Vichara Sagaram" &c. to which he had to make frequent references and from some of which he had to take extracts.

V. S. A. P.

முகவுரை.

இப்பரதகண்டத்தில் தற்காலம் நமது பூர்வீக நாகரீகம் ஜீரணமடைந்தும் மேனாட்டோர் நாகரீகம் அபிவிர்த்தி பொருந்தியும் வருவதற்கேற்ப அதிற் பழக்கமுற்ற நமது வித்வசிகாமணிகளிற் சிலர் மேனாட்டோர் நடவடிக்கைகளை யனுசரித்து அநேக நூதன கதைகள் கற்பிதஞ் செய்துளர். அவைகள் நன்னெறி நற்செய்கைகள் பல போதிக்கினும் அவைகளை வாசித்து ஆனந்தமடையும் மாந்தர்கள் தம் தம் ஹிருதய சுயம்பிரகாச நோக்கத்தை நாட முயற்சிகொள்ள இடங்கொடா திருக்கின்றன.

இச்சிறுகதை நட்பு, ஐக்கியம், இராஜஸேவை, பிரஜாபாலனம் முதலிய சில நீதிகளை யுணர்த்துவதுடன், நமது தேகத்தை அபிமானித்துப் பிரவர்த்திக்கும் நமது தேஹி யார்? எங்கேயிருந்து வந்தவன்? எங்கே செல்பவன்? என்பவைகளை யாராய்ந்து பார்க்க இச்சை விளைவிப்பதற்காக இயற்றப்பட்டது. இதில் குற்றங்களிருக்கினுஞ் சான்றோர் அவைகளைப் பாராட்டாது சீர்திருத்தி அங்கீகாரம் பண்ணும்படி பிரார்த்திக்கின்றனன்.

வா-சு-அ-பி.

Introduction.

"Forward, till you see highest. Humen nature is devine"-Tennyson.

The object of the author of this philosophical novel is very well expressed by the trite saying quoted above. There are numerous works in Tamil, some highly philosophic and captivating only those learned minds who desire to study the principles of Vedantha, others couched in the most poetic style attracting the attention of the dreamer, who is poet and philosopher at the same time. But none has attempted till now to teach the principles of the Vedanta by means of a simple interesting and instructive story. The credit of teaching philosophy by means of a novel is due to Mr. Arunachalam Pillai, whose maiden attempt at novelising is sure to commend itself to the public. Though the tone of the novel is philosophical from the beginning to the end yet the work dose not lose its charm as a novel, as an interesting narative of the History of the ancient native chiefs who were ruling the Indian Provinces in times of yore. The style is simple and grammatical and the book is worthy to be read even by the sister sex. While affording recreation and pleasure to children, the philosophical portion of the book serves as an important guide to a student of the Vedantha. All the principles have been clearly explained and the path of realisation correctly sketched.

The philosophic idea runs throughout the plot even from the beginning to the end. As early as the first chapter, the author tries to show how the mind is easily beguiled by show and how it mistakes Maya for reality. As the plot devoleps, it is shown, the mind is not satisfied with the purely worldly pleasures but longs for something more stable and permanent. This longing gradually devoleps into a thirst to obtain that which is permanent, blissful and all knowing. To satisfy this thirst wisdom is necessary and wisdom is portrayed in the character of Chidambara Devar. But before wisdom sets in our lower intelligence and affection which are portrayed in the characters of the princess should vanish and so the marriage of the Princess are arranged and they are sent away to enjoy the worldly pleasures with their husbands. Apart from the lower intelligence called Buddhi and affection, other feelings which stand in the way of self-realisation, such as jealousy anger &c., have to be crushed. This crushing can only be done after a hard fight. In the midst of this fight wisdom for a time leaves the soul and as soon as wisdom vanishes everything becomes chaos and darkness. The soul is imprisioned and no way suggests itself for liberation. Then the effect of our good Karma performed in the past promises our regeneration. At this stage of the

mind's evolution the appearance of a Guru is essential and this leads to the regaining of wisdom which returns to the soul in a far purer form than what it originally was. Now true wisdom is regained only at the most critical stage when the soul becomes desperate in its persevering struggle at self-realisation and is about to be doomed for ever. This regaining of the wisdom is butifully represented in the sudden and the most opportune appearance of Chidambara Sekaran and Pugazhendi, when Kulasekara and Vikramasena were about to be murdered by the executioners. The regaining of wisdom leads to total annihilation of all the enemies and the kingdom *i-e* the kingdom of God is the final reward for all the sufferings and strenuous fight in which the soul was engaged.

At this stage too the absence of the guru is keenly felt and his presence is necessary to establish fully that faith in the great truths that are realised only now and then and to bless the soul with the previlage of iternal realisation. The Guru is introduced and the doubts of the disciple are fully cleared and the latter strictly adheres to the path, sketched out to him by the Devine Guru till he realises by his grace.

𑌸𑍍𑌵𑌯𑌮𑌸𑍍𑌮𑌿 𑌪𑌰𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑌿 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

"I am Myself, I am others, I am Brahman, I am the author of creation, I am the Guru to the whole world and I am the whole world and I am He" and "Death I fear not, caste I respect not, Father, Mother Nay even birth I know not, teacher and pupil I own not,—I am all bliss, the bliss of unconditioned consciousness."

The conception of the whole plot is nothing but philosophical and the execution doubly so. The more the thought is bestowed on the plot and great truths that are revealed in many chapters wherein the Guru instructs his disciples in the principles and practice of the Vedantha, the more are we absorbed in the study of this book. In this light the book excels every production of its kind and I am sure it will be welcomed by the young as well as the old and by the learned many, as well as the few real thinkers who hunt after the Devine one. Tat Sat.

K. V. RAMA RAO, B. A., L. T.,

சாற்றுக்கவி.

பாலக்காடு விக்டோரியா காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

T. வேலாயுதம்பிள்ளை.

வெண்பா.

தெருட்கூழ்க்கோர் துப்பாச் சிலதர்காள் கொண்மின்
பொருட்பேற மைந்த புகழ்சா—திருப்பேணெங்
காவலரு ஞசலமால் கான்ற சிதம்பர
தேவசரி தோதகத்தைச் சென்று.

ஓம்

சரவணபவாய.

கணேசன்.

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

திங்களங் கீற்றுச் செஞ்சடை விடங்கன்
  திரிபுர தகனனு மேசன்
பொங்கர வொளிர்பூண் புனைதழன் மேனிப்
  புண்ணியன் றருமருண் மதத்தெ
மைங்கரப் புனிதக் குஞ்சரப் பொருண்மெய்
  யாரணத்தாட்டுணை துணையாம்
மங்கல மியன்ற சிதம்பர தேவ
  வண்டமிழ் நூற்மைழத் தெழவே

முருகபிரான்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஆறுமுகத் தேவேயென் னாமிழ்தே கற்பகமே
  யரசே முன்னாட்
டேறுமுக மின்றுழன்ற புத்தேளிர்க் காச்சூர்ச்சாய்
  சீற்றத் துப்பின்
வீறுமுக வேற்குழகா நின்கமலச் சரணாணு
  மேவு நாயேன்
கூறுமுகத் தமிழ்சிறப்ப வருள்புரிந்து னன்பனெனக்
  குறித்தாள் வாயே.

நாமகள்.

கலித்துறை.

நற்றவ முற்ற கலைஞர்க ளுவி னடித்தியல்வாய்
சொற்றிற முற்ற வருண்மழை தூற்றெழி றேய்முகினேர்
பொற்றொடி சிற்றறி வாலிவ் வெளியேன் புகறமிழ்சேர்
குற்றம கற்றியாட் கோடிநின் பொற்றாள் குறுகினனே.

சிதம்பரதேவர் சரிதம்.

அத்தியாய அட்டவணை.

அத்தியாயம் :	1. உப்பரிகை	பக்கம்	1
,,	2. இராஜ சபை	,,	4
,,	3. அரண்மனைப் பள்ளியறை	,,	8
,,	4. விஜயசேகரன்	,,	13
	5. இரண்டு சகோதரர்கள்	,,	17
,,	6. காதல்	,,	22
,,	7. விக்ரமசேனன்	,,	26
,,	8. மகாசிவராத்திரி	,,	32
,,	9. ஸந்நியாசி	,,	39
,,	10. வேட்டை	,,	44
,,	11. இராஜகுமாரிகளுக்கு நேர்ந்த ஆபத்து ...	,,	50
,,	12. விவாஹம்	,,	54
,,	13. சிறைச்சாலை	,,	63
,,	14 புத்திரோற்பத்தி	,,	69
,,	15. தீர்த்தயாத்திரை	,,	75
,,	16. இராகத்வேஷாதிகள்	,,	82
,,	17. சதுஷ்பத வுபதேசம்	,,	89
,,	18. விக்ரமகேது	,,	93
,,	19. இரவிவர்மராஜன்	,,	98
,,	20. தத்துவ உபதேசம்...	,,	105
,,	21. குலசேகரப்பெருமாள் சிறைப்படுவது ...	,,	112
,,	22. தத்துவ உபதேசம் (தொடர்ச்சி) ...	,,	118
,,	23. விஜயன் சிதம்பரசேகரனைக் காண்பது ...	,,	127
,,	24. சிதம்பரசேகரன் மரணமுஞ் சீவோத்தாரணமும்		133
,,	25. பட்டாபிஷேகம்	,,	140
,,	26. சந்தேக நிவர்த்தி	,,	148
,,	27. சந்தேக நிவர்த்தி (தொடர்ச்சி) ...	,,	157
,,	28. கர்மம்	,,	162
,,	29. தேகம் நீங்கிய தேகியின் வரலாறு ...	,,	171
,,	30. சகுணோபாஸனை	,,	177
,,	31. முக்தி	,,	179

உ

ஓம் சரவணபவாயநமஃ.

சிதம்பரதேவர் சரிதம்.

ஒரு நூதன கதை

1. உப்பரிகை.

நீர்வள நிலவளம்பொருந்திய இப்பரதகண்டத்தில், மாதமும்மாரி வருஷித்து, யானைமுதல் எறும்பீறுகவுள்ள எல்லா ஜீவஜந்துக்களும், தங்கடங்கள் கர்மானுபவப்படி வசித்து, சுகதுக்கங்களை யனுபவித்து வருநாளில், பரசுராம க்ஷேத்திரமாகிய மலையாளதேசத்தின் பூர்வபாகமாகிய பாலைவனம் அல்லது பாலக்காடு என்னுந் திருநாட்டில், சற்சங்கம் சற்புத்தி மந்திரி சத்விஷயங்களோடு, இரப்பாருக்கில்லையென்னாமலும், சாதுக்கள் தம் வறுமை யறியாமலும், இளம்பருவ விதவையில்லாமலும், நல்லொழுக்கம் நன்னெறி நல்லோரிணக்க வழிபாடாய், ஆறிலொன்று கடமை யீந்து, சர்வஜந்துக்களும் மனங்களிக்க நாட்கழித்துவந்த பிரஜைகளுக்குத் தம் பூர்வ புண்ணியங்களெல்லா மோருருவா யமைந்தாற்போல், வணங்காமுடியேற்ற வீரசூரபராக்ரமசாலியாய்க் குலசேகரப்பெருமாளென்னுந் திருநாமமுடைய ஓர் நரேந்திரன், சக்கரவர்த்தியா யமைந்து, மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாதுகாத்திரட்சிக்குஞ் சற்குணத்தோடு, தன் பூச்சக்கரக் குடைக்கீழ் நீதிவழுவாது செங்கோல் நடாத்திவந்தான்.

அவ்வரசனுக்கு இந்திரசேனை யென்றும், சுமதிமாது யென்றும் இரண்டு பட்டமஹிஷிக ளிருந்தனர். இவர்களுக்குப் புண்ணியமே வுருக்கொண்டு வந்தாற்போல் அழகிற் சிறந்தும், கற்பிலுயர்ந்தும், மாதுர் பிதுர் குரு தெய்வபக்தி பெருகியும், தென்காசியென்னுங் கற்பாத்தி நதிதீரத்தில் வீற்றிருக்கும் விஸ்வநாதீஸ்வரனை, அனுதினம் வழிபட்டு வணங்கிவருஞ் சித்தவிர்த்தி யுள்ளவர்களாகியும், சகலகலைப்பயிற்சி யுடையவர்களாகியு மிரண்டு மாதுசிரோன்மணிக

ளான புத்திரிகளிருந்தனர். அரசன் புத்திரிகளினுடைய நற்குணங் களை யறிந்து, அவர்கள்மேல்வைத்த வாஞ்சையாற் புத்திரனில்லை யென்னுஞ் சோகங்கொஞ்சமேனு மில்லாதிருக்க, ஒருநாள், வசந்த காலத்திற் றங்களுப்பரிகையில் வழக்கப்படி ஆண்வேடந் தரித்து உல்லாஸமா யுலாவிக்கொண்டிருந்த, தன் புத்திரிகளைப் பார்த்துத் திகைத்து மிகுந்தகோபங்கொண்டு "இந்த வசந்தகாலத்தி லிவ்வளவு தைர்யமா யென்னரண்மனைக் காவலைக்கடந்து உப்பரிகையி லென் னுத்திரவின்றிப் பிரவேசித்து உல்லாசமா யச்சமின்றி யுலாவா னின்ற சிறுவர்கள் யாவர்? அவ்வுப்பரிகை யென்குமாரத்திகள் விளை யாடு மழகிய சிற்பவேலைகளமைந்த நவமணிமயமான மாளிகையா யிற்றே! அவ்விடத்திற்கு இச்சிறு கோமளமேனியையுடைய தீரர் கள் போகவேண்டிய காரணமென்னே?" என்று யோசித்து ஒன்றும் புரியாமற் றிடுக்கிட்டுத் தன் சேவகர்களி லொருவனை யழைத்து "அங்கு நமது உப்பரிகையிற் கொஞ்சமேனும் பயமின்றி யுலாவித் திரிகின்ற இரண்டு புருஷப்பசாசுகளை யிக்கண மிங்குகொண்டு வருக" என் றுத்திரவளித்தனன்.

சேவகன் றிடுக்கிட்டுப் பயந்து மறுமொழிசொல்ல வகைதெரி யாது அரசன் குறிப்பிட்ட மாளிகையி னருகிற்சென்று சற்றுயோ சித்து அக்கட்டடத்தின் படிவாயிலில் நின்று யாரேனுந் தனது திருஷ்டிக்கெதிர்படுவார்களாவென்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த் திருந்தான். அப்போது அங்கிருந்த தாதிகளிலொருவள் அச்சேவ கன் நோக்கத்தை யறிந்தவள்போல் வெளியில் வந்து "நீர் யாது காரணத்தாலோ அங்குப் படிவாயலிலேயே தடக்கென்றுவந்து திடுக் கென்று நின்றுவிட்டீர்?" என்று பரிகாசமாய்க் கேட்கச், சேவகன் படிவாயலைவிட்டுத் தாதியண்டை வந்து "அம்மணீ! அரசனுத்திர வின்படி யான் உப்பரிகைக்குப் போகவேண்டியிருக்கிறது; சற்று வழிகாட்டும்" என்றுவினயமாய்க்கேட்க, "உப்பரிகைக்கு இப்போது போவதுகூடாது" என்றும், "அப்படி யரசனுத்திரவிருக்குமாகி லெங் களுக்கு வழிகாட்ட வுத்திரவில்லை" என்றுஞ் சொல்லிச் சேவகனைத் தடுத்தாற்போ லுப்பரிகை வழியை மறைத்துத் தாதிநிற்கச் சேவ கன் கோபங்கொண்டு, "துஷ்டே! அரசனுத்திரவுக் கெதிருத்திரவு கூறுகிறாயா? வழிவிடுகிறாயா? இல்லையா" என் றதட்டிக்கொண்டு தன் சேவகத்தடியை யுறையினின்று மெடுத்தான். இதைக்கண்ட தாதி சற்றுங்கூசாம லவனுக்குத் தெரியாம லவனுக்குப்பின்புறமா கப் பூனையைப்போற் குதித்து அச்சேவகன் தடி கீழ்விழும்படியாக

வும், சேவகன் திடுக்கிட்டு அடிசாயும்படியாகவுந் தனது கையில்வைத் திருந்த ஓர் கயிற்றின லவனிரண்டு கால்களுக்கு மொருவிதச் சுறுக் கிட் டிழுத்தாள். இவையெல்லா மொரு கணப்பொழுதில் நடந்து விட்டபடியாற் சேவகனுக்கு யாதொன்றும் புலப்படாமற் போகவே, ஓவென்றலறி எழுந்திருக்கச் சக்தியற்றவனாய்த் தன்னுடைய கை வாளை யுருவிக் காலின் பந்தத்தைக் கண்டிக்க முயன்றான். கயிறறு பட்டா லென்னமுடியுமோவென்று தாதிக்குக் கொஞ்சமேனும் பயந் தோற்றவில்லையாகிலு மவ்வரவத்தை உப்பரிகையி லுலாவிக்கொண் டிருந்த இராஜபுத்திரிகள் கேட்டு, அதன் காரணந்தெரிந்துகொள்ளத் தங்களருகிருந்த தாதிகளி லொருத்தியை யனுப்பினார்கள். அவள் அக்கலகம் நடந்தவிடத்திற்குப் போகுமுன் அவ்வரண்மனை வேலைக் காரர்களும் "அவ்வரவமியாதோ. தெரிந்துகொள்வோம்" என்று அவ் விடத்திற்குச் சென்றனர். இதற்குட் சேவகன் றன்கால்பந்தத்தைக் கண்டித்து வாளாயுதத்தைத் தாதிக்கெதிரி லோங்கினான். அப் போது வேலைக்காரர்கள் நெருங்கி யவன்கரத்தை யசையவொட்டா மற் பிடித்துக்கொண்டு "நிராயுதராய் நிற்கும் பேதையரோடு போரா டும் வீரசிகாமணி யாவரோ?" என்று புன்சிரிப்புடன் வினவச் சேவகன் நாணமுற்று ஒன்றுஞ் சொல்லாமல் நின்றான்.

அப்போது இராஜகுமாரிக ளனுப்பிய தாதி படிவாயற் காவற் காரியாகிய தாதியைப்பார்த்து "அடீ மாணிக்கம்! என்ன அக்கிரமம்? நீயேனந்த ஆண்சிங்கத்திற்குக் கோபமூட்டிவிட்டாய்? நடந்ததைத் தெரிந்துவர நமதரசிகள் கட்டளையிட்டார்கள்" என மாணிக்கம் நட ந்த விர்த்தாந்தத்தை யொளியாமற்சொல்ல, அவைகளைத்தாதி யிராஜ புத்திரிகட்குத் தெரிவித்தாள். உடனே இராஜகுமாரிகள் அச்சேவ கனை யழைத்துவர வுத்திரவளித்துத் தாங்கள்தரித்திருந்த ஆண்வே டத்தை மாற்றி யெப்போது மிருப்பதுபோல் சேவகன் வரவை யெதிர்பார்த்திருந்தனர். சேவகன் வந்துபணிந்து இராஜவுத்திரவை வெளியிட்டு "இவ்விட முலாவிக்கொண்டிருந்த ஆண்மக்க ளியாவ ரோ" என்றிரங்கிக் கேட்கத் தந்தையின் குறிப்பறிந்து இராஜ புத்திரிகள் மகிழ்ந்து "யாங்களிருவருமே ஆண்வேடம் பூண்டு விளை யாடிக்கொண்டிருந்தோம்; அகல நின்று பார்த்த யெங்கள் தந்தை யென்ன சந்தேகங் கொண்டாரோ தெரிகிலேம்; நீ சென்று அவ் வாண்மக்கள் இதோவருகிறார்களென்று தந்தைக்குத் தெரிவிப்பா யாக" என்றுரைத்துச் சிவிகையை வரவழைத்து அதிலிருவரும் ஆண் வேடந் தரித்துச் சென்று கோபம்பூண்டு நிற்குந் தந்தையை வணங்

கினார்கள். அரசன் ஆனந்தபரவசமுடன் மக்களை வாரியெடுத்து முத்தமிட்டு மகிழ்ந்து "என்கண்மணிகாள்! நீங்கள் யாது காரணத்தால் ஆண்வேடங் கொண்டீர்கள்?" என்று வினவ, குமாரத்திகளிருவரும் "விளையாட்டாகத் தரித்துக்கொண்டோமே தவிர வேறொரு காரணமுமில்லை" என்று நயந்துரைத்தனர்.

அரசன் மக்களுக்கு விடைகொடுத்தனுப்பித் தன்னிருப்பிடஞ் சென்று, பட்டமஹிஷிகளினந்தப்புரம்போய் நடந்ததைச் சொல்லித் தன்னரசாட்சியைத் தனக்குப் பின் பாதுகாக்கும்படி ஓர் ஆண்மகவின்றி வாழ்கின்றோமே; இவ்வாழ்வும் ஓர் வாழ்வோ என்று மிகுந்த சஞ்சலத்துடன் வருந்தினான்.

2. இராஜசபை.

விக்ரமசேனன்—முதன் மந்திரி.

விக்ரமசேனன்:—"வாருஞ் சேனாதிபதியே! வாருங்கள் சபையோர்களே! நமதரசனானவர் ஏகச்சக்ராதிபரா யாதொரு மனக்கலக்கமுமின்றி நீதி வழுவாது இராஜ்யபரிபாலனஞ் செய்து வருபவராயிற்றே! எல்லா ப்ரஜைகளின் மனுக்களைப் பிரதிதினமுந் தாமே மிகுந்த பச்சாத்தாபத்துடன் கேட்டு அவர்களிஷ்டப்படியும், தருமத்திற்கும் நீதிக்குஞ் சற்றேனும் பழுது வாராமலும், எல்லா விவகாரங்களையுந் தீர்ப்புச் செய்து, மூர்க்கனுக்குச் சாந்தத்தையும், துஷ்டனுக்கு நீதியையும் மூடனுக்கு ஞானத்தையும், துன்மார்க்கனுக்குச் சன்மார்க்கத்தையும்போதித்துப் பிரஜைகள் கொஞ்சமேனுந் தனது விசாரணையாலுந் தீர்ப்பாலும் வருந்தாமல் வழக்குத் தீர்த்துவிடும் புண்ணிய புருஷோத்தமராயிற்றே! இப்போது ஏறக்குறைய ஒருவாரமாய் இச்சபைக்கு வாராமலும் நாம் யார் சென்றாலுந் தரிசனந் தாராமலுந் தமது அன்பான புத்திரிகளாற்கூட ஆற்றமுடியாத துயரத்தையுற்று மனம் வருந்திப் பள்ளியறையைவிட்டு எழுந்திராமலிருக்கும் காரணமென்ன? "இந்த மஹா இராஜதானியின் எல்லாக் காரியாதிகளையும் என் மறுவுத்திரவு வரையில் நீயே பார்த்துக்கொண்டு யான் இராஜாங்க மேற்றுக்கொள்ளும்வரையில் நீதி வழுவாது அரசாட்சி செய்து வருவாயாக" என்று திருமுகமெழுதி யிவ்வேழையாகிய அடியேனுக்கு உத்திரவனுப்பினாரே; இது யாது காரணம்? குலசேகரப்பெருமாள் நடாத்தி வந்த சக்கர

வர்த்தித் தொழில் அவரது ஒரு அணுவுக்குக்கூட நிகரில்லாதயென்ஞலாகுமா? இந்த ஒருவாரமாய் நடந்துவரு மிராஜ நடவடிக்கைகள் அவர் கிருபையாலேயேயன்றி என்னாலல்லவே. இச்சபையிலென்னை விடப் பெரியோர்களும் மகான்களும் எவ்வளவுபே ரிருக்கிருர்கள். மகாதேவர் என்ன ஸாமான்யரா? அவர் யோசனைக்குஞ் சாமார்த்தியத்திற்கும் பகைவரை வெல்லவேண்டு முபாயங்களுக்கும் பிரஜைகளிடத்தி லவர்க்கிருக்கும் நட்புக்கும் அவரே உவமையேயொழிய வேறில்லையே.

இதோ சேனாதிபதி பராக்ரமசேகர ரிருக்கிருர். இவர் அரசனுக்குச் சிற்றப்பார் பிள்ளையும், அதிபராக்கிரமசாலியும், யுத்தத்திலெப்போதுஞ் சுபஜயமேயன்றி யபஜயம் நேரிடாமற் காப்பவரும், அதிக தைர்யசாலியும் பகைவரைத் தாக்ஷண்யமின்றி ஸம்ஹாரஞ் செய்து நமதரசனைச் சக்கரவர்த்தியாக்கி வைத்த புண்ணியருமல்லவா? இன்னும் விக்கிரமகேது, விஜயவர்ணர், கருணைசந்தரர், பாக்கியநாதர், பணமுடிச்சேவகர், ருத்ரசந்திரர், சுகுணசுந்தரர், விஜயவிக்கிரமர் முதலிய அனேகர் வித்வத்தன்மையிலு மிராஜ காரிய நடபாதிகளிலு மறிவுடையோர்களாயிற்றே! யானேவென்றால் இவ்விராஜவம்சத்திற் ஜனித்தவனுமல்லன்; நமதரசனுக்கு யாதொரு நன்மையுஞ் செய்தவனுமல்லன்; புத்தி சாமார்த்தியமுமில்லை; ஏறக்குறைய "ஓர் மூடசிகாமணி" என்று பேர்வஹிக்கத் தகுந்த மதியீனன் என்னை விப்பெருஞ் செல்வத்தை யனுபவிக்கவும் இராஜ செங்கோல் நடாத்தவும் முடியாது.

யான் செய்துவந்த இராஜாங்க மெப்படி யிருக்கிறதென்றால்—சிம்ஹசிங்காசனத்தில் எலியுட்கார்ந்ததுபோலும், வித்வசபை நடுவில் மூடன் அக்கிராசனம் வஹித்ததுபோலுமிருக்கிறது. ஆகையால் நாமெல்லோரு மொன்ருகச் சேர்ந்து நமது இராஜாவினது பள்ளியறை சென்று அவர் இராஜ்யபாரத்தை வஹித்து முன்போல் அரசாட்சி செய்யவேண்டுமென்று முறையிட்டுக்கொள்வோம். உங்கள் அபிப்பிராய மென்ன?" என்று வெகு வினயத்தோடு வினவினன்.

இரண்டாவது மந்திரியும் பொக்கிஷாதிகாரியுமான மஹாதேவ ரெழுந்து "ஐயனே! அரசனின்றிச் சபையிலிருப்பது ஓரழகாயிராமற்போயினும் இராஜப்பிரதிநிதியாகிய தேவரீரைவிட இங்கு இராஜாங்கத்திற்கு யோக்கியமானவர் யாவர்? ஸற்குண ஸ்ாதுக்களானவர் தங்களை நிந்திப்பாரேயன்றித் தங்கள் குணத்தையும்

பெருமையையும் புகழ்ந்து சொல்வதுமுண்டோ? பிரஜைகளுக்கும் மற்ற எல்லாப் பரிவாரங்களுக்கும் இராஜனிடத்திருக்கும் பக்தி விஸ்வாஸந் தங்களிடத்திலு மிருப்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. அரசன் மனோசஞ்சல மடைந்திருக்கிறாரே யென்னுமோர் வியாகுலமேயன்றி அவர் இராஜகாரியாதிகளிற் கொஞ்சமேனும் பழுது வருமெனுஞ் சங்கை இவ்விட மிருப்பவர்களி லொருவருக்கு மிவ்வொருவாரமா யில்லையென்பதற்கு ஐயமில்லை. தவிர, இப்படியே யொரு யுகமட்டு மிராஜாங்கந் தங்களாதீனத் திருக்கினும் நாளுக்கு நாள் விர்த்தியடைந்து வருமேயன்றி அதன் பிரதாபங் குன்றாது. ஆகிலும் நமதரசனது மனக்கலக்கந் தீரும்படி செய்யவேண்டிய முயற்சிகளைவையோ அவைகளை யினியொரு விநாடியேனுந் தாமதமின்றிச் செய்யவேண்டி யிருக்கிறது. ஆனாலவர் யாதுகாரணத்தால் வியாகுலம் பூண்டாரென்று தெரிந்துகொள்ள வேண்டும்" என்றுரைத்துத் தமதெதிரிலிருக்கும் பராக்ரமசேகரனைப் பார்த்தார்.

பராக்ரமசேகரன்—தனக்குள் விக்ரமசேனன் றன்னைச் சுட்டிக் காட்டிச் சொன்னதுந் தான் இராஜனது வம்ஸஜாதனாய்ச் சகோதர ஸ்தானத்திற் சேனாதிபதியா யிருந்துந் தன்னையரசன் மறந்து தனததிகாரத்தை ஒரு மந்திரிவச மொப்புவித்துத் தன்னை யம்மந்திரிக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்தனனே! யென்றும், இம்மந்திரி தனக்கு வாய்த்த இந்த அற்பநாள் செல்வத்தைப் பெரிதாகவெண்ணி யிராஜசகோதரனாகிய தன்னைக் கொஞ்சமேனும் மதியாமலிப்படிச் சபையார்கள் தன்னை யிகழச் செய்வித்தன னல்லவா என்றும் யோசித்துப் பொறாமையுங் கடுஞ்சினமுங்கொண்டு தானெண்ணி யிருப்பதுபோல் தானாவது தன் குமாரர்களி லொருவனாவது இராஜாங்கத்திற்கு வரும்போது இம்மந்திரியைச் சிறையிலடைத்து அவன் கருவத்தை யடக்காமற் போவேனோ என்று பிரதிக்ஞை செய்து, வெளியில் தன்னைப்போ லிராஜபக்தியுடைய வுத்தியோகஸ்தர்க ளிருக்கிறார்களாவென்று பிறர் நினைக்கும்படி முகத்தை மலரச்செய்து எழுந்து முதன் மந்திரியைப் பார்த்துச் சொல்வானாயினான்:—

"ஓ விக்ரமசேனரே! நீரொன்றுக்குஞ் சஞ்சலப்பட வேண்டியதில்லை. உம்மைவிட இச்சபையில் இராஜப்பிரதிநிதியாயிருக்க யோக்கியதையுள்ளவர்கள் யாரிருக்கிறார்கள்? உம்மாலல்லவா அரசர் தன் பகைவரை வென்று ஏகச் சக்ராதிபரா யிருக்கிறார்; உமது ஏவற்படி

யே யான் யுத்தமுகம் போவதும் உமது யுக்திப்படியே ஜயம் பெறுவதுந்தவிர என்னாலிங்காவதென்ன? எல்லாமுணர்ந்த சுத்தவீராகிய நமதரசரும்மைத் தனது பிரதிநிதியாகச் செய்ததிலவருக்குப் பெருமையும் சிலாக்கியமுமேயன்றி வேறென்ன? இராஜ வம்சத்தார்க்கு உம்மிடத்திலிருக்கும் நம்பிக்கைக்கு அளவில்லை யென்பதற்கு இதுவே திருஷ்டாந்தம் நீர் ஓர் யுகமேனு மிப்படியே யிராஜவுத்திரவின்படி யிராஜாங்கம் வஹிப்பது எனக்கும் என் புத்திரர்களுக்கும் மற்றை யினத்தார்க்கும் பெருமையுஞ் சந்தோஷமுமே தவிர ஒருநாளும் பொறாமை யுண்டாகாது.

இச்சமயம் நமதரசர் வியாகுலமடைந் திருப்பதாகச் சொன்னீரே; அதைப்பற்றிச் சற்று யோசிப்போம். அவர் தனக்கு ஐஸ்வர்யங் குறைந்ததென்றும் பகைவராற் றுன்ப முண்டாயிற்றென்றுமல்ல. அவர் தன் பட்டத்தைத் தன் காலாந்தரத்திற் பரிபாலனம் பண்ணும்படி யோர் புத்திரனில்லாமற் போய்விட்டதே யென்னுஞ் சோகமேயா மென்று யெனது விசாரணையி லேற்பட்டது. இதற்குக் காரண மென்னவெனில், இராஜபுத்திரிகள் ஆண்வேடந் தரித்து விளையாடிக்கொண்டிருந்ததை யரசன்பார்த்துத் தனக்கு ஆண்மகவில்லாமற் போனதேயென்னு மாயாசமுண்டாய்ச் சோகத்தி லழுந்தினார்போலும். இதை நீக்கும்படி நாமெல்லோருஞ் சீக்கிரத்தில் முயலவேண்டும். அவர் ஏன் இதைக் குறித்து வியாகுலப் படவேண்டும்? அவருக்கு ஊர்வசி, திலோத்தமை யென்பவர்களை யொத்த இரண்டு புத்திரிக ளிருக்கிறார்கள். அவர்க ளழகெப்படியோ வப்படியே குணத்தையு முடையவர்களா யிருக்கிறார்கள். அவர்களி லொருவருக்காவது பட்டத்தைக் கொடுக்கக்கூடாதா? அல்லது அவர்களை நல்ல சுத்த வீரர்களுக்களித்து அவ்வீரர்களுக்கு இவ்வரசைக் கொடுக்கலாகாதா? அப்படி யில்லாவிடில் என் புத்திரர்களி லொருவனைச் சுவீகாரஞ்செய்துகொண்டு தனக்குப்பின் பட்டமாளும்படி செய்யலாகாதா? இப்படி யனேக மார்க்கங்களிருக்க அவர் புத்திரசோகப் படுவானேன்? நாம் யாவரு மரசனிடஞ் சென்று இச்சங்கதிகளைக்கூறி யவரைச் சமாதானம் பண்ணி அவர் வியாகுலத்தை நிவர்த்தி செய்வோமென்பது என் கருத்து" என்றான்.

விக்ரமசேனன்:—"ஆஹா பராக்ரமசேகரரே! நன்மையுரைத்தீர். நமதரசன் புத்திர சோகத்தால் வருந்துவானேன்? நீர் சொன்னபடி, செய்துகொள்ள அவருக் கெல்லாப் பாக்கியமு மிருக்கிறதே!

அப்படியொன்றுஞ் செய்யமுடியாமற் போயினும் பராபரக்கடவுளாகிய ஸ்ரீ பரமேஸ்வரரைக் குறித்துத் தவம்பண்ணிப் புத்ரபாக்யம் பெறலாமே" என்று சொல்லி மனந்தேறிச் சந்தோஷத்துடன் யாவரையும் பார்த்து "நமதரசனது சோகத்தை நிவர்த்தி செய்ய முயலுவோம்" என்றெழுந்தார். சபையோர் யாவரும் அவரெழுந்தவுடனே யெழுந்து அவர் முன்செல்லப் பின் சென்றனர். பராக்ரமசேகரன் விக்ரமசேனன் சொன்னபடி புத்திரோற்பத்தியுண்டாக வேண்டிய முயற்சிகளெடுக்கின் அவைகளை யெப்படியுங் கெடுத்துவிடவேண்டுமென்று தனக்குள்தானே தீர்மானித்துக்கொண்டு அவருடன் சென்றான்.

3. அரண்மனைப் பள்ளியறை.

இந்திரசேனை—"பிராணநாதா! புத்ரபாக்கியமில்லாத குறையை ஒரு குறையாக நமக்குக் கடவுள் செய்யவில்லை. நமது புத்திரிகளில் காந்திமதியைக்குறித்துச் சற்று யோசிப்போம். எல்லாக்கலைகளையுங் கற்று அஸ்திரசஸ்திரப் பிரயோகங்களும் பயிற்சி செய்து சத்துருவைச் ஜெயிக்கத்தக்க சாமார்த்தியத்தை யுடையவளா யிருக்கிறாள். அவள் என் குழந்தை யென்று நான் புகழ்வதல்ல. சந்திரலேகைதானென்ன அற்பமா? ஏதோ புத்திரவாஞ்சையாற் றேவரீர் அவர்களுக்குச் செய்வித்துவைத்த வித்யாப்பியாசத்தால் நாடெங்கும் புகழ்பெற்றிருக்கிறார்கள். சந்திரலேகை, காந்திமதியைப் போலவே ஸகலகலாவல்லமையிலும் மந்திர தந்திர யுக்தி சக்தியிலும் ஆயுதாப்பியாசத்திலும் பயிற்சியடைந்து தனக்கு நிகர் யாரிருக்கிறார்களென்று கர்ஜித்திருக்கிறாள். இந்தப் பாக்கியம் ஏகசக்கிராதிபதியாகிய தேவரீருக்கே தவிர வேறெந்த வரசனுக்கிருக்கிறது? அப்படி யிருக்கத் தேவரீர் இப்படி வியாகுலம் பூண்டு இந்த ஒருவாரமாய்த் தமதிராஜ்ய விசாரணையுமின்றி அன்னபானாதிகளுமின்றிப் பள்ளியறையைவிட்டகலாது சோகித்திருக்கிறீர்கள்; இதென்ன ஆச்சர்யம்? தேவரீர் சற்று சோகித்தால் எங்கள் தேகங் குலைந்துவிடுமே. இப்படி யதிக சோகமாயிருந்தால் நாங்க ளெப்படிச் சகிப்போம்? மனந்தேறுவீர்கள்; எழுந்திருந்து நித்தியக் கடனை முடித்துக்கொண்டு இராஜசபைக்கெழுந்தருளவேண்டும்; தேவரீர் வாஞ்சையாய்ப் பாதுகாத்துவரும் பிரஜைகள் எவ்விதா யிருக்கிறார்களோ? சபையோரெப்படி நமது காரியாதிகளை நடத்துகிறார்களோ; சற்று யோசியுங்கள்?"

சுமதிமாது:—"ஆஹா என் பிராணவல்லபா! அக்காள் இந்திர சேனையும் யானும் பிரதிதினமும் தேவரீருக்குத் தேறுதல் சொல்லி யுங் கொஞ்சமேனும் இரங்காம லிப்படித் தேகத்துக்கு வுபாதை கொடுப்பது சரியா? பெண் அரசு செய்ததாகக் கேட்டதில்லையா? மலைமகள் அரசுசெய்து திக்விஜயம் பண்ணவில்லையா? மதுரையிற் பாண்டியராஜன் புதல்வி சித்திராங்கி அரசுசெலுத்தவில்லையா? இன் னும் அனேகம் பெண்ணரசிகளிருந்ததாக நாம் தெரிந்திருக்கிறோமே? அப்படிப்போல நமது குழவிகளும் அரசியற்றுவதற்கு யாது தடை யிருக்கின்றது? அவர்களுக்குக் கல்விப்பயிற்சி போதாதென்றெண்ணு கிறீர்களா? அப்படி யொருபோதும் எண்ணவேண்டாம். அவர் கள் தினந்தோறும் ஆண்வேடம் பூண்டு ஒருவர்க்கொருவர் தங்கள் பயிற்சிகளை யபிவிர்த்திபண்ணி வருவதுமன்றி யுத்தகாலங்கள் நேரி டும்போது யுத்தமுகத்தில் ஆண்பிள்ளைகள் செய்வதுபோல் தங்கள் பயிற்சியின் சிறப்பை யெவ்வாறு காண்பிப்பது என்று ஒவ்வொரு தினமு மொவ்வோர் செய்கைகளைப் பழக்கப்படுத்தி வருகிறார் கள். இப்படியிருப்பதால் இராஜாங்கம் ஏற்றுக்கொள்ளப் புத்திர னில்லாமற் போயினதே யென்று தேவரீர் வருந்துவது சரியல்ல. ஒருத்தி யிராஜாங்க மேற்றுக்கொள்வதற்கும் மற்றொருத்தி மந் திரியாயிருப்பதற்கும் பயிற்சியுடையவர்களே தடையில்லை. தேவரீ ரெழுந்திருந்து சோகத்தை நீக்கி நடக்கவேண்டிய விஷயங்களைக் கவனிக்க வேண்டுகிறேன். சோகித்திருக்கின் ஆண்மகவைப் பெற்று ஆனந்த மடையலாமா? முயற்சியின்றி யாதுதான் நிறைவேறமுடி யும்:" என்று வினயமாய்ப் பேசி அடிவருடிப் புன்சிறிப்புடன் பாதத்தருகில் நின்றாள்.

அரசன் பஞ்சணையிலெழுந் துட்கார்ந்துகொண்டு மனைவிகளை நோக்கி "ஓ என்னிரு கண்மணிகளே! உங்களைப் பட்டமஹிஷிக ளாய்ப்பெற்ற எனக்கென்ன குறை? உங்களுடைய யுக்தி சாமார்த்தி யத்தாலல்லவோ நான் சக்கரவர்த்தியா யரசுபுரிகின்றனன்? உங்கள் கருப்பத்தி லுதித்த குழந்தைகள் அற்பமாய்ப்போமா? நீங்களிது வரையிலும் படித்துச் சொன்னவை யாவுஞ் சரியே, தடையில்லை. சோகித்திருப்பதிற் பிரயோஜனமில்லை? மூடவன் கொம்புத்தேனுக்கு இச்சிப்பது சரியா? நமது குமாரத்திகள் சத்துருக்களை வெல்லவும் இராஜாங்கம் வஹிக்கவுஞ் சக்தி யுள்ளவர்கள்தான், சந்தேகமில்லை. ஆயினும் ... ... (தடாக் தடாக் தடாக்).

இந்திரசேனை:—"யாரடி யங்கே கதவைத் தட்டுகிறது?"

புஷ்பகவல்லி:—"அம்மணீ! அடியேன் புஷ்பகவல்லி அனந்தம் வந்தனம்; மன்னிக்க வேண்டுகிறேன்."

இந்திரசேனை:—"புஷ்பகவல்லி! என்ன ஆபத்து? என்ன காரியம்? நீ சமயந்தெரிந்து நடப்பவளாயிற்றே; இந்தச் சமயத்தில் தகுந்த காரணமின்றி வரமாட்டாயே; என்ன விசேஷம்?"

புஷ்பகவல்லி:—"அம்மணீ! முதன் மந்திரி விக்ரமசேனர் மிகவும் பரிதாபத்துடன் இராஜஸேவை யவசியங் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றனர்; அவர் பரிதாபம் பார்க்கமுடியாமலிங்கு மிருந்த பயத்தோடு வரலாயிற்று; கட்டளையிட்டா லழைத்து வருகிறேன்."

அரசன்:—"விக்ரமசேனனை வரச்சொல்; தடைசொல்லாதே."

இந்திரசேனை:—"அப்படியே முதன் மந்திரியை யழைத்துவர மஹாராஜா உத்திரவாயிருக்கிறது போகலாம்" என்றாள்.

விக்கிரமசேனன்:—"மஹாராஜாவே! ஏகச்சக்ராதிபதியே! என் தந்தைக்குச் சரியான கருணையுள்ள அரசே! தெய்வமே! நமஸ்காரம்; அம்மையே நமஸ்காரம்."

அரசன்:—"விக்ரமசேனரே! எழுந்திருக்கவேண்டும்."

அரசிகள்:—"மந்திரி! எழுந்திருக்கவேண்டும்; வந்தனம் வந்தனம்."

விக்ரமசேனன்:—"அடியேனுக்குக் காட்சி கொடுத்தருளியது என்பாக்கியம்; நானிந்தச் சமயத்தில் இங்குவந்து தொந்தரவு செய்வதை மன்னிக்க வேண்டுகின்றேன்."

அரசன்:—"ஏது இவ்வளவு வியாகுலத்துடன் பள்ளியறை தேடிவந்து முகம் வாடிநிற்பது? என்னகாரணம்? என்னகாரணம்?"

விக்ரமசேனன்:—"தேவே! பள்ளியறைவிட்டு நீங்காமற் சோகமாய்க் கிடப்பது தெரிந்து இவ்விடத்திற்கேனும் வந்து தரிசனஞ் செய்வோமென்று வந்தேனே தவிர வேறொரு காரணமுமில்லை. ஆனால், தேவரீர் என்னன்னையர்களுடனிருக்கும் பள்ளியறைக்கு இவ்வேளை வரத்தகுமா? ஒருபோதுந் தகாது. மன்னிக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றனன்."

அரசன்:—"விக்ரமசேனரே! என் அரண்மனையில் நீர் பிரவேசிக்காதவிடமு முளவோ? வந்தகாரணத்தை விரைவாகச் சொல்லி என்னாற்றலைத் தீர்ப்பீராக."

விக்ரமசேனன்:—"ஓ மஹானுபாவா! எவ்வளவு பாக்கியவந்தனும் ஏகசக்கிராதிபனுமிருந்து அரசாட்சி செய்யினும் ஜீவகாலானந்தரம் நற்கதி கொடுக்க ஓர் புத்திரனில்லாவிடில் யாது பிரயோஜனம்? "புத்" என்னும் நரகத்திலிருந்து இரட்சிப்பவனாதலாலன்றோ "புத்திரன்" என்று மறைகள் கூறுகின்றன. அதற்கோர் புத்திரன்வேண்டுமென்ற சோகத்தால் தேவரீர் வருந்துவதாகத் தெரிந்து சபையோர் யாவருந் தேவரீர் தரிசனத்திற்காக வந்து வாயலிற் காத்திருக்கின்றார்கள். அடியேன் கருத்தென்னவெனில், சோகித்திருப்பதிற் பயனில்லை. நாம் வழிபடுகடவுளாகிய விஸ்வநாதீஸ்வரரை நோக்கி ஏகாக்ர சிந்தையாய்த் தவம்புரிந்து அவர் கிருபாகடாட்சத்தாற் புத்திரபாக்கியம் பெறலாமென்பது என் நம்பிக்கை. ஆகையால் தேவரீர் சோகத்தை யகற்றித் தவத்திற்கு முயலவேண்டு மென்பதே."

அரசன்:—"ஹே மந்திரி! உம்மைப்போன்ற நண்பனைப்பெற்ற எனக்குக் குறையாது? உள்ளதை உள்ளபடி யென்னெண்ணத்தை யறிந்து உரைத்துவிட்டீர். உமது யுக்தியே யுக்தி. "ஆஹா கங்காதரா! என் விக்ரமசேனருக்குச் சிரஞ்சீவித்வமளிப்பாயாக!" விக்ரமசேனரே! நீர் வருவதற்குமுன் என் நாயகிகள் எனக்குத் தேறுதல் சொல்லிவந்தனர். என் கண்மணிகளான புத்திரிகளுடைய வீரத்தையுந் தீரத்தையு மெடுத்துக் கூறினர். ஆனால் நீர்சொல்லிய நுட்பத்தையெடுத்துக்காட்ட நினைத்தேன். அதை யான் சொல்லுவதற்குப் பதிலாக நீரேவந்து விளங்க வுரைத்துவிட்டீர். ஆகையால் இனியான் உமதிஷ்டப்படி சங்கரஸேவை செய்யும்படி யென் பத்தினிகளுடன் முயலுகிறேன். நீர் சபையோரை யழைத்துக்கொண்டு சபைக்கேகுவீராக. யானுமிதோ நித்தியகடனை முடித்துக்கொண்டு சபைக்கு வருகிறேன்."

பராக்ரமசேகரன்:—பள்ளியறைக்கு வெளியிற் சந்தடியின்றி வந்து யாருக்குந் தெரியாமல் ஒளிந்துகொண்டிருந்து நடந்தவை யாவையுங் கேட்டிருந்தவன் தனதெண்ணம் நிறைவேறாது கண்டு "கேடுவருமுன் மதிகெட்டுவரும்" என்னும் பழமொழிக் கிணங்கத் தேகம் படபடவென்று நடுங்க மயிர் சிலிர்க்கப் பள்ளியறையினுட் புகுந்தான். இவனைக் கண்டவுடன் இராஜ பத்தினிகள் அச்சமுற்றுத்

திரைக்குள் மறைந்தார்கள். நுழைந்தவன் பரபரப்பாய் இராஜனைப் பார்த்துத் "தன்மையஞ்கிய என் சக்கரவர்த்தியே! ஏனிந்தவியாகுலம்? பிதுர் கர்மஞ்செய்ய என் புத்திரர்கள் மூவரிருக்கிறார்கள். தங்களுக்கு யாரிடத்திற் பிரியமிருக்கிறதோ அவனை ஸ்வீகாரஞ்செய்து கொள்ளலாமே? யார் தடைசொல்லக்கூடும்? பிள்ளையில்லாத அரசர்கள் அப்படிச்செய்வது உலகிலில்லையா? செல்காலமெல்லாஞ்சென்ற பின் ஏன் பிள்ளைவரத்திற்காகத் தவத்திற்குப் போகவேண்டும்? அப்படித் தவம்பண்ணினாற் புத்திரசந்தான முண்டாகுமா? ஒருபோது முண்டாகமாட்டாது. வீணாகத் தவவேடம் பூண்டு வருந்தவேண்டாம். ஒரு புத்திரன் போதாவிடில் மூன்றுபேர்களையும் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளலாம். இதையேன் விக்ரமசேனா நீ சொல்லாமற் போய்விட்டாய்?" என்றான்.

அரசன் சினந்து பராக்ரமசேகரனைப் பார்த்து "நீ யனுமதியின்றி உள்ளே நுழைந்ததுவே பிசகு. என் பத்தினிகள் என்னருகிலிருக்கிறார்க ளென்பதைக் கொஞ்சமும் யோசித்தாயில்லை. தவிர, பிறர்சொல்வதை மறைந்துநின்று கேட்பது உத்தமர்கட்கு அழகல்ல. உன் மனோ விகாரத்தை உன்னுடம்பும் முகமும் வெளியிடுகின்றன. கடவுள் யாவரையுங் காப்பவர். ஆகட்டும். சங்கரஸேவையா லெமக்குப் புத்திரோற்பத்தி யில்லாமற்போனால் உன் புத்திரர்களிலொருவனை ஸ்வீகரித்துக்கொள்ள யோசிப்போம். இப்போது இவ்விடம் விட்டகன்று சபைக்குப் போவாயாக" என்று மனவெறுப்புடன் சொன்னார்.

இவ்வாறு கடிந்துரைத்ததைக் கேட்ட சேனாதிபதி முதன் மந்திரியின் பிறகே சபையை நோக்கிச்சென்றான். அரசன் பத்தினிகளுடனெழுந்து பள்ளியறையை விட்டு நந்தவனஞ்சென்று சந்தன மரச்சோலையினிழலில் இரத்னபீடத்தில் வீற்றிருந்து யோசிக்கலாயினார். பராக்ரமசேகரன் எண்ணம் எவ்வித மிருக்கலாம். சிறிதும் அச்சமின்றித் தன்னைத் தனக்கே தெரியாமற் படபடப்புடன் பள்ளியறை நுழைந்ததும் நாம் சொன்ன பதிலினால் முகங்கறுத்து வியற்புற்றுப்போனதும் யோசிக்கையில் அவன் தன்மனதில் நமக்கு க்ஷேமத்தைக் கோரினவனாய்த் தோற்றவில்லை. தனது லாபத்தை யிச்சித்து அதை நிறைவேற்றுவதற்கு அவசரப்படுபவன்போலிருக்கிறதே" என்று தனக்குள்தானே சொல்லுவதைக் கவனித்துக்கொண்டிருந்த அரசிகள் அவரை வணங்கி "ஐயனே! மனந்தளராதீர்கள்.

அவர் தன் குமாரர்களி லொருவருக்கேனுந் தங்களுக்குப்பிறகு இரா ஜாங்கத்தை யெப்படியும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வெகு காலமாய் முயற்சி பண்ணிவருகிறார். இன்றைக்குத்தான் உள்ளும் புறமுமாய் வெளியிட்டார். ஜகதீஸ்வரனுகிய ஸ்ரீசாம்பமூர்த்தியைக்குறி த்துத் தவம்பண்ணினு லொருவேளை ஆண்மகவு உண்டாய்விடுமோ என்று வெருண்டு தன்னெண்ணத்தை யவ்வளவு அவசரமாய் வெளி யிடவந்தார். எப்படியும் அவர் நமது க்ஷேமத்தைக் கோரினவராகத் தோன்றவில்லை. நிஜமே. தேவரீர் அவர் விஷயத்திற் சாக்கிரதையாக வே யிருக்கவேண்டு மென்பது எங்கள் பிரார்த்தனை" என்றனர்.

அரசன் தனக்குள் அவனைச் சேனுதிபதியாய் வைத்திருப்பது பெரும் பிசகென்று தீர்மானித்துப் பத்தினிகளை நோக்கி, "ஏதோ நம்மாலானமட்டும் பார்ப்போம்; கடவுள் கிருபை யெப்படி யிருக் கின்றதோ தெரியாது; ஆயினும் சாம்பமூர்த்தியைப் பஜித்துத் தவம் பண்ணுவதற்கு நீங்களிருவரும் ஏகாக்ர சிந்தையர்களா யின்று முதல் என்னுடன் விரதமனுஷ்டிக்கவேண்டும்; விஸ்வநாதரைப் பிர தக்ஷிணஞ்செய்து அனுதினமுந்தரிசித்து நமது குறைகளைச்சொல்லி முறையிட்டுக்கொள்வோம்; அப்பராபரக்கடவுள் கிருபை செய்வார்; அப்படியின்றி நாட்டைவிட்டுக் காட்டிற் சென்று தவம் புரிவதற்கு இப்போது நமக்குச் சரியான காலமாயில்லை" என்று கூறினுர். பத் தினிகள் அதற்கிணங்க யாவருமரண்மனை சேர்ந்து சோமவாரவிரத மனுஷ்டிக்கலாயினர்.

4. விஜயசேகரன்.

இராஜவீதியில் அரசனரண்மனைக்கருகில் பன்னிரண்டாவது மூன்றுநிலை மாளிகையான ஓர் கிரகத்தின் மூன்றும் மாளிகையில் இரகசியமான ஓர் சிறிய அறையில் உட்கார்ந்துகொண்டு வியாகுலத் துடன் தனது ஜேஷ்டபுத்திரனுகிய சோமபாலசேகரனைப் பார் த்து "ஓ குமாரா! நமதிஷ்டம் இன்னும் நிறைவேறவில்லையே. உங்களி லொருவனையாவது ஸ்வீகாரஞ் செய்துகொண்டு இராஜ் யத்தை நமது சந்ததிக்குக் கொடுத்துவிடுவான் குலசேகரனென்று நினைத்திருந்தேனே; அன்று இராஜசபையில் அவ்விக்ரமசேனன் என்னை அவமதித்துப் பேசினதுமல்லாமல் இராஜனுக்குப் புத்திரா பேட்சையையு முண்டுபண்ணிச் சங்கரஸேவை செய்து புத்திரனைப்

பெறவேண்டிய ஏற்பாடுகள் பண்ணிவிட்டான்; நாமென்ன உபதேசம்பண்ணியுங் குலசேகரனென்னைக் கடிந்து அவமானம்பண்ணியனுப்பிவிட்டான்; இவையெல்லாம்உங்களுக்குத்தெரிந்திருக்கிறதே. இனிக்கடவுள் கிருபைசெய்து அவனுக்குப் புத்திரனையுங் கொடுத்துவிட்டால் நாம் செய்வது யாது? இதர வுத்தியோகஸ்தரைப்போல் நாமு மொவ்வோர் வேலைசெய்துகொண்டிருந்து காலஞ் செலுத்துவதுவோ நமது கதி? நீங்கள் மூவரும் யோசித்துத் தகுந்த யுக்தி சொல்லவேண்டும்" என்றான் பராக்ரமசேகரன்.

பிதாவின் முகத்திற் குறிப்பிடப்பட்ட வியசனத்தையும் அவனது மனதில் நடக்கும் விவகாரத்தையும் முற்றும் பார்த்துக் கவனித்துக்கொண்டிருந்த விஜயசேகரனென்னும் கடைசிப்புத்திரன் மிகவும் விசனமுற்றுத் தந்தையைப் பணிந்து மிகுந்த வினயபாவத்துடன் "ஓ பிதாவே! நீங்களெங்கள் விஷயத்தைக்குறித்துச் சிரமமெடுத்துக்கொண்டு வருந்துவதினாற் றேவரீர் தேகமிளைத்துப்போவதுமன்றிப் புத்தியானது ஸாத்விககுணத்தை நாடாது எப்போது மிராஜஸத்திலேயே நிற்கிறது. அதினாற் கதியடைவது ஒருநாளுமில்லை; வீணாய்க் கிடைப்பதற்கரிய இம்மானிட ஜன்மம் பாழாய்ப் போய்விடுகிறதே; என்னசெய்வேன்; "நடவாத தென்முயற்சி செய்யினு நடவாது நடப்பதென் றடைசெய்யினு மில்லாது" இதுசர்வசம்மதம்; பராபரக்கடவுள் தனது ஜ்வலிக்கின்ற அக்னிநேத்திரத்தின் உஷ்ணந்தணிந்து சாந்தமாயிருக்கவன்றோ கங்கையையுஞ் சந்திரனையுஞ் ஜடையி லணிந்துகொண்டிருக்கிறார்.

சாந்தத்தைத் தேடாது இராஜஸத்திற்கு உட்பட்டு அதின்வழியே செல்லுவதால் மனோதுக்கமும், புத்திரமித்திரகளத்திர நஷ்டமும் தனவிரயமும் பந்துநாசமும் தடையில்லாமல் நேரிடுவதன்றிக் கடைசியாய்க் கதியுமில்லாமல் நரகத்திற்குள்ளாக வேண்டுமென்பது சாஸ்திரோக்தமல்லவா? ஆகையால் கடவுள் விட்டபடி முடியட்டும்; 'நம்மா லாகவேண்டிய தொன்றுமில்லையென்று பகவத் சேவை செய்திருப்போம்; இந்தக் குலசேகரப்பெருமானைப்போலெத்தனைபேர் இராஜ்ய பரிபாலனம் பண்ணினார்கள்? அவர்களெல்லாம் இப்போது எங்கே போனார்கள்? "அவனிச்சையின்றி யணுவுமசையாது" என்ற பழமொழி கேட்டதில்லையோ? எங்களுக்கு இராஜ்யபாரம் பண்ணும்படிப்ராப்தமிருந்தால் அந்தப் பாக்யந் தானாகவேவரும்; அதற்காக நாம் ஸன்மார்க்கத்தை விட்டுத் துன்மார்க்க

மாக யாதொரு யோசனையுஞ் செய்யவேண்டியதில்லை. குலசேகரப் பெருமாளுக்குக் கடவுளருளால் ஒரு ஆண்மகவு உற்பத்தியாகுமானுல் நாம் மிகவும் களிக்கவேண்டியதல்லவா? அதைவிட நமது வம்ச விருத்தியுண்டாவதற்கு வேறென்னவேண்டும்? கடவுள் நமக்களித்திருப்பதே போதுமானது. இதை நல்லொழுக்கத்துடன் பாதுகாத்து வந்தாற் போதுமானதென்று என் புத்திக்குத் தோற்றுகிறது. பிதா இவைகளையெல்லாம் மறந்து சாதுசங்கஞ்செய்து நிஷ்களங்கமான பரப்ரம்மத்தை யடையும்படி தகுதியான முயற்சி தேடவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்; யான் சிறுவனென்று என் வார்த்தையை அங்கீகாரம் பண்ணுமல் தள்ளிவிடக்கூடாது என்னையனே!" என்று கண்கலங்கி முறையிட்டுக்கொண்டான்.

இதைக் கேட்டமாத்திரத்தில் கோமளாங்கசேகரன் கடுஞ்சினங் கொண்டு தன் தம்பியாகிய விஜயசேகரனைப் பார்த்து "அப்பா தகப்பன்சாமி! நீ யிருக்கு மிருப்பென்ன? உன்பேச்சின் வலுவென்ன? நீ இச்சிறு பாலப்ராயத்திலேயே இச்சையையெல்லாம் விட்ட பரம யோகியைப்போல் எங்கள்முன் பிரசங்கிக்கிருய்; நமது தந்தைக்குப் புத்தி கூறுகிருய்; மிகவும் அழகாயிருக்கிறது. பிஞ்சிலேயே பழுக்கலாகாது. அப்பா! உன் புத்தியைக் கேட்டு அதற்கனுசரணையாய் நடக்கத்தகுந்த துறவு எங்களுக்கு வரவில்லை. ஆகையால் நீ தயவுசெய்து அந்தப்புரம்போய் நமது தாயிடஞ்சென்று பாலருந்துவாய்" என்று புன்னகையுடன் தம்பியின் கையைப் பிடித்தெழுந்திருக்கச்செய்து போம்படி சைகை காட்டினுன்.

விஜயன் தந்தையையும் முதற்றமையன் சோமபாலசேகரனையும் பார்க்க அவர்கள் கோமளாங்கன் செய்கைகட் கனுகூலமா யிருக்கக் கண்டு "சிறுவன் சொல் இப்போது செவிக்கேருது" என்று உரைத்துக்கொண்டு அறையைவிட்டு வெளியிற் சென்று தனதிஷ்ட தேவரான முருகக்கடவுளைத் தியானித்து மனதைச் சரிப்படுத்திக் கொள்ளத் தன்னிருப்பிடஞ் சென்றுன்.

சோமபாலன்:—தந்தையை நோக்கி "பிதாவே! நீங்கள் இராஜாங்கம் நம்மைவிட்டுப் போமென்று கொஞ்சமேனுஞ் சந்தேகிக்க வேண்டாம். இப்போது முடியாவிட்டால் இன்னுங் கொஞ்சம் நாளிலோ வருஷங்களிலோ இந்தச் சக்கரவர்த்திப் பட்டம் நமது குடும்பத்திற்கே வரப்போகிறது. எப்படியென்றுல், குலசேகரப்

பெருமாள் இரண்டு பெண்களைப் பெற்றிருக்கிறார். அவர்களெவ்வளவு சாமார்த்திய முடையோராயினும் பெண்களல்லவா? அவர்களை வெல்வது ஒருநிமிஷம். அவர்களுக்கு விவாகம்பண்ணி யனுப்பிவிடுவதானுற் பிறகு நாம்தானே இராஜ்யம் ஆளவேண்டும்? நம்மைவிட்டுக் குலசேகரன் தன் மருமக்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்கக்கூடுமா? அப்படிக் கொடுப்பதானு லப்போது நமது புஜபலபராக்கிரமத்தைச் சற்றே யவர்களுக்குக் காண்பிக்கலாம்; பிர்ஜைகளும் மந்திரிகளும் சைன்யங்களும் நம்முடன் சேர்ந்துவிடுவார்கள்; அதற்குத் தடையில்லை; நம்மைவிட்டு இதரவம்ச அரசர்களான குலசேகரன் மருமக்களோடு சேரமாட்டார்கள்; குலசேகரனுக்குச் சிவபிரானருளால் ஆண் குழந்தை யுண்டானுல் அக்குழந்தை பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளும்வரையில் இக்குலசேகரனும் விக்ரமசேனனும் உயிரோடிருக்கப்போகிறார்களா? அப்படியிருந்தாலும் நாமென்ன சும்மாவிருக்கப்போகிறோமா? சேனைகளெல்லாம் நமது வசமாயிருக்கிறது; இதுமுதற் சைன்யங்களிடம் மிகப்பிரீதி காண்பித்து நம்மிடம் நம்பிக்கை யுண்டாகச் செய்துகொள்ளவேண்டும். இராஜாங்கத்திலிருக்கும் மந்திரிகளிற் சிலரை நமது வசப்படுத்திக் கொள்ளவேண்டும். இவை யாவும் குழந்தை உற்பத்தியாவதையும் பெண்களுக்கு விவாகமாவதையும் பார்த்துக்கொண்டு முயற்சிபண்ணுவோம். பிதா! யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம்'' என்றான்.

கோமளாங்கன்:—இதைக் கேட்டு மகிழ்வுற்றுத் தந்தையை நோக்கி "ஐயனே! தமையன் சொல்லுவது சரி. நம்மைவிட்டு இந்த இராஜாங்கம் எங்கே போகப்போகிறது? அப்படிச் சந்தேகம் வரும்படி யாதேனும் நடக்கில் இரண்டு பெண்களையும் இரண்டு சேவகர்களால் இரவில் ஊரெல்லையிலிருக்கும் பத்திரகாளிக்குப் பலியிடச் செய்வோம். ஆண்குழந்தை பிறந்தால் அவன் பட்டத்திற்கு வருமுன் அவனைக் கொலைசெய்துவிடுவதே தகுந்த யோசனை. குலசேகரப்பெருமாளையும் அந்த விக்ரமசேனனென்னும் அகங்காரியையுஞ் சிறையிலடைத்து யானே ஏகச்சக்ராதிபதியாய் இராஜ்யமாளுவேன். பிதா வொன்றுக்கும் பயப்படவேண்டாம். ஆனுல் அவசரப்பட்டுக் காரியங்களை முன்போற் சமயமறியாமல் வெளியிட்டுக் கெடுத்துவிடக்கூடாது. இன்னுஞ் சிறிதுகாலம் பொறுக்கவேண்டியிருக்கிறது; "பொறுத்தோர் பூமியாள்வார்" என்றன்றோ ஆன்றோர் கூறியிருக்கின்றனர். சேனாதிபதி உத்தியோகத்தைப் பிதாவிருக்கும்போதே

தமையனைவிட்டுப் போகாதிருக்கச் செய்வதொன்றே வேண்டுகின்றேன்" என்றுறுதியாகவும் பிதாமுகம் பிரஸன்னமாகும்படியாகவுங் கூறினான்.

பராக்ரமசேகரன் முதற்பிள்ளையின் யுக்தியையும் இரண்டாவது குமாரனது உறுதியையுங் கேட்டுச் சந்தோஷித்து "நமது குமாரர்கள் ஜாக்கிரதையாகவே யிருக்கிறார்கள். மிகவிவேகிகள்தான். நாம் அதிகப் பிரயாசைப்பட வேண்டியதில்லை" என்று ஒருவாறு தேறி மக்களை ஆலிங்கனம் செய்து முத்தமிட்டு மனம்பூரித்து மனக்கலக்கமின்றி இராஜசபைக்குச் சென்றான்.

புத்திரர்களிருவரும் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டு சந்தோஷமாய்த் தம்தம் முயற்சிகளை நாடிச் சென்றனர். விஜயசேகரனோவெனில், தான் எப்போதும் வாடிக்கையாய்க் கடவுளைத் தியானம்பண்ணி முறையிட்டுக்கொள்ளும் அறையிற்சென்று நிற்சலனமாயிருக்கும்படி தன்னாலானமட்டும் மனதை வசப்படுத்தப் பிரயாசைப்பட்டும் முடியாமல் அவ்வறையைவிட்டு வெளிப்பட்டுத் தந்தை தமையர்களிருக்கும் அறைக்கு மறுபடியுஞ் செல்ல, அங்கு அவர்கள் கபாடபந்தனம் பண்ணியிருப்பதைக் கண்டு அவர்களுட்கார்ந்திருக்குமிடத்திற்குச் சரியாய்ப் பின்புறத்தில் நின்று அவர்கள் பேசுவது முழுவதும் மனதைப் பூரணமாய்ச் செலுத்திக் கேட்டுக்கொண்டிருந்து விசனமுற்று "இப்பேர்ப்பட்ட நீசருடையபந்தத்தில் தந்தையென்றும் தமையனென்றும் நினைத்து எத்தனை நாள் காலங்கழிப்பது முருகா" என்று திகைத்துப் பிறகு மனந்தேறிக் "குலசேகரப் பெருமாளையும் அவர் குமாரத்திகளையும் குழந்தை உற்பத்தியாகில் அச்சிசுவையுங் கடவுள் கிருபையால் சர்வ ஆபத்தினின்றுங் காப்பது தனது கடமை" என்று உறுதிபண்ணிக்கொண்டு சந்தோஷமுடன் தன் தாயுடன் விளையாடப்போயினான்.

5. இரண்டு சகோதரர்கள்.

பரமார்த்தகேஸரி:—"வாராய் தம்பி புஜங்ககேஸரி! நீ நமது பிதா மந்திரியிடஞ் சொல்லியனுப்பிய சமாசாரங்களைக் கேட்டாயல்லவா? உன் உத்தேசமென்ன?"

புஜங்ககேஸரி:—"அண்ணே! உங்கள் உத்தேசமெதுவோ அதுவே என் உத்தேசமென்று தெரியாதா? எனக்கு அறிவு தெரிந்த

நாள்முதல் தங்களிஷ்டப்படியும் தாங்கள் நடந்துகொண்டுவரும் நடவடிக்கைக்கு அநுசரணையாகவும் எப்போதும் நடந்துவந்திருக்க இன்று என்னைப் பார்த்து உன் உத்தேசம் என்னவென்று பிரித்து உரைக்கலாமா?"

பரமார்த்தகேஸரி:—"ஆஹா அதற்கென்ன சந்தேகம். நாமிருவரும் ஒருவர்க்கொருவர் கொஞ்சமும் அன்னியமின்றி நடந்துவருகிறோம்; தடையில்லை. இது உலகசம்மதந்தான். தவிர நமது தந்தை அதைத் தெரிந்தே நமக்கு இப்பேர்ப்பட்ட சுபசமாசாரஞ் சொல்லியனுப்பியிருக்கிறார். ஆகிலும் உன் உத்தேச மிவ்விஷயத்தில் தெரிந்துகொண்டு பிறகு இதற்குவேண்டிய முயற்சி தேடவேண்டுமென்பது என் கருத்து."

புஜங்ககேஸரி:—"அண்ணே! அப்படி எந்த விஷயத்திலும் என்னை வேறாகப் பிரிக்கவேண்டாம். தங்களெண்ணத்திற்கு நானெப்போதும் மாறுபாடாய் நடவேன். மேலும் நமது தாயார் பிராணாந்த காலத்தில் நம்மிருவரையும் அழைத்துச் சொன்னதை மறந்துவிட்டீர்களா? எனக்குத் தாயின் கடைசியான உபதேசம் இப்போது உபதேசித்ததுபோலிருக்கிறது. அதாவது, "அப்பா புஜங்கா! நீ உன் தமயனை எக்காலத்திலும் இரவிலும் பகலிலும் யுத்தகளத்திலும் இராஜாங்கத்திலும் நன்மையிலுந் தீமையிலும் திரிகரண சுத்தியா யுன்னிஷ்ட தெய்வத்திற்கும் தந்தைக்குஞ் சமமாக எண்ணிக்கொண்டு அவன் கட்டளைகளைச் சிரசால் வஹித்துக் கொஞ்சமும் பிசகாமல் நடந்துகொண்டு அவனை உன் பிராணனைக் காப்பதுபோற் பாதுகாத்து வரவேண்டும். அப்படிச் செய்கிறேனென்று எனக்கு நம்பிக்கை செய்துகொடு" என்றார். நானும் அப்படியே நம்பிக்கை செய்துகொடுத்து அதற்கு யாதொரு குறைவும் வாராமல் நடந்துகொண்டுவருகிறேன். இனியும் என் பிராணனுள்ளவரையிலும் அப்படியே நடக்க யான் கடைமை பூண்டிருக்கிறேன். ஆகையால் கொஞ்சமுஞ் சந்தேகிக்காமல் தங்கள் மனதி லெண்ணியிருக்குஞ் சங்கதிகளைத் தயவுசெய்து வெளியிடவேண்டும்."

பரமார்த்தகேஸரி:—"ஆஹா என் துணைவா! தாயின் வார்த்தை எனக்கும் ஞாபகமிருக்கிறது. யாதென்றால்—"புஜங்கன் உன்னுடன் பிறந்த தம்பியாதலால் நீ அவனை உன்னுடலில் ஒரு அம்சமாக எண்ணி யாதொரு வேறுபாடுமில்லாமற் பாதுகாத்து வரவேண்

டும். அப்படி வாக்குக்கொடு" என்றார். நானுங் கேட்குமுன் வாக்களித்து நடந்துகொண்டு வருகிறேன். ஆனால் நாமெண்ணிய எண்ணமிதுவே. நாமிருவரும் மாறுவேடம் பூண்டு பாலவனஞ் சென்று குலசேகரப்பெருமாள் சக்கரவர்த்தியின் இரண்டு குமாரத்திகளையுங் கண்டு அவர்கள் நடத்தையைச் சோதித்து வரும்படி உனக்குஞ் சம்மதியோ சொல்வாய்? அந்தச் சக்கரவர்த்திக்கு அழகிற் சிறந்த இரண்டு புத்திரிகள் உண்டென்றும், அவர்கள் மகாசாமார்த்தியமுடையவர்களென்றும், அவர்களிருவரும் நம்மைப்போலவே சிறுவயதினின்று பேதமின்றி அந்யோந்யமாய் மனமொத்து வாழ்ந்து வருகிறார்களென்றும், அவர்களைவிட நமக்குத் தகுந்த வதுவைகள் வேறெங்கும் இல்லையென்றும், அவர்களைக் கடவுள் நம்மிருவருக்குமாய்ச் சிருஷ்டித்திருப்பதுபோ லிருக்கிறதென்றும், அந்த அரசன் சக்கரவர்த்தியாயினுஞ் சற்குண சற்சங்க முள்ளவரென்றும், அவரிடம் பெண்பேசத் தக்கபரிவாரங்களை யனுப்புவதைவிட முன் நாமிருவருஞ் சென்று அப்பெண்களைப் பார்த்து அவர்கள் குணாதிசயங்களுக்கும் நம்மிருவர் மனோபாவங்களுக்குஞ் சரிப்படுமோ என்று தெரிந்தபின் அந்தச் சக்கரவர்த்திக்குத் திருமுகமனுப்பித் தக்கமுயற்சி செய்யவேண்டுமென்றும் நமது தந்தையின் இச்சை ஆகையால், காலதாமதமின்றி நாம் இக்காரியத்திற்காக முயலவேண்டுமென்றும் மந்திரி சொன்னார். ஆனால் நாமிருவரும் ஒன்றெனநினைத்து என்னிடத்தில்இந்தவிருத்தாந்தங்களைச்சொல்லி உனக்குத் தெரிவிக்கச் சொன்னார். இனி உன் கருத்தென்ன? அதைச்சற்று வெளியிட்டு ஆகவேண்டிய காரியங்கட்கு முயற்சி செய்யவேண்டும். இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?"

புஜங்ககேஸரி:—"அண்ணே! தங்களிஷ்டப்படி பிரயாணப்படுவதற்கு யான் சித்தமா யிருக்கிறேன். உத்திரவை எதிர்பார்த்திருக்கிறேன். தந்தையின் கருத்து மிகவும் உத்தமமாயிருக்கிறது. நமக்குத் தாயுஞ் சகோதரிகளு மில்லாததால் நாமே போய்ப்பார்த்து மனதைத் திருப்திபண்ணவேண்டுமென்று யோசித்திருக்கிறார்.மிகவும் நன்மை. எப்போது பிரயாணப்பட வுத்தேசமோ அதைத் தெரிவிக்கவேண்டும்?"

பரமார்த்தகேஸரி:—"தம்பி! இன்றையதினம் சூர்யாஸ்தமனத்தின் பிறகு வேறொருவருக்குந் தெரியாமல் நாமிருவரும் பட்டணத்தை விட்டகன்று மாறுவேடம் பூண்டு வெளிப்பட வேண்டுமென்

படுதே என் எண்ணம். அதற்கு வேண்டியவைகளைக் கூடிய சீக்கிரத்தில் சேகரம் பண்ணுவாய். நான் நமதிஷ்ட தெய்வமாகிய ருத்ர மூர்த்தியைப் பிரார்த்திக்கப்போகிறேன்" என்று சொல்லிப் பரமார்த்தகேஸரி புஜங்ககேஸரியை விட்டுப்போனான். புஜங்ககேஸரி, இருவருக்கு மிரண்டு குலங்குணமமைந்த பஞ்சகல்யாணி குதிரைகளையும் வேண்டிய திரவியங்களையும் வஸ்திராபரணங்களையும், அப்போதைக்கப்போது வேஷ மாற்றிக்கொள்வதற்கு வேண்டிய வஸ்துவகைகளையும் எடுத்துக்கொண்டு சூர்யாஸ்தமனத்தில் தமையனிடம் வந்து அவருத்திரவை எதிர்பார்த்திருந்தான்.

பரமார்த்தகேஸரி தம்பியுடன் சென்று அமுதருந்திக் கடவுளைத் துதித்து வெளிப்பட்டுப் புரவிகளிலேறிக்கொண்டு உதயகாலத்திற்குமுன் தங்கள் இராச்சியத்தின் எல்லையைத் தாண்டவேண்டுமென்று நினைத்து மனோவேக வாயுவேகமாய்க் குதிரைகளை நடத்தி மறுநாள் சூரியோதயத்தில் எல்லையைத் தாண்டி ஓர் தாமரைத்தடாகத்திற்குச் சென்று நித்தியகடனை முடித்துக்கொண்டு தாங்கள் கொண்டுவந்த உணவையருந்திக் குதிரைகட்கும் உணவளித்து உபசரணை செய்து, ஓர் வடவிருட்சத்தினிழலிற் குதிரைகளைக்கட்டித் தாங்களும் அயர்ந்து நித்திரை போனார்கள்.

நித்திரை நீங்கியெழுந்து சூர்யாஸ்தமனத்திற்குப் பத்துநாழிகையிருப்பதை யுணர்ந்து அங்கு நிழலுக்காய் வந்திருக்கும் பிரயாணிகளைப் பார்த்து அவர்களிடஞ் சம்பாஷித்து அவர்களாற் பாலவனத்தெல்லை யின்னும் முப்பதுகாத மிருக்கிறதென்றும், போகும் வழியிற் பட்டணங்களுங் கிராமங்களும் இருக்கின்றனவென்றுந் தெரிந்து தமது அசுவங்களில் ஆரோகணித்துக்கொண்டு அந்தப் பிரயாணிகள் சுட்டிக்காண்பித்த மார்க்கமாய் மேற்றிசைநோக்கி மெதுவாக யாத்திரைசெய்தார்கள்.

குதிரைகளை மெதுவாக நடத்திக்கொண்டு போனதால் காதவழி செல்லுமுன் சூர்யாஸ்தமனம் நெருங்கிற்று. அப்போது அவ்வழிக்கு அருகாமையிலிருக்கும் கிராமத்தில் ஓர் ஔவை வீட்டிலிறங்கித் திரவியமளித்துப் போஜனமருந்திக் குதிரைகளுக்கும் உணவளித்து சற்று இளைப்பாறி இரவிலேயே பிரயாணப்பட்டு அதிவேகமாய் யாத்திரை செய்தார்கள். இப்படிப் பகலிலெல்லாம் ஒவ்வோர் சிறுகிராமங்களில் தங்கியிருந்து இரவில் அதிதுரிதமாய் யாத்

திரை பண்ணிக்கொண்டு ஏறக்குறைய ஒருவாரத்திற்குள் குலசேகரப்பெருமாள் நாட்டின் எல்லை சேர்ந்தார்கள். இரவில் யாத்திரை செய்வதால் தங்கள் புரவிகளுக்குக் கஷ்டமில்லை யென்பதும் பட்டணங்களின் வழியாய்ப் போகவேண்டியிருப்பதால் தாங்கள் இன்னாரென்று யாருக்குந் தெரியாமலிருக்க வேண்டுமென்பதும் அவர்கள் கருத்து. பாலைவன எல்லைக்குட் சென்றவுடன் தங்களுருமாறி இரண்டு வியாபாரிகளைப்போல் வேஷம் பூண்டு குதிரைகளை விற்பவரைப்போற் பாவித்து யாத்திரைசெய்தனர்.

இவர்கள் வேஷம் மாறினதையும் முன்னிருந்த இராஜசின்னங்களையும் பார்த்த விதூஷணன் என்னும் இரகஸ்ய சேவகத்தலைவன் பிச்சைக்காரனைப்போல்வேஷமிட்டிருந்தபடியால் அவர்களையடுத்துத் "தேகி" என்றான். அவனைக் கண்டு சந்தேகிக்க இடமில்லாததால் புஜங்கன் அவனுக்கொரு வராஹனளித்துப் பாலைவனத்திற்கு இனி எவ்வளவு தூரமிருக்கிறது? எங்கள் புரவிகளை அவ்விடம் வாங்குபவர்களுண்டோ?" என்று வினவ, பிச்சைக்காரன் பாலைவனம் பதின்காததூரம்; அவ்விடத்திற் புரவிகளை வாங்குபவர்கள் அனேகருண்டு" என்று மறுமொழி புகன்று அவர்களுக்கு வந்தனம்செய்து திரும்பித் தன்னிருப்பிடஞ் சேர்ந்து ஒரு சீட்டெழுதி அதிற் புஜங்கன் கொடுத்த வராஹனையும் வைத்துத் தன் சேவகரி லொருவனை யழைத்து, "ஓ மகரகுண்டலா! நீ இச்சீட்டை மிகப் பத்திரமாய் வைத்துக்கொண்டு உன்னாலான வேகத்திற் சென்று மஹாப்பிரவு விக்கிரமசேன மந்திரியிடஞ் சேர்த்துவிடுவாய் போ" என்றான். மற்றொருவனையழைத்து "ஓ மார்ஜ்ஜிகபாதா! நீ இதோபோகும் இரண்டு பாட்டைசாரிகளையுந் தொடர்ந்து அவர்களுக்குச் சிறிதுந் தெரியாமல் அவர்கள் செய்கைகள் யாவும் எனக்குத் தெரிவித்துக்கொண்டிரு; உன்னுடன் இரண்டு சேவகர்களையும் அழைத்துப் போ" என்று அவர்களையனுப்பி, வேறிரண்டு சேவகர்களை யழைத்து "நீங்கள் இந்தக்ஷணமே உங்கள் புரவிகளி லேறிக்கொண்டு அதிவேகமாய்ச் சென்று இதோ போகும் இரண்டு மனிதர்களும் எந்த ஊரிலிருந்து வருகிறார்களென்றும், அவர்கள் விருத்தாந்த மென்னவென்றும் கூடிய சீக்கிரத்தில் தெரிந்து வரவேண்டும்" என்று கூறி, அவர்களுக்கு இராஜகுமாரர்கள் வந்தவழியைக் காண்பித்துக் கீழ்த்திசைக்கு அனுப்பிவிட்டு நடக்கு மதிசயங்களை யெதிர்பார்த்துக்கொண்டு தன்னிருப்பிடத்திலிருந்தான்.

கீழ்த்திசை போனவர்களிருவருந் தங்கள் குதிரைகளை யதி துரிதமாய் நடத்தி இராஜகுமாரர்கள் ஏறிவந்த குதிரைகளின் அடி யைக் கவனித்துக்கொண்டே சென்று, அவர்களிறங்கினவிடத்தில் தாங்களும் இறங்கிச் சற்றிளைப்பாறிப் பிறகு ஓடிப் பத்துநாளில் அவர்கள் பட்டணஞ்சென்று இரண்டொருநாள் அங்கிருந்து திரும் பித் தங்கள் சேவகத்தலைவனிருக்குந் திக்குநோக்கிப் பிரயாணப்பட் டார்கள்.

இராஜகுமாரர்களின் பிறகே போனவர்கள் பிச்சைக்கார வேஷத்துடன் இராஜகுமாரர்களுக்குப் புலப்படாமல் அவர்கள் பின் னேசென்று அவர்கள் செய்கைகள் யாவற்றையுந் தெரிந்துகொண்டு அவர்கள் பாலைவனம் போனவுடன் விக்ரமசேனனுக்கு அவர்கள் வரவைத் தெரிவித்துத் திரும்பித் தலைவனிருக்குமிடஞ் சென்றனர்.

இராஜகுமாரர்களோவெனில் தாங்கள் பாலைக்காடு சென்று அரசவீதி வியாபாரவீதி முதலிய ஜனநெருக்குடைய இடங்களை யெல்லாம் விட்டு ஊர்க்கருகில் நதிக்கரையிலிருக்கும் ஓர் சிறு கிரா மத்திற் சென்று அங்கொரு சிறிய கிரகத்தை வாடகைக்கமர்த்தி அவ்விடத்தில் அதிரகஸ்யமாய் நாட்கழித்து வந்தார்கள்.

6. காதல்.

இராஜகுமாரத்திகள் ஒருநாள் வசந்த காலத்திற் பூர்ண சந்தி ரோதய மாவதைப்பார்த்து உப்பரிகையினின்றும் வெளிப்பட்டுத் தங்கள் சகியாகிய மரகதத்தை யழைத்துக்கொண்டு நந்தனவனஞ் சென்று சண்பகம், முல்லை, சம்பங்கி முதலிய மலர்கள் மலர்ந்து நிறைந்த பூந்தோட்டத்தி லமைத்திருக்கும் புஷ்ப பஞ்சணையில் சயனித்துக்கொண்டு பூர்ண சந்திரனைப்பார்த்துத் திகைத்து ஒரு வர்க்கொருவர் தங்கள் மனதில் வெகுகாலமாய் வைத்திருக்கும் இரக ஸ்யங்களைச்சொல்லி யாற்றிக்கொள்வாராயினர். எப்படியெனில்:—

காந்திமதி:—"கண்ணே சந்திரலேகை! உன்மனதில் இப்போது தோற்றுவதை ஒளியாமற் சொல் பார்ப்போம்."

சந்திரலேகை:—"ஓ அக்காள்! உங்கள் மனதில் என்ன விவகா ரம் நடக்கிறதோ அதுவே தவிர எனக்கு வேறுகூ யாதொன்றுந் தோன்றவில்லை."

காந்திமதி:—"அடி கண்ணே! நானெப்போது எதைக்குறித்துக் கேட்டபோதிலும் நீ அப்படியே பதிற் சொல்லுகிறாய். இதுசரியா? நாமிருவருமிருக்கும் ஒற்றுமைக்கும் நட்புக்கும் அழகாயிருக்கிறதா? உன் எண்ணத்தை ஒளியாமற் சொல்லலாகாதா? நானென்ன உனக்குத் தீங்கு நினைப்பேனா?"

சந்திரலேகை:—"அக்காள்! அப்படி வசனிக்கலாகாது. உங்களை விட எனக்குச் சகி வேறில்லை. இனி உண்டாவதுமில்லை. உங்களெண்ணத்திற்கு விபரீதமாக என் எண்ணம் ஒருபோதுமிராது. "நாய் சென்றால் வாலுங்கூடவே செல்லும்" என்பதுபோல் நீங்கள் என்னைப் பிரித்துப்பேசினாலும் உதறிவிட்டாலும் உங்களைவிட்டு நான் பிரியேன். அப்படி யெப்போதும் பிரியாமலிருக்கும்படி என்னிஷ்ட தெய்வமாகிய காமாட்சியம்மனை எப்பொழுதும் பிரார்த்தித்துவருகிறேன். ஆகையால் அக்காள் என்ன எண்ணக்கூடுமோ அதுவே நானும் எண்ணுவதா யிருப்பதால் இனியாவது என்னைப் பிரித்துப் பேசாமல் தங்களாக்கினையைத் தெரிவிக்கவேண்டும்."

காந்திமதி:—"ஆஹா என் கண்ணே! நாமிருவரும் இப்படியே தான் நாள் கழிக்கவேண்டுமா? இப்படி உலகபோகங்களை மறந்து எத்தனைநாள் வீண்காலம் போக்குவது? நாம் மங்கைப் பருவமடைந்து நாலைந்து வருடமாகிறதே! நமது விவாகத்தைக் குறித்து நமது தாய் தந்தையர்கள் ஒன்றும் யோசியாமலிருக்கிறார்களே! இந்த வசந்தகாலப் பூர்ணசந்திரனைப் பார்த்தாயா? இவன் தனது சாந்தமாகிய கிரணங்களை மார்பிற் பிரவேசிக்கச்செய்து என்றேகத்தைச் சுடுகிறான். எப்படியெனில், அக்கிரணங்கள் எவ்வளவு சாந்தமோ அவ்வளவு உஷ்ணம் என் தேகத்தில் அக்கிரணங்கள் படும்போது உண்டாகின்றது. மன்மதனோ தன் பஞ்சபாணங்களை ஓயாமற்பொழிகிறான். இந்த மலர்ப்பஞ்சணையானது என்னுடம்பைப் புழுக்கமெடுக்கும்படி சுடுகின்றது. நமதிஷ்டத்திற்கிசைந்த இரண்டு உத்தம புருஷர்கள் ஒரே காலத்தில் வாய்ப்பதும் அரிதே! நாமொருவர்க்கொருவர் பிரிந்திருக்கவும் முடியாதே! இதற்கெப்படி நிவாரணம் என்று பலவாறாக என் மனம் புண்ணாகிறது. என் கண்ணே! இதுவே என்னெண்ணம். இப்படியே உன்மனதிலு முதிக்கிறதோ? தெரிந்துகொள்ளக் கேட்டேன் சொல்வாயாக."

சந்திரலேகை:—"என்னுயிர்க்குயிராகிய சகோதரியே! உங்கள் மனம்போலவே என்மனமும் இன்று சந்திரோதயமுதல் வருந்திக்

கொண்டிருக்கிறது. பெண்களெவ்வளவு கற்றாலுங் காதலைக் கடக்கக் கற்பதரிது. காதலே மாதர்க்கழகு. காதலே மாதர் சுகம். காதலே மாதர் நட்பு. புருஷனைப் பேணுவதும், பிள்ளையை வளர்ப்பதும், கற்பைக் காப்பதும், கடவுளைத் துதிப்பதும், கல்வியைக் கற்பதும், போர்புரிந்தாடுவதும், பூமியை ஆள்வதும், பொற்பணி பூணுவதும், புகழ்பெற்று வாழ்வதும், பெண்களுக்குக் காதலேயன்றி மற்றென்ன? ஆனால் அக்காதல் சரியான மார்க்கத்தி லிருக்கவேண்டிய தொன்றே நம்பூஜாபலன். ஆகையால் அப்படி நன்மையையும் ஐக்யத்தையுந் தரும்படி நாம் அக்காதலை வசப்படுத்தவேண்டிய மனோதிடத்தைப்பெற்று உறுதிப்படும்படி யான் அனுதினமும் எனதிஷ்டதேவதையைப் பிரார்த்தித்து வருகிறேன். ஓ அக்காள்! தாங்கள்கொண்ட காதலானது ஞாயமேயன்றி வேறென்ன? இவ்வசந்த காலத்துச் சந்திரன் அக்காதலைச் சுலபமாய்க் கிளப்பிவிட்டு மதனைத் தன் பாணத்தால் அடிக்கச்செய்து நம்மிருவரையும் வருத்துவதும் சரியே. இதற்கு நாமென்ன செய்யலாம்? எனதேகம் தங்கள தேகத்தைவிட அதிக கொதிப்புண்டு ஆற்றாத தீக்ஷண்யத்தை யடைந்திருக்கிறது. நாமிருவரும் எப்படி யிருக்கிறோமோ அப்படியே இருசகோதரர்கள் ஒரு பிதாவின் குமாரர்களாய் எல்லா நன்மையு முடையவர்களாய் வாய்ப்பது கடவுள் கிருபையாலன்றி மனிதப் பிரயத்தினத்தால் ஆவதல்ல. இது தெரிந்தே நமது தாய்தந்தையர் நமது விஷயத்தில் மௌனமாயிருக்கிறார்கள்போ லிருக்கிறது. என்ன செய்யலாம். பெண்ணாகப்பிறப்பித்த பிரமன் நம்மைப் பிள்ளைகளாகச் சிருஷ்டித்திருந்தால் இவ்விதம் கவலைப்பட நேரிடாதே. ஓ தெய்வமே!"

இவ்விதம் இருவரும் வியாகுலப்படக்கண்ட மரகதம் பயந்து, "ஓ அம்மணீ! இரவு 12-நாழிகையாய்விட்டது. இனி யிங்கிருப்பது சரியல்ல; அரண்மனைக்குப் போவோம்; நித்திரையின்றி யிருப்பதால் தேகங் குலையும்; எழுந்திருக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றாள். தக்ஷணமிருவரு மெழுந்து தாங்கள் தங்களை மறந்து விகாரிகளாய்ப் போனோமே யென்று நாணித் தாதியைப்பார்த்துக் காந்திமதி சொல்வாளாயினாள்:

"அடி மரகதம்! நாங்களெங்கள் குறைகளைச் சொல்லி யழுது கொண்டிருந்தோமே! நீ எல்லாந்தெரிந்த சகியாயிற்றே; உன் கருத்தென்ன?" என்றாள்.

மரகதம்:—"அம்மணி! உள்ளபடி முடியும். பிரமன் பெண்ணைப் படைப்பித்தபோது மணமகனை முன்னமே படைத்திருப்பான். இரவின்றிப் பகலும் வெண்மையின்றிக் கருப்பும் ஆணின்றிப் பெண்ணும் உலகத்திலில்லை; ஆகையால், மனந்தேறி அரண்மனை சேர்ந்து பள்ளியறை செல்வோம் வாருங்கள்" என்றிருவரையுமழைக்க, இராஜபுத்திரிகள் ஒருவர்க்கொருவர் ஆற்றித்தேறிப் பள்ளியறை சென்று அம்ச தூளிகாமஞ்சத்திற் படுத்துத் தங்களை யறியாமல் மெய்ம்மறந்து நித்திரைபோயினர்.

மறுநாள் உதயத்தில் இந்திரசேனை எழுந்து "விடியற்சாமத்தில் நித்திரை நீங்கி ஸ்நானஞ்செய்து தேவதாபூஜை முடித்து சூர்யோதயத்தில் என் கால் வருடி என்னை எழுப்புவது வழக்கமாதலால் அப்படிச் சூர்யோதயமாயும் என் குமாரத்திகள் தரிசனந் தரவில்லையே! யாது காரணம்?" என்று தன் பள்ளியறையை விட்டுக் குமாரத்திகள் நித்திரை செய்யும் பஞ்சணைக்குச்சென்று பார்க்க அங்கிருவரும் நித்திரையிற் சொப்பனவஸ்தையில் விகாரமுற்றிருப்பதையும், தேகங் குலைந்திருப்பதையும் பார்த்துத் திடுக்கிட்டு ஏதோ கால வித்தியாசமென்று பயந்து, மரகதத்தை யழைத்து நடந்த வரலாற்றைத் தெரிந்து, இனி யிவர்களுக்கு விவாகம் முடிக்கவேண்டியதை யோசிக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு, தன் தங்கை சுமதிமாதை யழைத்துவரச்சொல்லி அவளுக்கு நடந்ததை யுரைத்து, "நமது குமாரத்திகட்கு விவாகம் முடிக்கவேண்டும்; நமது பிராணநாயகரிடம் இவர்கள் வியாகுலத்தைச் சொல்லி விவாகத்திற்கு முயற்சிபண்ணச் செய்யாவிடில் நமது இராஜாங்கத்திற்குக் கெடுதி நேரிடும்; காதலால் வருந்துங் கன்னிகைகளை மணமின்றி வைத்திருப்பது சிறை வைத்திருப்பதற்கொவ்வும்; அவர்கள் மனக்குறையால் தீங்கு நேரிடும்; இதுவரையி லிவர்கள் எண்ணத்தைத் தெரியாமற் போனோமே" என்றாள். சுமதிமாது தன் மக்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, தேகங்குன்றிவிடுமே என்று வருந்தி, இந்திரசேனையுடன் இராஜ சன்னிதிக்குப் போய் அவருக்கு உபசாரணை செய்து நித்திரையில்நின்று நீங்குவதை எதிர்பார்த்திருந்தனர்.

மரகதமோவெனில், இராஜபுத்திரிகளைச் சைகையாலெழுப்பிப் பள்ளியறைவிட்டகற்றி நித்தியகடனை முடிக்கச்செய்து தேவதாபூஜைக்குச் செல்ல எச்சரிக்கை பண்ணினாள்.

அரசன் நித்திரைநீங்கிப் பத்தினிகளுடன் வழக்கப்படி சரசமாடி நித்தியகடனை முடித்துக்கொண்டு இராஜ சபைக்குச் செல்ல

முயல, இந்திரசேனனை வணங்கிச் சொல்லுவாள்:-"ஓ மஹாராஜாவான என் பிராணநாதா! நாம் இதுவரையிலுஞ் சும்மா இருந்துவிட்டோம். நமது புத்திரிகட்கு மணஞ்சூட்டிப் பார்க்கவேண்டாமோ? அவர்களும் மங்கைப்பருவமடைந்து நாலைந்து வருடங்களாயினவே. என்றைக்குங் குழந்தைகளல்லவே! பஞ்சபூத பௌதிகத்தால் உண்டான இத்தேகம் தனதிந்திரியங்களாலாட்டி வாட்டுவது எல்லாச் சரீரிகளுக்கு மிருப்பதல்லவோ" என்றாள். அரசனுணர்ந்து நமது புத்திரிகளுக்குத் தகுந்த வரர் எங்கே யிருக்கிறார்கள்? அப்படியிருந்தாலும் இருவரும் ஒரு தாய்பெற்ற சகோதரராயும் ஒருவரையொருவர் பிரிந்திராத ஐக்கியத்தை யுடையவராகியும் இராஜவம்ச ஜாதராகியு மிருக்கவேண்டுமே, இதற்கு நாமென்ன செய்யலாம்?" என்று வருந்தப் பத்தினிக ளிருவரும் மனந்தளர்ந்து சற்றுநேரம் ஒன்றுந் தோற்றாமல்நின்று, பிறகு அரசனைப் பார்த்து, "ஓ பிராண வல்லபா! நமது முதன் மந்திரியினிடம் இந்தச் சமாசாரத்தை ரகஸ்யமாயுரைத்துப் பல இராஜதானிகட்குத் தூதனுப்பி விசாரிக்கச் செய்வதே தகுதியாய்த் தோற்றுகிறது" என்ன, அரசன் விக்ரமசேனனை வரவழைத்து நடந்ததைச் சொல்லி "உம்மால் இக்காரியம் ஆகவேண்டியதே தவிர மற்றொருவரால் ஆவதல்ல. ஆகையால் கூடிய சீக்கிரத்தில் முயற்சி பண்ணவேண்டும்" என்ன, விக்ரமசேனன் வணங்கி விநயமாய்ச் சொல்லத் தொடங்கினான்:—

"ஓ மஹாராஜாவே! தேவரீரையொத்த புண்ணிய புருஷருமுலகிலுண்டோ! தேவரீரொன்றுக்கும்அஞ்சவேண்டாம். சர்வசக்தனாகிய பராபரக்கடவுள் பெண்களைச் சிருஷ்டிக்கு முன்னமே ஆண் பிள்ளைகளையும் சிருஷ்டித்திருப்பார். காரணமின்றிக் காரியமுண்டாகமாட்டாது. ஆகையால் வருவது தானேவரும். தேவரீர் இதை யோசித்து வருந்தவேண்டாம்" என்று உறுதியாய்ச் சொல்ல, அரசனும் பத்தினிகளும் "ஏதோ இவர் நமக்கு முன்னமே இந்த விஷயத்தில் முயற்சி பண்ணிவருவதுபோ லிருக்கிறது. இனி நாம் வருந்த வேண்டுவதில்லை" என்று நினைத்து மந்திரிக்கு விடைகொடுத்தனுப்பிச் சந்தோஷ சித்தராயிருந்தனர்.

7. விக்ரமசேனன்.

விக்ரமசேனன் தன்னரண்மனையில் இரகஸ்யமான ஓர் அறையிலுட்கார்ந்துகொண்டு "ஏன் இன்னும் மஹாதேவர் வரவில்லை?

விஜயசேகரனுந் தான் வந்து எதிர்முகமாகக் கலந்து பேசவேண்டு மென்று எழுதியிருந்தானே! அவனையுங் காணவில்லையே! இராஜ சபை கலைந்து ஏறக்குறைய நான்குநாழிகை ஆய்விட்டதே!" என்று யோசித்துக்கொண்டு சஞ்சலமா யிருக்கையில் கதவு படாலென்று திறக்க, மஹாதேவர் அறைக்குள் நுழைந்து கதவை மூடித் தாளிட்டு விட்டு, விக்ரமசேன னருகிற்சென்று ஆசிகூறி அருகிலுட்கார்ந்து "என்னன்பே! சீட்டெங்கே பார்ப்போம்" என்றார். விக்ரமசேனன் பெட்டியில் வைத்திருந்த சீட்டையும் வராஹ நாணயத்தையும் எடுத்து அவர் கையிற் கொடுத்து "வாசித்துச் சொல்லும்" என்றான்.

"ஓ பிரபுவே! தங்களுத்திரவின்படி யிவ்வெல்லையைக் காத்துக் கொண்டிருக்கும்போது இன்றைக்குப் பதினைந்து நாழிகைக்குமேல் இராஜவடிவமைந்து அதிதீர பராக்கிரமசாலிகளா யிரண்டு வாலிப புருஷோத்தமர்கள் இரண்டு பஞ்சகல்யாணிக் குதிரைகளின்மே லாரோகணித்து ஆயுதபாணிகளா யிவ்வெல்லைக்குக் கீழ்த்திசையிலிருந்துவந்து தங்கள் வேஷத்தை மாற்றிக் குதிரை வியாபாரிகளைப்போ லுருக்கொண்டு மேற்றிசை நோக்கிப் பிரயாணப்பட்டதைப் பார்த்துச் சந்தேகித்து அவர்களை யடுத்துப் பிக்ஷைகேட்டேன். அவர்கள் இந்தச் சீட்டில் வைத்திருக்கும் வராகனையளித்துப் "பாலைவனம் எங்கே?" என்றும், "குதிரைகளை வாங்குபவர்கள் அங்கேயுண்டோ?" என்றுங் கேட்க, "ஆஹா இருக்கிறார்கள்" என்றுரைத்து அவர்களை யனுப்பிவிட்டு, அவர்கள் செய்கைகளைத் தெரிந்து வரும்படி இரண்டு சேவகர்களை அவர்கள் பிறகே யனுப்பி மற்றிருவரை அவர்கள் வந்த கீழ்த்திசைபோ யவர்கள் விருத்தாந்தங்களை அறிந்து வரும்படி அனுப்பியிருக்கிறேன். இனித் தங்கள் உத்திரவை எதிர்பார்த்திருக்கிறேன்.

இங்ஙனம் ஊழியன்,
விதூஷணன்."

மஹாதேவர்:—"விக்ரமசேனரே! நீர் சொன்னது சரி" என்று சீட்டையும் நாணயத்தையும் அவர் கையிற் கொடுத்துப் "பிறகு நடந்ததென்ன?" என்று வினவ, "ஓ மஹாதேவரே! நாலு நாட்கு முன் இவ்வூர் இரகஸ்ய சேவகர்களி லொருவன் அவ்விரண்டு வியாபாரிகளும் மேற்றிசையில் நதிக்கருகிலிருக்கும் சிறிய கிராமத்தில் ஓர் வீடுதியில் இருப்பதாகவும், அவர்களுக்கு அருகாமையிலிருக்குங் கிருகத்தி லிரண்டு சேவகர்களைத் தலைவன் திட்டஞ்செய்து வைத்

திருப்பதாகவும் விஸ்ருஷணன் சேவகர்கள் எனக்கிந்த வியாபாரிகள் ஊர் சேர்ந்திருக்குஞ் சங்கதி தெரிவிக்கச்சொல்லித் திரும்பினதாக வும் சொன்னான். நல்லது ஜாக்கிரதையென்று மறுமொழி சொல்லி அனுப்பிவிட்டேன்'' என்றான் விக்ரமசேனன்.

மஹாதேவர்:—“இந்த இரண்டு போர்ச்சேவகர்களால் நமது அரசனுக்குத் துன்பம் விளையுமா? சுபம் லபிக்குமா?''

விக்ரமசேனன்:—“துன்பமில்லை சுகமே; ஆனாற் பராக்கிரம சேகரன் இவர்களைத் திர்ஷ்டிக்காமலும் இவர்க ளின்னாரென்று தெரிந்துகொள்ளாமலும் பார்க்கவேண்டிய கடைமை ஒன்றிருக் கின்றது.''

மஹாதேவர்:—“ஏன் என்ன விசேஷம்? பராக்ரமசேகரன் பார்த்துத் தெரிந்துகொண்டால் தன்வசப்படுத்தி அரசனுக்குத் துன்பம் விளைவிக்கக்கூடுமோ?''

விக்ரமசேனன்:—“வசப்படுத்த முடியாது. அவ்வளவு சாமர்த் தியம் அவனுக்கில்லை. ஆகிலும், இவ்வாலிபர்களுக்குத் துன்பம் விளைவிக்க முயலுவான் சந்தேகமில்லை.''

மஹாதேவர்:—“ஏன் அவர்கள் விஷயத்தில் தங்களுக்கு இவ் வளவு பச்சாத்தாபம்? அவர்கள் துன்பப்படுவதில் நமக்கென்ன குறையுளது? நமதரசனுக்கு யாதொரு மனக்குறையும் இல்லாதிரு க்கவேண்டுவதன்றோ நமதெண்ணம்?''

விக்ரமசேனன்:—“இதோ இதைக்கூட வாசித்துப் பாரும்'' என்று தன் பெட்டியிலிருந்த மற்றொரு சீட்டை எடுத்து அவர் கையிற் கொடுத்தான்.

மஹாதேவர் சீட்டை வாங்கி வாசிக்கலாயினர்—“ஓ மஹாப்பிர புவே! கிழ்த்திசை சென்ற சேவகர்கள்'' இன்று காலையில் திரும்பி வந்து, “நமது சக்கரவர்த்தி நாட்டெல்லைக்கு முப்பது காததூரம் கிழ்த்திசையிலிருக்கும் மாளவதேசத்து இராஜபுத்திரர்கள் அவ் விரு இராஜகுமாரர்கள் என்றும், அவ்வரசன் நமது இராஜாவின் புத்திரிகளின் விர்த்தாந்தங்களைக் கேள்விப்பட்டு அவர்களைப்போல் இணைபிரிந்திருக்க ஆற்றாத தன் குமாரர்களுக்கு அவர்களை விவாகம் பண்ணிக்கொள்ளவேண்டும் என்றும், அதற்குப் பரிவாரங்களை அனுப்பிக் கேட்குமுன் தன் குமாரர்களை எச்சரித்து எதிராக இராஜ குமாரிகளைப் பார்த்து அவர்கள் குணதிசயங்களை ஆராய்ந்து தெரி

ந்துவரும்படி மந்திரியாற் குமாரர்களுக்குத் தெரிவித்தபடியால் இவ் விருவரும் இப்படி மாறுவேஷம் பூண்டு தனியாய் வந்திருக்கிறார் கள்" என்று சொன்னார்கள்.

இங்ஙனம் ஊழியன்,

விதூஷணன்."

மகாதேவர்:—"இதிற் சந்தோஷமே தவிரச் சந்தேகிக்க இட மில்லைபோலிருக்கிறது. இனித்தங்கள் ஆக்ஞைப்படி நடத்திக்கொள் ளுகிறேன்" என்று மனமகிழ்ச்சியுடன் சொல்லித் "தேடிப்போன கொடி காலிலகப்பட்டுக் கொண்டது; எல்லாம் சிவன்செயல்; நீர் சொன்னது சரி; இவ்வாலிபர்கட்கு யாதொரு மனக்குறைவும் வரா மற் பார்க்கவேண்டியது அவசியமே" என்று கூறி முதன் மந்திரி யைப் புகழ்ந்தார்.

விக்கிரமசேனன்:—"மஹாதேவரே! இனி இந்த விஷயத்தில் முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. பராக்கிரம சேகரனும் அவன் துஷ்ட குமாரர்களுஞ் செய்யுந் தீங்குகளை ஜாக் ரதையாய்க் கவனித்துவாரும். நேற்று மஹாராஜா தமது குமாரத்தி கட்கு விவாகம் நடப்பிக்க வேண்டுமென்று ஆக்யாபித்தார். ஏதோ மங்களம் நடக்கும்போ லிருக்கிறது. தங்களிடம் ஒப்பிவைத்திருக் கும் விஷயங்களிற் கொஞ்சமும் பிசகாமற் பார்த்துக்கொள்ளும்படி மறுபடியும் எச்சரிக்கின்றேன். போய் வாரும்."

மஹாதேவர்:—"அப்படியே செய்கிறேன். எப்படி யிருக்கினும் மனதிற்கு ஓர் ஆனந்தம் முளைத்தது. மிகவும் நன்மை. போய் வருகி றேன்."

மஹாதேவர் போன அரைநாழிகைக்கெல்லாம் கதவிடி கே ட்டு, விக்ரமசேனன் கதவைத்திறக்க, விஜயசேகரன் அறைக்குள் நுழைந்து மந்திரியை வணங்க, அவரும் ஆசிகூறி விஜயசேகரனை அருகி லுட்காரவைத்துக் கதவை மூடி "என்ன குழந்தாய்? விசே ஷம் ஏதேனுமுண்டோ?" என்றான்.

விஜயசேகரன்:—"மந்திரி சிரேஷ்டரே! என் பிதா முன் நட ந்த விஷயங்களையெல்லாம் மறந்தவர்போற் காணப்படுகிறார். தமை யன்மார்களும் விசேஷ முயற்சிசெய்து வருபவர்களாய்த் தோற்ற வில்லை. அரசனுக்குப் புத்திரன் பிறந்தாலொழியத் தாங்கள் செய்ய வேண்டிய தொன்றுமில்லை என்று எண்ணியிருப்பதாய்த் தோற்று

கிறது. இராஜபுத்திரிகட்கோ "விவாஹத்தைக் குறித்து யாதொரு முயற்சியும் நடக்கிறதில்லையே" என்று யோசித்துச் சும்மாவிருக்கிறார்கள். தங்கள் விசாரணையில் யாதேனும் புலப்பட்டதோ" என்று விஜயன் கேட்க, விக்ரமசேனன் அரசன் சபையில் உன் தகப்பனும் தமயன்மார்களும் கர்வமுகிகளா யிருக்கிறார்களே தவிர வேறு முயற்சி செய்து வருபவர்களாய் வாக்காலும் முகக்குறியாலும் புலப்படவில்லை. ஏதோ கடவுள் செயல் எப்படி யிருக்குமோ தெரியாது. நீ ஹிரண்யனுக்குப் பிறந்த பிரஹலாதனைப்போலும், இராவணனுக்குச் சகோதரமாயுதித்த விபீஷணனைப்போலும் இந்த மஹாபாபி பராக்ரமசேகரனுக்கு மகவாய்ப் பிறந்து அவன் வம்சம் கடைத்தேறச் செய்யவேண்டியவனா யிருக்கிறாய். பகவானை நினைந்து நடப்பதை யெல்லாந் தந்திரமாய்த் தெரிந்து எனக்குத் தெரிவித்துக்கொண்டிரு குழந்தாய்!" என்று உபதேசம்பண்ணி அவனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டான்.

அந்தச் சமயத்தில் ஓர் சேவகன் கொஞ்சந் தூரத்திலிருந்து கொண்டு மயிற்கூவுவதுபோற் சப்திக்க, விஜயன் தன்கண் மறைந்து போமளவு மவனையே பார்த்துநின்ற விக்ரமசேனன் உள்ளே நுழைந்து கதவைப் பந்தனம்பண்ணி அவ்விடத்திருந்த ஓர் மணியைக் கடார் கடாரென்று மூன்றுதரம் அடித்துவிட்டு, இரகஸ்யமான ஓர் கதவைத் திறந்து, வருபவனை எதிர்பார்த்திருந்தான்.

ஊர் இரகஸ்ய சேவகத்தலைவன் உள்ளே நுழைந்து கதவை மூடிக்கொண்டு மந்திரியின் பாதத்தில் நமஸ்கரித்து "பிரபுவே! இந்த நாலுநாளாய்த் தேவரீர் தரிசனம் அகப்படாமல் வருந்தினேன். இன்றைக்கென் பூஜாபலத்தினால் தெரிசனமகப்பட்டது, நமஸ்காரம்" என்றான்.

விக்ரமசேனன்:—"உன் சமாசாரம் என்ன?" என்று வினவ, "அந்த இரண்டு வியாபாரி வேஷதாரிகளும் ஒருவாரம் வரையில் தங்களிருப்பிடத்தே யிருந்துகொண்டு கிராமவாசிகளிடம் வார்த்தைகளாடி நமது இராஜாங்கத்தின் வர்மங்களையும் மந்திரிகள் முதலிய பிரபுக்களின் சமாசாரங்களையும், அரசனரண்மனை, அரசன் குமாரத்திக ளிருப்பிடம், அவர்கள் வாடிக்கையாய் நடந்துவரும் நடவடிக்கை முதலான எல்லாச் சமாசாரங்களையுங் கிரகித்துக்கொண்டிருந்தார்கள். நாலுதினத்திற்கு முன் அர்த்தராத்திரிவேளையிற் கிளம்பி இராஜ அரண்மனைவரையில் மௌனமாய்ப் போய் அங்கிருந்து

மந்திரோச்சாடனம் பண்ணுபவர்போல் ஏதோ பிதற்றிக்கொண்டு இராஜகுமாரத்திகளிருக்கும் அரண்மனைக்கு எதிரில்வர அங்கு சேவகர்கள் மறுத்து "யார்இரைச்சலிடுவது?" என்று அதட்ட, தாங்கள்கோடங்கிகளென்ன, "கோடங்கிகள் விடியற்காலத்தில்வருவது வழக்கமாயிருக்க நீங்கள் அர்த்தராத்திரிக் கோடங்கிகள்போ லிருக்கிறீர்கள்" என்ன, அவர்கள் தாங்க ளசலூரென்றும், பொழுது தெரியாமல் வந்துவிட்டோம்; இங்கு மணியோசை கேட்டு இனியும் பொழுதிருப்பது தெரிந்து இங்கே ஓரிடத்திற் சயனித்துக்கொள்ளலாமென்று வந்தோம்" என, அவர்களை எங்கும் போகவொட்டாமற் சமீபத்திலோர் திண்ணையைச் சுட்டிக்காட்டிப் படுக்கை முதலியவையளித்து நித்திரை செய்யச் சொல்ல, நித்திரை செய்பவர்கள்போலிருந்து ஜாமப்பொழுதி லெழுந்து தங்க ளிருப்பிடம் போயினர். மறுநாட் பகலில் எங்குஞ் சஞ்சரிக்கவில்லை. இரவிற் பிச்சைக்காரர்களைப் போல் வேஷமிட்டுக்கொண்டு இராஜகுமாரத்திகளிருக்கும் அரண்மனை சென்று பிச்சை கேட்பவர்கள்போற் கூவ, வாயிற்காத்திருந்த காவல்தாதி பிச்சையெடுத்து வருமுன் அரண்மனையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு உப்பரிகை மார்க்கமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நிலவு காய்ந்துகொண்டிருந்தமையால் தாதி பிச்சை கொணர்ந்து அவர்கள் நோக்கத்தைப் பார்த்து அதட்டினாள். பிச்சை வாங்காமல் "கடுகடுத்து இடும் பிச்சை எங்களுக்கு அவசியமில்லை" என்று திரும்பி, தட்சணமே வந்துவிட்டார்கள். தாதி எவ்வளவு வருந்தியும் அவர்கள் திரும்பிப் பார்க்கவில்லை.

நேற்றிரவு அர்த்தராத்திரிக்குமேல் பூவாண்டிகள் வேஷந்தரித்து அரண்மனை நந்தவனஞ்சென்று "புஷ்பமெடுக்க வழிவிடவேண்டும்" என்று வேண்ட காவலர்கள் "இன்னும் ஜாமப்பொழுதுசென்று வாருங்கள்" என்ன, அங்குதானே யிருந்துகொண்டு அக்காவலர்களிடம் வார்த்தையாடி நந்தனவன விசேஷத்தையும் பூஞ்சோலை யிருக்குமிடமும் அவ்விடத்தில் அரசனும் பத்தினிகளும் இராஜ குமாரத்திகளும் வரும் வெவ்வேறு சமயங்களையும் வெகு தந்திரமாய்க் காவலாளரை ஏமாற்றித் தெரிந்துகொண்டு புஷ்பங்கொஞ்சம் பறித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். இன்று பகற்பொழுதில் ஒன்றும் நடப்பதாயில்லை. இரவில் நடப்பதைத் தெரிந்து தெரிவிக்கிறேன்" என்றான் இரகஸ்ய சேவகத்தலைவன்.

மந்திரியும் களிப்புடன் யாவற்றையுங் கேட்டுச் சேவகத்தலைவனைப் பார்த்து "அந்த இரண்டு வீரர்களுக்கு யாதொரு துன்பமும்

நேராமலும் அவர்கள் செய்கைகளிலொன்றும் விடாமற் றெரிந்து கொள்ளவும் மிகவும் ஜாக்ரதையா யிருப்பாய். அன்றன்று நடக்குஞ் சங்கதிகளை அன்றன்று தெரிவிப்பதுந்தவிரக் கொஞ்சம் விசேஷமா யேதேனும் நடந்தால் அதை அப்பொழுதே தெரிவிக்கவேண்டும். நான் இரவும் பகலும் இந்த விஷயத்தில் செவிகொடுத்துக் கேட்கச் சித்தமாயிருக்கிறேனென்பது அறியாயோ" என்று சொல்லிச் சேவகத்தலைவனை அனுப்பிவிட்டுத் தனியே யுட்கார்ந்து நந்தனவனத்தில் இராஜகுமாரர்களைச் சந்தித்து அவர்களுக்குப் பூஞ்சோலை வர்ணனை முதலியவற்றைச் சொன்னது தானுயிருக்க இந்த இரகஸ்யத்தைச் சேவகர்கள் தெரிந்துகொள்ளவில்லையே. இப்படியே ஏதாவது பராக்கிரமசேகரன் தீங்குபண்ணினுலுந் தெரியாதே என்று நினைத்துக்கொண்டு பரபரப்பாய்ச் சேவகத்தலைவன் போவதற்கு முன் அவனையழைத்து "நந்தனவன இரகசியத்தை அந்தப் பூவாண்டிகட்குச் சொன்னவன் யாரென்று தெரிந்து அவனைப் பிடித்துவா?" என்றுன்.

சேவகத்தலைவன் பயந்து "அப்பனே! மன்னிக்கவேண்டும். நந்தனவனத்திற்கு அவர்களைத் தொடர்ந்து சென்ற சேவகன் தங்களைக் குறிப்பிட்டுத் தாங்களே அவர்களுக்கு அதின் இரஹஸ்யத்தைச் சொன்னதாகச் சொல்லுகிறுன். தாங்களென்று சந்தேகித்தபடியால் நெருங்கி முகத்தைப்பார்க்கவில்லையென்றும் குரலாலும் உருவாலும் தீர்மானித்ததாயுஞ் சொல்லுகிறுன். இதைத் தேவரீரெதிரில் பிரஸ்தாபம்பண்ண வெட்கமுற்று மறைத்துச் சொன்னேன்" என்று நமஸ்கரிக்க, "சரி, எப்படியு மிருக்கட்டும்; இனியாவது ஜாக்கிரதையா யிருங்கள்" என்று திட்டம்பண்ணி அவனை அனுப்பிவிட்டு சூர்யாஸ்தமன சமயமாகையால் சுவாமி தரிசனத்திற்குச் சென்றுன் விக்ரமசேனன்.

8. மஹா சிவராத்திரி.

மாசிமாதத்தில் மஹாசிவராத்திரி சோமவாரதினத்தில் வரவே குலசேகரப்பெருமாள் தமது பத்தினிகளுடன் புத்திரபாக்கியத்திற்காகச் சோமவார விரத மனுஷ்டிக்கிறபடியால், அன்று அகோரமான விரதம்பூண்டு ஆகாரமின்றிப் பகல் முழுதும் சங்கரத்யானஞ் செய்துகொண்டிருந்து இரவில் ஸ்நானம் முடித்து விபூதி ருத்தி

ராட்ச மாலிகாபரணனுய்த் தன் பத்தினிகளிருவருந் தொடர்ந்து வர வழக்கப்படி விஸ்வநாதர் க்ஷேத்திரத்திற்குச் சென்று அன்றிரவு முழுவதுஞ் க்ஷேத்திரப் பிரதக்ஷிணஞ்செய்து ஸ்வாமி தரிசனம் பண்ணியும் நித்திரையின்றி பஜிக்கக்கருதியும் கோவில் வலம் வந்துகொண்டிருந்து நான்காவது சாமத்தில் தீபாராதனைத் தருணத்தில் பராபரக்கடவுளாகிய அர்த்தநாரீஸ்வரரைத் துதிப்பாராயினர்.

ஸ்துதி - விருத்தம்.

முக்கணு போற்றி வேத முதல்வனே போற்றி திங்கள்
செக்கநற் சடையாய் போற்றி திரிபுர தஹனு போற்றி
அக்கரம் முதலாய்த் தோன்று மருட்குரு நாதா மங்கை
பக்கமோர் பாகா போற்றி பரமனே போற்றி போற்றி.

சங்கரா சிவனே சம்போ சதாசிவ ஹரனே தேவா
கங்கையும் பிறையுஞ் சூடுங் கறைக்கண்டா கயிலை வாசா
மங்கையோர் பாகா செங்கை மான்மழு வேந்தும் மூர்த்தீ
எங்களுக் கிரங்கி யோர்சேய் ஈந்தருள் புரிவாய் போற்றி.

நித்தனே போற்றி போற்றி நிமலனே போற்றி போற்றி
அத்தனே போற்றி போற்றி யரகர சிவனே போற்றி
கத்தனே போற்றி போற்றி கருணையங் கடலே போற்றி
பித்தனே போற்றி யெங்கள் பிழைதவிர்த் தாளாய் போற்றி.

கீர்த்தனம்.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

சங்கரா சங்கரா சம்போ—சிவ
சாம்ப சதாசிவா சச்சிதா னந்தா (சங்கரா)

அநுபல்லவி.

பொங்கரவணிபவா புண்யபுருஷா வாவா
எங்கள்குறைதவிர்த்தா ளீஸ்வரா தேவா (சங்கரா)

சரணம்.

(1) வண்டுமொய்த்துறு குழல் மங்கை பார்வதி சீராய்க்
கண்டு களிக்க வருள் காருண்யா வாராய் (சங்கரா)

(2) பக்தி முக்தியுந் தேடுஞ் சித்தர் மனநிலுறு
தத்தித்திமி யென்றுடுந் தாண்டவப் பொருளே (சங்கரா)

(3) கங்கைதிங்களு மணி தங்கநிறச் சடையாய்
மங்கை பாகா நீயோர்சேய் வரமகிழ்ந்தருள்வாய் (சங்கரா)

என்று பற்பல பாடல்களைச் சொல்லித் துதித்துக்கொண்டு ஸ்வாமி தரிசனஞ்செய்து பிறகு பிரதக்ஷிணம் வரும்பொழுது, ஸ்வாமி சந்நிதிக்குத் தென்பால் அடர்ந்து வளர்ந்து நின்றதும் பிரதக்ஷிணஞ்செய்ய வருபவர்களுக்குப் பகலில் நிழலையும் இராக்காலத்திற் குளிர்ந்த காற்றையுடைய தென்றலையுந் தரும்படியான ஓர் ஆலவிருக்ஷத்தின் கீழ் அடியார்க்கடியாராகிய சாம்பசிவமூர்த்தி ஒரு விருத்தாப்பிய சந்நியாசியைப்போல் ஜடாமகுடதாரியாய் விபூதி ருத்ராட்ச தாரணராய் யானைத்தோல் போர்த்துப் புலித்தோலையரைக்கசைத்து மான்தோல் ஆசனத்தில் வீற்றிருந்து பக்கத்தில் தண்டு கமண்டலம் வைத்துப் பூதகணங்கள் தான்கொண்ட கோலத்திற்கேற்ப சிஷ்யவர்க்கங்களைப்போல உருவெடுத்துத் தனக்குத் தொண்டு செய்யவும், அவர்களிற் சிலர் சந்தேக நிவர்த்திசெய்து கொள்பவர்களைப்போல் குருவாயிருக்கும் உருத்ரமூர்த்தியை வினவிக்கொண்டு மிகவும் பக்திசிரத்தையுடன் அவர் சொல்வதைக் கேட்டுக்கொண் டிருப்பதைப்போலவும் இருந்தார்.

அரசன் நெருங்கி ஆலமரத்தின்கீழ் வீற்றிருக்குந் திருக்கூட்டத்தினைக் கண்டு பத்நிகளுடன் அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்தெழுந்து புளகாங்கிதனாய் ஆனந்தபாஷ்பம் நதிபோலொழுகக் கரைந்து மனமுருகி மரம்போல் அசைவற்றுக் கைகட்டி வாய் புதைத்துத் திறந்தகண் மூடாமல் ஏகாக்கிரசித்தனாய்ப் பேச நாவெழாமல் மௌனமாய் நின்றான்.

சந்நியாசியாகிய கடவுள் அரசன் பக்திக்கும் வைராக்கியத்திற்கும் தவத்திற்கும் மெச்சிக் கடாக்ஷித்து "அரசனே! உனக்கு வேண்டுவது யாது?" என்று வினவ, அரசன் திடுக்கிட்டு நாவை ஒருவாறு வசப்படுத்தி "ஓமகாத்மாவே! அடியேன் அபயம் அபயம். கடாக்ஷித்தருளவேண்டும். அடிமைக்கு ஓர் ஆண்குழந்தை வேண்டும்" என்று கூறினான். இதைக் கேட்ட சந்நியாசியானவர் இராஜனைப் பார்த்து "மூடனாய்த் தீர்க்காயுளுடைய ஒரு புத்திரன் வேண்டுமா? அல்லது அற்ப ஆயுளுடைய ஞானவானாய் ஒரு புத்திரன் வேண்டுமா?" என்றார். அரசன் வெருண்டு "ஒருநாளிருந்தாலுங் குற்றமற்ற ஞானியான குழந்தை போதும்" என்னா பத்தினிகளிருவரும் ஸ்வாமியின் பாதத்தில் வீழ்ந்து "எங்கள் குலதெய்வமே!

ஞானியும் தீர்க்காயுசு முடையவனுன சிசுவுண்டாக அனுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சந்நியாசி அரசனை நோக்கி "உனக்கு ஞானவானுன ஓர் புத்திரனைக் கடவுள் சீக்கிரத்திற் கிருபைசெய்வார். ஆனால் அவனுக்கு இருபத்திரண்டாவது வயதிற் சத்துருவால் மரணம் நேரிடும். அப்போது யாரேனும் ஜீவன்முத்தன் அவனுக்கு உதவிசெய்து ரக்ஷிக்கின் நெடுநாள் ஜீவித்திருப்பான். இனி நீங்கள் போகலாம்" என்று உரைத்துச் சிஷ்யவர்க்கங்களுடன் வேதாந்தபாராயணஞ் செய்யத் தொடங்கினர்.

அதைக் கண்டு அரசனும் பத்தினிகளும் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து ஸ்துதித்துவேண்ட, முனிவர் தங்களைப் பார்க்காததைக் கண்டு, கடவுளைத் துதித்துப் பாடிக்கொண்டு, சன்னிதானஞ் சென்று நமஸ்கரித்து மறுபடியுஞ் சந்நியாசி யிருக்குமிடத்திற்குப் பிரதக்ஷணமாய் அவசரத்துடன் வர, அங்கு, சந்நியாசி திருக்கூட்டத்துடன் இல்லாதிருக்கக் கண்டு அலறி, "மோசம் போனேமே" என்று பலவாறு பிதற்றி "ஓ தெய்வமே! சாம்பமூர்த்தியே இந்தச் சந்நியாசி உருவமாய்த் தரிசனந்தந்தார், வரந்தந்தார், கிருபை புரிந்தார்" என்று பலவாறு துதித்துக்கொண்டு ஸ்வாமி சன்னிதானத்திற்சென்று பரவசமாய்ப் பூமியில் வீழ்ந்தார். பத்தினிகளுபசாரணை பண்ணிக்கொண் டிருந்தனர்கள். இதற்குள் சூர்யோதயமாய்விட்டது. அரசன் மூர்ச்சைதெளிந்து எழுந்து கடவுளாகிய சந்நியாசியை எங்குந் தேடிப்பார்த்துங் காணமல் தியங்கித் தேறிக் "கடவுள் தரிசனந்தந்து தன் குறையைத் தீர்த்திருக்க வருந்துவானேன்" என்று தனக்குள் தானே பூரித்துக்கொண்டு நதியிலிறங்கி நித்தியகடனை முடித்துக்கொண்டு சன்னிதிக்குவந்தார். அந்த வேளையில் அர்ச்சகன் ஸ்வாமி பிரசாதமெடுத்து வந்து அரசனுக்களிக்க, அதைப்பெற்றுக் கண்களிலும் தலையிலும் ஸ்பரிசிப்பித்து அருந்தி "ஓ பக்தவச்சலா! பரந்தாமா! பார்வதிசமேதா! கைலாஸவாசா! கறைக்கண்டா! அரவாபரணு! நாங்கள் இன்றோடு விரதம் பூர்த்தி பண்ணிக்கொண்டோம். உனது எண்ணற்கரிய தரிசனம் அகப்பட்ட எங்களுக்கு இனியென்ன குறை? எல்லாமுனது திருவிளையாட்டன்றோ" என்று பாடித் துதித்துப் பத்தினிகளுடன் அரண்மனைசென்று கிருதார்த்தனாய் இராஜசபை சென்று தன் மந்திரிகட்கும் மற்றுமுண்டான சபையோர்கட்கும் தனக்கு ஸ்வாமி தரிசனந்தந்த விர்த்தாந்தங்களைச் சொல்லி மனங்களித்து வாழ்ந்திருந்தான் குலசேகரப்பெருமாள்.

இவர்களிப்படியிருக்க மாளவதேசத்தரசன் புதல்வர்கள் சிவ ராத்திரியன்று நடத்திய விசேஷங்களைச் சொல்லுவோம்.

பரமார்த்தகேஸரி:—"தம்பி! சிவராத்திரிப்போது நமக்கெப்படிப் போவது? அரசன்மனைவிகளுடன் இன்றிரவு ஆலயத்திற்றானேஇருப் பார்போ லிருக்கிறது. காவற்காரர்களிற் பெரும்பாலார் அரசனுட னிருப்பார்களாகையால் இதுதான் நமக்கு வாய்த்த சமையம். இராஜ புத்திரிகளை இன்று எப்படியும் பார்த்து வரவேண்டும். நமது விசா ரணையில் இராஜகுமாரிகள் நித்தியம் சாயங்காலத்தில் விஸ்வநாதர் தரிசனத்திற்கு வருவதாகத் தெரிந்தோமே! நாம் இவ்விடம் இரண்டு வாரமாய் ஒவ்வொருநாளும் கோவிலுக்குச் சென்று காத்திருந்தும் அரசனையும் பத்தினிகளையும் பார்த்தோமேதவிர இராஜபுத்திரிகளைக் காணவில்லையே. இனி இப்படியிருக்கலாகாது. நாம் நமது பராக்ர மத்தைச் சற்று வெளியிடாவிடில் காரியசித்தி யாகமாட்டாது. ஒரு வேளை இராஜசேவகர்களேனுந் தூதர்களேனும் நமது செய்கைகளில் திருஷ்டி வைத்திருப்பினு மிருக்கலாம். ஆகையால் ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். திருடர்கள் தரிக்கும் ஆயுதங்களும் கபாடக்கோ லும் தாம்புக்கயிறும் நித்திரை சஞ்சீவி முதலியவைகளையும் எடுத் துக்கொண்டு நீ தக்ஷிணபாரிசமாய்ப் போய் நந்தவனத்தின் கீழ்ப் பாரிசத்தில் இரு; நான் உத்திரமாய்ப் போய் உன்னைச் சந்தித்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லி இருவரும் திருடர்கள் வேஷம் பூண்டு ஒருவரையொருவர் தொடராமற் பிரிந்து மாறுபாடாய்ப் போகவே, இவர்களைக் காத்திருந்த சேவகன் இருவரையும் ஒரே காலத்தில் தொடரமுடியாமல், "மோசம் போனேனே, ஒருவனைத் தொடருவதைவிட நமது தலைவனுக்கு எச்சரிக்கை பண்ணுவது உத்தமம்" என்று நினைத்துத் தன் தலைவனைத் தேடிச் சென்றான். இதற்குள் இரண்டுசகோதரர்களுஞ் சந்தித்து நந்தனவனம் வழியாய் இராஜகுமாரத்திகள் இருக்கும் அரண்மனைக்கு வெளியே சென்று கபாடத்தைத் திறக்க எத்தனிக்காது உப்பரிகைக்கு நேராகவிருக்கும் சன்னற் கம்பிகளிற் கயிற்றைக் கொக்கி கட்டி எறிந்துமாட்டி அக் கயிற்றின் வழியாய் உள்ளே குதித்துப் பள்ளியறையைத் தேடுகை யிற் சேவகர்கள் நித்திரை செய்வதைச் சுவாசத்தா லறிந்து, நித் திரை சஞ்சீவியை அவர்கள் ஒவ்வொருவர் மூக்குக்கும் நேராகப் பிடித்து மூர்ச்சையடையச் செய்து பள்ளியறையின் கபாடத்தெதி ரில் சயனித்திருக்குந் தாதிவர்க்கங்களையும் மூர்ச்சையடையச்செய்து

கபாடத்தை மெதுவாகத் திறந்து சந்தடி பண்ணுமல் உள்ளே நுழைய அவ்விடஞ் சயனித்திருக்கும் மரகதமென்னுந் தாதியின் மேல் இவர்கள் கால் தடைபடக் குறிப்பாய்ப் பார்த்துத் தாதி யென்று தெரிந்து நித்திரை சஞ்சீவியை முகரச்செய்து இராஜ குமாரிகள் படுத்திருக்குமிடம் தெரியாமல் திகைத்துத் தங்களிட மிருக்கும் நட்பதீபத்தின் பிரகாசத்தை ஒவ்வொருவிடத்தும் காண் பித்துப் பஞ்சணையிருக்குமிடந் தெரிந்து சந்தடியின்றிப் போய் இராஜகுமாரத்திகளின் அருகில் நின்று கபாடக்கோலில் நித்திரை சஞ்சீவியைவைத்து நாசிக்குச்சரியாய்நீட்டி முகரச்செய்து மூர்ச்சை யடையச் செய்தபின் கபாடத்தை மூடித் தீபத்தைக் கொஞ்சம் பிர காசிக்கச் செய்து அப்பெண்களின் உருவைக் கவனிக்கலாயினர்.

"ஆஹா மிகவும் ஆச்சர்யம். அரம்பை ஊர்வசி திலோத்தமை என்னும் தேவகன்னியர்களை யொத்தவர்களா யிருக்கிருர்கள். முப் பத்திரண்டு லட்சணங்களும் சரியாயிருக்கிறதே. இவர்கள் ஒருவர்க் கொருவர் நெருக்கமின்றி ஒரே பஞ்சணையிற் சயனித்திருப்பதுவே இவர்களொற்றுமைக்கு சாக்ஷி. கடவுள் எங்க ளிருவருக்காகவே இவர்களிருவரையும் படைத்திருக்கவேண்டும். அப்படி இவர்கள் நம க்கு வாய்க்காவிடில் விவாகமின்றி வாழ்வதே சுகம். இவர்களை உண ரச்செய்து இவர்களோடு பேசுவோமா? அப்படிச் செய்கில் நாம் இன்னுரென்று தெரியாததால் கலகம் நேரிடக்கூடும். நாமும் கால தாமதமின்றித் திரும்பவேண்டியிருக்கிறதே. இவர்களை ஸ்பரிசித்துப் போவோமென்ருல் தமக்கை தங்கை இன்னுரென்று தெரியவில்லை யே! என்ன செய்யலாம்" என்று ஏங்கி, "இவர்களை மணம்புரிவதே விரதம்" எனத் தீர்மானித்து ஒருதரத்திற்குப் பத்துதரம் அவர்கள் முகவிலாசத்தையும் ரூபத்தையும் பார்த்து அவர்களைவிட்டு வெளி யில் வந்து கதவை முன்போலப் பந்தனம் பண்ணித் தாதியர்களையுங் காவற்காரர்களையுங் கடந்து ஜன்னல் வழியாக இறங்க எத்தனிக்கும் போது மனிதசஞ்சார இரைச்சலுங் குசுகுசுத்த குரல்களுங் கேட் டன.

"ஏது இன்னுஞ் சூரியோதயத்திற்கு இரண்டுசாம மிருக்கிறதே! இதற்குள் இரைச்சலுண்டாவானேன்" என்று குறிப்பிட்டுப் பார்க் கத் தங்கள் செய்கைகளைத் தெரிந்து காவற்காரர்கள் ஜாக்கிரதை யாய்விட்டார்கள். காலதாமதம் பண்ணிவிட்டோம். தங்களைப் பிடிக்க முயலுகிருர்கள். ஆயினும் பார்ப்போம் என்று ஜன்னல் மார்க்கத்

தைவிட்டு எதிர்த்துப் போராடும்படி நினைத்துப் படிவாயிலின் மார்க்கஞ்சென்று பூனையைப்போற் கீழேகுதித்துச் சந்தடியில்லாதிருக்கக் கண்டு வெளியேவர, அவ்விடத்தி லொளிந்திருந்த பதின்மர் சேவகர்கள் இவர்களை எதிர்க்க, அவர்களை ஒரு நிமிஷத்திற் பறக்கடிக்கச் செய்து மறைந்துபோயினர்.

அடிபட்ட சேவகர்கள் இரைச்சலிட்டுத் "திருடர்கள் போய் விட்டார்கள். ஓடுங்கள் பிடியுங்கள்" என்று கூவ, ஜன்னல் வழியைப் பார்த்திருந்த சேவகத்தலைவனுஞ் சேவகர்களும் ஓடிவந்து நடந்ததை யுணர்ந்து வெட்கி, "இனி யென்னசெய்யப் போகிறோம்?" என்று ஏங்கி நிற்க, இவையெல்லாம் ரகஸ்யமாயிருந்து பார்த்துக் களித்துக்கொண்டிருந்த விக்ரமசேனன், சேவகத்தலைவனைச் சைகையாலழைத்து "இனி உங்களால் ஆவதொன்றுமில்லை. சந்தடிசெய்யாமல் அரண்மனையைவிட்டுப் போங்கள்" என்றான். தலைவன் பயந்து விடைபெற்றுக்கொண்டு தன் சேவகக் கூட்டத்தை அழைத்துச் சென்றான்.

மந்திரி, பராக்கிரமசேகரன் செய்கைகளை அறிய இரவிற் சஞ்சரிப்பது வழக்கமாதலால் இனி அவன் இன்று செய்வதொன்று மில்லையென்று நினைத்து நித்திரைபோய்ச் சூர்யோதயத்திற்குமுன் தன் நித்தியகடனை முடித்துக்கொள்ள நதிதீரஞ் சென்றான்.

மறுநாட் காலையில் மாணிக்கமென்னுந் தலைவாயிற் காப்பவள் இரவில் நடந்த சந்தடி தெரிந்து இராஜ குமாரத்திகள் சயனித்திருக்கும் அறைக்குட் செல்ல, காவலர்கள் வழியில் நித்திரை நீங்காதிருப்பதைக் கண்டு அவர்களைப் பிரயாசைப்பட்டு எழுப்பித் தாதிகளண்டை சென்று அவர்களையு மப்படியே எழுப்பிப் பள்ளியறையின் கதவை மெதுவாய்த் தட்டச், சந்தடியில்லாதது கண்டு வெருண்டு மரகதத்தைக் கூவியழைத்துக் கதவைத்தட்ட மரகதம் ஒருவாறெழுந்து சூர்யோதயமானதையும் இராஜகுமாரிகள் நித்திரை நீங்காதிருக்கின்றதையுங் கண்டு திடுக்கிட்டுக் கதவைத் திறந்தாள். திறந்தவுடன் மாணிக்கத்தைக் கண்டு அவளால் நடந்தவை யாவையுமுணர்ந்து இராஜகுமாரத்திகளை எழுப்பி நடந்திருப்பதைத் தெரிவிக்க, அவர்களும் ஆச்சரியப்பட்டு, அனைவருமிப்படி நித்திரைபோனதற்கு என்ன காரணமென்று யோசித்துப் பரிசோதிக்க, "ஜன்னலிலொரு கொக்கிமாட்டிய கயிர் பூமிவரையில் தொங்கிக்கிடப்பதைக் கண்டு

தலைவாயிலிலுண்டான இரைச்சலைக் கிரகித்து "ஏதோ திருட்டு நடந்திருக்கிறது சந்தேகமில்லை" என்றுணர்ந்து, தங்கள் தாய்மாரிடத்திற்கு ஆளனுப்பி நடந்திருப்பதைத் தெரிவிக்க, அவர்களும் அரண்மனையில் திருடர் பிரவேசித்தாரென்று இராஜனுக்குத் தெரிவித்தார்கள். அரசன் கேட்டுத் திருடர்கள் ஒன்றும் எடுத்துப் போகவில்லையென்று தாதிகளாலறிந்து கோபித்து "எனது இராஜாங்கத்தில் திருட்டு நடப்பானேன்" என்று யோசித்து, "என்னகுறைவு வந்ததோ" என்று கூறித் "திருடரைப் பிடிக்கும்வரையிற் சேவகத்தலைவனுக்குப் பொன் கொடுக்கலாகாது" என்று உத்திரவளித்துத் தனக்கு ஸ்வாமி தரிசனந் தந்ததையே புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

9. சந்நியாசி.

விக்கிரமசேனனும் அரசனும் அரசனரண்மனை மண்டபத்தில் உட்கார்ந்து சில விவகாரங்களைக் கவனித்துக்கொண்டிருக்கும்போது, ஒருசேவகனோடிவந்து அரசனுக்கும் மந்திரிக்குந் தண்டம் சமர்ப்பித்து "மஹாராஜாவே! யாரோ ஒரு சந்நியாசி வந்திருப்பதாய்ப் படிவாயிற் சேவகன் சொல்லுகிறான்" என்றனன். இராஜன் திடீரென்றெழுந்து சந்நியாசியைப் பார்க்கச்செல்லவே மந்திரியுங் கூடச் சென்றான். அரசன் சந்நியாசியை வணங்கிக் "கிருபைசெய்து எழுந்தருளவேண்டும்" என்றுவேண்டச் சந்நியாசியின் சிஷ்யன் அரசனை நோக்கி "அரசே! எனது ஸ்வாமியார் வெகுதூரமிருந்து வருகிறார்; உமது நற்குணங்களையும் பக்தியையுங் கேட்டு இங்கு வந்தோம்; நீர் செய்யவேண்டியது யாதெனில், அவரிருந்து நிஷ்டை செய்வதற்கு ஓர் குளிர்ந்தவிடம் தருவீராகில் அங்கு ஆஸ்ரமங்கட்டிச் சிலநாளிருக்கலாமென்று வந்தோம்" என்றான். "ஆஹா என்தெய்வமே! உங்களிஷ்டப்படியே செய்கிறேன்" என்று அரசன் மந்திரியைப் பார்க்க, அக்குறிப்புத் தெரிந்து விக்ரமசேனன், "ஓ மஹாராஜாவே! இந்தச் சந்நியாசியோ விர்த்தாப்பியர். சிஷ்யரோ வாலிபப்பருவந் தாண்டினவராயிருக்கிறார். ஆகையால் இவர்களுக்கு நமது நந்தனவனச் சந்தனச் சோலையண்டையில் ஆஸ்ரம மியற்றிவைத்தால் அவர்கட்குத் திருப்தியாயிருக்கும்" என்றான். அரசன் அப்படியே உத்திரவளித்தான். சந்நியாசியுஞ் சிஷனும் அங்கமர்ந்து நிஷ்டைசாதித்து வருவாராயினர்.

மந்திரி ஒருநாள் அரசனிடம் வந்து "ஓ ஆண்டவனே! நமது நந்தனவனத்திலிருக்கும் சந்நியாசியுஞ் சிஷ்யனும் மிகுந்த நற்குணமுடையவர்களும் தபோதனர்களுமாய்த் தோற்றுகிறார்கள். அநேக இராஜ்ஜியங்கள் திரிந்துவருபவர்களாகையால் நமதுஇராஜகுமாரிகளை இவர்களுக்குப் பணிவிடை செய்யத் திட்டம்பண்ணி இவர்களால் அம்மாது சிரோன்மணிகளுக்குத் தக்க காதலரைத் தெரிந்து விவாக முயற்சிசெய்யலாமென்று நினைக்கிறேன். தேவரீர் சித்தம் எப்படியிருக்குமோ?" என்ன, அரசன் அக்கருத்துக் கிணங்கித் தன்மனைவிகளை எச்சரிக்க, அவர்களும் மகிழ்ந்து தங்கள் குமாரத்திகளை அழைத்து "நமது நந்தனவனத்தில் தபம்பண்ணிவரும்சந்நியாசியவர்களுக்கும் அவர் சிஷ்யருக்கும் அவர்கள் மனங்களிக்கப் பணிவிடை செய்து அவர்களால் அநுக்கிரகம் பெறவேண்டும் கண்மணிகளே!" என்றார்கள்.

இராஜபுத்திரிகள் இதைக்கேட்டு மகிழ்ச்சியுடன் "அப்படியே செய்கிறோம்" என்றுரைத்துத் தாய்மார்களிடம்விடைபெற்றுச்சென்று தனியாயிருந்து யோசித்து மனதைத் திருப்திசெய்துகொண்டு தாதியர்களுடன் நந்தனவனஞ் சென்று யோகியையும் அவர் சிஷ்யரையும் பணிந்து தாங்கள் வந்த சங்கதியைத் தாதிகளாற் றெரிவித்தார்கள்.

சந்நியாசியும் சிஷ்யனும் மகிழ்ந்துஅவர்களுக்கு ஆசிகூறி அவர்கள் பணிவிடை செய்யப்பெற்றுச் சமயம்பார்த்து வந்தார்கள். இவ்விதம் சிறிதுநாள் சென்றவுடன் சந்நியாசி இராஜகுமாரிகளின் பணிவிடைக்கு மெச்சினவராய் அவர்கள் குணாதிசயங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு ஒருநாள் அவர்களைத் தன்னருகி லுட்காரச்செய்து "ஓ மாதுசிரோன்மணிகளே! உங்கள் பணிவிடைக்கு மிகவும் மெச்சினோம். உங்கள் கருத்தென்ன? உங்களுக்கு வேண்டுவது யாது? நீங்களும் எங்களைப்போற் சன்னியாசம்பெற நினைத்திருக்கிறீர்களா? அல்லது தக்க புருஷர்களை மணந்துகொண்டு இராஜ்ஜியபாரணம் பண்ண இச்சிக்கின்றீர்களா?" என்றார். இராஜகுமாரிகளிருவரும் இவ்வசனங்களைக்கேட்டு வெட்கித் தலைகுனிந்து கண்ணீர்விட்டுத்துக்கித்தனர். சந்நியாசி மிகவும் பரிதாபத்துடன் "உங்கள் துயரம் யாது? சொல்லுங்கள்? எங்களாலாகுமெனில் எப்படியுந் தீர்க்கிறோம்" என்றார். காந்திமதி அவர் பாதத்தில் நமஸ்கரித்து "ஓ ஐயனே! யாங்கள்

பயந்து சொல்கிறோம்; தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நாங்களிருவரும் ஒருவர்க்கொருவர் இணைபிரியாது தேகமிரண்டும் தேகியொன்றுமாய் வளர்ந்து வருகிறோம். ஏதோ சில கலைகளையும் அஸ்திராப்பியாசங்களையும் எங்கள் பிதா கற்பித்து வைத்தார். நாங்கள் மங்கைப்பருவமடைந்து நாலைந்து வருஷங்களாகின்றன. வெகு நாளாயில்லாமல் இப்போது இரண்டொரு மாதமாய் மணக்காதல் கொண்டு வருந்துகிறோம். ஆனால் எங்களைப்போல் இணைபிரியாத இரண்டுஇராஜசகோதரர்கள்அகப்படுவது முடியாததாகையாலும் வேறு வேறாயிருக்க நாங்கள் மனந்தாளோமாகையாலும் "கிட்டாதாயின் வெட்டெனமற" என்னும்பழமொழிப்படி உள்ளுக்குள்ளேயேவருந்திக்கொண்டிருக்கும்போது ஸ்வாமிகளுக்குப் பணிவிடைசெய்யப் பூர்வஜன்ம பூஜாபலத்தால் வாய்த்தது. இனி ஸ்வாமிகளின் கிருபையால் யாங்கள் கடைத்தேறவேண்டியதாயிருக்கிறது" என்றுகண்ணீர் சொரியத் தலைகுனிந்து நின்றாள்.

சந்நியாசி மிகவும் மகிழ்ந்து "ஓ பெண்கள் நாயகங்களே! அஞ்சாதீர்கள். நீங்களிவ்வளவு வருத்தத்தோடு யாம் களிக்கப் பணிவிடை செய்தும் உங்களுக்கு மனவருத்தம் நீங்காதிருக்கலாகுமோ! இனி அரைக்ஷணமேனும் இங்கிருப்பதில்லை. உங்களுக்கு ஆடவர்களைத் தேடி மணம் புரிவிப்பதே எங்கள் வைராக்கியம். எனக்குத் தெரிந்த ஓர்ராஜனுக்கு இரண்டு குமாரர்கள் உங்களைப்போல் ஒற்றுமையாயிருப்பதாக ஞாபகம் வருகிறது. அவர்களே உங்களுக்குத் தக்க மணவாளர்கள். அவர்களைவிட வேறு தோற்றவில்லை. அந்த அரசனைக் காணும்படி இதோ போகிறோம். நீங்கள் அரண்மனை சேருங்கள்" என்றுகூறி இருவருமெழுந்து வெகு அவசரமாய்ப் போனார்கள்.

அரசன் நந்தனவனக் காவலாளிகளாற் சந்நியாசியும் சிஷ்யனும் மிக அவசரமாய் ஆஸ்ரமம் விட்டுப் போய்விட்டார்கள் என்று தெரிந்தவுடனே மனதிலாயாசப்பட்டு "நமது குமாரத்திகள் சிறுவர்களாயிற்றே, என்ன அபசாரம் பண்ணிவிட்டார்களோ" என்று கோபங்கொண்டு மனைவிகளை வினவ, அவர்கள் நடந்தவை யாவுந் தெரிந்து அரசனுக்கு உரைக்க அரசன்மகிழ்ந்து "மந்திரியின் யுக்திநன்றாயிருக்கிறது" என்று புகழ்ந்துகொண்டான். மந்திரி தினமும் நந்தனவனத்தில் நடக்கும் சங்கதிகள்யாவும் அன்றன்று தெரிந்தும் ஒன்றுந்தெரியாதவன்போற் சும்மாவிருந்தான்.

இப்பால் அரசன் சபையிற் "கூ" என்று ஓர் இறைச்சல் உண்டாகிக் கும்பல் கும்பலாகக் குடிகள் வந்து முறையிடவே, அரசன்

சபைக்குச் சென்று குடிகளை விசாரிக்க, அவர்கள் வணங்கி "எங்களாண்டவனே! இதுவரையிலில்லாத கொடுமை நேர்ந்தது. காட்டு மிருகங்கள் கும்பல் கும்பலாய் வந்து எங்கள் பயிர் முதலியவற்றைத் தொம்சம் பண்ணினதுமன்றித் தோட்டங்களை யழித்து நாற்காலிகளைக் கொன்றெடுத்துப்போயின. அவற்றைத் துரத்தப்போன சிலர் வதைக்கப்பட்டனர். தேவரீர் காப்பாற்றுவிடில் இராஜ்ஜியம் அழிந்துவிடும். மஹாராஜாவே! ஹரிச்சந்திரனது நாட்டையழிக்க விஸ்வாமித்திரர் துஷ்ட மிருகங்களைச் சிருஷ்டிசெய் தனுப்பினதாகக் கேட்டிருக்கிறோம். இவை அவைகளைவிட மிகத் துன்பங்களை விளைத்துவிட்டன" என்று ஓவென்றழுது முறையிட்டனர். இராஜன் மிகவும் மனவருத்தப்பட்டு மந்திரிகளை வினவ "யாவருஞ் சேர்ந்து வேட்டையாடி மிருகங்களை வதைப்பதே இராஜ தர்மம். இனித் தாமதமின்றி வேட்டைக்குப் பிரயாணப்படவேண்டும்" என்று தீர்மானிக்க, குடிகளைத் தேற்றி அரசன் பொக்கிஷத்திலிருந்து அவர்களுக்கு நேர்ந்த நஷ்டத்தைத் தீர்க்கும்படி திரவியமளித்து, "வேட்டைக்கு நீங்களும் உதவியாக வரவேண்டும்" என்று ஆக்ஞாபித்து யனுப்பிவிட்டு, மறுநாட் காலையில் "யாவரும் வேட்டைக்குப் பிரயாணப்படவேண்டும்" என்று பறை சாற்றுவித்தான்.

மாளவ இராஜகுமாரர்கள் தங்களிராஜ்யம் போகவேண்டுமென்றுத்தேசித்துப் பிரயாணமாயினவர்கள் அவ்வெண்ணத்தை விட்டு இராஜனும் பரிவாரங்களும் வேட்டைக்குப் போவதில் இராஜகுமாரத்திகளைப் பார்த்துப் பேசும்படியும் அவர்களுக்குத் தங்கள் விருத்தாந்தத்தைத் தெரிவிக்கும்படியும் சமயம் வாய்க்கும் என்றெண்ணி மனக்களிப்பு மேலீட்டால் தங்கள் விடுதியில் அமர்ந்திருந்தார்கள்.

பராக்ரமசேகரன் மிகுந்த மனவருத்தமுடன் இராஜசபை விட்டுத் தன்னரண்மனை சென்று குமாரர்களிருவரையு மழைத்துக்கொண்டு இரகஸ்ய அறைக்குட் சென்று "ஓ குமாரர்களே! குலசேகரன் விஸ்வநாதர் ஸேவையால் ஸ்ரீமாரனுண்டாகும்படி வரம்பெற்றதுமன்றித் தன் குமாரிக ளிருவரையும் மணம் புரிவிப்பதாக நந்தவனத்திலிருந்த சந்நியாசி வைராக்கியங்கொண்டு போயிருப்பதாகவும் தெரிய வருகிறது. இனி யாம் செய்வது யாதுளது? இவ்விஷயங்க ளிரண்டும் முடிந்துவிட்டால், பிறகு நமதிஷ்டம் நிறைவேறுவ தெப்படி?" என்றான்.

கோமளாங்கன்:—"தந்தையே! இன்று வேட்டைக்குப் பிரயாணப்படவேண்டுமென்று பறையறைவிக்கவில்லையா? நாமிருவரும்

வேட்டைக்குச் சென்று வனத்தில் அரசனை எப்படியும் மிருகங்களுக் கிரையாக்கிவிடுவோம். நாமே கொலை பண்ணினாலுஞ் சரி. அரசன் தனியாயிருக்குமிடத்திற்கு மிருகங்களைத் துரத்தி அவைகளால் வதை செய்வித்தாலுஞ் சரி. நாமிருக்கும்போது வேறொருவன் அரசனுக்கு உதவிசெய்ய வருவானோ வரமாட்டான். எனது தமையன் இவ்விடமிருந்துகொண்டு இராஜன் இறந்த சமாசாரங் கேட்டவுடன் மஹாதேவரைப் பிடித்துச் சிறையில் வைத்துப் பொக்கிஷத்தைச் சுவாதீனம் செய்துகொண்டு சைன்யங்களின் உதவியால் இராஜாங்கத்தை வசப்படுத்த முயலுவார். இதற்குள் நாமும் வந்து பூர்த்திபண்ணிக் கொள்ளலாம். இதுவே சரியான யோசனையா யிருக்கிறது. இந்தச் சமயஞ் சும்மா யிருக்கலாகாது. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிப்படி பறையோசை கேட்டது முதல் இதுவே என் மனதில் உதித்துக்கொண்டிருக்கிறது.

சோமபாலன்:—"ஓ பிதாவே! தம்பி சொன்னதுவே யுக்தி. அப்படியே செய்யவேண்டும். ஆனால் நமது கோரிக்கைப்படி எல்லாம் அனுகூலமாய் வருவது பிரயாசை. காட்டில் யாவருங் கலந்து வேட்டையாடும்போது அரசனைத் தனியே உங்களருகில் வரவழைப்பது முடியாது; அப்படி வரவழைத்தாலும் விக்ரமசேனன் கூடவே தொடர்வன்; கொலை பண்ணுவதாகில் விக்ரமசேனன் முதலான மந்திரிகளுக்குத் தெரியாமற்போகாது. தெரிந்தால் நம்முடன் சேர்ந்து இராஜாங்கமேற்றுக்கொள்ள முயலமாட்டார்கள். இதுநிற்க, நமக்கு உதவியா யாரிருக்கிறார்கள். சைன்யங்களிற் பாதியும் நமது வசமே. அரண்மனைக் காரியஸ்தன் விக்ரமகேது நமது துணைவன். விவசாய கார்யதரிசி பாக்யநாதர் நமது நண்பர். இவர்களை தவிற மற்றயாவரும் இராஜவிஸ்வாசிகள் ஆகையால தம்பி சொல்வதுபோல திடீரென்று இராஜ்யம் வசமாகமாட்டாது. இந்தச் சமயத்தில் இராஜபுத்திரிகட்கு விவாகம் முடியாவிடில் புத்திரோற்பத்தி யுண்டாய் நடக்கக்கூடினது யாது? புத்திரனுதித்தால் அவனை நாசஞ்செய்ய நம்மாலாகாதா? இப்படிச் செய்வதில் பிரஜைகட்கும் மந்திரிகட்குஞ் சந்தேகமுண்டாகாது; பிறகு குலசேகரன் நமக்கன்றி யாருக்குப் பட்டமளிக்கப்போகிறான்."

பராக்கிரமசேகரன்:—"சரி. சோமபாலனுரைத்தது நன்றாயிருக்கிறது. அவசரப்பட்டால் மோசம் நேரிடும். "மெல்லத்தின்றால் பனையுந் தின்னலாம்" அல்லவா? ஆனால் இராஜபுத்திரிகட்கு விவாகமில்

லாமற் செய்வதெப்படி? சந்நியாசி எங்கேயிருந்து அவர்களுக்கு மண வாளரைக் கொண்டுவருகிறாரோ தெரியவில்லை. அவர்கள் நமது சொல்லுக்கு அடங்குபவர்களாயிருந்தால் அவர்களுக்கு வேண்டிய கோட்களைச் சொல்லி விவாகத்தைத் தற்காலம் தடங்கல் செய்து வேறு பெண்களை அவர்களுக்குத் தீர்மானம் பண்ணலாம். பிறகு சகோதரரான இரண்டு இராஜகுமாரர்கள் இந்தப்பெண்களின்கோரிக் கைப்படி வந்தாலல்லவோ மணம்.''

கோமளாங்கன்:—''விவாகமில்லாமற் பண்ணுவது என் வேலை. நீங்களதைப்பற்றி யோசிக்கவேண்டாம். இப்போதும் விவாகமில்லை. இனிமேலும் விவாகம் நடவாது. நீங்கள் வேட்டைக்குப் பிரயாணப் படுங்கள். காரியத்தை நிறைவேற்றின பிறகு உங்களுக்குச் சொல்லி யனுப்புகிறேன்.''

பராக்கிரமசேகரன்:—''அப்படியல்ல. நாம் மூவரும் தடையின்றி வேட்டைக்குப் போகவேண்டியிருக்கிறது. ஒருவன் நின்றுவிட் டால் அது விக்ரமசேனனுக்குச் சந்தேகத்தை யுண்டுபண்ணும்.''

கோமளாங்கன்:—''அப்படியானால் யானும் வருகிறேன். பாதி வழிசென்று பிறகு யாருக்குந் தெரியாமல் திரும்பவு மாகாதா? மறுபடியு முங்களுடன் இரகஸ்யமாகவே வந்து சேர்ந்துகொள்ளு கிறேன்.''

சரி. அப்படியே செய்யலாமென்று தீர்மானித்து யாவரும் வேட்டைக்குச் செல்ல முயன்றனர். இவையாவும் விஜயனின்றி நட ந்தபடியால் அவனுக்கு இதைக் குறித்து ஒன்றுந்தெரியாமற் போய் விட்டது.

10. வேட்டை.

குலசேகரப்பெருமாள் உத்திரவு செய்தபடி மறுநாளுதயத் தில் வேட்டை நாய்களுனுடம் ஈட்டி குந்தம்தனுசு முதலிய பாணங் களுடனும்வேட்டைக்காரர்கள் எங்கும்பரவினர். அரசனும் பிரயாண மாயினன். அரசனைவிட்டுமந்திரி இருந்தலாற்றாமையால்''இனிஎன்ன செய்வோம்''என்று விசனமுற்றிருக்கும் விக்ரமசேனன் பலவாறு யோசித்து, மஹாதேவரை அழைத்து ''நீர் இராஜாங்கத்தைக் கைக் கொண்டு மிகவுஞ் சாக்கிரதையாய்ப் பராக்ரமசேகரன் யாதொரு மோசமும் செய்யாமற் காத்துவரவேண்டும். அரசனைவிட்டு யான் இங்

இருக்கத்தகாது. இராஜகுமாரிகளின் விஷயத்தில் நீர் யாதொரு சிரமமும் செய்யவேண்டுவதில்லை. யானவ்வளவு சொன்னாற் போதாதா?" என்று திட்டம்பண்ணி அரசன் பிறகே ஆயுதபாணியாய்த் தொடர்ந்தான். பராக்ரமசேகரனும் அவன் புதல்வர்களும் ஆயுதபாணிகளாய் வேட்டைக்கு வரக்கண்டு "இனி இவர்கள் யாது விளைவிக்கப் போகிறார்களோ?" என்று சந்தேகித்து அரசனைப் பிரியாதிருக்க வேண்டிய முயற்சிகளைப் பண்ணிக்கொண்டான். ஊரிலிருக்குங் குடிகளிலனேகர் அரசனைப் பின்றொடர்ந்தார்கள். வேட்டைக்கு வேண்டிய வலை தடி ஈட்டி வில் அம்பு முதலியவை யாவுமெடுத்துக்கொண்டு வேட்டை நாய்கள் பின்றொடர ஏககாலத்தில் யாவரும் ஊரைவிட்டுப் பிரயாணப்பட்டுக் காட்டை நோக்கிச் சென்றனர். விக்ரமசேனனது இரகஸ்ய சேவர்கள் யாவரும் இராஜனோடு பிரயாணமாய் அவருக்குத் தேகரக்ஷணைக் காவலராய் அரசனையும் மந்திரியையுஞ் சூழ்ந்துபோயினர்.

இப்படி நெடுந்தூரஞ் செல்லவே சூர்யாஸ்தமனமாயிற்று. கோமளாங்கன்சமையம் பார்த்துக்கொண்டிருந்தவன்இரவில் தகப்பனிடமும் தமையனிடமும் விடைபெற்றுக்கொண்டு யாருக்குந் தெரியாமல் புரவிமேலேறித் திரும்பினான். மந்திரி அரசனுக்குக் காவலாயிருந்தமையால் இரவில் நடந்ததைத் தான் கவனியாதிருந்து மறுநாளுதயத்திற் சேனைகள் பிரயாணப்படும்போது கோமளாங்கனைக் காணாததால் விக்ரமசேனன் திகைத்து "ஏதோ மோசம் நடக்கப்போகிறது" என்று சந்தேகித்துப் பிறகு "மகாதேவரும் மாளவதேசத்தரசன் குமாரர்களு மிருக்கையில் நாம் பயப்படுவானேன்" என்று மனோதிருப்தி செய்துகொண்டு, அந்த இராஜகுமாரர்களின் புஜபல பராக்கிரமத்தையும் புத்திசாமார்த்தியத்தையும் யோசித்து அவர்கள் தீரத்திற்குக் கோமளாங்கன் ஒரு புழுவென்று திடங்கொண்டு இராஜனைப் பிரியாமற் சென்றான். அரசன் சேனையுடன் ஓர் வனஞ்சென்று முற்றுகையிட்டு அதிலிருந்த மிருகங்களை வதைக்கத் தலைப்பட்டனன். வேடுவருஞ் சேனைகளும் வேட்டை நாய்களுங் கூக்குரலிட்டு மிருகங்களைத் தங்களிருப்பிடம் விட்டகற்ற, அரசனும் மந்திரிகளும் மற்றவர்களும் அவற்றை எதிர்த்துக்கொன்றார்கள். யானை பன்றி கலைமான் புள்ளிமான் சிறுமான் கரடி சிறுத்தை வேங்கை முதலிய மிருகங்களில் ஓடிப்போய் உயிர்தப்பித்துக்கொண்டவைகள் போகக் கொல்லப்பட்டவைகளை ஒரு குன்றுபோற் குவித்தார்கள்.

பிறகு அந்தவனம்விட்டு வேறுவனத்திற்குச் சென்று அங்குமப் படியே வேட்டையாடி மிருகங்களைப் போக்கினார்கள்.

இப்படி இரண்டு மூன்றுதினம் ஒவ்வொரு வனத்தையுஞ்சுற்றி மிருகங்களை நாசப்படுத்திக்கொண்டு அதி தூரம்சென்று வேட்டையாடிக் களைத்து ஓர் நதிக்கரையில் தண்டிறங்கி ஒருநாளிருந்து இளைப்பாறி மறுநாள் அடர்ந்து நீண்ட ஓராரண்யத்திற் சென்றனர். அந்த வனமானது மிகப்பெரிதாயிருந்தது. விருக்ஷங்கள் நெருங்கி ஆகாசத்தை யளாவினதுபோல் வளர்ந்து பருத்து அவைகளின் சாகைகளாலும் இலைகளாலும் உண்டான நிழலால் அவ்வனமெங்கும் சூர்யரஸ்மிபடாத இருளாகவே இருந்தது. அதிலனேக துஷ்டமிருகங்கள் வாசமாயிருந்தன. வேடுவர், நாய்களைவிட்டு இறைச்சலுண்டாக்கவே அனேக மிருகங்கள் வெளிப்பட்டன. ஒவ்வொரு யுத்த வீரனும் அனேகமனேக மிருகங்களை எதிர்த்தார்கள். ஆகையால் ஒருவர்க்கொருவர் நெருங்கமுடியாமல் மிருகங்களைத் துறத்துவதிலும் வேங்கை முதலிய துஷ்டமிருகங்கள் தங்களை எதிர்க்கில் அவைகளைக் கொல்லுவதிலும் முயர்சியாயிருந்தனர். விக்ரமசேனன் அரசனைப்பிரியாது தொடர்ந்துகொண்டே யிருந்தான். சோமபாலன் அதைத் தந்தைக்குச் சுட்டிக் காண்பித்து "நாம் கோமளாங்கன் சொன்னபடி முயற்சி பண்ணினால் அரசனைத் தனியாகப் பிரிப்பதெப்படி? விக்ரமசேனன் புஜபலத்தையும் புறவி நடத்தும் வேகத்தையும் பார்த்தீர்களா?" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு பெரியவேங்கை அரசன் சமீபத்தில் வெளிப்பட்டு அரசனது ஆயுதங்களுக்குத் தப்பித்துக்கொண்டு பிராணபயத்தோடு அதிவேகமாயோடத்தலைப்பட்டது. அரசனதைத் துரத்திச் சென்றான். மந்திரி அரசனைத் தொடர்ந்து விடாது பின்சென்றான். இப்படி வெகுதூரஞ் செல்லவே அரசன் புரவி தாகத்தாற் பரிதபித்துப் பின்வாங்க அரசனதற்கு இடங்கொடாமல் தட்டிகொடுத்துக்கொண்டு வேங்கையைத் தொடர்ந்து அதை விடாது துரத்திக்கொண்டு ஒரு இருண்ட அரண்யத்திற் செல்ல, அம்மிருகம் ஓர் மலைச்சாரலை நோக்கி ஓட, அரசனும் பின்றொடர்ந்தான். அப்போது அரசனுக்குப் பிறகே இடிமுழக்கம்போலொரு கர்ச்சனைகேட்டது. அரசன் குதிரையை நிறுத்தித் திரும்பிப்பார்க்கவே ஒரு பெரும் புலி அரசனைத் துரத்திவருவதைக் கண்டான். முன்போன மிருகத்தைவிட்டுப் பின்வரும் மிருகத்தை எதிர்க்கத் தொடங்கும்போது, பயந்து ஓடி முன்செல்லும்

வேங்கை கர்ச்சனையைக்கேட்டு மறுகர்ச்சனை பண்ணிக்கொண்டு தன் சகியுதவிக்கு வந்ததெனத் தெரிந்து தைர்யம் பூண்டதைப்போற் றிரும்பி அரசனுக்கு நேராகவந்தது.

இப்படி இரண்டு பெருவேங்கைகள் கர்ச்சித்துக்கொண்டு முன்னும் பின்னும் வரவே அரசன் புரவி மிகப பயந்து ஓட எத்தனிக்க, அரசனதை யடக்கித் தைர்யப்படுத்துமுன் வேங்கைகள் இருபுறமும் நெருங்கி முன்வந்த வேங்கை அரசன்மேல் வைத்த கொடுங்கோபத்தால் அவர்மேல் அச்சமின்றிப் பாய்ந்தது. பின்வந்த அக்கொடும்புலி குதிரைமேற் பாய்ந்து தொடையைப் பிடித்துக்கொண்டது. இதற்குள் அரசன்மேற் பாய்ந்த வேங்கையின் செவியில் ஒரு துப்பாக்கிக் குண்டுபட்டு அரசனை ஸ்பரிசிக்குமுன் தரையில் வீழ்ந்து இறந்தது. குதிரையானது தன்னைப் புலி பிடிக்கவும் உடனே துப்பாக்கியின் சப்தம் முகத்தருகிற் செனிக்கவுங்கண்டு துன்பம் சஹிக்காமற் குதிக்க, அரசன் குதிரையைவிட்டுக் கீழே குதித்தான். அப்போது வேங்கையும் குதிரையைவிட்டு அரசன்மேற் பாய, மற்றொரு துப்பாக்கிப் பின்புறத்திருந்து வெடித்துக் குண்டு அவ்வேங்கையின் திறந்திருந்த வாயின் வழிபாய்ப் பாய்ந்து சிரசிற்பட்டு அம்மிருகம் வீழ்ந்திறந்தது. உடனே இரண்டு இராஜகுமாரர்கள் அரசனுக்கு முன்னும் பின்னுமாய் இரண்டு மரங்களின் மறைவிலிருந்து வெளிப்பட்டார்கள். அரசனவர்களைக் கண்டு மூர்ச்சையாய்த் தரையில் வீழ்ந்தான்.

அவ்விரண்டு இராஜகுமாரர்களும் அரசனை யெடுத்துச் சம்பத்தி லோடிக்கொண்டிருந்த அருவிக்குக் கொண்டுபோய் முகத்திலும் புஜத்திலும் குளிர்ந்த ஜலத்தை இறைத்துத் தங்கள் வஸ்திரங்களாற் றுடைத்துக் கிளைகளால் வீச, அரசன் மூர்ச்சை தெளிந்து தாகம் தணித்துக் களையாறி இரண்டு இராஜகுமாரர்களினழகையும் பார்த்து அவர்கள் புஜபலத்திற்கும் புத்திக்கும் மகிழ்ந்து "இன்று என் பிராணனை வேங்கைகளினின்றும் இரட்சித்த உத்தமர்களும் சுத்த வீரர்களுமான நீங்கள் யாவர்?" என்று வினவினன்.

பரமார்த்தகேஸரி:—வணங்கி "ஓ மஹாராஜாவே! நாங்கள் அசனூர் இராஜாவின் புத்திரர்கள். நாங்களும் தேவரீரைப்போல வேட்டைக்கு வந்தோம். களைத்திருப்பதைப்பார்த்து தாகந்தணித்தோம்" என்றான்.

அரசன் மகிழ்ந்து "உங்களுக்கு வேண்டியவை யாதோ அதைத் தெரிவித்தால் என்னாலான உதவிசெய்கிறேன்" என்ன, பரமார்த்த கேஸரி மறுபடியும் வணங்கித் "தேவரீர் கேட்டபடியால் சொல்லு கிறேன். நாங்களிருவருஞ் சகோதரர்கள். தேவரீரிட மிருக்கும் ஓர் பொருளுக்கு இச்சித்து வந்தோம்" என்றான்.

"இச்சித்த பொருளைத் தந்தோம்" என்று அரசனுரைக்க, விக்ரமசேனன் தன்புரவிமேல் வரும் அரவங்கேட்டு யாவரும் அவரை நோக்கி நின்றனர். விக்ரமசேனன், உருவியவா ளொருகையிலும் மற்றக் கையில் துப்பாக்கியுமாய் அருகில் வந்து இராஜனையு மிராஜ குமாரர்களையும் பார்த்து மகிழ்ந்து வாளையுந் துப்பாக்கியையும் உறைகளிலிட்டு அரசனைப்பார்த்து வணங்கி "நடந்த சங்கதி யாது?" என்றான். "மந்திரி! நான் உம்மைப்பிரிந்து அதிவேகமாய்ப் புலியைத் துரத்திக் காட்டுக்குள்வர, முன்னும் பின்னும் இரண்டு பெரும் புலிகள் என்னை எதிர்த்து நான் துரத்திவந்த புலி என்மேலும் பின்வந்த புலி குதிரையின்மேலும் பாய, முன்புலியை இந்த இராஜகுமாரனும் பின் பாய்ந்ததை அந்த இராஜகுமாரனுங் கொன்று என் பிராணனை இன்று இரட்சித்தார்கள். நான் களையாலுந் தாகத்தாலும் மூர்ச்சை யாயினேன். பிறகு இங்கிவர்கள் உபசரணைபண்ணப் பெற்றுக்கொண் டிருக்கிறேன். இந்தச் சுத்தவீரர்களை யாரென்று கேட்கவே, நாங்கள் அயலூர் இராஜபுத்திரர்களென்றும், தங்களைப்போல் நாங்கள் வேட்டைக்குவந்தோமென்றும், தங்களிடமிருக்கு மொருபொருளிலிச்சை வைத்திருக்கிறோம்" என்றுஞ் சொல்லவே, "அப்பொருளை யளித்தேன்" என்று சொல்லி வாயெடுக்கு முன் நீரும் வந்து சேர்ந்தீர்" என்று அரசன் சொன்னான்.

விக்ரமசேனன் சிறித்து அரசனை நோக்கி "ஸ்வாமி! இவ்வாலிபர்கள் மாளவதேசத்தரசன் தபஞ்செய்துபெற்ற குமார ரத்தினங்கள். இருவரும் இணைபிரியாது வளர்ந்து ஒற்றுமையுடன் தேஹ மிரண்டுந் தேஹியொன்றுமா யிருப்பவர்கள். தங்களுக்குத் தக்க இணைபிரியாதிருக்கு மிராஜகுமாரத்திகளை மணம்புரிய வேண்டுமென்று நினைத்துப் பிதாவினுத்திரவின்படி தேவரீர் மாதுசிரோன் மணிகளான குமாரத்திகளின் வரலாற்றைக் கேட்டு இந்த இரண்டு மாத காலமாய்த் தங்களிராஜ்யத்தைவிட்டுப் பாலைவனத்திற்கு வந்து நமதிராஜகுமாரிகளின் குணாதிசயங்களைச் சோதித்துவருகிறார்கள். இவர்களைத் தேவரீர் இப்போதுதான் பார்த்ததாக எண்ணவேண்

டாம். குதிரை வியாபாரிகளாய் வந்தவர்களும், பிக்ஷைக்காரர்கள் போல வேடம்பூண்டவர்களும் கோடங்கிகளா யிருந்கொண்டுவந்தவர்களும், பூவாண்டிகளானவர்களும், மஹா சிவராத்திரியன்று தேவரீர் விஸ்வநாதர் க்ஷேத்திரத்திலிருந்தபோது இராஜகுமாரத்திக ளரண்மனையில் திருடராய்ச் சென்று அவ்வம்மணிகளின் திருவுருவங்களை நேத்திரத்தால் திருடிவந்தவர்களும், கடைசியாய்ச் சந்நியாசியுஞ் சிஷ்யனுமாய் வந்து தேவரீரிடம் அன்று பேசி நந்தனவனத்தில் நிஷ்டைசாதித்து, இராஜகுமாரிகளால் தேவரீரனுமதிப்படி பணிவிடைசெய்யப்பெற்று அவர்கள் எண்ணந் தெரிந்து மணவாளர்களைத் தேடப்போனவர்களுமான புண்ய புருஷோத்தமர்களு மிவர்களே. இப்போது தேவரீர் பிராணனையும் இரக்ஷித்தார்கள். இச்சித்த பொருளைக் கொடுக்கும்படி தேவரீரிடத்தில் வாக்குத்தத்தமும் பெற்றார்கள். இனித் தடையின்றி தேவரீர் வாக்கின்படி குமாரிகளான பெண் ரத்தினங்களை அவர்களுக்கு விவாகம்பண்ணி வைக்கவேண்டியது. தடை சொல்லலாகாது. இதுவே இவர்கள் இச்சித்த பொருள்கள்” என்று சொல்லி அரசனை வணங்கினான்.

குலசேகரப் பெருமாள் மந்திரியின் வசனங்களை மிகுந்த ஆனந்தத்துடன் கேட்டு, மந்திரி தங்கள் இரகசியங்களை யெல்லாம் கரதலாமலகம்போல் ஆதியோடந்தமாய்த்தெரிந்து சொல்லிவிட்டாரென்று வெட்கித் தலைகுனிந்து நிற்கு மிராஜகுமாரர்களை அணைத்து உச்சி மோந்து முத்தமிட்டு “மக்காள்! உங்களை மருமக்களாகப் பெற்ற என் பாக்கியமே பாக்கியம்; என் கண்மணிகளான குமாரரத்தினங்களின் சிலாக்கியமே சிலாக்கியம்” என்று ஆசிகூறிக் குமாரத்திகளை நினைத்துப் “பதிவிரதா சிரோன்மணிகளும் அஸ்த்ர சஸ்த்ர ஞானிகளுமான நமது புத்திரிகளைப்பார்த்து வெகு நாளாய்விட்டது. நாம் பாலைவனத்திற்கு அதி சீக்கிரமாய்ப் போகவேண்டும். காலதாமதமின்றிப் பிரயாணப்பட நமதுசேனைகளிருக்குந் தளத்திற்குப்போவோம். வாருங்கள்” என்றழைக்க, இராஜகுமாரர்கள் மகிழ்ந்து அரசனை நமஸ்கரித்து “நாங்கள் எங்கள் இருப்பிடம் போகவேண்டியிருக்கிறது. பட்டணம்வந்து சேர்கிறோம். மன்னித்து விடையருளவேண்டும்” என்று வேண்ட, அரசன் மந்திரியைப் பார்த்தான். மந்திரிவணங்கி “அரசே! அவர்களிஷ்டப்படி அனுப்புவதே நலம். நாம் ஊருக்குப்போய் விவாஹத்திற்கு வேண்டிய முயற்சிபண்ணி மாளவதேசத்தரசனை வரவழைப்போம். இவர்கள் நாம் அங்குபோகுமுன்வருவார்கள். விடை

கொடுத்தனுப்பவேண்டும்" என்றான். அரசன் சற்று சோகத்துடன் "இவர்களை இனிப் பிரியவொண்ணாது" என, "அவர்கள் தனியாய்ப் போவதும் நன்மைக்கே தவிரத் தீங்குக்கல்ல, போய்வரவிடும்" என்றுரைத்து, அரசனை அவர்களுக்கு ஆசிகூறி விடைகொடுத்தனுப்பச்செய்து அரசனையும் வேங்கையால் கடிபட்ட குதிரையையும் இட்டுக்கொண்டு தளஞ்சென்று பாலைவனம்போக அதிதுரிதமாய் முயற்சிசெய்யத் தொடங்கினான் விக்ரமசேனன்.

11. இராஜகுமாரிகளுக்கு நேர்ந்த ஆபத்து.

அரசன் சேனையைவிட்டு இரவில் ஊரை நோக்கிச் சென்ற கோமளாங்கன் மறுநாளுதயத்தில், தனக்குச் சிநேகிதர்களாய்ப் பதின்மர் சேவகர்களை வரவழைத்து "நீங்கள் இன்றிரவு இராஜகுமாரிகளிருவரையும் அவர்கள் பல்லக்கில் வைத்து ஆரண்யஞ் சென்று கொலைபுரிந்து வரவேண்டும்; இது சேனாதிபதியாகிய என் தந்தையின் உத்திரவு; தடை சொல்லலாகாது" என்றான்.

போர்ச்சேவகர்கள் பயந்து "அப்பனே! ஸ்திரீகளை வதை செய்வது தர்மமல்ல. அதிலும் அவர்கள் நமதிராஜாவின் அருமைக் குமாரத்திகள். யாதொன்றும் தெரியாத நிராயுதரான பேதைகள். அவர்களை எப்படி வதைக்கிறது? இதைத் தவிர மற்றெதுவும் அரசனுக்குப் பகைவராயிருந்து செய்கிறோம்" என்று மறுத்தார்கள். கோமளாங்கன் கடுஞ்சினங்கொண்டு "சொன்னபடி செய்யாவிட்டால் உங்கள் பிராணனை இப்போதே போக்கிவிடுவேன்" என்று உறுதியாய்ச் சொல்லச் "சரி உமதிஷ்டப்படி யாகட்டும்; அதனால் வருந்தோஷம் உமக்கேயன்றிஎங்களுக்கில்லை" என்றுரைத்து "இராஜகுமாரிகளை யாங்கள் எப்படி நெருங்கிச் சென்று எடுப்போம்" என்றார்கள். கோமளாங்கன் மகிழ்ந்து சேவகர்களுக்கு ஆசை வார்த்தைகள் பலவற்றையும் சொல்லித் தைரியப்படுத்தி "அரசன் குமாரத்திகளின் பல்லக்கை யான் எமதரண்மனைக்கருகில் வரவழைத்திருக்கிறேன். நீங்கள் இரவில் அதையெடுத்து இராஜகுமாரிகளின் அரண்மனைக்கருகில் வையுங்கள். நான் கூடவே வந்து அவர்களிருவரையும் எடுத்துப் பல்லக்கில் வைக்கச்செய்கிறேன். நீங்களெடுத்துச் செல்ல வேண்டியது" என்றான்.

சேவகர்கள் அதற்கிணங்கி இரவில் ஆயுதபாணிகளாய்ச்சென்று பல்லக்கினை யெடுத்து இராஜபுத்திரிகளி னரண்மனைக்குச் செல்லக்

கோமளாங்கன் அவர்களுக்குமுன் சென்று அரண்மனைக் காரியஸ்தனுதவியால் தான் ஏவி யனுப்பியிருந்த தாதிகளால் விஷத்திற்குச் சரியான மயக்கமுண்டுபண்ணும் ஓர் மருந்தை இராஜகுமாரிகள் பஞ்சனைக்குப்போமுன் அருந்தும் பாலிலிடவைத்து அவர்கட்கும் மரகதம், மாணிக்கம், புஷ்பகந்தி, மனோரமை, பொன்னுருவி என்னும் அதிவிசுவாசமும் பக்ஷமுமுடைய அவர்கள் தாதிகட்குங் கொடுக்கவைத்து, யாவருஞ் சாவுக்குச் சரியான நித்திரையி லாழ்ந்தபின், இராஜபுத்திரிகளைச் சந்தடியின்றி எடுத்துப் படிவாயலிற் கொண்டுவரச்செய்தான். படிவாயற்காவலரையும் அரண்மனைக்காவலரையும் அரண்மனைக்கார்யஸ்தன் தன்னிட மழைப்பித்து அவர்கட்கு வேலையிட்டுக்கொண்டு காலதாமதம் பண்ணி யாரையும் அவனைவிட்டுப் பிரியாமலிருக்கச்செய்தான். பல்லக்கு எடுத்துவந்த சேவகர்கள் இராஜகுமாரத்திகளை அசையாமல் பல்லக்கில் எடுத்துவைத்துக் கொண்டு பிரயாணப்பட, கோமளாங்கன் அவர்களைப் பார்த்துச் "சொன்னபடி சரியாய்ச் செய்தீர்களானால் உயிர் தப்பிப் பிழைப்பீர்கள்; ஜாக்ரதை" என்றுரைத்துத் தன் கெட்ட எண்ணம் நிறைவேறிற்றென்று களித்து, அன்றிரவிலேயே வேட்டைக்குப்போனவர்க ளிருக்குமிடந் தேடிச்சென்று சந்தேக முண்டாகாதிருக்கும்படி சேனையுடன் கலந்து தன் பிதாவுடனும் தமயனுடனும் தான் நடத்தி வந்த சங்கதிகளையும் சாகசங்களையுஞ் சொல்லித் தானே புகழ்ந்து கொண்டான். அவர்களிருவரும் இனி என்ன முடியப்போகிறதோ வென்று யோசனை செய்திருந்தார்கள்.

இங்ஙனம் பரமார்த்தகேஸரியும் புஜங்ககேஸரியும் இராஜகுமாரத்திகள் அரண்மனைக் கருகிலிருந்து சமயம் பார்த்துக்கொண்டு உள்ளேபோய் இராஜகுமாரிகளுடன் வசனிக்கவேண்டுமென்று காத்திருந்தவர்கள் படிவாயலில் நடந்த அதிசயங்களைப் பார்த்துப் பல்லக்குடன் சென்று சேவகர்கள் போம்வழியைத் தெரிந்துகொண்டு தங்களிருப்பிடஞ்சென்று, நிமிஷத்தில் ஆயுதந் தரித்துப் புரவிகளில் ஆரோகணித்து முன்சென்ற சேவகர்களை நாடிச்சென்று அவர்களைக் கண்டு பல்லக்கின் பிறகே அவர்களுக்குத் தெரியாமல் தொடர்ந்து சென்றனர். சேவகர்கள் தங்கள் பிறகேவருங் குதிரைச் சேவகர்களைச் சற்றுங்கவனியாது தாங்கள் செய்யநேரிட்ட வேலையைக்குறித்து யோசித்து மனவருத்தத்துடன் சென்றனர். ஜாமப்பொழுது உதயத்திற்குமுன் இருண்ட ஓர் அரண்யத்தினுட் பிரவேசித்துத்

தாங்கள் முடிக்கவேண்டிய வேலைக்குத் தகுந்த ஓரிடம் பார்த்துத் தீர்மானித்துப் பல்லக்கை மெதுவாக இறக்கினார்கள்.

இராஜகுமாரத்திகளிருவரும் வழிநீள அடித்துக்கொண்டிருந்த குளிர்ந்தகாற்றின் மகத்துவத்தால் மயக்கம் நீங்கி நித்திரை தெளிந்து தங்களை யெடுத்துப்போவதும் ஆயுதபாணிகளாய்ச் சேவகர்கள் கூடவருவதுந் தெரிந்து "ஏதோ ஆபத்து விளைந்திருக்கிறது; இப்போது நாம் வெளிப்பட்டால் எப்படிமுடியுமோ? ஆகிலும் முழுதும் பார்ப்போம்; நிராயுதராயிருக்கிறோமே; என்ன செய்வது?" என்று பரிதபித்துப் பிறகு தேறி "உயிரிருக்கும்வரையில் முஷ்டியுத்தமேனும் புரிவது சித்தாந்தம்" என்று பலவாறாய் நினைத்துக்கொண்டு ஒருவர்க்கொருவர் யோசனைபண்ணிக்கொண் டிருந்தவர்களாகையால் ஜாக்கிரதையுடன் வரும்விபத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்து பல்லக்கை இறக்கினவுடன் இருவரும் எட்டிக்குதித்துப் பத்தடி தூரத்தில் நின்றுகொண்டு, தங்களை யெடுத்துவந்த சேவகர்களைக் கவனித்துப் பிதாவின் போர்ச்சேவகர்கள் என்று அவர்களணிந்திருந்த அடையாளங்களால்தெரிந்து, அவர்களைப்பார்த்து "யாதுகாரணம்? நித்திரை பண்ணிக்கொண்டிருந்த எங்களை இப்படி விபரீதமாய் இவ்விருண்டகன்ற அரண்யத்திற்கு எடுத்துவர வுத்திரவளித்தவர் யாவர்?" என்று வினவினார்கள். சேவகர்கள் தலைவன் வணங்கி மிகவும் விநயபாவத்துடன் தனக்குக் கோமளாங்கன் உபதேசித்தபடி சொல்லுவானாயினன்:—"ஓ அம்மணீ! நீங்கள் ஏதோ அபசாரம் பண்ணிவிட்டீர்களென்றும், அதனாற் குலசேகரப்பெருமாள் சக்கிரவர்த்திக்கு மானபங்கம் நேர்ந்ததென்றும், நாளையுதயத்திற்குமுன் உங்களிருவர்களின் பிராணங்களையும் வாங்கிவிடவேண்டுமென்றும் உத்தரவளித்து வேட்டைக்குச் சென்றனர். எங்கள் ராணுவத்தலைவன் பாபிஷ்டர்களான எங்களையனுப்பி அரசன் ஆக்ஞையை நிறைவேற்றச் சொன்னான். உத்திரவுக்கு மறுவுத்திரவு சொல்லக்கூடாமையால் உங்களிருவரையு மிங்கே எடுத்து வரலாயிற்று. நீங்கள் எல்லா நீதிநெறியையுங் கற்றவர்களாகையால் யான் உங்களுக்குப் போதிக்கவேண்டிய தொன்றுமில்லையே. ஆகையால் இனிக் கொஞ்சமும் காலதாமதம் பண்ணாமல் சக்கரவர்த்தியின் உத்திரவு நிறைவேறும்படியும், உங்களுக்குக் கதிகிடைக்கும்படியும், எங்களுக்கு ஒரு குற்றமும் வாராதபடியும், நாங்கள் அரசன் ஆக்ஞையின்படி நடக்கநீங்கள் கடவுளைத் தியானித்துக்கொண்டு உடன்படவேண்டும்" என்றான்.

இராஜகுமாரிகள் பிரமித்துத் திகிலடைந்து ஒன்றுந் தோன்ரு மல் வெறிபிடித்தவர்களைப்போல நிற்பதைக் கண்ட சேவகத்தலை வன் இருசேவகர்களைக்குறிப்பிட்டு அவர்களிடம் முன் தான்சொல்லி வைத்தபடி சைகைசெய்து இராஜகுமாரிகளை ஏககாலத்திற் சிரச் சேதம் பண்ணும்படி சொன்னான். இதற்குள் ஒருதுப்பாக்கி சுடப் பட்ட ஓசைபிறந்து சேவகத்தலைவன் ஓவென்றலறிப் பூமியில் வீழ்ந் திறந்தான். சேவகர்கள் திடுக்கிட்டுத் துப்பாக்கி யோசைகேட்டதை யும் தங்கள் தலைவன் இரத்தம் பீறிட்டொழுக வீழ்ந்ததையுங் கண்டு தங்கள் துப்பாக்கிகளை, ஓசை கேட்டவிடத்திற்கு நேராய்த் திருப்பிச் சத்துருவை எதிர்பார்த்திருக்க, இராஜகுமாரிகள் கலக்கந் தீர்ந்து தைரியம்பூண்டு தங்களருகிருந்த இருசேவகர்கள்மேல் வீழ் ந்து அவர்கள் கைப்பற்றியிருந்த துப்பாக்கிகளைப் பிடுங்கிக்கொண்டு தாங்களும் சேவகர்களுக்கு உதவியாய், வருபவர்களை எதிர்ப்பவர்கள் போலக் காண்பித்துச் சேவகக்கூட்டத்தைச் சுட்டனர். இதற்குள் சேவகர்க ளிருபுறத்துநின்றும் படபடவென்று துப்பாக்கி சுடுஞ் சத்தங்கேட்டது. சேவகர்கள் திகிலடைந்து ஒருவர் பிறகே ஒருவர் குண்டுபட்டு வீழ்ந்தனர். சேவகர்கள் விழவே இருபுறத்துநின்றும் பரமார்த்தகேஸரியும் புஜங்ககேஸரியும் புரவிகளில் ஆரோகணித்து இராமலட்சுமணுளைப்போல இராஜகுமாரத்திகட்கு இருபுறத்துந் தோன்றினர். இதற்குள் சூர்யோதமாயிற்று.

இவர்கள் நம்பிராணரக்ஷகர்கள்போலிருக்கிறது. இராஜவடிவு முடையவர்கள். இவர்கள் இச்சேவகக் கூட்டத்தை நாசஞ்செய்யா திருந்தால் நம்முயிர் இதற்குமுன்னே போயிருக்கவேண்டும். ஆகை யால் இவர்களிடம் யுத்தம் பண்ணுவது சரியல்லவென்று தங்களிட மிருந்த துப்பாக்கிகளை எறிந்துவிட்டு, தலைகுனிந்து வெட்கி நின் ருர்கள் இராஜபுத்திரிகள்.

பரமார்த்தகேஸரி தன் குதிரையை நடத்தி, காந்திமதியினரு கில் வந்து "நீங்கள் ஆபத்தினின்றும் தப்பித்துக்கொண்டீர்கள். இனிப்பயமில்லை. உங்கள் பராக்கிரமத்துக்கும் தைரியத்திற்கும் யுக் திக்கும் மெச்சினேம்" என்ருன். காந்திமதி திடுக்கிட்டு இது நாம் பணிவிடை செய்த சந்நியாசியின் குரலாயிற்றேயென்று இராஜகுமா ரனை விழித்தகண் இமைக்காமற்பார்க்க, அக்கருத்து அறிந்து "ஓ மாது சிரோன்மணி! நாங்கள் மாளவதேச இராஜபுத்திரர்கள். உங்களிருவ ரையும் மணம்புரியவெண்ணி பாலைவனத்தில் இரண்டொருமாதமா

யிருந்துகொண்டு. உங்களுடைய மனோபாவங்களைத் தெரிந்துகொள்ளப் பலவேஷங்களிட்டுநடந்ததில் சந்நியாசியும் சிஷ்யனும்ஒருவேஷமேதவிர வேறொன்றுமல்ல. நீங்கள் சந்தேகிக்கவேண்டாம்'' என்று சொல்லித் தம்பியை அழைக்க, புஜங்கன் நெருங்கிக் காந்திமதியை வணங்கிச் சந்திரலேகையி னருகிற்செல்ல, அவளப்பொழுதே சந்நியாசியின்சிஷ்யனைத்தெரிந்துவணங்கப் புஜங்கன் கண்டு“ஏ மங்கையற்கரசி! என் தமையன் உரைத்த மொழிகளைக் கேட்கவில்லையா? நான் மாளவதேச பூபதியின் இரண்டாவது புத்திரன். என் தமையன் ஜேஷ்டபுத்திரன். அவருக்குப் பரமார்த்தகேஸரி என்றும், எனக்குப் புஜங்ககேசரி என்றும் பெயர். நாங்களிருவரும் உங்களை மணஞ்செய்யவெண்ணி உங்கள்குணசுபாவங்களை எதிர்முகமாய்த் தெரிந்துகொள்ளும்படி உங்கள் தேசம் வந்து பலவேஷங்களிட்டு உங்கள் படிவாயலில் திரிந்துவருவதுபோல் நேற்றும் வந்து இரவில் சமையம்பார்த்து உங்களைக்கண்டு வசனிக்கவெண்ணிக்காத்திருக்கும்போது நான்கு சேவகர்கள் நாங்களிருப்பது தெரியாமல் எங்களருகில் ஓர் பல்லக்கை வைத்து மறைந்திருந்தார்கள். பின்பு படிவாயிலின் வழியாய் உங்களிருவரையும் யாரோ சிலதாதிகளெடுத்துவர ஒரு மனிதனுக்கிணைப்படி. தாதிகளுங்களைவிட்டுப்போக அவ்வதிகாரியி னுத்திரவுப்படி இச்சேவகர்கள் பல்லக்கை நீங்கள் படுத்திருக்குமிட மெடுத்துச்சென்றனர். உடனே உங்களை அப்பல்லக்கிற் படுக்கவைத்து அதோ இறந்து கிடக்கும் அச்சேவகனிடம் அவ்வதிகாரி சில இரகஸ்ய வார்த்தைகளைச் சொல்லிப் பல்லக்கை எடுத்துப்போகச் சைகை செய்தனன். சேவகர்கள் அவ்வுத்திரவைக் கேட்டுப் பல்லக்கையெடுத்து நடந்தனர். எங்களுக்கு மனந்தரியாமல் உங்களையுஞ் சேவகர்களையுந் தொடர்ந்து வந்தோம். இப்பாலிங்கு நடந்தவை உங்களுக்குத் தெரியாதவை அல்லவே. இவ்விதம் கபடமாய் உங்களை வதைக்கக் கொண்டுவந்த காரணம் இன்னதென்று தெரியவில்லை. தயவுசெய்து உங்களுக்குத் தெரிந்தமட்டுஞ் சொல்லவேண்டும்'' என்றுரைத்து, இராஜகுமாரிகளை அவ்விடத்தி லொருவர்க்கொருவர் யோசனை பண்ணும்படிவிட்டு இராஜபுத்திரர்கள் இருவரும் ஓர் மரச்சார்புக்குச் சென்றனர்.

12. விவாகம்.

இராஜகுமாரிகளிருவரும் மனந்தளராது ஒருவரை யொருவர் கலந்து “இனிச் செய்வது யாது?'' என்று பலவாறுயோசித்துத்தாங்க

விருந்த வைபோகத்தையும் ஒரு இரவுக்குள் தங்களுக்கு நேர்ந்த பெரிய பிராண சங்கடத்தையும், தாங்கள் அதினின்றும் தப்பித்துக் கொண்டதையுமெண்ணித் துக்கித்துப்பிறகு தைரியம்பூண்டு தங்கள் பிராணரக்ஷகர்களாகிய இராஜகுமாரர்கள் தங்கள்மீதுவைத்த காதலை யும் அவர்களழகையும் அவர்களிருக்கும் ஐக்யத்தையும் அவர்கள் புஜ பலபராக்கிரமங்களையுங்குறித்து யோசித்து ஒருவர்க்கொருவர் மகிழ்ந்து, இப்படித் தேடிப்போன மருந்து காலிலகப்பட்டதுபோற் கடவுள் கிருபையால் நமக்கு வாய்த்தும் அனுபவிக்கப் பிராப்தியில்லாமற் போம்படி நமது பிதா நாமொன்று மறியாமலிருக்கவே ஒரு பெரிய குற்றத்தைச் சுமத்திவிட்டாரே! என்று மனம்வாடித் துக்கித்துத் தங்கள் வழிபடு கடவுளை நினைந்து வருந்தினார்கள். துதித்தார்கள். தங்களை எப்படியும் இரக்ஷித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து மனந்தேறி, "இனிச் சும்மாவிருப்பதிற் பயனில்லை; கடவுள் கிருபையால் நம்பாற் காதல்கொண்டிருக்கும் இவ்விராஜகுமாரர்களாலொழிய நமது ஜன்மம் கடைத்தேற வேறுவழியில்லை. இவர்களே நம்மேற் சுமத்தியிருக்குங் குற்றத்தை நிவர்த்திபண்ணக் கூடியவர்கள்" என்று தீர்மானித்து, இருவரும் மனமொத்து இராஜ குமாரர்கள் தங்கள் வரவை எதிர்பார்த்திருப்பதை யுணர்ந்து அவர்களருகிற் சென்று தலைகுனிந்து பேச நாவெழாமல் வெட்கி நின்றார்கள். பரமார்த்தகேஸரி இராஜகுமாரிகளின் மனோபாவந் தெரிந்து அவர்களைப் பலவாறு தேற்றி, அவர்களெண்ணத்தை முழுதுந் தெரிந்துகொள்ள விரும்பி, "ஓ இராஜரத்தினங்களே! உங்கள் அழகுக்கு இரதிதேவியும் நாணுவள்; உங்கள் புஜபலத்துக்கு விஜயனு மஞ்சுவன்; நீங்கள் இக்கானகத்தில் அனாதையர்போல் நிராயுதராய் இரு மனிதர்கட் குட்பட்டு அவர்கள் சொல்லுக்கடங்கி நிற்கலாயிற்றே! என்று ஒருபோதும் எண்ணவேண்டாம். நாங்களெங்கள் உயிரிருக்கு மட்டும் உங்களுக்கு யாதொருதுன்பமும்வாராமற் காக்கிறோம். நீங்களுங்கள் பிதாவிருக்கு மிடத்திற்கோ அல்லது உங்கள் மனோகரமான இராஜ்யத்திற்கோ போகலாம். நாங்கள் உங்களுக்குத் துணையாகவே வருகிறோம். நீங்கள் அவ்விடஞ் சென்று உங்களரண்மனை சேர்ந்து அன்னை தந்தையர்களைக் கலந்து மறுமொழி யுரைத்தாற் போதும். பயப்படாதீர்கள்" என்றுரைப்பதைக் கேட்டுக் காந்திமதி சொல்வாளாயினள்:—

"ஓ வீரசூர பராக்கிரமஇராஜகுமார உத்தமபுருஷர்களே! நீங்களெங்கள் பிராணனை ரக்ஷித்ததற்காக நமஸ்காரம் பண்ணுகிறோம்.

ஆனல், இப்பிராணை னிருப்பதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. நீங்களப்படி நடுங்கவேண்டாம். கொஞ்சம் கவனித்துச் செவிகொடுத்துக் கேளுங்கள். எங்களுக்குப் பிராணன்மீது கொஞ்சமேனும் இச்சையில்லை. ஏனென்றால், நாங்கள் யாதொன்று மறியாமல் நேற்றிரவில் பாலருந்திப் பஞ்சணை சென்று நித்திரை போனேம். எங்களை எடுத்து வரும்வழியில் அடித்துக்கொண்டிருந்த குளிர்காற்றால் நித்திரை நீங்கி எங்களை எடுத்துவருவது தெரிந்து வியப்புற்று, சேவகர்கள் இரகஸ்யமாய்ப் பேசிக்கொண்ட வசனங்களா லெங்களை எவ்விடத்திற்கோ எடுத்துப்போவ துணர்ந்து, தக்க சமயம் வாய்த்தால் யுத்தம்பண்ணித் தப்பித்துக்கொள்ளத் தீர்மானித்துச் சந்தடி செய்யாம லிருந்தோம். இங்குக் கொண்டுவந்து எங்களை இறக்கினர்கள். நாங்கள் பல்லக்கைவிட்டுக் குதித்துச் சேவகத் தலைவனை விசாரிக்க, அவன் மனவருத்தத்துடன் நாங்கள் அரசனுக்கும் அவர் இராஜாங்கத்திற்கும் மானபங்க முண்டாகும்படி ஏதோ அபசாரம் பண்ணினே மென்றும், அதற்காக எங்களைச் சிரச்சேதம் பண்ணவேண்டுமென்றும், எங்கள் பிதா உத்திரவளித்து வேட்டைக்குப் போனதாகவுஞ் சொன்னன். நாங்களிதைக் கேட்டு மெய்ம்மறந்து மௌனமாய் நிற்க அச்சேவகத் தலைவன் தன்சேவகர்கட்கு எங்களை வதைக்கும்படி சைகை செய்துகொண் டிருக்கும்போது உங்கள் துப்பாக்கிக் குண்டுபட் டிறந்தான். பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியாததல்ல. நாங்கள் குற்ற முடையோரென எங்கள் பிதா எங்களைத் தெஜித்து விட்டார். குற்றமற்ற வாழ்வே வாழ்வு. குற்றத்துடன் குபேரனு யிருந்தாலும் என்ன பிரயோசனம்? நீங்கள் உத்தம மண்டலாதிபதியின் குமாரர்களாகையால் உங்கள் குலத்திற்கும் இராஜ வம்சத்திற்கும் நிகரான புண்ணியவதிகளைப் பார்த்து மணஞ்செய்துகொள்வது உத்தமமாயிருக்கும். குற்றத்தையுடைய ஆனதையரான எங்களை விட்டகலுங்கள். நாங்கள் இப்பிராணனுடன் இருக்கச் சகியோம்'' என்று சொல்லித் துக்கித்துக்கொண்டு ஓடி மாண்ட சேவகர்களின் கட்கங்களை எடுத்துத் தற்கொலை புரிய எத்தனிக்க, இராஜகுமாரர்கள் காற்றாய்ப் பாய்ந்து இருவர் கைகளையும் பிடித்துக் கட்கங்களை வாங்கி "ஓ கன்னிகா சிரோன்மணிகளே! நீங்களொன்றுக்கும் அஞ்சவேண்டாம். தற்கொலை புரிவது தர்மமல்ல. நீங்களெப்படி யிருந்தாலும் எங்களுக்குத் திருப்தியே தவிர அதிருப்தி யுண்டாகமாட்டாது. ஏனெனில், அபசார மிருக்குமாயின் அது எங்களாற்றன் வந்திருக்க வேண்டும். ஆகையால் நீங்களுயிர்

மாய்க்கின் அதற்குக் காரணம் நாங்களாகிறோம். அதனாலுங்களுயிர் நீங்கில் நாங்கள் உயிரோடிரோம்; இது சத்தியம்'' என்று கூறி அவர்களை அழைத்துவந்து மரநிழலில் உட்காரவைத்துப் பின்னுஞ் சொல்லுவார்கள்:—

“ஓ கன்னிகாரத்தினங்காள்! நாங்களுரைப்பதைக் கேளுங்கள். அபசார மொருநாளு முண்டாகவில்லை. அரசனுங்களை வதைக்க உத்திரவளிக்கவுமில்லை. நீங்கள் அதினால் துயரப்படுவதுஞ் சரியல்ல. யாது காரியமும் தீர விசாரியாமல் முடிவு செய்யலாகாது. இது இராஜதர்மமென்பது உங்களுக்குத் தெரிந்திருப்பதே. உங்கள் பிதா அவிவேகியுமல்ல. முன்கோபியுமல்ல. ஆகையால் ஏதோ மோசம் நடந்ததாகத் தெரியவருகிறது. ஆகையால் குலசேகரப்பெருமாள் எங்கிருந்தாலும் இன்றிரவுபோகுமுன் நாங்கள் அவரைக்கண்டு இவ்வபசார விருத்தாந்தத்தைப் பூரணமா யறிந்துவந்து உங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். பிறகு உங்களிஷ்டப்படி செய்யலாம்'' என்று கூறி அவர்களைச் சமாதானம்பண்ணித் தேற்றி, அவ்வனத்தில் பாய்ந்துகொண்டிருந்த ஓர் அருவியினருகிற் பர்ணசாலையொன்றுசெய்து அதிலிருத்தி, அவர்களுக்குப் புசிக்கவேண்டிய பண்டுபலாதிகள் கொணர்ந்துகொடுத்து ஆயுதங்களையுமளித்து அவர்களை அங்கேயேயிருக்கத் திட்டம்பண்ணித் தாங்கள் அரசனைத் தேடப் பிரயாணப்பட்டனர். அப்போது புஜங்கன் தமையனை நோக்கி “அண்ணே! இராஜகுமாரிகள் தனியாய் எப்படியிருப்பார்கள்? கொலைபண்ண எத்தனித்த சண்டாளர்கள் மறுபடியும் தேடிவந்தால் என்னசெய்கிறது?'' என்றான். இதைக் கேட்ட காந்திமதி அரசகுமாரர்களைப்பார்த்து “நீங்கள் இதைக்குறித்து யோசனை பண்ணவேண்டாம். நாங்கள் இப்போது தூங்கவில்லை. ஜாக்கிரதையாயிருக்க வேண்டியமட்டுங் கற்றுக்கொண்டோம். எங்களை எதிர்ப்பவர்களுடன் போராடி ஜயிக்க வல்லமையுண்டு. நீங்கள் போய் வரலாம்'' என்று தைரியஞ்சொல்ல, இராஜகுமாரர்கள் இருவரும் புரவிகளில் ஆரோகணித்து அதிக துரிதமாய் வேட்டையாடும் அரசனைத் தேடிப்போயினர்.

அரசன் சைனியம் போனமார்க்கத்தைக் கண்டுபிடித்து அதன் வழியே சென்று தேடியுங் காணாமல் ஒவ்வொரு வனமும் பார்த்துக்கொண்டு ஓர் சிறிய வழிகண்டு அதன் மார்க்கஞ் செல்ல, பெரிதான இருண்ட அரண்யத்தைக் கண்டு அதினுட் பிரவேசித்துந்

தேடித் தாகத்தாலும் பசியாலும் மிகக் களைத்து, மிருகங்கள் தண்ணீர் அருந்திப் போயிருக்கும் அடையாளம் பிடித்து, அங்குத் தென்பட்ட மலைச்சாரிலோடும் அருவிக்குச் சென்று, ஸ்நானபானாதிகள் செய்து புரவிகளையும் தாகம் தணியச்செய்து, அவைகளை ஓர் மரத்தின் நிழலிற்கட்டித் தாங்களும் ஓர் மரநிழலில் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, அரசன் துரத்திவந்த புலியின் இரைச்சலையும், பின்வந்த புலியின் கர்ச்சனையையும், அரசன் குதிரையின் ஆரவாரத்தையும் கேட்டு ஆயுதபாணிகளாய்க் குறிப்பறிந்து செல்ல, அரசனும் புலிகளும் தங்களெதிரில் தோன்ற, அதிவேகமாய் அரசனுக்கு உதவிசெய்யச் சென்றனர்.

முன் சொன்னபடி புலிகளைக் கொன்று அரசனை இரக்ஷித்து, அரசனிடமும் மந்திரியினிடமும் விடைபெற்று அதிவேகமாய் இராஜகுமாரத்திகள் இருக்குமிடம்வந்து, அவர்களுக்கு நடந்ததைச் சொல்லி மனங்களிக்கச்செய்து "ஓ ரமணீமணிகளா! அரசனுக்கும் அவர் பிரதான மந்திரிக்கும் உங்களை இங்கு சேவகர்களெடுத்துவந்ததும் உங்கள்மேல் குற்றம் ஏற்படுத்தினதும் கொஞ்சமேனும் தெரியாது. தெரிந்திருந்தால் எங்களுக்கு வாக்களியார். உங்களை நினைத்துச் சந்தோஷித்துப் புகழார். ஆகையால் இவையெல்லாம் ஏதோ சூதாயிருக்கின்றன. நாங்கள் அரசனுக்கு, உங்களுக்கு நேர்ந்த ஆபத்தையுஞ் சொல்லவில்லை. இரண்டொருநாளில் பட்டணம் போய் அங்கு நடப்பதையும் தெரிந்து பிறகு வெளியிடலாமென்று நினைத்திருக்கிறோம். ஆகையால் நாம் இங்கேயே வசித்துவருவோம்" என்றார்கள். இராஜகுமாரத்திகளும் அதற்கிணங்க, யாவரும் அங்கிருந்தார்கள்.

வனத்தில் அரசனும் மந்திரியும் பரிவாரங்களும் பட்டணம் நோக்கிவருகையில் இராஜவீதிகளும் கடைகளும் கடைத்தெருக்களும் மற்றும் பலவீதிகளும் இராஜன் வரவைத்தெரிந்து அலங்கரித்திருப்பதற்குப்பதிலாய் அமங்கலமாயிருப்பதுமன்றி, அரசனைச் சந்தோஷமாய் எதிர்வந்து அழைக்கவேண்டிய தன்பிரஜைகள் தெரு மூலைகளிலும் திண்ணை மூலைகளிலும் கூட்டங் கூட்டமாய்க் கூடி ஒருவர்க்கொருவர் இரகஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருப்பதையும் பார்த்து, "இதென்ன அவலட்சண சகுனமாயிருக்கிறதே; இப்படி ஒருநாளும் இருந்ததில்லையே" என்று அரசன் மந்திரியை வினவ, விக்ரமசேனன் தொழுது "ஏ பூபதே! எல்லாம் இனி ஒரு கடிகையில் தெரியப்போ

கிறது. நாம் இவைகளைக் கவனியாது அரண்மனை போவோம்" என்று அரசனை அழைத்துக்கொண்டு இராஜஸபைக்கு எதிராகச் செல்ல, மஹாதேவர் எதிர்கொண்டு அரசனை வணங்கி மந்திரியுடன் இரகஸ்யமாக "இராஜகுமாரத்திகள் அரசன் வேட்டைக்குப்போன மறுநாளிரவில் சில சோர புருஷர்களுடன் போய்விட்டார்கள்" என்று மறுநாள் உதயத்தில் தாதிகள் சொல்லக்கேட்டுச் சேவகரை எங்கும் அனுப்பித்தேடவைத்தேன். ஒருவரும் நிஜமறிந்து சொல்லவில்லை. இனித் தாங்கள் வந்தாலொழிய நுட்பம் தெரியாதென்று உங்கள் வரவை எதிர்பார்த்திருக்கிறேன். இதுதான் அமங்கலமாயிருப்பதற்குக் காரணம்" என்றார். இதைக் கேட்டு விக்ரமசேனன் கலகலவென்று சிரித்து, அரசனை நோக்கி "ஓ மஹாபிரபுவே! இந்த அமங்கலச் சின்னங்களும் இனித் தேவரீர் கேள்விப்பட்டு வியசனிக்கப்போகும் விஷயமும் தேவரீர் மருமக்களான இராஜகுமாரர்களால் நிவர்த்தியாகும்" என்றான்.

நடந்ததைச் சொல்லவேண்டுமென்று அரசன் பிடிவாதம் பண்ண, மஹாதேவர் தனக்குச் சொன்ன சமாசாரத்தை விக்ரமசேனன் சொல்ல, அரசன், குமாரிகளின்மேல் வைத்திருந்த வாஞ்சையின் பலத்தால் சோர்ந்து மூர்ச்சையாயினான்.

அரசனை அரண்மனைக்கு எடுத்துச் சென்று மூர்ச்சை தெளிவித்தும் சோகம் விடாது தன் மனைவிகளை அரசன் வினவ, அவர்களும் மஹாதேவர் சொன்னபடி சொல்லிப் பிறகு தங்கள் குமாரத்திகள் அபராதம் பண்ணும்படியானவர்களல்ல. ஏதோ சூது விளைந்திருக்கிறது" என்றுரைக்க, அரசன், புத்திரிகளைத் பார்த்தாலொழியத் தன் சோகம் நீராதென்று மந்திரியுடன் உரைத்துக்கொண்டிருக்கும் போது "ஓ மண்டலாதிபதி! யாரோ இரு இராஜகுமாரர்கள் யுத்த கோலம் பூண்டு புரவியேறி அரசன் தெரிசனமாக வேண்டுமென்று வந்து படிவாயிலில் நிற்கிறார்கள். உத்திரவாகவேண்டும்" என்றொரு சேவகன் பணிய, மந்திரி அவர்களைச் சென்று எதிர்த்துக்கொண்டு அழைத்துவர, அரசன் அவர்களைக் கட்டிக்கொண்டு, "என்னருமைக் கண்மணிகளே! என் பிராண இரக்ஷகர்களே! நான உங்களுக்கு வாக்களித்து வீணனாயினேன். என் அன்பான குமாரத்திகள் இருவரும் நான் வேட்டைக்குப்போன மறுநாளிரவில் ஏதோ சூதுவிளைந்து மறைந்துவிட்டார்கள். இனி என்செய்வேன். யான் சக்கிரவர்த்தியாயிருந்தும் வாக்குத்தத்தப்படி நடக்கக் கடவுள் கிருபை செய்ய

வில்லை" என்று உரைக்க, பரமார்த்தகேஸரி "காட்டில் வாக்களித்து நாட்டில் வந்து இப்படிச் சொல்வது இராஜதர்மமல்ல" என்று அரசனைச் சோதிக்கும்படி கூற, அரசன் ரோஷத்துடன் எழுந்து, "நான் வாக்களித்தது உண்மையே. அதை வீண்போகாதிருக்க என் அரசைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றான். இராஜகுமாரர்களிருவரும் அரசனுக்கு நமஸ்காரம்செய்து "ஓ பிதாவுக்குச் சரியான மறுபிதாவே! உங்கள் தருமகுணத்திற்கு மெச்சினோம். இராஜபுத்திரிகள் உயிருடன் யாதொரு குற்றமுமின்றி எங்கள் காவலில் இருக்கிறார்கள். நீங்கள் சோகம் தீர்ந்து இனி நடக்கவேண்டிய காரியாதிகட்கு முயலவேண்டும். இராஜகுமாரிகளுக்கு அன்றிரவில் யாரோ மருந்திட்டு மயக்கி வதைக்கும்படி சில சேவகர்கள் ஓர் வனத்திற் கொண்டு செல்ல, அங்கு அவர்கள் மயக்கம் நீங்கிச் சேவகர்களை வினவ, அவர்கள் "இராஜாங்கத்திற்கும் அரசனுக்கும் மானபங்கம் நேரிடும்படி செய்த குற்றத்தால் சிரச்சேதம் பண்ண அரசன் உத்திரவளித்து வேட்டைக்கேகினர்" என்று உரைக்கக்கேட்டு மெய்ம் மறந்து நிற்கச் சேவகர்கள் அவர்களைக் கொலைசெய்ய முயலும் போது தேவரீர் குமாரத்திகளின் பராக்கிரமத்தாலும் எங்கள் அற்பமான உதவியினாலும் சேவகர்கள் எமலோகம் போனார்கள். அபவாதத்துடன் வாழலாகாதென்று பிராணத்தியாகம் பண்ண எத்தனித்தபோது அவர்களைத் தடுத்துத் தேற்றி வைத்திருக்கிறோம். தாங்கள் சோகத்தைவிட்டு அன்றிரவில் பாலருந்தச் செய்த தாதிகளையழைத்து விசாரிக்கவேண்டும்" என்றார்கள்.

அரசனும் மந்திரியும் மகிழ்ந்து இராஜகுமாரர்களை மெச்சிப் புகழ்ந்து ஆலிங்கனம்பண்ணி, "காட்டில் வேங்கையின் வாயினின்று மீட்டதைவிடப் பெரிதான பிராணரக்ஷையும் இப்போது செய்தீர்கள்" என்று பல சந்தோஷ வார்த்தைகளாடி ஆசிகூறி வாழ்த்திப் பிறகு தாதிகளைப் பிடித்துவரக் கட்டளையிட்டார்.

தாதிகள் யாவரும் கைகால் விலங்கிடப்பட்டு அரசன் முன் வந்துநிற்க, "அன்றிரவில் இராஜகுமாரத்திகட்குப் பால் கொடுத்தது யார்?" என்ன, மரகதம் பயந்து "கோவே! பாலைப் பஞ்சணையிற் கொண்டுபோய்க் கொடுத்தது அடியாள். ஆனால் நானும் அதே பால் அருந்தி மறுநாள் சூர்யாஸ்தமனம்வரையில் தூங்கிவிட்டேன். மற்றொன்றுமறியேன்" என்றாள். மாணிக்கம், புஷ்பகந்தி, மனோரமை, பொன்னுருவியென்னும் தாதிகள் "எங்களுக்களித்தபாலிலும் ஏதோயிரு

ந்தபடியாற்றான் யாங்களுமப்படியே மதிமயங்கி நித்திரைபோனோம்; மற்றொன்று மறியோம்" என்றார்கள். மற்றத்தாதிகள் யாவரும் "எங்களுக்கு யாதொன்றுந் தெரியாது" என்றார்கள். மந்திரி கோபம் பூண்டு "ஓ மங்கையர்களே! இராஜகுமாரத்திகள் சோரநாயகருடன் போய்விட்டார்களென்று சொன்னதுயார்?" என்று அதட்டிக் கேட்க "நானல்ல நானல்ல" என்று ஒவ்வொருவரும் உரைக்கச் "சரி, அப்படியானால் நிஜம் வெளிப்படவில்லை ஆகையால் உங்கள் யாவரையுஞ் சூர்யோதயத்திற் சிரச்சேதம் பண்ணும்படி அரசனுத்திரவுபண்ணியிருக்கிறார் போங்கள்" என்ன, மரகதம் முதல் ஐந்து தாதிகளும் வேறு சிலரும் "இராஜகுமாரிகளைப் பிரிந்திருப்பதைவிட இதுவே சரியான சுகம்" என்று மகிழ்ச்சியுடன் திரும்பினார்கள். மற்றத் தாதிகளிற் பாலில் மருந்திட்ட இருவரும் இராஜகுமாரத்திகளை எடுத்துப்போன நால்வரும் பயந்து நடுநடுங்கி இனிச் சும்மாவிருக்கின் நமது உயிர் போமென்று நினைத்து மந்திரியைநோக்கிச் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு "எங்களை இரட்சிக்கவேண்டும்" என்ன, மந்திரி "நிஜம் சொன்னால் அப்படியே செய்கிறோம்" என்ன, மந்திரியைத் தங்களண்டை யழைத்துப் பிராணபயமேலிட்டால் இரகஸ்யமாய் அரண்மனைக் கார்யஸ்தன் தங்களுக்கு இராஜகுமாரத்திகள் அருந்தியபாலிலும் அவர்களுயிர்த்துணையான தாதிகள் அருந்தியபாலிலும் மருந்திடக் கட்டளையிட்டதும், கோமளாங்கசேகரன் காரியஸ்த்தனுதவியால் இராஜகுமாரிகளை எடுத்து வெளியே கொண்டுபோய் வைக்கச்செய்ததையும், அப்போது படிவாயிலிற் சேவகர்கள் சந்தடியில்லாதிருந்ததையுஞ் சொல்லிப் பிறகு விளைந்ததொன்றும் எங்களுக்குத் தெரியாது, இது சத்தியம்" என்றுரைத்து, "நாங்கள் அரண்மனைக் காரியஸ்தனுக்கும் கோமளாங்க சேகரனுக்கும் பயந்து அவர்களாக்கினைப்படி இவ்வித தீயகாரியங்களைச் செய்துவிட்டோம்; எங்களை மன்னித்து எங்கள் பிராணனை ரக்ஷிக்கவேண்டும்" என்று முறையிட்டுக்கொண்டார்கள்.

"இராஜகுமாரத்திகள் சோரநாயகருடன் ஓடிப்போய்விட்டதாகச்சொன்னது யார்?" என்று மந்திரி மறுபடியும் அதட்டிக்கேட்க, "அப்பனே! கோமளாங்கசேகரன் உத்திரவின்படி அதுவும் நாங்களே சொன்னோம்" என்று கூற, இவ்வறுவரையும் நிறுத்தி மற்றவர்களை விடுதல்செய்து அவ்வறுவரை அரசன்முன் அழைத்துச் சென்று, அவர்கள் முன்சொன்னவைகளையெல்லாம் சொல்லவைத்து, "இனிச்

செய்யவேண்டுவதென்ன?" என, இராஜகுமாரர்களும் அரசனும் மந்திரியின் யுக்திக்கு மெச்சிச் சேனாதிபதி பராக்ரமசேகரனையும் அவன் இரண்டாவது புத்திரனையும் அரண்மனைக் காரியஸ்தனையும் வரவழைத்து அவர்களை வேறுவேறாக விசாரிக்க ஒருவரும் தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளாததைக் கண்டு தாதிகளை எதிரில் நிறுத்திவிசாரணைபண்ணினார். அதனால் ஸ்பஷ்டமாய் எல்லாமோசங்களும் பஹிரங்கமாகவே, அரசன் சினந்து சோமளாங்கனையும் விக்ரமகேதுவையுங் கடுஞ்சிறையிலிடக் கட்டளையளித்து, மனந்தளர்ந்து முகங்கருகிநிற்கும் பராக்கிரமசேகரனை நோக்கி "ஓ சேனாதிபதி! நீ என் தம்பியாயிருந்தும் உன்குமாரனை ஏவி, எனக்கு மானபங்கம் நேரிடவும் என் குமாரத்திகளை வதைக்கும்படியும் எத்தனித்தாய். கடவுள் கிருபையால் உன் எண்ணப்படி நடக்கவில்லை. ஆகையால் இனிச் சேனாதிபதியா யிருக்கவேண்டியதில்லை. உன் அதிகாரத்தை உனக்குக் கீழிருக்கும் உத்தியோகஸ்தனிட மொப்புவித்து இனி என் முகத்திற்கு எதிரில் வாராமற்போ" என்று சபையில்நின்று இறங்கிவிட்டு, இரதகஜதுரகபதாதிகளுடனும் மந்திரியுடனும் இராஜபுத்திரர்கள் வழிகாட்ட, இராஜகுமாரத்திகளிருக்கும் ஆரண்யம் நோக்கிச்சென்றான் குலசேகரப்பெருமாள்.

பரமார்த்தகேஸரி புஜங்கனை முன்னதாக அனுப்பி நடந்ததைச் சொல்லி, அரசன் வரவை இராஜகுமாரத்திகட்குத தெரிவித்தான். அவர்களுஞ் சந்தோஷத்துடன் அரசன் வரவை எதிர்பார்த்திருந்து, அவர் வரவே, இருவரும் நமஸ்கரிக்க, அரசன் மக்களை யெடுத்து முத்தமிட்டுக் கடவுளைத் துதித்துப் போற்றினர். அங்கு இராஜகுமாரத்திகட்கும் அவர்கள் தாய் தந்தையர்கட்கும் உண்டான ஆனந்தத்தையும், அவர்கள் வசனங்களையும் எழுதி முடிவதல்ல. அரசன் மக்களை முத்துச்சிவிகைகளிலேற்றி மங்களவாத்தியம் முழங்கப் பரிவாரத்துடன் பட்டணம் சென்றனன். அங்கு குடிகள் முதலிய யாவரும், இராஜசபையில் நடந்த விசாரணையினால் சோமளாங்கன் செய்த சூதையறிந்து விசனித்தனர். பிறகு இராஜகுமாரிகள் இரக்ஷிக்கப் பட்டசமாசாரம் எங்குப் பரவிச் சந்தோஷம் விளையவே, குடிகள் பட்டணத்தைஅலங்காரம்பண்ணி மகரதோரணங்கள்கட்டி, வீதிகளை அலங்கரித்து, முத்தாலும் பவளத்தாலும்இரத்தினங்களாலும் ஆலாத்தியெடுக்க, மாங்கல்யமாதர்கள தெருத்தெருவாய்க் கூடிநின்றனர். பட்டணமெங்கும் மேளதாள சந்தோஷகோஷமுண்டாயின. அர

சன் புதல்விகளோடு பட்டணம் பிரவேசித்து ஆனந்தமடைந்து அரண்மனைசென்று மந்திரியால் தேசதேச இராஜர்கட்கும் மாளவ தேசபூபதிக்கும் திருமணப்பத்திரிகைகளனுப்பி வரவழைத்துப் பட்டணமெங்கும் அலங்கரித்து, விவாககோஷம் எங்கும் முழங்கும்படி செய்தனன். மாளவதேசத்தரசன் தன்குமாரர்களின் விர்த்தாந்தம் யாவையுமறிந்து ஆனந்தங்கொண்டு, மக்களை வாரியெடுத்து முத்தமிட்டுப் புகழ்ந்தனன்.

குலசேகரப்பெருமாள் மாளவபூபதிக்குத் தக்கமரியாதை செய்து தன்பிராண ரக்ஷகர்களாகிய அவர் குமாரர்களின் குணாதிசயங்களைக் கொண்டாடி, அவருக்குச் சந்தோஷம் பெருகவுரைத்து யாவரும் மனமொத்து நல்ல சுபமுகூர்த்தத்தில் தனதிரண்டு புத்திரிகளையும் மாளவராஜன் இரண்டு புத்திரர்களுக்கும் விவாஹம் பண்ணிக்கொடுத்துச் சிலநாளங்கே யிருத்திப் பிறகு மாளவராஜன் கோரிக்கைப்படி, இரதகஜதுரகபதாதி ஸ்ரீதனத்தோடு குமாரத்திகளுடன் அவர்கள் நாட்டுக்கனுப்பிக் கடவுளைப்போற்றி மனக்கலக்கமின்றி வாழ்ந்தான்.

13. சிறைச்சாலை.

அரசனரண்மனைக்கு ஒரு நாழிகை தூரத்தில் பெரிதான மைதானத்திற் கால்நாழிகை சமசதுரமாய் ஒரு பெருத்த கோட்டை கட்டி அக்கோட்டைமதிலுக்கு ஆங்காங்கு பெரியதுப்பாக்கிவைத்து எதிர்த்துவருஞ் சத்துரு சைன்யத்தைச் சுடுவதற்காய்த் துவாரங்கள் ஏற்படுத்தி, அம்மதிலுக்குச் சுற்றும் பதினைந்து கஜம்அகலமும் ஐந்துகஜம்ஆழமுங்கொண்ட அகழ்வெட்டி, ஜலம் நிறைத்துக் கோட்டைவாயிலுக்குட் போவதற்கு அவ்வகழ்மீது ஒரு சிறிய மரவாராவதி கட்டி, அவ்வாராவதியை வேண்டுங்காலத்தில் உள்ளும் வெளியும், கோட்டைவாயலி லிருந்தபடியே இழுத்து வழியில்லாமலும், வேண்டுமானால் வழிசெய்துகொள்ளும்படியும் சிற்பிகளாற்சூத்திரம் பண்ணிக் கோட்டைவாயிலுக்குப் பருத்த இரும்புக் கதவுகள்செய்து முத்திரைபோட்டு வைத்திருப்பதுமன்றி, அவ்வாயிலைக் காக்கும்படி ஐம்பது போர்ச்சேவகர்களையும் நியமித்து, கோட்டைக்குள், வருபவர் போகுமவர்களைத் தெரிந்துகொள்ள அச்சேவகத் தலைவனைக் கணக்கு வைக்கும்படி திட்டஞ் செய்திருந்தபடியால், ஒருவருக்கும்

அச்சேவகர்கள் அநுமதியின்றிக் கோட்டைக்குட் செல்லவாவது, அவ்விடமிருக்கும் பொருள்களிலொன்றை எடுத்து வரவாவது முடியாமலிருந்தது. கோட்டைக்குள்ளிருக்கும் கட்டடங்களில் முக்கியமானது தென்புறத்திலிருக்கும் பெரிய கட்டடம். அதில் பொக்கிஷாதிகாரி கச்சேரிசெய்யும்படியாய் வேண்டிய அறைகளும், குமாஸ்தாக்களிருந்து வேலைபார்க்கக் கட்டினஅறைகளும் கச்சேரி செய்யப்பட்ட அறைக்கெதிராய் மிகவும் பலமாய் அதிக விசித்திரமாய்க் கட்டப்பட்டிருக்கும் பொக்கிஷஅறையும் இருந்தன. சுத்தவீரர்களாகிய நூறுபேர் அதற்குக் காவலாயிருந்தனர். அதன் திறவுகோல்கள் பொக்கிஷாதிகாரிவசமே வைக்கப்பட்டிருந்தன. தவிர, இவரிவ்விடத்தில் திருட்டு, கொலை முதலிய குற்றம் செய்தவர்களை விசாரித்து அவ்வழக்குகள் தீராவிடில் இராஜசபைக்கு அனுப்புவது வழக்கமாயிருந்தது.

கோட்டையின் வடபுறத்தில் சிறைச்சாலை கட்டி, அதில் நூறு அறைகளமைத்து, ஒவ்வோர் அறையும் பத்து கஜம் நீளம், ஐந்து கஜம் அகலம், ஆறுகஜம் உயரமாயும், ஒருவன் உள்ளே செல்லும்படி நெருங்கின இருப்புக்கதவும், உள்ளிருப்பவனைப் பார்ப்பதற்காக ஒருவட்டமான நால்குலக் குறுக்களவுள்ள துவாரமுமேற்படுத்தி, அறையின் மேற்பக்கத்தில் இரண்டடி சதுரமுள்ள இரும்புக்கம்பிகளிட்ட சாளரங்களும் அமைத்திருந்தன. இவ்வறை ஒவ்வொன்றுக்கும் ஓர் பிலத்துவாரமுமிருந்தது. அதன் வழியாய்ப் பூமிக்குள்ளிறங்கி வசிக்கும்படி 5 கஜம் நீளத்திலும் 3 கஜம் அகலத்திலும் 2 கஜம் ஆழத்திலும் ஒவ்வோர் இருட்டறையு மிருந்தன. இதற்குக் காராக்ருகம் என்று பெயர்.

கொலை செய்தவர்களையும் வேற்றரசர்களைச் சிறைபிடித்தால் அவர்களையும் இதிலடைத்து வைப்பது வழக்கமாயிருந்தது. இவ்வறையொன்றுக்கு ஓர் குற்றவாளியை மாத்திரம் அடைத்துவந்தார்கள். இப்பேர்ப்பட்ட இருட்டறை இரண்டுக்கும் நடுவிலிருக்குஞ் சுவர் 3 கஜம் கனம் மாத்திரமிருந்தது. இப்படி 100 அறைகட்கு 100 இருட்டறையும் அவைகளில் 15 பேர் வேற்றரசர்களும் அவர்கள் பிரதான உத்தியோகஸ்தர்களும் சிறையிடப்பட்டிருந்தார்கள்.

கோமளாங்கனும் விக்ரமகேதுவும் இப்படிப்பட்ட இரண்டறைகளில் அடைக்கப்பட்டு பிலத்துவாரங்களைப் பந்தனம்பண்ணித்

திறவுகோல் அக்குற்றவாளிகட்கு அன்னமளிக்க நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தனிடம் கொடுக்கப்பட்டிருந்தன. அன்னபானாதிகள் கொடுக்கும்போது இவ்விருட்டறை திறக்கப்பட்டு குற்றவாளி வெளியறையில் வைத்திருக்கும் புசிப்பையுண்டு மறுபடி இருட்டறைக்குட் போன பிறகு அவ் வறைகளை மூடிவிடுவதும் வழக்கமாயிருந்தது. நூறு அறைகளுக்கும் ஒவ்வொன்றுக்கு இரண்டு சேவகர்கள் காவலாயிருந்தார்கள். இப்படியிருக்க ஒருநாள் கோமளாங்கன் அன்னம் புசிக்கும்போது, அன்னமளிக்கும் உத்தியோகஸ்தனை வினயமாய்ப் பார்த்து "ஓ ஐயா! நான் இந்த எட்டுமாதகாலமாய்க் கடுஞ்சிறையில் காலம் தள்ளினேன். இனி என் பிராணன் போவது எப்போதென்று காத்திருக்கிறேன். நான் அறிந்து யாதொன்றும் அரசனுக்குச் செய்யவில்லை. என்னை ஏனிப்படி உயிர்வதை செய்யவேண்டும்? என்ன குற்றம் செய்தாலும் இப்படிப்பட்ட தண்டனை ஒருநாள் அனுபவித்தால் எப்படிப்பட்ட கெட்ட நடவடிக்கையுள்ளவனும் சன்மார்க்கத்திற்கு வந்துவிடுவான்" என்று தனக்குள் தானே சொல்பவனைப்போல உத்தியோகஸ்தனை வசப்படுத்த எண்ணிச் சொன்னான். குற்றவாளிகளுடன் பேசுவது பெரிய குற்றமென்று திட்டம் செய்திருந்தபடியால் சுபோதகனென்னும் அந்த உத்தியோகஸ்தன் மறுமொழி சொல்லாது நின்றான். உடனே காவலாளி, கோமளாங்கனை அதட்டி "என்னடா! பேச்சுக்கு முயலுகிறாய். நாங்கள் இருப்பது கவனிக்கவில்லையா! வாயை மூடு" என்று கூறக் கோமளாங்கன் மறுமொழி கூறாது உணவருந்தி இருட்டறை சேர்ந்தான். சுபோதகன் கதவை மூடி முத்திரையிட்டுச் சென்றான். விக்ரமகேது தான் இருட்டறையில் அடைக்கப்பட்ட நாள்முதல் தனது துரதிர்ஷ்டத்திற்கும், தான் கோமளாங்கனிடம் வைத்த நம்பிக்கைக்கும் அதினால் நேரிட்ட கஷ்டத்திற்கும் நொந்து கடவுளைப் பிரார்த்தித்து, இனியாவது என் எண்ணத்தைச் சீர்ப்படுத்தி, குற்றமற்ற குலசேகரப்பெருமாளுக்குப் பக்தியாய் ஊழியஞ்செய்ய நேரிடவேண்டுமென்று பிரதிதினமும் பிரார்த்தித்தும், உணவருந்தாமலும், மனோவியாதியினால் உடல் மெலிந்தும், தேகம் கறுத்தும் நாட்கழித்து வந்தவன் இரண்டுமாதகாலமாய் மனவருத்தம் நீங்கிச் சந்தோஷமுண்டாகிப் பகவத்தியானத்தில் அதிக சிரத்தையுண்டாய் உணவருந்திப் பலம்பெற்று வருபவனாயினான். ஏனெனில் காராக்கிரகத்தில் அடைபட்டதின் பிறகு ஒருநாள் உணவருந்தி அறைக்கு திரும்பும்போது மிகவும் அசக்தனாயிருந்தபடியால் பிலத்துவாரத்

தின் கதவைப் பிடித்துக்கொண்டு ஒவ்வொருபடியாய் இறங்கினான். அவனது கை அப்போது ஒரு இருப்புப்பாளத்திற்பட்டுச் சிறிது கிழிந்துவிட்டது. அதைச் சோதிக்கையில் ஓரடி நீளமும் மூன்றங்குலம் அகலமுமான இருப்புப்பாளமென்று கண்டு, அது கதவோடு அடிக்கப்பட்டிருந்த ஆணிகளினின்றும் விடுபட்டிருந்தபடியால், சேவகர்கள் கதவை மூடின சத்தம் கேட்டுச் சந்தடியின்றி அதை அசைத்தெடுத்து, அறைக்குட் சென்று அதனால் சிறைமீட்டுக்கொள்ள யோசனைசெய்து கடவுளைத் துதித்துப் பிரசனம் செய்யலாயினான்.

கோட்டை, கிழக்குமேற்காக இருக்கிறது. வடபாரிசத்தில் இச்சிறைச்சாலை கோட்டைமதிலுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றது. ஆகையால் கோட்டையகிழ்க்கும் நாமிருக்குமிடத்திற்கும் ஏறக்குறைய 25 கஜந்தூரமிருக்கலாம். ஆனபடியால் ஒரே மார்க்கமாய் வளையாமல் வடக்குத்திசைநோக்கி ஓர்வழி செய்வதானால் தப்பித்துக்கொண்டு போய்விடலாமென்று தீர்மானித்து அன்றுமுதல் அந்த இருப்புப்பாளத்தால் வேலைசெய்ய எத்தனித்தான். இவ்விதம் கொஞ்சங் கொஞ்சமாய்த் தினந்தினம் சக்தியுள்ளமட்டும் இரவில் வேலைசெய்து தன்னறையிலிருந்த ஒரு கல்லை மிகப்பிரயாசைப்பட்டுப் பிடுங்கினான். பிறகு மற்றக் கற்கள் சுலபமாய் வந்துவிடவே, தைரியம் பூண்டு, பத்துநாட்களில் ஒருமனிதன் நுழையும்படி ஒரு கஜம் நீளத்தில் துவாரம் பண்ணினான். தான் முயன்ற பெருத்த எத்தினத்திற்குச் சக்திபோதாமற்போகவே, உணவருந்தவும் மனத்துயரகற்றவும் தீர்மானித்துத் தேகபலம் வாய்த்து இரண்டு மாதத்தில் ஐந்து கஜம் நீளத்தில் வழிசெய்து சோதிக்கும்போது அதுவரையில் கற்கட்டடமும் அப்பால் மண் தரையுமாய் இருக்கக் கண்டு அம்மண்ணையும் முன்னெடுத்த கற்களையும் நாளுக்குநாள் கொணர்ந்து தன் இருட்டறையில் சேர்த்து வந்தமையால் அவ்வறையில் இடமில்லாமற் போயிற்று. ஒருவனால் இப்பெரும் வேலை முடிக்கத்தக்கதன்று என்று எண்ணிப் பக்கத்திலிருக்கும் அறைக்குச் சுரங்கம்செய்து முடித்துக்கொண்டிருந்தான். கோமளாங்கன் தனது அறையில் இரவில் சந்தடி கேட்டுக்கொண்டிருந்ததைக் கவனித்து, என்ன நேரிடுமோவென்று பயந்திருந்தவன், தனது பெயரைச் சொல்லி ஓரிரவில் விக்ரமகேது அழைத்ததைக் கேட்டு, யார் அழைப்பதென்று வினவ, "யான் விக்ரமகேது. நீ சந்தடி செய்

யாதே. நான் உன்னை இச்சிறையினின்று மீட்க முயற்சிபண்ணிவருகிறேன்'' என்றுசொல்லி, அவன் அறைக்கல்லை அசைத்துப் பிடுங்கி வழி ஏற்படுத்தி அவனைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று தான் செய்துவரும் முயற்சியைக் காண்பித்தான். கோமளாங்கன் தைரியங்கொண்டு விக்ரமகேதுவின் இஷ்டப்படி அவனுக்கு உதவி செய்யத் தலைப்பட்டான்.

இப்படி இருவரும் விடாமுயற்சியாய் வேலைசெய்து 15-கஜம் வழிசெய்து மண் யாவற்றையும் இரண்டுபேர்களின் அறைகளிலும், மீந்ததை மூன்றாவது அறை காலியாக இருந்தபடியால் அதற்கு வழிசெய்து அதிலும் நிறைத்தார்கள். இவர்கள் இப்படி இராக் காலங்களில் செய்துவருவதைக் காவலாளிகளேனும் அன்னம் இடுபவரேனும் தெரிந்துகொள்ளவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் இருட்டறையில் இறங்கிப் பரிசோதிப்பது வழக்கமில்லாதிருந்தது.

விக்ரமகேது நினைத்தபடி 25-கஜம் போகவேண்டியதா யிருக்கவில்லை. 15-கஜம் ஆனவுடன் கருங்கல் குறுக்கே அகப்பட, இது அகழ் கட்டியிருக்கும் கல்லெனத் தெரிந்துகொண்டார்கள். மிகுந்த பிரயாசையுடன் கல்லை அசைக்கவே அதன் சுற்றுமிருந்த சுண்ணாம்பு முதலியவை உதிர்ந்து கொஞ்சம் சூர்யரஸ்மியின் பிரகாசம் தோன்றின. இதைக் கண்டு மகிழினும் சேவகர்கள் கவனிப்பார்களே! என்று அதிக வேகமாய் அறைக்குள் சென்று, சந்தடியில்லாதது கண்டு பகலைப் போக்கிக் கடவுளைத் துதித்து, மறுநாளிரவில் கல்லை மிகுந்த பிரயாசையுடன் அசைத்து இரண்டொருநாள் கஷ்டப்பட்டு, மறுநாள் அகற்குழியிலேயே அதைத் தள்ளினார்கள். பிறகு மற்றொரு கல்லையும் அப்படியே அசைத்துத்தள்ளி வழியேற்படுத்தினபிறகு சந்திரகிரணம் பிரகாசிக்கவே, அத்துவாரத்தை மண்ணிட்டு அடைத்துத் தங்கள் அறைக்குள்சென்று மறுநாள் இரவை மிகுந்த ஆசையுடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

ஒன்பது மாதகாலமாய் அச்சிறையில் அனுபவித்த கஷ்டத்தை விட அன்றிரவும் பகலும் போக்குவது அவர்களுக்கு மிகப்பெரிதாயிருந்தது. சந்திரன் ஒளியிருக்கும்போது வெளிப்பட்டால் ஒருவேளை யாரேனும் பார்த்துப் பிடித்துவிட்டால் தங்கள் பிரயத்தினம் முழுதும் வியர்த்தமாய்விடுமே என்றும், கடின தண்டனைக்கு ஆளாகவேண்டுமே என்றும், வெளிப்படுமுன் தங்கள் இரகஸ்யத்தைத் தெரிந்துகொள்ளுவார்களே என்றும் அவர்கள் அதிகமாய் வருந்தலாயினர்.

இப்படி இரண்டு மூன்று மாதகாலமாய்த் தாங்கள் செய்து வரும் வேலை மற்றையோருக்குத் தெரியாமலிருந்தது, விக்ரமகேது வின் புத்திசாமர்த்தியமே. கோமளாங்கன் இரண்டு மூன்றுதரம் இந்த வேலை நம்மாலாவதல்ல விட்டுவிடுவோம் என்று மறுத்துரைத் தும், அவனை யடக்கி, வெளியில் சென்றால் கிடைக்கும் சுதந்தரத் தின் ருசியைச் சொல்லித் தைரியப்படுத்திவந்தான். தாங்கள் கொண் ட கோரிக்கையின்படி இரவு வந்தவுடனே தங்களுக்கிட்ட உணவை அருந்தி இருட்டறைக்குள் சென்று அதன் கதவுகள் மூடப்பட்ட பின் கொஞ்சம் நிதானித்து இருவரும் ஓரிடம்சேர்ந்து பிலத்துவார வழியாய்க் கடவுளைத் தியானித்துக்கொண்டு வெளியில் வந்தார்கள். அவ்விடத்தில் அகழைத் தாண்டவேண்டி யிருந்தபடியால் சந்தடி யின்றி அதிலிறங்கித் தாண்டி மறுகரை ஏறித் தங்களால் கூடிய வேகத்தில் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போனார்கள். இருவரும் பட் டணமார்க்கத்தைவிட்டு வனத்தை நோக்கிச் சென்று வெகுதூரம் போனபின் ஏகாந்தவிடத்தில் ஓர் விருக்ஷத்தினடியில் உட்கார்ந்து களைதீர்த்து விக்ரமகேது கோமளாங்கனைப் பார்த்துச் சொல்லலாயி னான்:—

"அப்பா கோமளாங்கா! இப்போது சந்திரோதயமாய்ப் பத் துக் கடிகையாய்விட்டது. இனி யான் சும்மாவிருக்கமுடியாது. யான் சொல்வதைக் கவனித்துக்கேள். நீ மகாதுஷ்டன். இராஜகுமாரிகளை வதைசெய்யத் துணிந்தவன். உன் வார்த்தையைப் புத்திமோசத்தால் நான் நம்பினதற்குவேண்டிய கஷ்டம் அனுபவித்துவிட்டேன். கடவுள் என் பரிதாபத்திற் கிரங்கி என்னைச் சிறையினின்றும் வெளிப்படுத்தினார். இனி எவ்வளவு அனுபவிக்கவேண்டி யிருக்கிற தோ தெரிகிலேன். நானுன்னுதவியைக் கோறினது ஒருவனால் இப் பெரிய முயற்சி சீக்கிரத்தில் ஈடேறாதென்றே யல்லது உன்மேல் வைத்த பட்சத்தாலென்று நினையாதே. நீ யுதவிபண்ணினதா லுன் னையும் மீட்கலாயிற்று. ஆகையால் இனி நானுனக்குச் சத்துரு. நான் காராக்ரகத்தில் அடைக்கப்பட்டதும் தவிற என் உத்தியோகமும் உன்னாலிழந்தேன். இராஜவிஸ்வாசத்தையும் போக்கடித்துக்கொண் டேன். இனி இந்த நாட்டைவிட்டு வேறிடஞ்சென்று கடவுளரு ளாற் சீவனஞ்செய்து கொள்ளுகிறேன். நீ என்னை இனி மறந்து விடு" என்றான்.

கோமளாங்கன் பயந்து இனி என்ன விளையுமோவென்று தெரி யாதவனாய் "ஓ விக்ரமகேது! போனதெல்லாம் போகட்டும்; நான்

என் தமயன் தந்தை யுதவியால் இராஜ்பத்தைச் சுவாதீனம்பண்ணப் போகிறேன். உன்னைப் பிரதான மந்திரியாய் நியமிக்கிறேன். என்னைக் காராக்ரகத்தினின்றும் மீட்ட உன்னை மறப்பேனு? நான் சொல்லுவதுபோல நட" என்று சொல்ல, விக்ரமகேது சிரித்து "ஓ பைத்தியக்காரா! இனியும் உனக்கிந்தப் பைத்தியம் விடவில்லையா? நீ முன்னம் இப்படிச் சொல்லிக்கொண்டு நடந்ததிற்கு இத்தனை நாளும் பட்டாயே! இனியும் புத்திவரவில்லையா? "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதுபோல் நீ இனியும் பெரிய அவஸ்தைப்படப்போகிருய். நீ உன்னிஷ்டப்படி செய். இனி, உன் வார்த்தையைக் கேட்க மாட்டேன்" என்றெழுந்தான். கோமளாங்கன் அவனுக்கு மறுபடியும் ஆசைவார்த்தை சொல்லி அவனைப் பிடிக்க விக்ரமகேது உதறிக் கொண்டு அவனைவிட் டகன்று ஓடிப்போனுன். தனியாயிருக்கிறேமே! இனி யெப்படிப் பட்டணம் போவது? தமையனையும் தந்தையையும் என்று பார்ப்பது? என்றுருகித் துக்கித்துக்கொண்டு விக்ரமகேது போனவழியையுங் கவனியாமல் படுத்து நித்திரைபோனுன் கோமளாங்கன்.

14. புத்திரோற்பத்தி.

டம் டம் டம், டடம் டடம் டடம், டம் டடம், டம் டடம், டம் டடம், திடீம், திடீம், திடீம், "ஓ அய்யா! நம்ம ராஜாவுக்குப் புள்ளை பொறந்தது. எல்லாரும் வீடுகளையும் தெருவுகளையும் அலங்கரித்து விளக்கேற்றி மகர தோரணங்கட்டி ஏழைகளுக்குச் சோறு போட்டு சந்தோஷமா யிருங்கோ. நானுஞ் சந்தோசிக்கிறேன். என் வீட்டுக்காரியும் நேத்து ஆம்பிள்ளை பெத்தாள்." திடீம், திடீம். "அடே தோட்டி! என்னடா பறை? ஒன் வீட்டுக்காரி ஆண்குழந்தை பெற்ருல் பறையடித்துத் தெரிவிக்கவேண்டுமோ?"

"அய்யா! புத்தி சாமி, கும்பிடுகிறேன். நமது ராஜாவுக்கு இன்றைக்குஆம்பிள்ளைபொறந்தது.எனக்கு ரொம்பச் சந்தோஷம். உங்களுக்கும் ரொம்பச் சந்தோஷந்தானே. சாமி கும்பிடுபோடுகிறேன்."

"ஆமடா! மிகவும் சந்தோஷமே! நமது உத்தமகுணமுடைய சக்கிரவர்த்திக்குப் பகவற்சேவையால் ஆண் குழந்தை வுற்பத்தியானது மிகவுஞ் சந்தோஷந்தான்."

"ஏ சாமி! கும்பிடுபோடுகிறேன். கும்பிடு; கும்பிடு போடுகிறேன்.உங்களுக்குஆம்பிள்ளைபொறந்தால் சந்தோஷமாயிருக்காதா?"

"ஆக்ஷேபமென்ன ? சந்தோஷமுண்டாவது உலக வழக்கந் தானே."

"ஆ சாமி! கும்பிடுபோடுகிறேன். அப்படியா? ஆனாலுங்களுக்கு மாப்பிள்ளை பொறந்து ராசாவுக்கும்ஆம்பிள்ளை பொறந்தால் உங்களுக்குச் சங்கட்டமா யிருக்குமல்லவா? சரி அடா தோட்டி! என்னடா அப்படிச் சொலலுகிறாய் ? நமதரசனுக்கு ஆண் குழந்தை பிறந்து நமக்கும் ஆண்குழந்தை பிறக்கில் அதிக சந்தோஷமே தவிற என்னடா சங்கட்டம் ? அறிவுகெட்டவனே."

"ஏ சாமி! புத்தி. கும்பிடு, கும்பிடுபோடுகிறேன். கும்பிடுபோடுகிறேன், அடிக்காதீங்கோ. உங்களுக்கெப்படி அதிக சந்தோசமுண்டாகுமோ அப்படித்தான் எனக்குக்கூட ரெட்டைச் சந்தோஷம். சாமீ! கும்பிடு. எனக்கு மாப்பிள்ளை ராசாவுக்கும் ஆம்பிள்ளை அதினால் எனக்கு அதிக சந்தோஷம் சாமீ! கும்பிடு."

"அடே தோட்டி! நீ கொணர்ந்த சந்தோஷ சமாசாரத்திற்காக இதோ இதும் வாங்கிக்கொள். நீ சொல்லுஞ் சமாசாரத்தை மெதுவாகச்சொல். அவசரப்படாதே. பயப்படாமற் சொல்.

"சாமி! தெண்டம் தெண்டம். கும்பிடுபோடுகிறேன். இதோடு எனக்கு நாலுவேட்டி கிடைத்தது. இனி எத்தினை கிடைக்குமோ தெரியாது. கேளுங்கள். நம்ம ராசாவுக்கு இண்ணைக்கு சூர்யன் வரவேளைக்கு ஆம்பிள்ளை பொறந்தது. எல்லாவரும் நகரம்,தெருவு,வீடு முதலானதெல்லாம் அலங்காரம்பண்ணி, மகரதோரண முதலானது கட்டி, வெளக்கு வைத்து ஏளைகளுக்கு அன்னம் போட்டுத் தேவாலயங்களை அலங்காரம்பண்ணி வெளக்கேத்திப் பூசைபண்ணி எல்லாருஞ் சந்தோசமாயிருக்கவேணுமென்று பெரிய மந்திரிப் பிரபு உத்திரவு பண்ணினார். திடீம், திடீம், திடீம்."

"ஆஹா! அப்படியே செய்கிறோம் போ, எல்லவருக்கும் மிகவும் சந்தோஷம்."

"சாமீ! நான் அடுத்த தெருவிற்குப் போகிறேன். கும்பிடுபோடுகிறேன். கும்பிடு."

இப்படித் தெருத்தெருவாய்த் தலையாரி பறையடித்துப்போனான், பிரஜைகள் யாவரும் சந்தோஷித்து மந்திரியுத்திரவுப்படி பட்டணமெங்கும் அலங்கரித்து உற்சவம் கொண்டாடினார்கள். பட்

டணமெங்கும் சந்தோஷச் சின்னங்கள் நிறைந்தன. இரண்டுநாளைக் கெல்லாம் மந்திரிக்கும் ஆண்குழந்தை உற்பவமாயினதென்று வதந்தியுண்டாகவே பிரஜைகள் யாவரும் ஆனந்தக்கடலில் மூழ்கினார்களென்றால், பிள்ளைகளைப் பெற்ற தாய்தந்தையர்கட்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்லவும் வேண்டுமோ? அரசன் தனக்குப புத்திரோற்பத்தியான ஆனந்தமேலிட்டால் விஸ்வஞதரைப் பலவாறு போற்றித் துதித்துப் பொக்கிஷம் திறந்து அளவற்ற திரவியங்களைத் தானம்செய்து, ஆலயங்களுக்கு உற்சவம்நடப்பித்து, சர்வ தானதர்மங்களையும் குறைவின்றி நடப்பித்துமனம் களித்திருந்தான்.

இந்திரலேகை புதல்வனை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவந்தாள். சுமதிமாதும் மிகவும் சந்தோஷத்துடன் குழந்தையைத் தான்பெற்ற குழந்தையைப்போல் பாவித்து யாதொரு குறைவுமின்றிப் பாதுகாத்துவந்தாள். மந்திரி குமாரனும் அப்படியே வளர்ந்துவந்தான். விக்ரமசேனன் மாளவதேசபூபதிக்கும் மற்றத் தேசத்தரசர்கட்கும் அரசனுக்குப் புத்திரோற்பத்தியான சந்தோஷ சமாசாரத்தைத் தூதுவரைவிட்டுத் தெரிவித்தான். மஹாதேவர், அரசனுக்குப் புத்திரோற்பத்தியான தினத்தில் சிறைச்சாலையிலிருந்து கோமளாங்கனும் விக்ரமகேதுவும் சுரங்கம் பண்ணித் தப்பித்துக்கொண்டு போய்விட்டார்களென்று முதன் மந்திரி மூலமாக அரசனுக்குத் தெரிவிக்க, அரசன் புத்திரோற்பத்தி மகிழ்ச்சியில் இருந்தபடியால் அவர்களை மன்னித்துச் சிறைச்சாலையில் இருக்கும் மற்றவர்களையும் சிறைமீட்டு அனுப்புவதுடன் அந்தந்த அரசனுக்குத் தகுந்த மரியாதைசெய்து அனுப்பும்படி உத்திரவளித்தான்.

இராஜ குமாரனுக்கும் மந்திரி குமாரனுக்கும் நல்ல சுபதினத்தில் நாமகரணம் இடவெண்ணி, அரசன் தனது புத்திரனுக்குச் "சிதம்பரசேகரப்பெருமாள்" என்று பிராமணோத்தமர்களால் நாமகரணம் இடவைத்து, அவர்கள் ஆசிகூற அவர்களுக்குப் பலதானங்களளித்து அனுப்பினன். மந்திரி குமாரனுக்குப் "புகழேந்தி" என்று பெயரிட்டனர்.

இருகுழந்தைகளும் வளர்ந்து, ஒன்றுக்கொன்று நேசமாயும் ஒற்றுமையாயும் விளையாடி ஐந்துவயதாகவே, நல்ல உபாத்தியாயரை நியமித்து வித்யாப்பியாசம் செய்வித்து வந்தார்கள். இருகுழந்தை

களும் வரப்ரசாதத்தால் உற்பவித்தவர்களாகையால் அதி துரிதமாய் அதி நுட்ப வித்தைகளையும் புத்தி சாதுர்யத்துடன் கிரகித்து அஸ்த்ரசஸ்த்ரப் பிரயோகங்களும் யானையேற்றம் குதிரையேற்றம் முதலியவைகளும் கற்றுத் தேர்ந்துவந்தனர். ஆனால் சிதம்பரசேகரன் மேற்சொல்லிய கல்விப்பயிற்சியில் அதிக சிரத்தையுடன் இருந்தாலும் பிரம்மவித்தை கற்பதில் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு உபாத்தியாயர் அதிசயிக்கும்படி விசாரணைசெய்துவந்தான். உபாத்தியாயர் தன்னாலானமட்டும் சொல்லிப் பிறகு "ஓம் பிள்ளாய்! உன் புத்தி பிரம்மவித்தையில் அதி தீக்ஷண்யமாயிருக்கிறது. இனி என்னால் உனக்கு இந்த விஷயத்தில் சொல்லவேண்டுவதொன்றுமில்லை. உன் பூர்வஜன்ம கர்மானுபவத்தால் யாரேனும் ஒரு ஜீவன்முக்தனைத் தரிசித்து நிவர்த்திதேடிக்கொள்" என்று உரைத்து, அரசனிடம் சென்று சிஷ்யர்களுக்குச் சொல்லிவந்த வித்தையை எல்லாங் காண்பித்து, அரசனும் மந்திரியும் மகிழ அவர்களிடம் பரிசுபெற்று, தன் இருப்பிடம் போகப் பிரயாணப்பட்டு, அரசனை அழைத்துச "சிதம்பரசேகரன் தன் புத்தியைப் பிரம்மவித்தையில் அதிக தீக்ஷண்யமாய்ச் செலுத்துகிறான்; ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்" என்று உரைத்துப் போயினார்.

அரசன் சிலநாட்சென்று மந்திரியை அழைப்பித்துத் தன் குமாரனுக்கு இளவரசு பட்டங்கட்டிக் கண்குளிரப் பார்க்கவேண்டுமென்னத் தேசதேசத் தரசர்கட்கும் தெரிவித்துச் சர்வ ஆடம்பரத்துடன் இளவரசு பட்டங்கட்டி மகிழ்ந்திருந்தான்.

சிதம்பரசேகரன் தன் துணைவனான புகழேந்தியை இணைபிரியாது, தான் புசித்தாலவனும்புசிக்கத் தான் நித்திரை செய்யின் புகழேந்தியும் நித்திரைசெய்ய, இருவரும் சகோதரரென்று யாவரும் புகலும்படி நேசமாயிருந்தார்கள். இப்படியிருக்க ஒருநாள் குலசேகரப் பெருமாள் இராஜசபையிலிருந்து காரிய விசாரணை செய்துகொண்டிருக்கும்பொழுது சிதம்பரசேகரனும் புகழேந்தியும் வரக்கண்டு அவர்களை எதிர்சென்றழைத்து ஆசிகூறித் தன் சிம்மாசனத் தருகிருத்தி "கண்மணிகளா! நீங்கள் இன்று சபைக்குவரக் காரணமென்ன? நீங்களிருவரும் இன்று இங்கு விஜயஞ்செய்ததால் இவ்விராஜாங்கம் தேவேந்திர சபைபோல் அலங்காரமாயிருக்கிறது" என்று புகழ்ந்து "சோமசுந்தரக்கடவுள் உங்களிருவருக்குந் தீர்க்காயுள் கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, அரசன் கண்களினின்று மாலை

மாலையாய் நீர் சொரிந்தது. மிகவுந் துக்கத்துடன் மகனை வாரியெடுத்து முத்தமிட்டும் துக்கம் பெருகுவதைச் சிதம்பரசேகரன் கண்டு கலக்கமுற்று "அன்பான தந்தையே! இன்று நாங்கள் இந்தச் சபைக்கு என்ன முகூர்த்தத்தில் வந்தோம்? எங்களைப் பார்த்து அடங்காச் சந்தோஷங்கொண்ட தேவரீர் இப்படி ஆற்றொணாத்துயரில் ஆழ்ந்ததற்கு என்ன காரணம்?"

குலசேகரன்:—"அப்பா குழந்தாய்! எனக்குச் சந்தோஷமேலீட்டாற் கண்ணிற் ஜலம் வந்ததேயன்றி மற்றொன்றுமில்லை."

சிதம்பரன்:—"தந்தையே! இப்போதும் துக்கிக்கிறீர்கள். ஏதோ மனதில் என் விஷயமாய்த் துயரம் நேர்ந்திருப்பதற்குச் சந்தேகமில்லை. கிருபை செய்து சொன்னாலொழிய மனமாறேன்."

குலசேகரன்:—"ஓ குழந்தாய்! உனக்கு உண்மையை மறைத்துச் சொல்வதில் பிரயோசனமில்லை. இவ்வளவு சௌந்தரியத்தையுங் கல்விப்பயிற்சியையுமுடைய ஒருமகவைக் கொடுத்த பராபரமூர்த்தி சொற்ப ஆயுளைக் கொடுத்தபடியால் 'நீ தீர்க்காயுளாயிருக்கக் கடவை' என்று வாழ்த்தும்படி முடியாமற் போய்விட்டதே என்று நினைத்தேன். துக்கம் என்னைத் தெரியாமல் வந்துவிட்டது."

சிதம்பரன்:—"ஆஹா பிதாவே! இதற்காகவோ எல்லா முணர்ந்த பூமண்டலாதிபதியாகிய தேவரீர் துக்கிப்பது? அற்பமாகியும் அநித்தியமாகியு மிராநின்ற இத்தேகம் நிஜமானதல்லவே! இதனகத்தே வஸிக்கின்ற தேஹியானவன் இச்சடத்தைவிட்டுநீங்குகில், இது நாய் நரி காகங் கழுகு எறும்பு முதலிய பிராணிகட்கு இரையாகவேண்டியதல்லவா? இதற்காக வருந்துவது நீதியோ? இதிருக்கட்டும். 'அற்பாயுளைக் கடவுள் கொடுத்தார்' என்றுரைத்தீர்களே! அந்த விசேடத்தைத் தயவுசெய்து கொஞ்சஞ் சொல்லவேண்டும்."

குலசேகரன் :— "அப்பா குழந்தாய்! நீ கேட்கிறபடியால் நான் சொல்லுகிறேன். ஓர் ஆண்மகவுக்காகக் காலகாலனைக் குறித்துத் தவம் பண்ணிவர அவர் கிருபைகூர்ந்து ஓர் சந்நியாசியாய்த் தோன்றி "ஞானவானாய்ச் சர்வலட்சணமுமமைந்த குழந்தையை அளித்தோம்; ஆனாலவன் தனது இருபத்திரண்டாம் வயதிற் சத்துருவாற் கொலையுண்ணப்படுவான்; அப்போது யாராவது ஜீவன் முக்தன் உதவி செய்தால் நீடூழி வாழ்வான்" என்றுரைத்து மறைந்தார். உனக்கோ பதினாறுவயதும் ஆய்விட்டது. இனி ஆறுவருஷ

காலத்தில் இக்குணங்களமைந்த குழந்தையை யிழந்து மகனைப்பெற்றும் மலடாய் இருக்கவேண்டுமே கடவுளே! என்று நினைத்தேன்; துக்கம் வந்தது; என்ன செய்வேன்? சிசுவே! எல்லாம் ஈசன் செயல்."

சிதம்பரன்:—"பிதாவே! "கும்பிடப்போன தெய்வங் குறுக்கிட்டாற்போலாயிற்று". நான் தேவரீரிடம் விடைபெற்றுத் தேசாந்திரஞ் சென்று புண்யஸ்தலம் தேவாலய முதலிய இடங்களுக்குப் போய்ச் சித்தசுத்திபெற இச்சித்து அனுமதி கேட்க என் தோழனுடன் இங்கு வந்தேன். தேவரீர் என் இரகஸ்யத்தைச் சொன்னது மிகவும் நன்மையே. இதுவுங் கடவுள் செயல்தான். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்" தேகமிருக்கும்போதே மோக்ஷத்தைத் தேடவேண்டியதால் தடைசொல்லாது எனக்குத் தீர்த்தயாத்திரைக்கு விடையருளவேண்டும். இதோ சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறேன்."

குலசேகரன்:—நமஸ்கரித்தெழுந்து கைகட்டி வாய்புதைத்துத் தொழுதுநிற்குங் குமாரனை வாரியணைத்து "அப்பா! இனியும் ஆறு வருஷ மென்னுடனிருப்பாய். அதற்குள் என் பிராணன் நீங்காதா வென்றிருந்தேன். இப்போதே தவத்திற்குப் போகிறேனென்கிறாய். நீ ஒன்றுந் தெரியாதபாலனாயிற்றே! இப்படித் தேசாந்திரம் போகும்படி எண்ணலாமா?" என்று அழ ஆரம்பித்தான்.

சிதம்பரன்:—"ஓ என்னன்பான பிதாவே! சுவரிருக்கும்போதல்லவோ சித்திரம் அதின்மே லெழுதக்கூடும். ஆறுவருஷம் ஆறு நிமிஷமாய்ப் போய்விடுமே! பிறகு செய்வது யாதுளது? இதற்கு முன்னமே என் இரகஸ்யத்தைச் சொல்லாமற்போனீர்களே! இப்போதாவது முயன்றாலல்லவோ என் ஆத்மசுத்திக்கு மார்க்கந்தேடி இனியொரு ஜன்மத்திலாவது கதியடையக்கூடும். இது "கரதலாமலகம்" போல் தெரிந்திருந்துந் தடுத்துரைப்பது ஞாயமோ? போய் வருகிறேன், நமஸ்காரம்."

குலசேகரன் என்ன சொல்லியும் அவற்றிற்குச் சரியான நியாயமெடுத்துரைத்து ஒரே பிடிவாதமாய்ச் சாதித்து விடைபெற்றுக் கொண்டு தாய்மாரிடஞ் சென்று அரசன் சபையில் நடந்ததைச் சொல்லி அவரிடம் விடைபெற்றதுங் கூறித் தாய்மார்களை வணங்கி அனுமதி கேட்க, இந்திரலேகை பிரிவாற்றமாட்டாமல் என்ன

சொல்லியுங் கேளாமல் அவர்களுக்கு அஷ்டாங்க பஞ்சாங்கமாய் நமஸ்கரித்து 'இனியொரு நிமிஷமேனும் என் காலத்தை வீண் போக்கமாட்டேன்' என்று கூறி வெளிப்பட்டான் சிதம்பரசேகரன். புகழேந்தி தன் தாய் தந்தையரைவணங்கி இராஜகுமாரனுடன் போக அனுமதி வேண்டுமென்று கேட்க, அவர்களும் மகிழ்ந்து "குழந்தாய்! இத்தேகம் ஒருநாளுஞ்சதமல்ல. நீ உன்னுயிரைப்போல் இராஜகுமாரனுயிரைப் பாதுகாத்து, அவனுக்குச் தொண்டு செய்து உன்னாலான உதவி செய்துவா. இதுவே எங்களுக்குச் சந்தோஷம். ஒருபோதும் சிதம்பரசேகரனைப் பிரிந்திராதே, பிறகு கடவுளிச்சை" என்று கூறி விடைகொடுத்தனுப்பினார்கள். புகழேந்தி இராஜகுமாரனைச் சந்தித்துத் தன் தாய் தந்தையர்கள் அனுமதி கொடுக்கப் பெற்று வந்ததும் இராஜகுமாரனைத் தொடரக்கொண்ட தன் கருத்தையுஞ் சொல்லி இருவருங் கலந்து தீர்த்தயாத்திரை பண்ணிக் கொண்டு ஆலயங்களைத் தேடி நடந்தார்கள்.

15. தீர்த்தயாத்திரை.

இருவருங் காடு, வனம், நகர், பட்டணம் முதலான யாவையுங் கால்நடையாய் நடந்து இராஜகுமாரன் மந்திரிகுமாரன் என்று தெரியாமற் போம்படி வெயிலாலுங் காற்றாலும் உடம்பு கறுத்துச் சாதாரண மனிதர்களைப்போற் பட்டணங்கடோறும் திரிந்து அகப்பட்டவிடத்தில் நேர்ந்தவேளையில் உணவு உண்டு தேகமிளைத்து யாதொரு பொருளைக் குறித்தும் யாதொருவிடத்தை நண்ணியும் போகாமற் "கடவுளே" என்னும் ஒரே வைராக்கியப் பிராந்தியுடன் திரிபவர்களாயினர். குளங்கண்ட விடத்து ஸ்நானஞ்செய்து கோவிலைக் கண்டவிடத்தில் நமஸ்கரித்து ஓரிடத்துந் தங்காமற் சஞ்சரித்து பழனியிற் சென்று முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் திருப்பழனியங்கிரியைப் பிரதக்ஷிணம் வந்து ஆங்காங்கிருக்குந் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து மலையேறி ஸ்வாமியைத் தரிசித்துத் துதிப்பாராயினர்.

சிதம். 'உலகமதில் மானிடப் பிறவியே பெரிதென்று உற்றுணர்ந்தோர்கள் சொல்வர், உண்மையீதென்றுநான் சற்றேனு மறியநீ யுதவவில்லையே பாவியேன், பலகலைகள் கற்கவில்லை நிலைகள்பல செய்திலே பரிதவித் துருகி மோன, பரதநிலைய காட

வில்லை யுன தருளைத் தேடவில்லை பார்க்கிறேன் செய்ததென்னே, யலைகடலி னூறுதுரும் பெனமோத லுண்டுண்டு அநுதினமு முனை மறந்து, அகமகமெ னும்பெரிய பேய்பிடித் தையை யோ அறிவிழந் தலைதல் நன்றோ, மலைமகட் புதல்வனே கலைகள்சொற் றலைவனே மணிதிலுறை வடிவேலனே, மகி மைதரு பழனிகிரி சிகரமிசை மேவுமென் மயில்வாஹனக் கடவுளே.

புகழே. முருகன் றுணையென்று முற்றிலும் போற்ற முனைந்துகொண்டாற், கருவொன் றிலேறக் கடனில்லையே இக்காசினியில், தருவொன்று வைக்கப் பலமொன்று காய்க்கத் தகாததுபோல், வருமன்று மோன நிலையென்று கூற வாவருமே.

அவுணக் கருங்கடல் செங்கடலாக்கு மரசனெங்கோன்
சரணத்தைநீ மறவாதிருக்கத் தவஞ்செய் நெஞ்சே
கரணப்பொறிபுல னுனைவிட் டகலக் காத்திருந்தத்
தருணத்தில்வந்து உனையாதரிக்கத் தடையில்லையே.

சிதம். என்பெலாம் நெக்குருகிப் பாடவறியே னுனது வினியபத மலரை யென்னுள், ளிறுகப் பிடித்தன்பு தொடாவறியே னென் னியம்புவேன் சுயம்பு வானோய், அன்பெலா மின்ப மாய்ப் புகலவறி யேனின் னருட்பிர வாஹத்தை நாடி, யக மகிழ்ந் துருகவுஞ் செகமறிந் தொழுகவு மறியனிவ்வ சடனந்தோ, துன்பெலா மின்பமாய்ச் சூழுலகு பாழாய்த் தொலைத்த பேரன்ப ருள்ளத், துலவுநவ மணிமகுட தரசரவ ணோற்பவா சுந்தரானந்த லோலா, வம்புசெறி யம்புவியின் வாழ்வுசத மலவெனநின் மலரடியை மனதில் நாடி, வரமருள்க குகசரவண ஷண்முகாவென வருந்த வருள் பரமதேவே.

மங்களம் சூரசம்ஹாரா, மங்களம் பார்வதீ சுதா
மங்களம் குக்குடோத்வஜா, மங்களம் சரவணோற்பவா.

இப்படி இருவரும் மனமுருகிப் பாடித் துதித்து மங்களம் பாடி அங்கு சிலநாளிருந்து காலை மாலை ஸ்நானஞ்செய்து கிரிபிரதக்ஷிணமும் வந்து சன்னிதானம்சென்று தரிசனம்செய்து வர்ணித்துப் பிட்சையெடுத்துண்டு சிலநாள் கழித்துப் பிறகு சஞ்சாரந்தில் பந்தி நாட, மதுரை சென்று சுந்தரமூர்த்தியையும் மீனாக்ஷியம்மையையும் தரிசனம் செய்து இராமேஸ்வரஞ் சென்று தரிசித்துத்

திரும்பி ஜம்புகேஸ்வரர், விருத்தகாசீஸ்வரர் சந்நிதிகள் சென்று தரிசித்துத் துதித்து நடேசர் திருநடனம்புரியும் சிதம்பரம்சென்று கனகசபாபதியைத் தரிசித்துத் துதிப்பாராயினர்.

சிதம். தில்லைச் சிதம்பர தேசிகனே யுனைத்தேடி யிதோ
அல்லற் படுமொரு பெரும்பாவி வந்திங் கலைகிறனே
பல்லைக் கடித்திரு கண்ணைச்சுழற் றிப் பறிகொடும்போ
தொல்லைப் படுத்த வழகல்லவென்று தோன்றுவையே.

புகழே. கல்லா வசடக் கழுதையென்றும் மறை கற்றுணர்ந்த
நல்லா ரருந்தும் பேரின்ப வெள்ளத்தை நாடியொரு
சொல்லாகிலுஞ்சொல்லித்துதிசெய்துபோற்றத் துணியமன
தில்லாதவ னென்றறிந்தும் வரச்செய்த லென்செயலோ.

பிறகு திருவண்ணுமலை, திருக்காளத்தி, திருத்தணிகை, ஜகன்னு தம், திருக்காஞ்சி, திருக்கழுக்குன்றம், திருவொற்றியூர் திருப்போரூர் முதலிய திவ்ய க்ஷேத்திரங்களிற் சென்று துதித்துப்போற்றி ஸ்வாமி தரிசனம் பண்ணிக்கொண்டு உத்திரதிசை நோக்கிச் செல்வாராயினர். வழியில் விஷ்ணுஸ்தலம், சிவஸ்தலம், பகவதி க்ஷேத்திரம் முதலிய ஸ்தலங்கள் அகப்படில் ஆங்காங்கு சென்று நமஸ்கரித்து உடுப்பிபோய் அவ்விடமிருந்து சுப்ரமண்யஞ் சென்றார்கள். அவ்விடத்தில் ஸ்வாமி ஏகாந்தமாய் வனத்திலிருக்கக்கண்டு உள்ளம் புளகாங்கிதராய், ரோமஞ் சிலிர்ப்பப் பிரதக்ஷணஞ் செய்து உணவின்றி ஏகாக்ரசித்தராய் ஆனந்த பாஷ்பம் நயனங்களினின்றுந் தாரை தாரையாய்ச் சொரிய கைகூப்பிச் சந்நிதானத்தினின்று ஓ சரஹேணற்பவா! சங்கரீ புதல்வா! ஷடாக்ஷர நாமா! மயில் வாஹன! சேவற்கொடியோய்! பக்தவற்சலா! அடியேங்களுக்குக் கிருபை கூர்ந்து ஜன்மஸாபல்யமுண்டாகக் கருணைகூர்ந்து குருவாகி வந்தருளவேண்டும் கடவுளே! தீனதயாளா! என்று பலவாறு புகழ்ந்து வருந்தித் துதிக்கலாயினர்.

சிதம். ஆபத்து பிணிவருமை யணுகியலா லுனைநினைப்ப தரிதாகு
லுங், தாபத்தை யொழிக்குமுன தருட்கடலைத் தருவதென்
னுஞ் சகசமன்றோ, சோபத்தி லனுதினமுஞ் சுழன்றுழன்று
திரிகாண சுத்தியின்றிப், பாபத்தி லிழிவேனைக் கரையேற்ற
வுனதுகடன் பரமதேவே.

புகழே. அலைகடலிற் றுரும்பதுபோ லலையுமன மிளமடவா ரங்கம்பற்றி, உலையிலிரும் பெனமோத லுண்டுண்டு மநுதினமு முணராவண்ணம், வலையிலுறு மானெனநன் மதிமயங்கி விழிதயங்கி வருந்தல்யாதோ, சுலைபயின்றோர் நிலையிலிருந் துணைக்கலக்க வருள்கரக்குங் கருணைக் குன்றே.

சிதம். சத்துவமாஞ் சுத்தகுண மெனக்குவரி லைதுனது சரணதாமரையை நாடி, அத்துவித வித்தெனவும் வஸ்துவுறு சத்தெனவு மடியனேற் குளர வருமோ, முத்துபல வொத்திலகு சித்ரமகு டாதரா முனிவர்தொழு முருகா குகா, பத்திநெறி நித்தமுமென் சித்தமிசை வைத்துலக பற்றையொழி நித்த னுருவே.

புகழே. அங்கமெலாம் பதைபதைக்கத் தூங்கவிழி நீர்சொரிய வலறிமீறி, மங்கையர்தங் கொங்கைவிழி மையலிலே பட்டுழன்று மயங்குஞ் சித்தம், கங்கையொடு திங்களணி மங்கைபகர் புங்கவனீய் மதலா யுன்றன், சங்கையறு தங்கநிகர் செஞ்சரணக் குஞ்சிதத்தைத் தவிர்வ தேனோ.

சிதம். கீர்த்தனம்: இராகம் - நாசநாமக்கிரியை, தாளம்–ஆதி.

பல்லவி.

குருமுருகம் பஜே மனஸம்

அநுபல்லவி.

குருமுருகம் பஜே திருமுருகம் பஜே (குருமுரு)

சரணம்.

(1) ஜனன மரணசம் சார ரஹிதம்
மனன சுககரம மாத்ம போதம் (குருமுரு)

(2) சாக்ஷாத்கார ஸதாஸா ர வைபவம்
மோக்ஷஸாதனம் முக்திகரந் தெய்வம் (குருமுரு)

(3) நித்யநிர்ம்மல நிராமய பூர்த்தீம்
பக்த வத்ஸல பராபர மூர்த்தீம் (குருமுரு)

புகழே. கீர்த்தனம்: இராகம் - கமாஸ், தாளம், ஆதி.

பல்லவி.

பால சுப்ர மண்ய தேவ—னே, மனமலரி லுறைசிவ
நீல கண்ட நிமல போத—னே. (பாலசுப்ர)

அநுபல்லவி.

தால மதில் நிறை, வேலை வரள் சுர
சீல மொடு வொரு, கோல வேல் தொடு (பாலசுப்ர)

சரணம்.

(1) பக்திநெறி நிலாப் பித்திலாழ்ந்தேனே—பவசாகரப்பொய்
சுத்தியநுதினம் நத்திவாழ்ந்தேனே.
சித்தி முத்தர்கள் பக்த சித்தர்கள்
தத்தித் திமியென நிர்த்த மிடவருள் (பாலசுப்ர)

(2) மரண மெனவுயிர் வாடுதென் கர்மம்—சுரர்பதிதொழுஞ்சுப
கரண வெனதிரு ளகலா தென்வர்மம்
புரணயொளியுக சரண திரிபுர
ஹரணசுத பவ கரண ஸ்ரீகரா (பாலசுப்ர)

(3) குஞ்சிதப்பத மருள்வதென்னாளோ—கிருபாகராவென்
சஞ்சிதக்கட றவிர்தலென்னாளோ
தஞ்சமுனதிரு செஞ்சரணமலர்
கஞ்சரிபுமரு கஞ்சலெனவருள் (பாலசுப்ர)

சிதம். கீர்த்தனம்: இராகம் - தோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

போரும் போரு மிந்த ஜன்மம் புண்யராஜ ராஜலோலா. (போ)

அநுபல்லவி.

சீரும்பணியும் நீருமணியும் ரீ-ரீ-ரீ-ரீ-ரீ-ரீ
சீரும்பணியும் நீருமணியும் சிவனருள் பாலா
வாரும்வல்வினை தீரும்புல்லினைக் காரும்காரும் கூறொளிவேலா. (போ)

தொண்டரிதய மண்டபமுறு சுத்தப்பிரம்மமே
அண்டர் முனிவர் கண்டுமகிழ வருளுந்தெய்வமே
சண்டமாருதச் செண்டுபோற் சிக்கித் தொண்டனுய்யவோ
அண்டரண்ட ரண்டம்புகழும் ஆத்மபோதா சாத்வகீதா (போ)

பஞ்சபூத பௌதிகஜடம் பாழென் றெண்ணினேன்
தஞ்சமென்றுநின் சரணமலரத் தபயம் பூணினேன்
கொஞ்சமுமன திறங்கவில்லையே பஞ்சபாதகன் செய்தவினையே
செஞ்சொற்குஞ்சித ரஞ்சிதமொழி வஞ்சிபணியும் குஞ்சிதபாதா. ()

ஈன்றெடுத்த தாய்கள்கோடி எந்தையுங் கோடி
சான்ற நூல்கள் கோடிகோடி சாஸ்திரங் கோடி
ஆன்ற கூடஸ்தன் நீயென்றிபற்றி அறிவிலாமையை யகலவகற்றிப்
போன்ற பிரம்மத்தைப் புரியக்காட்டிப் பூணக்காணும் புதுமையறி
யேன். (போ)

இவ்விதம் பல கீர்த்தனைகள் பாடித்துதித்துப் பரவசமாய் நிற்கும்போது இவர்கள் மனோநிலைமையையும் விரக்தியையும் பார்த்து ஆனந்தங்கொண்டு இராஜகுமாரனது அதிதீவிரபக்குவத்தைப் பார்த்து இவனைக் கடைத்தேற்றல் வேண்டுமென்று தண்டு கமண்டல ஜடா மகுடதாரியாய்ப் புலித்தோலுடுத்து ஒரு யோகீஸ்வரர், முருகக்கடவுள் திருவுளம்பற்றினாற்போல அவர்களெதிரில் தோன்றிநின்றார்.

இருவருங் கண்திறந்து பார்க்கவே, எதிரில் யோகீஸ்வரர் நிற்கக்கண்டு, கடவுள் கிருபை செய்தாரென்று அவர் பாதத்தில் நமஸ்கரித்துப் போற்றியெழுந்து அஞ்சலியஸ்தராய் நிற்க, யோகீஸ்வரர் இவர்களைச் சோதிக்கவெண்ணிப் புன்சிரிப்புடன் சைகைபண்ணி, முன்னடக்கப் பின்றொடர்ந்தனர். திரும்பிப்பார்க்காமற் போகுமவர் பிறகே ஆகாரம் நித்திரை சோம்பல் முதலியவை தோற்றாது ஒரே எண்ணமாய்க் கடவுளனுக்கிரகித்தார். இனி இவரால் மோக்ஷமடையலாம் என்றுறுதியாய் நம்பி வாய்திறக்காமற்செல்ல, யோகீஸ்வரர் மூகாம்பிகை வனத்திற் தவம்புரிந்து வசிப்பவரானபடியால் அங்குச்சென்று மூகாம்பிகை அம்மனை நமஸ்கரிக்கச் சன்னிதியில் இருவரையும் அழைத்துச் சென்று அம்மன் தெரிசனம் பண்ணிவைக்க இருவரும் தரிசனஞ்செய்து பிறகு யோகீஸ்வரரை நமஸ்கரித்து நின்றார்கள். அவர் அம்மன் பிரசாதத்தை யவர்கட்களிக்கச் செய்து தான் தவம்புரியும் ஆசிரமத்துக்கு அழைத்துச்சென்று அருகில் உட்காரவைத்துப் பிரசன்னமான தனது முகத்தில் பவளத்தைப்போன்ற உதடுகளைத் திறந்து, முத்துப்போலொளிரும் பல்வரிசைகள் துலங்கக் குயில் கூவுவதுபோல் இன்பமான தனது கண்டத்தைத் திறந்து புன்னகையுடன் அவர்களைக் கடாக்ஷித்து, உடம்பைத் தொட்டுத் தழுவிக்கொண்டு இராஜகுமாரனைப் பார்த்து “ஓ குழந்தாய்! உன் வரலாறென்ன? நீ எதற்காக இப்படி விரக்தியுடையவனாய் இருக்கிறாய்? ஒளியாமற் சொல்” என்றார்.

இராஜகுமாரனெழுந்து அடங்காத ஆனந்தத்துடன் அவர் பாதத்தில் நமஸ்கரித்து "ஐயனே! என் பாக்கியமே பாக்கியம். தேவரீர் திருவுளம்பற்றி அடியேனை இன்று கேட்கும்படி என்ன தவம் செய்தேனோ "ஓ ஆண்டவனே! நான் பாலவனம் அரசாட்சிசெய்யும் குலசேகரப்பெருமாள் புதல்வன். அவருக்கு ஆண்மகவில்லையென்று பரமனை நோக்கித் தவம்புரிந்து வேண்டிக்கொள்ள இருபத்திரண்டாவது வயதில் சத்துருவால் வதைக்கப்படும் மகவொன்றுண்டாமென்றும், அவனை ஒரு ஜீவன்முத்தன் இரட்சிக்கில் சிலகாலம் வாழ்வான் என்றும் வரமளிக்கப்பெற்றாராம். எனக்கு இப்போது 17-வருஷமாய்விட்டது. இனி ஐந்துவருஷமே இருக்கின்றது. அனித்தியமான இத்தேகம் போமுன் எப்படியாவது கதியடையவேண்டுமென் றிச்சித்து, ஒரு வருஷகாலமாய்ப் பலவிடங்களில் சுற்றிக் கடைசியில் தேவரீர் பாதாரவிந்தஞ் சேர்ந்தேன். இது சத்தியம். அடியேனுக்குத் திருவுளம்பற்றி யனுக்கிரகிக்கவேண்டும் ஐயனே!" என்று மீண்டும் அவர்பாதத்தில் விழ, அவர் மகிழ்ந்து புகழேந்தியைப்பார்த்து "உன் கோரிக்கை என்ன?" எனப் புகழேந்தி அவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம்பண்ணி, அஞ்சலியஸ்தனாய் "ஆண்டவனே! நான் குலசேகரப்பெருமாள் சக்கிரவர்த்தியின் முதன் மந்திரி குமாரன். என் பெயர் புகழேந்தி என்றும், இதோ நிற்கும் என் பிராண சினேகிதர் பெயர் சிதம்பரசேகரன் என்றுஞ் சொல்லுவார்கள். இந்த இராஜகுமாரது இஷ்டப்படி நடந்துகொண்டு அவருக்கு ஊழியஞ்செய்து அவர் திருப்தியடையும்படி செய்வதே என் விரதம். ஆகையால், அவருக்கு எக்காலத்தும் பணிவிடை செய்து பிரியாமல் அவருக்கு வருந்துன்பம் எனக்கு வரும்படியும் அவருயிர் நீங்குமாயின் அப்பொழுதே என்னுயிரும் நீங்கும்படியும் அடியேனுக்கு வரமளித்தருளவேண்டும்" என்று சொல்லி நமஸ்கரித்தான்.

யோகீஸ்வரர் இருவருடைய வைராக்கியங்களையுங் கண்டு மனங்களித்து உட்காரவைத்து "அப்பா சிறுவர்களா! நீங்கள் மிகவும் சிறு வயதுடையவர்களா யிருக்கிறீர்கள். உங்களுக்கு இப்போதே விரக்தி வருவது முடியாத காரியம். நீங்கள் உலக இன்பத்தைக் கொஞ்சமும் அனுபவிக்காதவர்கள். அவைகளை அனுபவித்து வெறுப்பதல்லவோ விரக்தி? உங்களுக்கு யாதொரு துன்பமும் வாராமலிருக்கும்படி ஓர் மந்திரோபதேசம் பண்ணுகிறேன். அதை இடைவிடாது அனுஷ்டித்துவந்தால் சத்துருவை ஜெயிக்கலாம். மனதில் நினைத்த

இன்பங்களை அனுபவிக்கலாம். மக்களைப்பெறலாம். பொருள் வேண்டியளவு தேடலாம். இதுவுமன்றி அஷ்டமாசித்திகளையும் உபதேசிக்கிறேன். அவைகளால் எல்லா பாக்கியமும் சம்பாதிக்கலாம். குபேரனைப்போல எல்லா போகங்களையும் அனுபவிக்கலாம். ஆகையால் இப்போதுகொண்டிருக்கும் அபேக்ஷையைவிட்டு மந்திரோபதேசத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றார்.

இராஜகுமாரன் எழுந்து நமஸ்கரித்து, "ஓ தெய்வமே! இன்னும் ஐந்து வருஷத்திற்குள் தேகத்தை யொழிக்கும் எனக்கு இந்த வைபோகங்களெல்லாம் எதற்கு? நித்திய நிராமய வஸ்துவை அறிந்து நிற்சலனமாயிருந்து மோட்சம் அடையவேண்டுவதற்கு உபாயம் எதுவோ அதைக் கிருபைகூர்ந்து அனுக்கிரகிக்கவேண்டும்'' என்று கூறி ஓவென்று அழுதான். புகழேந்தியும் எழுந்து நமஸ்கரித்து "இராஜகுமாரருக்கு மனைவியாகுலம் தீரும்படி கிருபை செய்யவேண்டும், கடவுளே!'' என்று தொழுதுநிற்க, யோகீஸ்வரர் அனந்தமுற்று இப்பேர்ப்பட்ட ஆன்மாவுக்கு அவசியம் உபதேசிக்கவேண்டுமென்று கருதிக்கொண்டு "ஓ சிதம்பரா! நான் என்ன நன்மை சொல்லியும் கேட்கவில்லை. நீ கேட்டுக்கொண்டபடி உனக்கு உபதேசிக்கிறேன். பயப்படாதே! சிரத்தையுடன் கேட்பாயாக. பிறகு உன் பிரார்த்தனைப்படி முடியட்டும்'' என்று உரைத்து வேதாந்த விசாரத்திற்கு முதன்மையான இராகத்வேஷாதி குணங்களைப் பிரஸ்தாபஞ் செய்யத் தொடங்கினர்.

16. இராகத்வேஷாதிகள்.

யோகீஸ்வரர்:—"ஓ குழந்தாய்! மோக்ஷத்தை இச்சிப்பதற்கு முன் உலகத்தையும் அதைச் சிருஷ்டித்த கடவுளையும் பிறகு உலகத்திலிருக்கும் எல்லா வஸ்துக்களின் குணங்களையும் அறியவேண்டும். இதில் ஒரு தேகத்திற்கும் மற்றொரு தேகத்திற்கும் இருக்கும் தாரதம்மியம் தெரியவேண்டும். பிறகு தேகத்திற்கும் கடவுளுக்கும் இருக்கும் வித்தியாசம் தெரியவேண்டும். தேகத்திலிருக்கும் அவயவங்களுக்கும் தேகத்துக்குஞ் சம்பந்தம் தெரியவேண்டும். பிறகு, தேகம் தேகி இன்னவையென்றறிவதோடு தேகமுண்டான வகையும் தெரியவேண்டும். இதற்குமுன் இத்தேகத்திற்கு அனுபவிக்கத்தக்க சுகதுக்கங்களை உண்டுபண்ணும்படியான பதினாறு குணங்களுண்டு. அவை வருமாறு:—

(1) இராகம்—இது பரஸ்திரீகமன இச்சை.

(2) த்வேஷம்—ஒருவன் தனக்கு ஒரு குற்றஞ்செய்தால் பதில் செய்யத் தோற்றுவது.

(3) காமம்—பூமி, பொருள், பந்து முதலியவை மென்மேலும் சம்பாதிக்கவேண்டுமென் றுதிப்பது.

(4) குரோதம்—தன் விஷயங்களில் விக்கினம் பண்ணினவனைத் தண்டிக்கவேண்டுமென் றுதிப்பது.

(5) லோபம்—தன் பொருளில் கொஞ்சமேனும் பிறர்க்குக் கொடுக்கலாகாதென் றுதிப்பது.

(6) மோகம்—ஒன்றின்மேல் அதிக பிரீதியாயிருப்பது.

(7) மதம்—ஐஸ்வர்யம் தேகபலம் முதலியவற்றால் கிர்த்தியா கிர்த்தியங்கள் தெரியாமல் கர்விப்பது.

(8) மச்சரம்—ஒருவர் சுகப்படில் சஹிக்காமல் விகற்பித்து வரும் சித்தவிருத்தி.

(9) ஈரிஷை—தன் துக்கம் இதராளுக்கும் வரவேண்டுமென் றுதிப்பது.

(10) அசூயை—தன் சுகம் இதராளுக்கு வரலாகாதென் றுதிப்பது.

(11) டம்பம்—தனது சற்காரியங்களையேனும் தர்மங்களையே னும் பிறர் பார்த்துப் புகழவேண்டுமென் றுதிப்பது.

(12) தர்ப்பம்—தனது ஐஸ்வர்யம் பிறர்க்கு இல்லாததால் தனைப்போல்வாரில்லை என்றுதிப்பது.

(13) அகங்காரம்—நான் எல்லாம் உணர்ந்தவன். சகலத்தை யும் நேடவல்லவன் என்றுதிப்பது.

(14) இச்சை—பசிதாகநிமித்தம் அன்னபானுதிகள் பண்ணவும் மலமூத்திராதி விசர்ஜனம் செய்யவும் வேண்டுமென் றுதிப்பது.

(15) பக்தி—கடவுள்மீது பிரீதியும் பயமுமுண்டாய் அவரைப் பணியவருஞ் சித்தவிருத்தி.

(16) சிரத்தை—குருவாக்கியத்திலும் வேதாந்த சாஸ்திரத்திலுங் கவனம் வைத்துக் கேட்குஞ் சித்தவிருத்தி.

இராகம் முதல் அகங்காரம் வரையில் 13 குணங்களாலும் தேகத்திற்கு அளவற்ற துக்கமேயன்றி ஒருக்காலுஞ் சுகங்கிடையாது. ஏனெனில் இவைகளை அடைவதில் அற்பசுகந் தோன்றினும் அளவற்ற துக்கம் உடனே பாதிக்கின்றது. ஆகையால் இவை மனோலயத்திற்கு அனுகூல முடையவையல்ல என்று வமனஞ்செய்ததிலேனும் விசர்ச்சனம் பண்ணின மலமூத்திராதியிலேனும் மறுபடியிச்சைவாராததுபோல் அவைமேலிச்சை வைக்காது விடவேண்டியது. இச்சையால் தேகத்திற்குச் சுகமும் மனதிற்கு ஆஸ்வாசமு மிருக்கின்றது. பக்தி சிரத்தையென்ற இரண்டும் மோக்ஷத்திற்கேதுவானவை யாதலால் இவை மூன்றையும் அவசியம் கைப்பற்றவேண்டியது.

சிதம்பரசேகரன்:—"ஓ மஹாத்மாவே! பதின்மூன்று குணங்களையும் அடியேன் என் பட்டணத்தைவிட்டு வெளிப்படுமுன்னமே விட்டுவிட்டேன். இனி அவைகள் என்னைப் பாதிக்கா. இனி யான் செய்யவேண்டியவைகளை ஆக்கியாபிக்கவேண்டும்."

யோகீஸ்வரர்:—"ஓ குழந்தாய்! மோக்ஷத்திற்கு விரோதமான குணங்களைவிட்டதினாலும் அதற்கேதுவான குணங்களை எடுத்துக்கொண்டதினாலும் ஒருவன் முக்திக்கு அதிகாரியாகமாட்டான். அவனுக்கு வேதாந்த விசாரங் கிடைக்கும்பொருட்டு நான்கு சாதனங்கள் உண்டாயிருக்கவேண்டும். அவையாவன:—

(1) நித்யாநித்ய வஸ்து விவேகம்:—என்றென்றைக்கும் அழியாமல் சுயம்புவாய், அனாதியாயிருப்பது நித்தியம், அழிந்துபோவது அநித்தியம் என்று விசாரணைசெய்து சுருதி யுக்தி யனுபவத்தால் தெளிந்துகொள்ளும் விவேகமேயாம்.

(2) இகமுத்திரார்த்தபலபோகவிராகம்:—இவ்வுலகத்திலொருவனுக்குக் கிடைக்கத்தக்க சர்வபோகங்களிலும், இவ்வுலகத்திற் செய்யும் புண்ணிய கர்மங்களால் பரலோகத்தில் தனக்குக் கிடைக்கும் சர்வபோகங்களிலும், இச்சை வையாமல், மல மூத்திராதிகளை வெறுப்பதுபோல் வெறுத்து விடுவதேயாம்.

(3) சமாதிசட்க சம்பத்து—சமம் முதல் ஆறுவகை.

(க) **சமம்**—மனோநிக்கிரகம் அல்லது அந்தக்கரணங்களை அசையவொட்டாமல் நிலைநிறுத்தல்.

(உ) **தமம்**—பாகியேந்திரிய நிக்கிரகம் அதாவது கர்மேந்திரிய ஞானேந்திரியங்களின் வாதையை அடக்குவதாம்.

(ங) உபரதி—(விடல்) ஈஷணாத்ரய த்யாகம் அதாவது புத்திரனிடத்தும் மனைவியிடத்தும் தனத்தினிடத்தும் இருக்கும் இச்சையை நீக்குதல். தவிர சர்வ கர்மங்களையும் விட்டுவிடுதல்.

(ச) திதீக்ஷை—(சகித்தல்) சுகம்நேரிடிற் சந்தோஷியாமலும் துக்கம் வரின் துக்கியாமலும் பொறுத்திருத்தல்.

(ரு) சமாதானம்—இந்திரிய சேஷ்டைகட்கு இடங்கொடாமல் மனதைச் சாஸ்திரவிசாரணை முதலியவற்றிற் சரஸமாய் நிற்க இசையச் செய்வதாம்.

(சா) சிரத்தை—பக்தி விஸ்வாசம், அதாவது கடவுளிடத்து பக்தியும் குருவினிடத்தில் விசுவாசமும் வைத்திருப்பதாம்.

(4) முமுக்ஷுத்வம்—ஜனனமரண சம்ஸாரபயதுக்க மோகப்பிரமைகளை விட்டு எப்போதும் எந்தவிதத்தில் யாருடைய உதவியினால் மோக்ஷமடையலாமோ என்று, தலையில் நெருப்புப் பற்றினவன் தண்ணீர்க்கலைவதுபோல, உதிக்கு மிச்சை" என்பவைகளாம்.

சிதம்பரசேகரன்:—"ஸ்வாமீ! தேவரீரிப்போது அருளிச்செய்த சாதனங்களில் நித்யம் அநித்தியம் இன்னதென்று தெரிகிலேன். இக லோகத்திற் கிடைக்கக்கூடும் போகங்களில் இச்சையை ஒழித்தேன். பரலோகத்தில் என்ன போகமிருக்கிறதோ, அதை யெப்படியொழிக்கிறதோ தெரியேன். சமாதி முதலான குணங்கள் கொஞ்சமு மில்லை. மோக்ஷம் வேண்டுமென்னும் பிராந்தியொன்றே யிருக்கிறது. ஆகையால் நானெப்படி அதிகாரியாவேன்? எப்படி மோக்ஷமனுபவிப்பேன்? என்ன பண்ணுவேன்? தெய்வமே? என்னை ஆட்கொள்ளவேண்டும்" என்று அலறியழுஞ் சிதம்பரசேகரன் தைரியங்கொள்ளும்படி சொல்லுகிறார்:—"ஓ குழந்தாய்! பயப்படாதே! மனதைச் சலிக்கச்செய்யாமற்கேள். இந்தஜகத்தில் நால்வகையோனி எழுவகைத் தோற்றம் எண்பத்து நான்கு லட்சம் பேதங்களாயுள்ள சரீரங்க ளிருக்கின்றன.

நால்வகை யோனிகளாவன:—(1) சராயுஜம், (2) அண்டஜம், (3) சுவேதஜம், (4) உற்பிஜம் என்பவைகளாம்.

(1) சராயுஜம்:—பையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது.

(2) அண்டஜம்:—முட்டையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது.

(3) சுவேதஜம்:—வியர்வையிடமாகப் பிறப்பது.

(4) உற்பிஜம்:—பூமியினிடமாகப் பிறப்பது.

எழுவகைத் தோற்றமாவன:—(1) தேவர், (2) மானிடர், (3) மிருகம், (4) பக்ஷி, (5) ஊர்வன, (6) நீர்வாழ்வன, (7) ஸ்தாவரங்கள்.

எண்பத்துநான்கு லட்ச பேதமாவன.

(1) தேவர் 16-லட்சம். (2) மானிடர் 9-லட்சம். (3) மிருகம் 10-லட்சம். (4) பட்சி 10-லட்சம். (5) ஊர்வன 11-லட்சம். (6) நீர்வாழ்வன 10-லட்சம். (7) ஸ்தாவரம் 18-லட்சம். இவ்வாறு எண்பத்து நான்கு லட்சம் ஜீவபேதமுள்ள ஜகத், பிரம்மப் பிரளய காலத்திற் பன்னிரண்டு சூர்யர்களுமுதயமாய் நூறுவருஷம் மழையில்லாமலெரித்து பஸ்மம்பண்ணி ஆதிசேஷன் மகுடங்களை பஸ்மம் பண்ணும்போது அதனிடமிருந்து காளகூடவிஷாக்கினி பிறந்து சூரியாக்கினியோடு சேர்ந்து ஆதிசேஷன் முதல் துவாதசாதித்தர்களையும் பஸ்மம் பண்ண, அவ்வக்கினியினின்று ஸப்தமேகங்கள் பிறந்து யானைத்தும்பிக்கைபோல் பன்னிரண்டுவருஷம் வருஷித்து ஜலப்பிரளயமுண்டாய் முன் நாமரூபமுடைய யாவற்றையும் பஸ்மீகரித்த பஸ்மங்களை விலயமாக்கும். பிறகு அந்த ஜலம் வாயுஸ்தம்பமாய் நிற்க அதனில்நின்று வடவாக்கினி பிறந்து அந்த ஜலத்தைக் கிரகித்துப் பிரசண்டவாயுவிலடங்க அந்த வாயு ஆகாசத்திலடங்க அவ்வாகாசம் அஞ்ஞானத்திலீனமாக அவ்வஞ்ஞானம் பிரம்மத்திலடங்க, அந்த பிரம்மமொன்றுமே சேஷித்துநிற்கும். இந்த பிரம்மத்திற்கே ஸாக்ஷாத் ஜகதீஸ்வரனென்றும் நித்ய நிர்ம்மல ஆனந்த ஸ்வரூபமென்றும் ஆதி அநாதி என்று முகா நாமங்களாம். இப்போது நித்தியமானது எது? அநித்தியமானது எது? சொல்வாயப்பா குழந்தாய்!"

சிதம்பரசேகரன்:—"அப்பனே! ஸாக்ஷாத் ஜகதீஸ்வரன் நித்தியமும், மற்றவை யனைத்தும் அநித்தியமுமாம்."

யோகீஸ்வரர்:—"சரி! இன்னுங்கேள். இந்த வுலகத்தின்கண் புத்ர மித்ர களத்திர பசு பருத்திய பலபந்து கிரகம் க்ஷேத்திரம் தன்

தான்யாதி பொருள்களைச் சம்பாதிப்பதிலும் அவைகளைப் பாது காப்பதிலும் அதிக துக்கம் நேரிடுதலால் அவைகளையுஞ் சொர்க்க லோகமுதல் சத்தியலோகம் வரையிலுமுள்ள அனேக போகங் கள் சத்கருமங்களால் தேகம் நீங்கின பிறகு தேகிக்கு மறு ஜன்மம் வருமளவுங் கிடைக்கக் கூடும். ஆகையால் அவை கிடைக்காதிருக் கும்படி நினைத்து அக்கருமங்களைச் செய்யலாகாது; அவைகளாற் கிடைக்கக்கூடிய போகங்களையு மிச்சிக்கலாகாது. ஏனெனில் இந் திரன்முதல் சர்வதேவர்களும் ரிஷிகளும் மேற்சொன்ன லோகங் களில் வசிப்பவர்களாகையால் அவர்களும் அனேகவிதமாய் இராகத் வேஷாதிகளாற் பீடிக்கப்பட்டு வருந்துவதை சாஸ்திரப்படி நாம் தெரிந்துகொள்ளுகிறோ மல்லவா? இப்போது இகமுத்திரார்த்த பல போக விராகம் இன்னவையென்று உணர்ந்தாயா?''

சிதம்பரசேகரன்:—''ஸ்வாமி! உணர்ந்தேன். ஆனல் இவைக ளின்மேல் இச்சையுண்டாகாமற் பண்ணினபோதிலும் சமதமாதிகளு டையவனல்லாவிடில் மோக்ஷ இச்சைக்கு அதிகாரியல்லவென்று உரைத்தீர்களே? அடியேனுக்கவை கொஞ்சமுமில்லையே. என்செய் வேன்?''

யோகீஸ்வரர்:—''சமதமாதிகள் ஒருவனுக்கு நினைத்தபோது உண்டாவதல்ல. அனேகநாட் பழக்கத்தால் வரவேண்டியது. அவை சித்திப்பதற்காகக் கடவுளைத் தியானித்து ஏகாக்ரசித்தனாய்த் தவம் பண்ணி அவர் கிருபையால் ஒவ்வொன்றுஞ் சாதிக்கவேண்டியிருக் கிறது. இவைகளைச் சாதித்தபிறகுதான் மோக்ஷவிச்சை வரவேண்டு மென்றில்லை. மோக்ஷமடைவதற்கு இவை வழிகளாதலால் ஆறு வதான சிரத்தையைக் கைவிடாது குருவாக்கியத்தைக் கவனமாய்க் கேட்டு அவர் வாக்கியப்படி மனஞ்சலியாது ஒரே முயற்சியாய்ச் சாதனைசெய்து வருவையானல் சமதமாதிகள் சுலபமாய் லபிக்கும். இப்படிச் செய்வதிலேயே முமுக்ஷுத்வமென்னும் மோக்ஷ இச்சை யுஞ் சாதகமாய்ப் பிரதிதினமும் விருத்தியாம். இவ்விதஞ் சாதிப்ப துடன் புண்ணிய கருமங்களையுஞ் செய்வதுநலம். முன்பு ஒரு கரும முஞ் செய்யலாகாதென்றும், இப்போது புண்ணிய கருமம் செய் யலாமென்றுஞ் சொன்னது என்னவெனில், அக்கருமங்களைச் செய் வதில் இகபர இன்பங்களைக் கோருது நிஷ்காமியமாய்ப் பகவத் பிரீதியாய் செய்யவேண்டும். எப்படியெனில், யாது செய்யினும் அதைக் கடவுளுக்காய் அர்ப்பணம் பண்ணுவதில் கருமஞ் செய்

யப்பட்டவன் யாதொரு இன்பத்தையும்கோருவதில்லை. இப்படி நிஷ்காமகர்மஞ் செய்வதில் சித்தசுத்தியும் அதன் வழியாய்ச் சற்குரு சேவையும், அதனாற்சிரவணமும் சிரவணத்தால் மனனமும், அதனால் நிதித்தியாஸனமும் நிதித்தியாஸனத்தால் சமாதிஞானமும் பிறகு மோக்ஷமும் அடையலாம். அப்படியில்லாமல் மோக்ஷ மடைய வேண்டுமென்று முயற்சி செய்வோனுக்குச் சமதமாதிகள் முன்னுடியே அமைந்திருக்கில் அவனுக்குக் குரு எதன்பொருட்டு? குருவாலவனுக்கு உபதேசிக்கக் கூடியது யாது? ஆகையால் சமதமாதிகளை அடையும்பொருட்டே குரு அவசியம் வேண்டியது. அவருபதேசப்படி சாதனைப்பண்ணிச் சமதமாதிகளை அடைய வேண்டும். இங்ஙனமுபதேசம் செய்யும் குரு எண்வகைப்படுவர்:—

(1) போதககுரு:—இவர் சாஸ்திரங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் போதிப்பவர்.

(2) வேதகுரு:—தத்துவதரிசனம் செய்விப்பவர்.

(3) நிசிதகுரு:—வசிய கருஷணுதிகளால் இவ்வுலகத்திற் சுகமும் பரலோகத்தில் துக்கமும் பெறும்படி செய்விப்பவர்.

(4) சூசககுரு:—அறிவைக்கொடுத்துச் சமாதி சற்குணங்களை அமையச் செய்பவர்.

(5) காம்யகுரு:—ஸத்கருமங்களைச் செய்யும்படி உபதேசித்துப் பிறர் சுகமடையச் செய்விப்பவர்.

(6) வாசககுரு:—விஷய மித்யா தரிசனத்தால் ஆத்மானுராகப் பிரதாயகரா யிருப்பவர்.

(7) காரககுரு:—ஆத்மாவையும் பிரம்மத்தையும் அறியும்படி உபதேசிப்பவர்.

(8) விஹிதகுரு:—சமுசயங்களை விசாரணையால் தெளியச்செய்து நித்தியமுக்தி அடையப்பண்ணுபவர்."

இவர்களில் நிசிதகுரு காம்யகுரு என்பவர்களை நீக்கி மற்றவர்களை முறையே அடுக்கவேண்டும். இனி சற்சிஷனது குணத்தைச் சொல்லுவேன் கேள். தாபத்ரயத்தினால் தஹிக்கப்பட்டு வெதும்பி, வியாகுலத்துடன் "நான் யார்? எனக்கு இந்தச் சமுசாரபந்தம் வருவானேன்? இது யாரால் நிவிர்த்தியாகும். இவைகளைப் போதிக்க வேண்டுமென்று வித்தியாவினய சற்குணங்களுடையவனாய் வைராக்

கிய சிரத்தை பூண்டவனும்த் தக்க ஆசாரியர் எப்போது எங்கே கிடைப்பார்?" என்று ஆனந்தக் கண்ணீர் சொரியத் தேடிக் கண்டு, அஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணி, பிரபஞ்ச துக்கம் நிவர்த்தி பண்ணவேண்டுமென்று கோரிப் பலதரம் விண்ணப்பஞ் செய்பவனே உத்தம சீடன்.

ஓ குழந்தாய்! நீ இதுவரையில் என் வசனங்களை பக்தி சிரத்தையுடன் கேட்டபடியால் நான் சந்தோஷ மடைந்தேன். இனி அவைகளைக் குறித்து யோசித்து விசாரணை பண்ணித் திடசித்தத்தைப் பெறல் அவசியமாகையால் புகழேந்தியுடன் அம்மன் சன்னிதியிற் சென்று, அம்மனது அனுக்கிரகத்திற்காகப் பஜித்து அவ்விடத்துப் பிரசாதம் பெற்றுண்டு நான் இதுவரையில் உபதேசித்த பல விஷயங்களையுங் குறித்து சம்வாதம் பண்ணி மனம் தேறுவாய். கொஞ்சநாள் சென்றபின் சந்திக்கின்றேன்" என்று அவர்களை அம்மன் சன்னிதிக்கு அழைத்துப்போய், சொன்னபடி செய்யுங்களென்றுரைத்துத் தமது ஆஸ்ரமம் சென்று நிஷ்டை செய்வாராயினர்.

17. சதுஷ்பத உபதேசம்.

சிதம்பரசேகரனும் புகழேந்தியும் குரு அருளிச்செய்தபடி பிரதிதினமுங் காலையில் ஸ்நானஞ்செய்து நித்திய கடனை முடித்துக் கொண்டு மூகாம்பிகையம்மன் சன்னிதி சென்று தரிசனம் பண்ணிப் பஜித்து அவ்விடத்தில் தங்களுக்குக் கிடைக்கும் பிரசாதத்தை உண்டு வனஞ் சென்று குருவுரைத்த மொழிகளைக் குறித்துச் சம்வாதம் பண்ணித் தாங்கள் கற்றவர்களாகையால் சுருக்கிச் சொன்னவை யாவற்றையும் பெருக்கமாய் விவரித்துப் பேசியுணர்ந்து சந்துஷ்டியடைந்து இரவிலேயும் அப்படியே அம்மன் தரிசனம் பண்ணிப் பக்தியாய்ப் பாடித் துதித்து க்ஷேத்திரத்தி லோரிடத்திற் சயனித்துக் காலங்கழிக்கத் தொடங்கினார்கள்.

கொஞ்சநாள் போகவே குருவைப் பார்க்க அபேட்சை பிறந்து, இன்னுஞ் சந்திக்கவில்லையே என்னும் அவா மேலிட்டுத் திரியும் போது, யோகீஸ்வரர் அவர்கட் கெதிரில் தோன்றிநிற்க, இருவரும் நமஸ்கரித்து "தெய்வமே! கடாக்ஷித்தருளவேண்டும்" என்று கை கூப்பிநின்றனர். அவர்களைத் தமதாச்சிரமத்திற் கழைத்துச் சென்று

சிதம்பரசேகரனைப் பார்த்து "ஓ குழந்தாய்! யாம் சொன்னவை களை யெண்ணி விசாரணை பண்ணினையா? உனக்கேதேனும் தெரிந்து கொள்ள வேண்டுமானாற் கேட்பாய்" என்ன, அவனும் நமஸ்கரித்து, "ஓ சற்குருவே! தயாநிதியே! தேவரீர் அருளிச்செய்தபடி விசாரணை பண்ணிவந்தோம். சமதமாதிகளைப் பெற்று மோக்ஷமடைவதெப்படியோ அம்மார்க்கத்தைத் தயவு செய்து திருவாய்மலர்ந்தருளவேண்டும்" என்றான். யோகீஸ்வரர் மகிழ்ந்து அவனது விடா முயற்சியைக் கண்டு ஆனந்தமுற்றுச் சொல்லத் தொடங்கினர்.

"அப்பா! மோக்ஷமடைவதற்கு நீ கேட்டபடி அனுஷ்டிக்க நான்குமார்க்கங்களிருக்கின்றன. அவை யாவையென்றால், 1. சரியை, 2. கிரியை, 3. யோகம், 4. ஞானம் என்பவைகளாம். இவற்றுள் சரியையென்பது சிவாலயம், விஷ்ணுவாலயம் முதலான ஆலயங்கட்குச் சென்று பிரதக்ஷணம் வருவதும் திவ்விய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதும், நந்தவன மியற்றுதல், மலர்கொய்து சாற்றுதல், மாலைதொடுத்து ஆலயத்திற் கொடுத்தல், கோவிற்றிருப்பணி செய்தல், விரதங்க ளனுஷ்டித்தல், சாது சம்சர்க்கம் பண்ணுதல் முதலியவையாம். இவற்றால் இகத்திற் சற்குண முடையவராய்ச் செல்வமோங்கிப் பரத்திற் சாலோகபதவியை அடைவார்கள்.

கிரியையென்பது: பரமனை அல்லது கணபதியை அல்லது விஷ்ணுவையேனும் விதிப்படி பூஜித்து ஜபதபம்பண்ணி யாகமுதலிய கர்மங்களை விதிப்படி செய்துவருதலாம். இதனால் இகத்தில் நல்லறிவும் மனோதிடமும் பெருஞ்செல்வமு முடையவராய்ப் பரத்திற் சாமீப பதவியை அடைவார்கள்.

யோகமென்பது: தசநாடி, தசவாயு, கன்மேந்திரியம், ஞானேந்திரியம் முதலிய தொண்ணூற்றாறு தத்துவங்களையும் ஐந்து அவஸ்தைகளையும் ஆறு ஆதாரங்களையும் அறிந்து ஐம்பத்தோர் அட்சரங்களையும் அவற்றுட் பூரித்திருக்குஞ் சதாசிவமூர்த்தியையும் அறிந்து மனதையடக்கி, சூர்யகலை சந்திரகலை இவைகளை அப்பியாசித்து வசப்படுத்தி ஏழுவாசல்களையு மடைத்து அசைவற நிற்றலாம். இதனால் மனோலயமடைந்து இகத்தில் திடகாத்திரம் பெற்றுப் பரத்திற் சாரூபபதவியை அடைவர்.

இந்த யோகமானது பலவிதமாம். இவைகளை விவரித்துரைக்கிற் பெருகும். ஆனாலிவற்றின் கருத்தென்னவெனில், ஸ்தூலசரீரம்

அழியாமல் நீடூழிகாலம் யவ்வனபருவத்தோடு வைத்திருந்து அஷ்டமாசித்திகளையும் பெற்றுவாழ இச்சையுடையோர்கள் செய்வது. அப்படிச் செய்வதற்கு மலைகளின் குகைகளில் வசித்து நித்திரை பயம் மைதுனமற்று, அறுசுவையுணவை நீக்கிப் பிரபஞ்ச வாசனைகளையகற்றி யோகம் சாதிக்கவேண்டும். இவைகளில் ஏதேனும் பிசகு நேரிடில் யோகஞ்சாதகமாகாமல் கடினமான துக்கத்திலழுந்துவார்கள். அல்லது தவறுமல் யோகம் சாதனையாகில் ஜனனமரணமில்லாத முத்தி கிடையாது. ஆகையால் எளிதில் மோக்ஷமடைய நினைக்கும் உன்னாலாகமாட்டாது.

ஞானமென்பது: தேகமின்னது தேகியின்னதென்று தெரிந்து நன்மை தீமை, சுகம் துக்கம், இவைகளைச் சமப்படுத்தி இன்ப துன்பங்களற்று நினைவற்றிருத்தலாம். இதனால் இகத்திற் சமாதானமுண்டாய் ஜெனன மரணமற்ற நிர்விகற்ப சமாதியடைந்து பரத்திற் சிற்சொரூபத்தில் இலயப்பட்டு சாயுச்சிய பதவியை அடைவார்கள். இதற்குத் தத்துவஞானம் என்று பேர்.

இந்த நால்வகை மார்க்கங்களில் உனக்கு வேண்டியது எது? உன்னால் சாதிக்கக்கூடியவைகளைச் சொன்னால் அதை உபதேசிக்கிறேன்'' என்றுரைத்த யோகீஸ்வரரை வலம்வந்து நமஸ்கரித்து ''அப்பனே! தேவரீருக்குத் தெரியாததொன்றுண்டா! சரியை கிரியை யோகமெனும் மூன்று மார்க்கங்களும் என்னால் தொடாத்தக்கினவை அல்லவே. ஞானமார்க்கத்தையே உபதேசித்தருளவேண்டும்'' என்றான்.

யோகீஸ்வரர் அகமகிழ்ந்து ''விடாமுயற்சி யுடையோனுக்குச் சாதகமாகாததொன்றுமில்லை'' என்றுரைத்துக் ''குழந்தாய்! ஞானம் பெற முயலுவோர்கட்கு நான்கு ஆஸ்ரமங்க ளிருக்கின்றன. அவைகளையுஞ் சொல்லுகிறேன் கேள்.

கடவுள் ஆதியில் சொல்லியிருக்கின்ற இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களுண்டு. அவைகளின் விதிவாதம், அர்த்தவாதம், மந்திரவாதம், நாமதேயமென்னும் சதுர்வாதங்களாற் சகல தர்மங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகட்கு ஆறங்கங்களுள. அவை சந்தஸ் என்னும் பாதம், கர்ப்பம் என்னுங் கைகள், வியாகரணம் என்னும் முகம், சிட்சை என்னுங் கிராணம், ஜோதிடம் என்னும் கண்கள், நிருத்தம் என்னுஞ் செவிகளுமாம். அவை

கட்கு நான்கு உபாங்கங்க ளிருக்கின்றன. அவை: 1. ஸ்மிருதி, 2. புராணம், 3. நியாயம், 4. மீமாம்ஸம் என்பவைகளாம். இவைகளில் ஸ்மிருதிகள் ஜாதிவர்ணாஸ்ரமங்கள் அவற்றின் தர்மங்கள் முதலியவைகளைக்குறித்துச் சொல்லுகின்றன. இந்த ஜாதிவர்ணாஸ்ரமப்படி பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரெனும் பிரதானமான நான்கு ஜாதிகளுள. இந்த ஜாதியர்களுக்கு ஆசாரபேதம் அந்தந்த ஜாதிகட்கும் இருக்கின்றன. தவிர இவைகளில்நின்று உற்பத்தியான எண்ணிறந்த ஜாதிபேதங்கள் அவரவர்கள் செய்யவேண்டிய கர்மங்கள் இவை மேற்சொன்ன ஸ்மிருதிகளில் விவகரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் எந்த ஜாதியிலும் ஞானோபதேசம் பெற்று மோக்ஷமடையலாம். கடவுளுக்குத் தன் சிருஷ்டிகளினிடத்திற் பேதாபேதமில்லை. இதைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன். இந்த வருணத்தாருக்கு முன்சொன்ன நாலாஸ்ரமங்கள் இருக்கின்றன. அவை (1) பிரம்மசாரி, (2) கிரகஸ்தன், (3) வானப்பிரஸ்தன், (4) சந்நியாஸி என்பவைடாம்.

இதில் (1) பிரம்மசாரியானவன் உபநயன மானவுடனே வேதாத்யயனம் பண்ணிக்கொண்டு பிரம்மசாரிக்குடைய ஓர் தண்டு கைக்கொண்டு முஞ்சிப்புல் மேகலை மான்றோல் உபவீதந்தரித்து அந்தணர் கிருகத்திற் பிக்ஷையேற்றுண்டு குரு பணிவிடைசெய்து இராகத்வேஷாதிகளை ஒழித்துப் பிதுர் முனிவர் தேவர்களுக்கு விதிப்படி தினமுமிரண்டுவேளை தர்ப்பணம் புரிவான். இது சூத்திரனுக்கில்லை.

(2) கிரகஸ்தன்: பிரம்மசாரியாயிருந்து தனக்குரிய பெண்ணை விவாகஞ்செய்து விரதாதிகளை அனுஷ்டித்தும் பெரியோர் பூசை செய்தும் தன்னாற்கூடிய தர்மஞ் செய்தும் பூசை புரிந்தும் தெய்வ பக்தி வழுவாது நாட்கழித்து வாழ்வான்.

(3) வானப்பிரஸ்தன்: கிரகஸ்தாஸ்ரமத்திலிருந்து தனியாக வேனும் தன் பத்தினியுடனேனும் கானகஞ்சென்று தவம்புரிந்து இலை, வேர், காய்கனிகள் புசித்து, வேதமாராய்தல் முதலிய முயற்சியிலிருந்து, எச்யாதிகள்செய்து மரத்தோலாடையுடுத்து ஜீவகாருண்யராய் வாழ்ந்து விரக்திபடையக் கற்று, தேவர் பிதுர்க்களுக்கு முக்காலத்திலும் தர்ப்பணாதிகள் பண்ணிச் சாதனை புரிவான்.

(4) சந்நியாசி யாவற்றையும் விட்டு சஞ்சாரம் பண்ணி த்யானாதிகள்செய்து சாதனைபுரிந்து ஞானம்பெற்று மோக்ஷமடைவான்.

இப்படி விவரித்துச் சிதம்பரனைப் பார்த்து, "நீ க்ஷத்திரிய வம்சஸ்தனாகையால் மேற்சொன்ன மூன்று ஆஸ்ரமங்களையு மடைந்த பிறகல்லவோ சந்நியாசி ஆஸ்ரமமடைந்து ஞானோபதேசம்பெற்று மோக்ஷமடைய இச்சிக்கலாகும்" என்று வினவினார்.

சிதம்பரசேகரன் அடியற்ற மரம்போல் அவர் பாதத்தில் வீழ்ந்து "ஐயனே ! அடியேனை இப்படி அடிக்கடி சோதிக்கலாமா? எல்லாம் உணர்ந்த தேவரீருக்கு அடியேன் சொல்வ தென்ன விருக்கின்றது. தேவரீர் சாதன சதுஷ்டயம் உபதேசிக்கும்போது சமதமாதிகள் காலக்கிரமத்திற் சாதனைபுரிந்து சம்பாதிக்க வேண்டுமென்றும், அவைகளைச் சாதித்த பிறகுதான் மோக்ஷவிச்சை வரவேண்டுமென்றில்லை யென்றும் அருளிச்செய்தீர்களே. ஞானம் அனுஷ்டித்துக் கொண்டு எல்லா இந்திரிய சேஷ்டைகளையும் அடக்கலாம். அவையடங்குவதற்குக் கடவுள் கிருபைவேண்டுமென்று உரைத்தீர்கள். ஆனபடியால் கிருபைகூர்ந்து ஞானமனுஷ்டானம் உபதேசம்பண்ண வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

யோகீஸ்வரர் சிதம்பரசேகரனை எழுந்திருக்கச்செய்து உட்கார வைத்து "அப்பனே ! உன் மனம்போல் உபதேசிக்கிறேன். உன் பிராரப்தப்படி நடக்கட்டும்" என்றுரைத்து அவனது வைராக்கியத்திற்கு மெச்சித் தத்துவோபதேசம் பண்ணத் தொடங்கினார்.

18. விக்கிரமகேது.

குலசேகரப்பெருமாளுக்குத் தன் குமாரன் தன்னைவிட்டுப் பிரிந்த நாள்முதல் புத்திரசோகம் மேலிட்டுத் தேகம்மெலிந்து திடமும் பலமுங் குன்றின. இராஜ காரியங்களிலிருந்த சிரத்தையும் நாளுக்கு நாள் குறைந்துவந்தன. மந்திரிபிரதானிகளும் இராஜபத்தினிகளும் தேற்ற ஒருவாறுதேறினும், புத்திரனை நினைத்தமாத்திரத்திற் சோகித்து மூர்ச்சையாவதும் பிறகு தேறுவதுமாக இருந்தது. பிரஜைகள் அரசனுக்கு நேர்ந்ததே தங்களுக்கும் என்று நினைத்து வருந்தி துக்கசாகரத்தில் மூழ்கி நாட்கழித்து வந்தார்கள். விக்ரமசேனன் அரசனுக்கு வேண்டிய புத்திமதிகளை உரைத்துத் தினந்தோறும் திடப்படுத்தி இராஜ காரியங்களை அரசன் வழுவவிட்டாலும் அவைகளைத் தான் சிரத்தையாய் நடத்திக்கொண்டு, தன் குமாரன் இராஜகுமாரனுடன் அவனுக்குப் பணிவிடை செய்து வாழ்வதே சிலாக்

கியமென்று வைராக்கியமுற்று அவன் பிறகே போனதினால் மிகவும்
ஆனந்தமடைந்து அரசனைப் பாதுகாப்பதில் முயன்று வந்தான்.

இரவில் வனத்திற் கோமளாங்கனை விட்டுப் பிரிந்து ஓடிப்போன
விக்கிரமகேது தன் ரூபத்தையும் பேரையும் மாற்றிக் காடுவனாந்திரங்
கள் கடந்து பகலில் வெளிப்படாமல் இரவிலேயே சஞ்சரித்து வெகு
தூரஞ் சென்று பிக்ஷையேற்றுண்டு ஒருவிடத்தில் நிலைத்திருக்கப்
பயந்து பாலைவனத் தெல்லை தாண்டிப் பூர்வதிசையை நாடி இரண்டு
மூன்று மாதகாலமாய் அலைந்து கடைசியில் ஓர் பெரிய பட்டணஞ்
சென்றான். அப்பட்டணத்தில் நிலையாக விருக்கவெண்ணிச் சிறிதுகா
லம் பிக்ஷையேற்றுண்டு பிறகு கூலிவேலைசெய்து நாட்கழித்துவருங்
கால் ஒருநாள் அவ்வூர் அரசன் தன் குமாரனுக்குப் பட்டாபிஷே
கஞ் செய்து வைப்பதாகவும் அதற்காக அவ்வூர் ஏழைகட்கு அன்ன
தானம் வஸ்திரதானம் முதலியவை அளிப்பதாகவும் பறையறைவிக்
கக்கேட்டு அவ்விடம் போவோம் என்று ஒரு நூதன வேஷத்துடன்
சென்று அரண்மனைவாயிலிற் சேர்ந்திருக்கும் ஏழைகள் கூட்டத்
திற் சேர்ந்து நடந்துகொண்டிருக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக்
கொண்டிருந்தான்.

பட்டாபிஷேகமான புது அரசனும் சகோதரனும் அவர்கள்
மனைவிகளோடு இரதாரோஹணராய் ஊர்கோலம் வந்துகொண்
டிருந்தார்கள். விக்கிரமகேது மற்றை யேழைகளுடன் அன்னதானம்
வஸ்திரதானம் மனங்குளிரக் கொடுக்கப்பெற்றுத் திரும்பியரண்மனை
யை விட்டு வெளிப்பட்டு ஊர்கோலக் கோஷத்தைக் கேட்டு அக்கோ
ஷம் பிறக்கு மிடந்தேடிச் செல்லுகையில் இரதம் தன்னெதிரே
வரக்கண்டு சற்றுநேரம் நின்று அந்தரதத்தில் ஆரோகணித்திருக்கும்
இராஜ புத்திரர்களையும் அவர்கள் மனைவிகளையுங் கவனித்துப் பார்
த்துக்கொண்டிருக்கும்போது இரதம் அருகில்வரத் திடுக்கிட்டு முக
த்தை வஸ்திரத்தால் மறைத்துக்கொண்டு அவ்வஸ்திரம் வழியாய்
இரதத்திலிருப்பவர்களைப் பார்ப்பதும் தலையைக்குனிந்து சுற்றும்
நிற்பவர்களுக்கிடையில் மறைவதுமாயிருந்தான். பிறகு இனி இந்தப்
பட்டணத்தில் அரைக்ஷணமாவது இருக்கக்கூடாதென்று மிகவும்
அவசரமாய் ஓடத்தலைப்பட்டான்.

இவன் பரபரப்பையும் வெருட்சியையுந் தன்னை மறைத்துக்
கொள்ளுஞ் சேஷ்டைகளையும் அருகில் நின்றவர்கள் பார்த்துச் சந்
தேகித்து "ஏதோ கபடனைப்போலிருக்கிறது. இதோ ஓடத்தலைப்

பட்டான். இதென்ன ஆச்சரியம்" என்று பேசிக்கொண்டு அவனையே கவனித்துக்கொண் டிருக்கும்போது, அவர்களுக்கிலிருந்த ஒரு சேவகன் அவன் பிறகே சென்று அவன் அதிகதூரம் போவதற்குமுன் அவன் கையைப் பிடித்திழுத்து "என்ன! மிகுந்த அவசரமாய்ப் போகிறாயே! இதுவரையில் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த உனக்குப் பயமுண்டாகவும் நீ ஓடவும் காரணம் யாது? எங்கள் தலைவரண்டை போவோம் வா" என்றழைத்தான்.

விக்கிரமகேது பயந்து "ஓ ஐயா! நானொரு ஏழை. என்னைவிட்டு விடும், நானொரு குற்றமுஞ் செய்யவில்லை" என்று மறுக்கச் சேவகன் விடாமற் பிடித்திழுக்க, வாதாடுவதை, யாவரும் பார்க்கும்படி நேரிட்டதுமன்றி இரதத்திலிருக்கும் இராஜ குமாரர்களுங் கன்னிகைகளுங் கண்டு "அவனைத் தொந்திரவு செய்யாமல் அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று உத்திரவளித்தனர். இருசேவகர்கள் சென்று அவனை அரண்மனைக்குக் கொண்டு சென்றார்கள்.

விக்கிரமகேது மிகவும் பயந்து "தெய்வமே! இன்றோடே என் உயிர் போகப்போகிறது. நிரவிசாரியாமல் எனது துரதிர்ஷ்டத்தால் இந்தவூரிலிருந்துவிட்டேன். கோமளாங்கனியும் அறிவுகுன்றினவனானேன். ஒளியப்போய்த் தலையாரிவீட்டில் ஒளிந்தேனே! இனி என்ன செய்யப்போகிறேன்? ஆகிலும் என்னுருவு முன்னுருவல்ல. என்னிடம் பழகின சிநேகிதர்கள் கூடத் தெரிந்துகொள்ளவில்லை. இராஜ குமாரிகளுக்கு என்னைத் தெரிந்திராது. ஏதோ நான் செய்த சேஷ்டைகளாற் சந்தேகித்து அரசன் உத்திரவளித்தாற்போல் இருக்கிறது. இராஜகுமாரிகளினெதிரிற் சென்றால் தெரிந்து கொள்வார்களே என்ன செய்யலாம். என் விதி இப்படியாயிற்றே" என்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு சேவகர்களுடன் அரண்மனை சென்றான்.

ஊர்வலம் வந்துகொண்டிருந்த இராஜர்களும் மனைவிகளும் தேவாலயங்கள் சென்று தரிசனம் பண்ணி யாவரும் வாழ்த்தி ஆசீர்வதிக்க அரண்மனை சென்று தங்களாசனத் திருக்கையில், விக்கிரமகேதுவைச் சேவகர்கள் அழைத்துக்கொண்டுபோய் இராஜகுமாரர்கள் சமுகம் விட்டார்கள். அவர்கள் அவனை அந்தப்புரத்திற்கு அழைத்துப்போக உத்திரவளிக்கச் சேவகர்கள் அவனைப் பட்ட மஹிஷியினிடம் அழைத்துப்போயினர்.

தன்னை இன்னானென்று தெரிந்ததாற்றான் இராஜகுமாரர்கள் அந்தப்புரத்திற் கனுப்பினார்கள் என்று திகிலடைந்து, கொலைபண்

ணைக் கொண்டுபோகப் படுபவனைப்போல் ஏக்கமுற்று, இராஜகுமாரிகளின் முன் நின்முன். காந்திமதி சேவகர்களைப் போகும்படிசெய்து விக்கிரமகேதுவை உற்றுப்பார்த்து "ஓ விக்கிரமகேது! உன்னைச் சிறையிலடைத்தார்களே! நீ இப்போது இவ்விடம் வந்ததெப்படி? சிறையினின்று கபடமாய்த் தப்பித்துக் கொண்டவனைப் போலிருக்கிருய். உன் வரலாறென்ன? ஒன்று பொளியாமற் சொன்னுல் உன்னுயிர் பிழைக்கும். இல்லாவிடிற் பிழையாது. ஆகையால் உள்ளதை உள்ளபடி சொல்" என்று அதட்டிக் கேட்கத் தன் சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாய் நின்றது நின்றபடியே மூர்ச்சையாய் வீழ்ந்தான்.

மூர்ச்சை தெளிந்தெழுந்து பிதற்றுவான்போலுளறிக் காந்திமதியின் பாதத்தில் நமஸ்கரித்துப் பிராணபயத்துடன் "அம்மணீ! என்னை மன்னிக்கவேண்டும். நான் செய்த அபராதங்கட்கு ஜாஸ்தியான தண்டனை அனுபவித்துவிட்டேன். இனிமேல் இந்த ஜன்மமுள்ளளவும் தங்கள் பிதாவுக்குந் தங்களுக்கும் வஞ்சனை நினையேன். இரக்ஷிக்கவேண்டும் என்னம்மே!" என்று கதறினுன். காந்திமதி மளந்தளராது "உன் விருத்தாந்தத்தைச் சொல்" என, நடுக்கத்துடன் சிறைச்சாலையினின்று வெளிப்பட்டதும், கோமளாங்கனை விட்டகன்று சஞ்சாரம் பண்ணிக் கடைசியாய் இவ்வூர் சேர்ந்ததும் உருவை மாற்றி மிகத் தூரமாய் வந்துவிட்டபடியால், ஒருவரும் தெரிந்து கொள்ளமாட்டார்கள் என்றெண்ணி, ஊர்கோல வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததும், காந்திமதியையும் சந்திரலேகையையுங் கண்டமாத்திரத்தில் பயமுண்டானதும், தப்பித்துக்கொள்ள முயன்றதையுஞ்சொல்லிநமஸ்கரித்து "இவையெல்லாம் உண்மையே, இனி அடியேன்பேரிற் கருணை கூர்ந்து இரட்சிக்க வேண்டும்" என்று உரைக்க, "இவவளவு பிராணபயமுடைய நீ இங்கு வந்தவுடன் இவ்வூர் அரசரையும் நடக்கும் விசேஷத்தையுந் தெரிந்துகொள்ளவில்லையா" என, "இது மாளவதேசமென்றும் அரசன் புதல்வர்களிரண்டு பேர்களும், இரண்டு தேவகன்னிகைகளை யொத்த, மாதுசிரோமணிகளை விவாகஞ் செய்தனர்கள் என்றுமல்லது, பாலைவனப் பிரபுவின் கன்னிகா இரத்தினங்களை மணஞ்செய்திருக்கிருர்களென்று சற்றேனுந் தெரிந்திருந்தால், அந்த க்ஷணமே இவ்வூரைவிட் டகன்றிருப்பேன். இது சத்தியம். தீரவிசாரிப்பதிற் சந்தேகமுண்டா மென்றெண்ணி மதியீனனுய் விட்டேன். மௌனமாயிருந்து நாட்கழிப்பதே பெரிய உத்தியோகமாய்ப் போய்விட்டது.

டது. இப்போது என்னை விட்டுவிட்டாற் காற்றிலும் கடுவேக மாய்ப் பறந்து ஓடிவிடுகிறேன்" என்று அழுதான்.

காந்திமதி துக்கிப்பவர்களைப் பார்த்தறியாள் ஆகையால் மன முருகி, "ஓ விக்கிரமகேது! நீ பயப்படாதே! உன்னை ஹிம்ஸிக்க வில்லை. தைரியமாயிரு. சக்கரவர்த்தியாகிய எங்கள் பிதா நீங்க ளிருவருஞ் சிறைச்சாலை விட்டு ஓடிப்போனது தெரிந்து உங்களை மன்னித்துவிட்டார். நீங்கள் போனதினமே கடவுள் கிருபையால் பிதாவுக்கு ஆண்குழந்தை யுற்பத்தியானதால் சிறையில் நீங்களப் போதிருந்தாலும் உங்களை மன்னித்துச் சிறை மீட்டிருப்பார். உங் களுடன் சிறையிலிருந்த அரசர்களையும் பரிவாரங்களையுஞ் சிறை மீட்டிப் பரிசளித்து அனுப்பினாரென்றால் உங்களைச் சிறையில் வைத்திருப்பாரா? நீ உண்மை சொன்னபடியால் இவ்விடத்தி லேயே சுகமாயிருக்கலாம். எங்கும் போகவேண்டாம். எங்களுக்கு வஞ்சனை பண்ணின உனதெண்ணம் இப்போது நிலைபெற்றிருப்ப தால் இவ்வரசாட்சியில் ஓர் உத்தியோகம் பெற்றுக் கடவுளைப் பிரார்த்தித்துச் சற்புத்தியுடன்வாழ்வாய். பயத்தைநீக்கி உன் வேஷ த்தை அகற்றி நன்றி மறவாமற் சந்துஷ்டனாயிரு" என்று கூறித் தனது தாதி மரகதத்தை யழைத்து "வஸ்திராபரணங்கள் அளித் துப் போஜனமிட்டு இராஜ சமுகங் கொண்டுபோகச் செய்" என்ற னள்.

இராஜ சமுகம் போகவே அரசனை நமஸ்கரிக்க, அரசன் விக் கிரமகேதுவைப்பார்த்து "ஓ விக்கிரமகேது! நான் உன்னைப் பார்த்த போதே தெரிந்துகொண்டேன். உன் விர்த்தாந்தம் யாவுந் தெரிந் தேன். நீ மிகவுஞ் புத்திசாலியென்று கண்டபடியால் நமது தளத் தின் சேனாதிபதியின் காரியதரிசியாய் உன்னை நியமித்தேன். இனி யாவது இராஜத்துரோகமின்றி நட" என்றுரைக்க, விக்கிரமகேது ஆனந்தமுற்றுக் கடவுளைத் துதித்து அரசனை நமஸ்கரித்து "ஓ மஹாப்பிரபுவே! தேவரீர் புஜபலத்தையும் ஏழைகள்மேல் வைத் திருக்குங் கருணையையும் நல்லொழுக்கத்தையும் நன்னெறியையும் நான் நன்றாய் அறிந்தேன். தீராத குற்றஞ்செய்த என்னை எனதர சன் மன்னித்ததுபோல எனது அரசகுமாரிகளும் மன்னித்து இந் தப் பெரிய உத்தியோகத்தையுங் கொடுத்துக் காப்பாற்றிய இந்நன் றியை நான் ஒருநாளும் மறவேன். ஒரு காலத்தில் இதன் நிஜத்தை வெளியிட நேரிடுமாகில் வெளிப்படுத்துகிறேன்" என்று மறுபடி யும் நமஸ்கரிக்க, அரசன் விடைகொடுத்தனுப்பினான்.

19. இரவிவர்மராஜன்.

அழகாபுரத்தரசனாகிய இரவிவர்மராஜன் தனது மந்திரிகளுடன் சபையிலிருந்து யோசிப்பானாயினன்:

இரவிவர்மன்:—"ஓ மருதுசிலா! நீ நேற்றுச் சொன்னது சரியாயிருக்கிறது. இன்றைக்குச் சூர்யோதயத்தில் பாலைவனஞ் சென்றிருந்த மேசனாதனென்னும் தூதுவன் அங்கு நடக்கும் விசேஷங்களைச் சொன்னான். குலசேகரப்பெருமாள் புத்திர சோகத்தால் மெலிந்து, துக்கபாத்திரனாய்ப் பலஹீனப்பட்டிருக்கிறாராம். பிரஜைகளு மப்படியே சோகித்திருக்கிறார்களாம். விக்ரமசேனனென்னும் முதன் மந்திரியே எல்லாக் காரியங்களையும் நடத்திவருகிறாராம். பராக்கிரமசேகரருக்குப் பிறகு தகுந்த சேனாதிபதி இல்லாமையால் சைன்னியங்கள் அதிர்ப்திப்பட்டு இராஜவிசாரணையுமின்றி நமது சோமபாலராஜனை எதிர்பார்த்திருக்கிறார்களாம். ஆகையால் இனித் தடையின்றிச் சேனைகட்கு உத்திரவளித்து யுத்தத்திற்குப் பிரயாணப்பட வேண்டியதா யிருக்கிறது. நீ என்ன சொல்லுகிறாய்?"

மிருதுசீலன்:—"பிரபுவே! பாலைவனம் இவ்விடத்திருந்து 40-நாழிகைதூரமேயுளது. ஓர் இரவில் நாம் நமதுசேனைகளுடன்போய்ப் பட்டணத்தை வளைத்து முற்றுகை போட்டுவிடலாம். ஆகிலும் தீர யோசனைசெய்யாமல் ஒருவிஷயத்தில் தலைப்படக்கூடாது. என் வார்த்தையைச் சற்று கவனிக்கவேண்டும் குலசேகரப்பெருமாள்: சக்கரவர்த்தி. அவருக்கு நாம் சிற்றரசனாயிருந்து பணஞ் செலுத்திவருகிறோம். அவருக்குத் துணையாய் அனேக அரசர்க ளிருக்கிறார்கள். அவர்குமாரத்திகளை விவாகப் பண்ணியிருக்கும் மாளவதேசத்தரசன் குமாரர்கள் மிகவும் பலசாலிகள். அதிக சைன்னிய முடையவர்கள். வணங்காமுடிமன்னர்கள். அவர்கள் குலசேகரப்பெருமாளுடன் சேர்ந்து அவ்ருக்குதவியாய் வந்தால் நாம் காற்றாய்ப் பறக்கவேண்டியது. குலசேகரப்பெருமாள் சைன்னியம் நமது வசப்பட்டுவிடுமாகிலும் பிறகு நமதிஷ்டப்படி எப்போதும் நமது வசமே இருககுமா? நமக்கிருப்பதோ சிறு சைன்னியம். நாமோ சொற்ப நாட்டைப் பரிபாலித்து வருகிறோம். அன்றியும் அவர் நமக்கு யாதொரு தீங்கும் நினையாதவர். நமக்குத் துணையாகவும் யாரும் வரமாட்டார்கள். நாம் இச்சோமபாலன் வார்த்தையை நம்பி அவசரப்பட்டுவிட்டால் பிறகு எப்படியாமோவென்று யோசிக்கிறேன்."

சோமபாலன் :— "ஓ மிருதுசீலரே! உமது வார்த்தை மிகவும் நன்றாயிருக்கிறது. இப்பேர்ப்பட்டவர்களை முதன் மந்திரியாய் நியமிக்கத்தகுமா? நான் அந்த இராஜாங்கத்தின் வர்மமெல்லாம் நன்றாய்க் கவனித்திருக்கிறேனென்பதை நீர் சற்றும் யோசிக்கவில்லை. சிறிது பெரிதாவதெப்படி? இப்படித் தடங்கல் செய்து முயற்சியைக் கெடுத்துவிடுவதிற் பயனென்ன? முன்வைத்த காலைப் பின் வைக்கலாகாது. குலசேகரன் எப்படிச் சக்கரவர்த்தியாய் இந்த இராஜாங்கத்திற்கு மேலானான்? யுத்தஞ்செய்து ஜயமடைந்தல்லவா? யுத்தம் புரிவது க்ஷத்திரிய தர்மமாயிருக்கச் சமயம் நேரிடும்போது பின்னிடைந்து புறம்பேசுவது சுத்த வீரர்களுக்கழகா? யுத்தத்திற் புறங்காட்டியோடும் பீருவைப்போற் பலதுற்போதனைகளையும் எனதரசனுக்குச் சொல்லி அவர் மனதைக் குன்றச் செய்யாதே; உனக்கு யுத்தபயமிருந்தால் நீ வரவேண்டாம். எல்லா முயற்சிகளையும் செய்து யுத்தத்திற்குப் பிரயாணப்படும்போது இப்படி முடக்குச் சொல்வது அவலட்சணம். என் தந்தையின் சொற்கடங்கியிருந்த அக்குலசேகரன் சைன்யம் யாவும் என் வார்த்தைக்குப் பதிற்சொல்லார்கள். நாமங்கே போகவேண்டிய தொன்றேதவிர மற்றொரு பிரயாசையு மெடுத்துக்கொள்ள வேண்டுவதில்லை. மாளவதேசத்தரசன் இரண்டுமாத வழிக்கு அப்பாலிருக்கிறான். அவன் நம்மையெதிர்க்க வருமுன் நாம் தகுந்த பந்தோபஸ்து செய்துகொள்ளலாம். குலசேகரனுக்கிருக்குஞ் சைன்னியமென்ன கொஞ்சமா? அத்துடன் நமது சேனையும் சேரில் அவைகளுக்குச் சேனாதிபனாய் நியமிக்கப்படுமெனக்கு மாளவதேச சைன்னியம் ஒரு திரண மாத்திரம். குலசேகரன் மருமக்களைக் குறித்து வேண்டுவனவற்றைப் புகன்றீர். அவர்கள் பாலைவனத்திலுள்ள அற்பமானசேவகர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்பட்டுப் போனார்களே! அதன் வர்மமெல்லாம் எனக்குத் தெரியும். அவர்கள் ஸ்பரிசித்த பெண்களை வேறொருவருங் கைக்கொள்ளாரகளென்றே குலசேகரன் அவர்களுக்கு அப்பெண்களை விவாகம் பண்ணிக்கொடுத்தானன்றி அவர்கள் வீரசூரபராக்கிரமத்தைப் பார்த்தல்ல." "ஓ பிரபுவே! தேவரீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். இந்தப் போர்முகத்திற்கு அஞ்சும் கிழத்தன்மை நேர்ந்த முதன் மந்திரியாகிய மிருதுசீலர் வார்த்தைகளைக் கேட்காமல் தங்கள் யோசனைப்படி சேனையை நடத்துவதே யுக்தம்" என்று அரசனை நோக்கி யுரைத்தான்.

குடாரவிந்தனென்னுஞ் சேனாதிபதியெழுந்து அரசனை நமஸ்கரித்து "ஓ ஸ்வாமீ! நான் பத்து வருஷமாய்ச் சேனாதிபதியாயிருக்கிறேன். இதுவரையிலும் என் சாமர்த்தியத்தைக் காண்பிக்கும்படி யாதொரு காரணமும் நேரவில்லை. இப்போது சோமபாலசேகரர் சொல்வது சரியான யோசனை. குலசேகரப்பெருமாள் சேனையைக் குறித்து நானுமவரும் பலவிதமாய் யோசனை செய்ததில் அச்சேனை மகா பெரிதாயிருக்கினுஞ் சோமபாலருக்கு அடங்கினதாகவும், அவருத்திரவுக் கெதிர்பார்த்திருப்பதாகவும் திருஷ்டாந்தமாய்த் தெரியவருகிறது. நாம் இந்த முயற்சியைக் கைவிடாது நடத்தினால் க்ஷணப்பொழுதிற் ஜயமடையலாம். என் சாமர்த்தியத்தையுஞ் சற்று காண்பிக்கிறேன். யுத்தத்திற்குப் போக விடையருளப் பிரார்த்திக்கின்றேன்" என்றான்.

இரவிவர்மன்:—"ஓ சபையோர்களே! இதுவரையிலும் நீங்கள் முதன்மந்திரியும் சோமபாலசேகரரும் பிறகு பலசாலியாகிய நமது குடாரவிந்தனுஞ் சொன்னவை யாவற்றையுங் கேட்டீர்களே! நாமுஞ் சிறிது காலமாய் நமதிராஜ்ஜியத்தைக் கொஞ்சம் விருத்திசெய்ய வேண்டுமென்று எண்ணியிருந்ததற்குச் சரியாய்ச் சோமபாலர் நமதிடம் அபயம் பிராபித்து நமக்குக் குலசேகரன் வர்மங்களைச் சொல்லி அந்தவரசனைச் செயித்துப் பாலைவனத்தையாள இச்சையுண்டுபண்ணியிருக்கிறார். அவருதவியு மிருக்கிறது. யுத்தஞ் செய்வதே மேன்மையென்று தோற்றுகிறது. உங்களபிப்பிராயத்தையுந் தெரியவேண்டுமென் றிருக்கிறேன்" என்றான்.

சபையிலிருக்கும் மற்ற உத்தியோகஸ்தரும் படைத்தலைவரும் "இனி நாமென்ன சொல்லினும் அரசன் கேட்பதில்லை. தவிர யுத்தத்தில் நிச்சயமாய் ஜெயங்கிடைக்கப் போகிறது, அதனால் நமக்குப் பலவித லாபமுமுண்டாகும். பிறகு எப்படியானாலுமாகட்டும்" என்று நிர்மானித்து அரசனைப் பார்த்து "ஓ மகாப்பிரபுவே! யுத்தத்திற்குப் போவதே நலமென்று தோற்றுகிறது. இதோ நாங்கள் பிரயாணப்படுகிறோம்" என்று ஒரே பிடிவாதமாய்ச் சொன்னார்கள்.

அரசனும் சோமபாலனும் மிகவும் மகிழ்ந்து, "யாவரும் யுத்த கோலம் பூண்டு நாளையத்தினம் சூர்யாஸ்தமனத்திற்குப் பத்துக் கடிகை முன்னதாகச் சைன்யத்துடன் பிரயாணமாக வேண்டும்" என்று உத்திரவளித்துச் சபையைவிட் டெழுந்திருக்கும்போது ஒரு

சேவகன் வந்து "ஓ மஹாராஜாவே! தேவரீருத்திரவுப்படி ஒரு மாத மாய்க் கள்வரைத் தேடியலேந்த சைன்னியம் படிவாயிலில் இருபது கள்வர்களுடன் வந்து சபைக்கு வருவதற்கு உத்திரவுக் கெதிர்ப் பார்த்திருக்கிறது" என்றான்.

அரசன் மறுபடியும் ஆசனத்திருந்து அவர்களை வரும்படி உத்திரவுசெய்யக் கள்வரைப்பிடிக்க நியமிக்கப்பட்ட சேனைத்தலைவன் இருபது மனிதரை விலங்கிட்டு இராஜாவின்முன் கொண்டுவந்து நிறுத்திச் சொல்வான்: "ஓ பிரபுவே! இவர்களில் அதோ விழித்து விழித்துச் சுற்றும் பார்ப்பவன் இவர்கட்குத் தலைவன். அவன் பெயர் ஏகாங்கி யென்றான். நான் நம்பவில்லை. மற்றவர்கள் அவன் சொல்லைத் தலையால் வஹித்து நடப்பவர்கள். இவர்கள் அனேக விடங்களில் கொலை கொள்ளை சுரங்கம் முதலியவற்றைச் செய்து யாருக்கும் பிடிகொடாமல் பகலில் வனங்களிற்றானே சஞ்சரிப்பதுவும் இரவில் நேர்ந்தவிடத்திற் கொள்ளை யிடுவதுமாய்ச் சீவனஞ் செய்துகொண்டு நாட்டைவிட்டுக் காட்டில் வசிக்கிறவர்கள். நாங்கள் பலவிடங்களிலும் திருடரைப்போல வேஷமிட்டுத் தேடுகையில் ஒருநாள் பாலைவனத்திற்குப் பத்து நாழிகை மேற்கே யிருக்கும் வனத்தில் இரவில் நித்திரை செய்துகொண்டிருந்தோம். இவர்கள் அவ்விடம் வந்து அன்று திருடின பொருளை எஜமானாகிய இவனிடங்கொடுக்க, இவனவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தனக்கு ஒருபங்கெடுத்துக்கொண்டு திரும்பும்போது இவர்களை வளைத்து பிடித்துக்கொண்டோம். இனி உத்திரவின்படி செய்கிறோம்" என்று நமஸ்கரித்தான். அரசன் அக்கள்வரின் தலைவனைப் பார்த்து "நீ யார்? உன் பேரென்ன? ஒளியாமற் சொல். சொல்லாவிடில் சிரச்சேதம் பண்ண உத்திரவளிப்பேன்" என்ன, "ஓ மஹாராஜாவே! நான் ஒளியாமற் சொல்லுகிறேன். என் வரலாறும் எல்லாச் சங்கதிகளும் அதோ தேவரீருக் கருகாமையில் வீற்றிருக்குஞ் சோமபால சேகர மஹாராஜனைக் கேட்டால் தெரியவரும்" என்று கொஞ்சமும் அஞ்சாமல் சொன்னான். சோமபாலன் திடுக்கிட்டு உற்றுப்பார்த்துத் தன் தம்பியென்றுணர்ந்து புன்னகையுடன் அரசனை நோக்கி, "ஓ நரேந்திரா! இக்கள்வரை அவர்கள் தலைவனுடன் என்னிட மொப்புவிப்பீர்களாகில் நான் நாளை உதயத்திற்கு இவர்கள் இரகசியமெல்லாம் தெரிந்து சொல்லுகிறேன். இவர்கள் நாம் நினைத்திருக்கும் முயற்சிக்கு உதவி செய்யக் கூடினவர்கள். சந்தேகிக்கவேண்டாம். ஒப்புவி

யுங்கள்" என்றுரைக்க, அரசன் ஆச்சரியப்பட்டு அவர்கள் விலங்கைத் தறித்துச் சோமபாலரிட மொப்புவிக்க உத்திரவு செய்து எழுந்தான். சபையுங் கலைந்தது.

சோமபாலன் தனது தம்பியைக் கண்ட ஆனந்தம் பொறுக்காமல் அவனைத் தழுவி முத்தமிட்டுத் தன் அரண்மனைக்கு அவன் கூட்டத்துடன் அழைத்துச் சென்று யாவருக்கும் உபசரணை செய்வித்து, இரகசிய அரைக்குள் தம்பியை அழைத்துச் சென்று அடங்காத வியாகுலத்துடன், "ஓ கோமளாங்கா! என் கண்மணி! நீ சிறையடைக்கப்பட்ட நாள்முதல் நமது பிதா வெகு விசனத்துடன் ஒருதினம் ஒரு வருஷமாகத் தள்ளி நீ சிறையினின்றும் வெளிப்பட்ட சமாசாரந் தெரிந்து சந்தோஷித்து உன் வரவை எதிர்பார்த்திருந்தார். நீ வராமையால் மனம் நொந்து பிராணனைவிட்டார். நமது தாயார் அவர் பிரிவாற்றாமல் இறந்தாள். விஜயன் சிறிதுநாள் என்னிடங்கூடியிருந்து நான் இங்குவரப் பிரயாணப்பட்டபோது என்னை விட்டு விக்ரமசேனனிடஞ் சென்றுவிட்டான். நமது பிதா மரண காலத்தி லென்னை அழைப்பித்துச் சொன்னபடி அவரிஷ்டத்தை நிறைவேற்ற இவ்விடம் வந்து எனது கோரிக்கையை ஈடேற்றிவருகிற தருணம், என் துணைவனான உன்னையும் லபித்தேன். இனி நமதெண்ணம் பிரயாசையின்றி முடிந்துவிடுவதற்குத் தடையில்லை."

கோமளாங்கன்:—"அண்ணே! பிதா மரணகாலத்தில் என்ன சொன்னார்? நீங்கள் இவ்விடம் வந்து நடத்திய முயற்சிகளென்ன? விஜயன் எதனால் விக்ரமசேனனை யடுத்தான்?"

கோமளாங்கன்:—"பிதாமரணகாலத்தில் தனியாயென்னை யழைப்பித்து "சோமபாலா! உன் தம்பி விடாமுயற்சியுட னிருப்பான். என்றைக்காகிலும் உன்னைச்சேருவான். ஆனால் நீ அவனை எதிர்பாராமற் பாலைவனத்தை விட்டு 40 நாழிகையகலவிருக்கும் இவ்வழகாபுரஞ் சேர்ந்து, இரவிவர்மராஜனை யடைந்து அவருக்கு வேண்டியபடி நடந்துகொண்டு குலசேகரன் வர்மங்களையும் அவன் நமக்குச் செய்திருக்குங் கொடுமைகளையுஞ் சொல்லி அவரை யழைத்து வந்து பாலைவனத்தை யபகரிக்கச் செய்வது உன் விரதமாயிருக்க வேண்டும். இரவிவர்மராஜன் என் பிராண சிநேகிதன் புதல்வர். அவரையுமெனக்கு நன்றாய்த் தெரியும். நீ போனாலுன்னை மரியாதை பண்ணுவார். இதற்குள் கோமளாங்கன் வரில் அவனுக்கு இவைகளைச் சொல்லி அழைத்துப்போய்க் கூடிய சீக்கிரத்தில் பாலைவனத்துக்கு

அரசனயிருக்கவேண்டிய முயற்சிகள் பண்ணுங்கள். ஜயமடைந்து குலசேகரனையும் விக்ரமசேனனையுங் கொலைசெய்யாது காராக்ரகத்திலிட்டு வருத்துங்கள். இப்படிச் செய்வதிற் பிதா எண்ணத்தை நிறைவேற்றுவதாகும்" என்று சொல்லிப் பிராணனை விட்டார். நான் அவர் சொற்படி இங்குவந்து மரியாதைபெற்று இரண்டாம் மந்திரியாய் நியமிக்கப்பட்டு அரசனுக்கு வேண்டிய போதனைகளைப் பண்ணி நம்பிக்கையுண்டாகச் செய்திருக்கிறேன். நாளைச் சூர்யாஸ்தமனத்திற்குமுன் யுத்தகோலத்துடன் சைன்னியங்களை நடத்திப் பிரயாணப்படுகிறோம். எல்லாம் சித்தமாய்விட்டது. இப்போது நீயும் வந்துவிட்டாய். நாம் குலசேகரனுக்குத் தீங்கு நினைத்திருப்பதாயும் அதனலென்னுடன் சேர்ந்திருப்பதில்லையென்றும் விஜயன் பிரதிக்கினைபண்ணி என்னை விட்டுப்போனன். இனி உன் மனதிலுதிப்பது யாது?" என்றான்.

தன் பிதா இறந்ததையும் மரணகாலத்தில் தன்னை நினைந்து கொண்டதையும் கோமளாங்கன் எண்ணி எண்ணிப் பலவாறு பிரலாபித்துப்பிதாவின் எண்ணம் தனதெண்ணத்திற்குச் சரியாயிருப்பதையும் தான் குலசேகரனைச் செயித்துச் சிறையடைப்பதைப் பிதா பார்க்காமற்போக நேரிட்டதேயென்றும் வருந்தி விஜயனை நினைத்து வெறுத்துச் சோமபாலனைப் பார்த்து "அண்ணா! நீங்கள் செய்திருப்பது மிகவும் நன்று. நானும் இதோ யுத்தகோலங்கொண்டு என் துணைவர்களுடனே பிரயாணமாகிறேன். என் விர்த்தாந்தத்தை அரசனுக்குச் சொல்லிச் சைன்னியத்தில் ஓர் உத்தியோகம் அமைத்து வைக்க வேண்டியது உங்கள் கடமை. குலசேகரன் சைன்னியமெல்லாம் என் வசப்பட்டு வந்திருக்கிறது. நானொரு சைன்னியத்திற்கு நாதனுய்ச் சென்றால் அவர்கள் என்னோடு சேர்ந்துகொள்வார்கள். தவிர, என்னுடனிருக்கும் இந்த இருபது துணைவர்கள் குலசேகரன் சைன்னியத்தைச் சேர்ந்த போர்ச் சேவகர்கள். விக்ரமசேனன் சந்தேகித்து இவர்களை உத்தியோகத்தினின்றும் நீங்கச்செய்தான். சைன்னியத்தில் நம்பிக்கையில்லாது விக்ரமசேனன் பயந்திருக்கிறான். அவர்கள் தங்களுக்கு நடக்கும் சீவனார்த்தத்தைக் குறித்திருக்கிறார்களே தவிர குலசேகரன்மீதாவது விக்ரமசேனன்மீதாவது மந்திரிகளிடத்திலாவது ப்ரீதியில்லை. மேலும், தங்கள் சேனதிபதியை அற்பமேனும் மதிக்காதவர்களா யிருக்கிறார்கள்" என்ன, சோமபாலன் "அப்பா தம்பி! நீ சிறைவிட் டகன்றபோது ஏன் நமதரண்மனைக்கு வரவில்லை? என்ன கஷ்டமனுபவித்தாயோ, அதைத் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்" என்றான்.

கோமளாங்கன்:—"அண்ணே! நான் அதைச் சொல்லும்படி நினைத்தேன். நீங்களே கேட்டுவிட்டீர்கள். சிறையினின்று விக்ரம கேதுவினுடன் விடுபட்டு வனத்திற் சென்றோம். அங்கு அவன் என்னை விட்டுப் போயினன். நான் நித்திரை போய்விட்டேன். நித்திரை நீங்கி வனத்துட்சென்று காய் கனி யருந்தி நாட்கழித்துவரும் போது சில திருடர்கள் என்னைச் சந்தித்துத் தம்முடன் அழைத்துச் சென்றனர். அனேக தேசங்களில் அவர்களுடன் சாஸ்திர விதிப்படிக் கள்வத்தனம்பண்ணி நாட்கழிக்கவும் நேரிட்டதனால் அவர்களிட மிருந்து உபாயமாய்த் தப்பித்துக்கொண்டு பாலைவனஞ் சேர்ந்தேன். அவ்விடத்தில் யாருமென்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நமதரண்மனைக்குச் சென்றுபார்த்தேன். அது அடைபட்டுக்கிடந்தது. அங்கு நின்ற சிலரால் பிதாவும் அன்னையும் இறந்ததாகவும், நீங்கள் பட்டணம்விட்டு இரவிலேயே எவ்விடத்திற்கோ போய்விட்டதாகவுஞ் சொல்லக் கேட்டுச் சேனைத்தலைவர்களில் நமக்கு வசப்பட்டவர்களைத் தேடிச்சென்றேன். நான் கொண்டிருந்த வேஷத்தால் அவர்களும் என்னைத் தெரிந்துகொள்ளாதிருந்ததைக் கண்டு அவர்கட்கு என் வரலாற்றைச் சொல்லித் தெரிவித்து அவர்களை வசப்படுத்திச் சமயம் பார்த்துச் சேனைகளைத் திருப்பி அரசனை எதிர்க்கவேண்டிய முயற்சிகள்செய்து வரும்போது விக்ரமசேனன் சந்தேகித்துச் சேனைத் தலைவரிற் சிலரை நீக்கினான். நான் அங்கிருப்பது பிசகு என்று எண்ணி, அவர்களுடன் இரவிற் கள்வரைப்போல் வேடமிட்டு அப் பட்டணத்திலுள்ள பெரிய குடிகளைக் கவர்ந்தும், சிலபோது கொள்ளையிட்டும், திரவியஞ் சேர்ப்பதுவே முயற்சியாயிருந்தோம். திரவியஞ் சேர்ந்தபோது சைன்னியங்களிற் சிலரை வரவழைக்கவும் பிறகு பெருஞ் சைன்னியஞ் சேர்த்துக் குலசேகரனை எதிர்க்கவும் எண்ணியிருந்தோம். அப்படியிருக்கப் பத்துநாட்குமுன் இந்த அரசன் சைனியங்கள் ஏதோ சந்தேகித்து வந்து நாங்கள் நித்திரை பண்ணுகையிற் காவலிருந்தவனை மோசஞ்செய்து எங்களைப் பிடித்துக்கொண்டார்கள். அரசனிடம் பெருமைக்காய் எப்படியோ ஏதேதோ பிதற்றினார்கள். ஆகையால் இனிக் காலதாமதம் பண்ணாமல் அரசனிடம் என்னையும் இச்சேவகத் தலைவரையும் அழைத்துச் சென்று எங்கள் வரலாற்றைச் சொல்லி யுத்தத்திற்கு அழைத்துப் போகவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, சோமபாலன் திடங்கொண்டு, மறுநாளுதயத்தில் அவர்களை, அரசனிடம் அழைத்துச்

சென்று, நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி, அரசனை மகிழச் செய்து, கோமளாங்கனுக்கும் அவன் தோழருக்கும் சைன்னியத்தில் உத்தியோகங்கள் கொடுத்தமர்த்தி இன்பவார்த்தையாடிச் சந்தோஷப்படச் செய்தான்.

சூரியாஸ்தமனத்திற்குப் பத்துநாழிகை யிருக்கும்போது அரசனுத்திரவுப்படி யாவரும் யுத்தசன்னத்தராய்ச் சேனைகளுடன் பட்டணத்தை விட்டு வெளிப்பட்டு அதிதுரிதமாய் யாத்திரைபண்ணி மறுநாளுதயத்திற் பாலைவனத்தருகிருக்கும் ஓர்பெரிய வனத்தில் தளமிறங்கிக் களைதீர்த்துச் சேனையை அணிவகுத்து நாலுவாசலுக்கும் நாலுபேர் சேகவத்தலைவரை நியமித்துப் பட்டணத்தை முற்றுகையிடும் மார்க்கத்தைச் சோமபாலனும் கோமளாங்கனும் சேனாதிபதியுஞ் சேர்ந்து யோசித்துச் சைன்னியங்களுக்குத் தெரிவித்து, அன்றைப் பகலைப் போக்கி இரவிற் பதினைந்து நாழிகைக்குப் பட்டணஞ் சேர்ந்து அதை முற்றுகைபோட்டு, ஒருவரும் வெளியில் வாராமலும் உள்ளே போகாமலும் சுற்றிக்கொண்டு ஆரவாரித்திருந்தார்கள். கோமளாங்கன் மறுவேஷந்தரித்துப் பட்டணத்துட் பிரவேசித்துக் குலசேகரப்பெருமாள் சேனைத்தலைவரைச் சந்தித்துத் தன் தமையனுடனும் அழகாபுரி யரசனுடனும் யுத்தத்திற்கு வந்திருப்பதையும் சூரியோதயத்தில் அரசனுக்குத் தூதனுப்ப நினைத்திருப்பதையும் யுத்தத்நேரிடில் சைன்னியத்தைத் தன்னிடமனுப்பி வைக்கவேண்டுமென்றுஞ் சொல்லி, அவர்கட்கு வேண்டுமட்டும் ஆசை வார்த்தைகளைக் கூறிப் பிரதிக்ஞை வாங்கிக்கொண்டு திரும்பி இரவிவர்மராஜனுக்குத் தெரிவிக்க, அவ்வரசனும் மகிழ்ந்து கோமளாங்கனைக் கொண்டாடிப் பல வசனங்கள் சொன்று புகழ்ந்து சந்தோஷத்துடன் யாவரும் சூரியோதயம் எப்போதாகுமென்று பூரண நம்பிக்கையுடன் குலசேகரப்பெருமாள் நோக்கத்தை எதிர்பார்த்திருந்தார்கள்.

20. தத்துவ உபதேசம்.

யோகீஸ்வரர்:—"ஓ குழந்தாய்! தேஹி இன்னானென்று தெரிவதற்குமுன் அவனிருப்பிடமாகிய தேஹமின்னதென்று தெரியவேண்டும். ஒருவன் ஒரு வீட்டிலிருக்கிறான் பார், என்றால் அந்த வீட்டைக் கண்டு அதன் அறையறையாய்த் தேடினாலல்லவோ அவ்வீட்டுள் இருப்பவனைக் காணலாம். அதைப்போல் ஒரு வீட்டுக்கு

ஒப்பான இத்தேகத்தைச் சோதிக்கில் அது பிருதிவி என்னும் மண்ணாலும், அப்புஎன்னும் ஜலத்தாலும், தேயுஎன்னும் அக்கினியினாலும் வாயு என்னும் காற்றினாலும், ஆகாயம் என்னும் பரவெளியாலும் உண்டானது. வீட்டைக் கொல்லத்துக்காரன் ஒரு கல்மீது மற்றொன்றை வைத்துச் சுவர் அறை முதலியவைகளைக் கட்டிப் பிறகு தச்சன் தூண் வாசற்கால் கதவு முதலியவைகளை மரத்தாலும் கல்லாலும் அமைப்பதுபோல் நமது தேகமானது ஒவ்வோர் மிருதுவான பரமாணுக்களால் மாம்சம், ஜவ்வு, நரம்பு முதலியவற்றையும், கடினமான பரமாணுக்களால் எலும்பு நகம், பல் முதலியவற்றையும் ஓர் அணுவின்மேல் மற்றொன்றை மிகவும் சாதுர்யமாய் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றது. மேற்சொல்லிய பிருதிவிமுதல் ஐந்துக்கும் பஞ்சபூதங்கள் எனப் பெயர். இவைகளால் தேகமுண்டான மார்க்கமாவது: (1) பிருதிவியின் அம்சம்—அஸ்தி மாம்ஸம் தோல் நரம்பு ரோமம் என ஐந்து. எப்படியெனில், பிருதிவியிற் பிருதிவி அஸ்தி, பிருதிவியில்அப்பு மாம்ஸம், பிருதிவியில் அக்கினி தோல், பிருதிவியில் வாயு நரம்பு, பிரிதிவியில் ஆகாயம் ரோமம் எனவும், (2) அப்புவின் அம்சம்—அப்புவில் பிருதிவி வாய்நீர், அப்புவில் அப்பு மூத்திரம், அப்புவில் அக்கினி வியர்வை, அப்புவில் வாயு உதிரம், அப்புவில் ஆகாயம் சுக்கிலம் எனவும், (3) தேயுவின் அம்சம்—தேயுவில் பிருதிவி பசி, தேயுவில் அப்பு தாகம், தேயுவில் வாயு சோம்பல், தேயுவில் தேயு நித்திரை, தேயுவில் ஆகாயம் சங்கமம் எனவும், (4) வாயுவின் அம்சம்—வாயுவில் முறையே பிருதிவி ஓடுதல், அப்பு சுருங்குதல், தேயு குறுகுதல், வாயு விரிதல், ஆகாயம் கிடத்தல் எனவும், (5) ஆகாயத்தின் அம்சம்—முறையே ஆகாயத்தில் பிருதிவு இராகம், அப்பு துவேஷம், தேயு பயம், வாயு வெட்கம், ஆகாயம் மோகம் எனவும் கூறுவர்.

இவைகளாலுண்டான பஞ்சீகிருதங்களாவன:—

1. பிருதிவியின் அம்சம்.

1. அகங்காரம்	பிருதிவியில்	ஆகாயம்,	ஸ்தானம்	ஹிருதயம்.	
2. கிராணேந்திரியம்	ஷை	அக்கினி	ஷை	நாசி.	
3. பிராணவாயு	ஷை	வாயு	ஷை	குதம்.	
4. கந்தவிஷயம்	ஷை	அப்பு	ஷை	நாசி.	
5. குதேந்திரியம்	ஷை	பிருதிவி	ஷை	குதம்.	

2. அப்புவின் அம்சம்.

1.	அப்புவில் பிருதிவி		குஹ்யேந்திரியம்,	ஸ்தானம்	குஹ்யம்.
2.	ஷை	அப்பு	ரஸவிஷயம்	ஷை	நாவு.
3.	ஷை	தேயு	ஜிஹ்வேந்திரியம்	ஷை	நாவு.
4.	ஷை	வாயு	அபானவாயு	ஷை	குதம்.
5.	ஷை	ஆகாயம்	சித்தம்	ஷை	நாபி.

3. தேயுவின் அம்சம்.

1.	அக்னியில் பிருதிவி		பாதேந்திரியம்,	ஸ்தானம்	பாதம்.
2.	ஷை	அப்பு	ரூபவிஷயம்	ஷை	நேத்திரம்.
3.	ஷை	தேயு	நேத்ரேந்திரியம்	ஷை	நேத்திரம்.
4.	ஷை	வாயு	உதானவாயு	ஷை	கண்டம்.
5.	ஷை	ஆகாயம்	புத்தி	ஷை	நேத்திரம்.

4. வாயுவின் அம்சம்.

1.	வாயுவில் பிருதிவி		பாணீந்திரியம்,	ஸ்தானம்	ஹஸ்தம்.
2.	ஷை	அப்பு	ஸ்பரிசவிஷயம்	ஷை	த்வக்.
3.	ஷை	தேயு	துவக்கிந்திரியம்	ஷை	த்வக்.
4.	ஷை	வாயு	வியானவாயு	ஷை	சர்வாங்கம்.
5.	ஷை	ஆகாயம்	மனசு	ஷை	கண்டம்.

5. ஆகாயத்தின் அம்சம்.

1.	ஆகாயத்தில் பிருதிவி		வாக்கிந்திரியம்,	ஸ்தானம்	வாக்கு.
2.	ஷை	அப்பு	சப்தவிஷயம்	ஷை	செவி.
3.	ஷை	தேயு	சுரோத்ரேந்திரியம்	ஷை	செவி.
4.	ஷை	வாயு	சமானவாயு	ஷை	நாபி.
5.	ஷை	ஆகாயம்	ஞானம்	ஷை	புருவமத்தி.

ஓ சிதம்பரசேகரா! இப்பஞ்சபூதங்களும் அவைகளின் பஞ்சகிருத்தியங்களுஞ்சேர்ந்து பஞ்சீகிருத பஞ்சபூதமெனச் சொல்லுவார்கள். இச்சரீரம் பஞ்சீகிருத பஞ்சபூதங்களாலுண்டானது. இது திருசியாதிருசியம். அதாவது திருஷ்டிக்குப் புலப்பட்டதும் புலப்படாததுமாம். புலப்பட்ட யாவும் ஸ்தூலசரீரம். புலப்படாதவை

சூட்சுமசரீரம். இந்த சூட்சுமசரீரம் கன்மேந்திரிய ஞானேந்திரியங்களாலும், பஞ்சப்பிராண அந்தக்கரணங்களாலும் அமைக்கப்பட்டது. எப்படியெனில் வசனிக்கும் வாக்கு, ஏற்றல் இடுதல் செய்விக்கும் பாணி, மலஜலாதிகளை வெளிப்படுத்தும் பாயுரு, நடத்துவிக்கும் பாதம், ஆனந்தமடைவிக்கும் உபத்தம் என்னும் ஐந்து கன்மேந்திரியங்களும்; சப்தத்தையறியும் சுரோத்திரம், ஸ்பரிசத்தை யறியும் த்வக், ரூபத்தையறியும் சட்சு, ரசத்தையறியும் ஜிஹ்வை (நா), கந்தத்தை யறியும் ஆக்கிராணம் (நாசி) என ஐந்து ஞானேந்திரியங்களும்; சர்வாங்க வியாபி வியானன், ஹிருதயத்திலிருந்து நாசிவரையில் போக்குவரத்தாயிருக்கும் பிராணன், ஜீரணம் செய்விக்கும் அபானன், ரத்தத்தைப் பல நாடிகட்கு அளிக்கும் சமானன், சப்தங்களுக்குச் செயல் கொடுக்கும் உதானன் என்னும் பஞ்சப்பிராணனும்; மனம் புத்தி என்னும் அந்தக்கரணமும் சேர்ந்துளதேயாம். உள்ளம் சித்தம் அகங்காரம் என்பவையும்சேர்த்து அந்தக்கரணம் ஐந்து எனவும் கூறுவர்,

இவை வியஷ்டியாய்க் கொள்ளும்போது ஜீவனையும், சமஷ்டியாய்க் கொள்ளும்போது ஈஸ்வரனையும் குறிக்கும். வியஷ்டி என்றால் எழுவகைத் தோற்றங்களாயுள்ள ஜீவகோடிகளைத் தனித்தனியாய்க் காணுதல். சமஷ்டி என்றால் அந்த ஜீவகோடிகளை ஒன்றாகச் சேர்த்துக் காணுதல். இவ்வனத்திலிருக்கும் ஒவ்வொரு மரங்களையும் பலா, புளி, மா, வேம்பு, தேக்கு என்று வேறுவேறாய்க் கொள்வது வியஷ்டி; மரங்கள் யாவற்றையும் சேர்த்து வனம் என ஒன்றாய்க் கொள்வது சமஷ்டி. சூட்சுமசரீரம் இரண்டுபாகமாய்ப் பிரிந்து ஒரு பாகம் ஸ்தூலமுண்டாவதற் குபயோகப்பட்டு திருசியமாகவும், மறு பாகம் அதிருசியமாகவும் இருக்கின்றது. அதிருசியமான சூட்சுமதேகம் சூட்சும பஞ்சபூதங்களாற் செய்யப்பட்டது. ஓ சிதம்பரா! இந்த ஸ்தூல சூட்சமதேகங்களை நீ, நான், பிராமணன், மிருகம், பட்சி, புழு, என்றழைப்பது பஞ்சபூதங்களுடைய பரிணாம விசேஷத்தினாற் சொல்லப்படுவதேயன்றி சூட்சுமத்தில் பேதமில்லை. பூர்வ கர்மானுபவ ஜன்யமான தேகங்களிற் பிரவேசித்த ஜீவனை ஸ்திரீ, புருஷன், பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், யானை, பக்ஷி, புழு எனப்படுவது லௌகீக பார்வையிலேயேயன்றிப் பரமார்த்திகத்தில் இல்லை. கர்மத்தால் ஸ்தூலபேதமே தவிர ஆத்மாவுக்குச் சுபாவமாய்ப் பேதமில்லை. ஆகையால் யான் இன்னான் என்றும், இப்படிப்பட்டவன் என்றும் எப்படிச் சொல்லப்படும்.

பிராம்மணன் க்ஷத்திரியன், வைசியன் சூத்திரன் முதலிய இப்பேர்கள் பிள்ளைகள் விளையாட்டாய்ப் பேர்வைத்துக்கொள்ளுவது போல் ஏற்பட்டுவிட்டதேதவிர பாரமார்த்திகமாகக்காலத்ரயத்திலும் ஆத்மாவுக்கு இல்லை. ஜனனமானவுடன் யாவரும் சூத்திரர்களே, கருமத்தால் க்ஷத்திரியரும் வைசியரும் பிரம்மக்கியானம் பெற்று அனுபவிப்பதனாலேயே பிராம்மணர்களும் ஆகிறார்கள். இதன்றி எந்த வஸ்துவுக்குரூபமும் அதன் வழியே நாமமு மிருக்கிறதோ அது சத்தன்று. உன்னையொருவனையே உன் தகப்பனுக்குப் பிள்ளையென்றும், உனது சகோதரிகளுக்குச் சகோதரனென்றும், உனது பிள்ளைகட்குத் தகப்பனென்றும், உனது மந்திரிக்கு அரசனென்றுஞ் சொல்லப்படுகிறது. ஆகையால் நீ பிள்ளையா? சகோதரனா? தகப்பனா? அல்லது அரசனா? உன்னை இன்னானென்று எப்படிச் சொல்வது? இதுவுமல்லாமல், சிதம்பரசேகரப்பெருமாள் என்றழைக்கப்படுவது உனது தலையையா? கையையா? வயிற்றையா? காலையா? இவ்வனைத்துமுள்ள உனது ஸ்தூலதேகத்தையா? அல்லது அந்த ஸ்தூலத்துடன் சேர்ந்திருக்கும் உனது சூட்சுமதேகத்தையா? நன்றாக யோசித்து நீ இன்னான், அல்லது இன்னது என்று அறிந்து சொல்வாயாக?" என்று யோகீஸ்வரர் சுட்டிக்காண்பித்துக் கேட்டார்.

அப்படிக் கேட்டமாத்திரத்தில் இராஜகுமாரன் அதுவரையில் ஏகாக்ரசிந்தையாய் யோகீஸ்வரரது பிரசன்னமான முகத்தைப் பார்த்துக்கொண்டு அவர் வாயினின்றுஞ் சொரியாநின்ற சொற்களாகிய அமுதத்தைப் பானம்பண்ணிக்கொண்டு அசையாமலிருந்தவனாதலால் திடுக்கிட்டு ஒன்றுமுரையாமற் சற்றுநேரம் யோசித்துப் பெருமூச்சுவிட்டுப் பிறகு தேறி "ஓ மஹாத்மாவே! இத்திருஷ்டிக்குத் திருசியமாகும் எனது தேகமும் அவயவங்களும் அதிலடங்கிய சூட்சுமபூதக் கருவிகளும், சூட்சுமதேகம் முதலியவையும், அவைகளின் பிரவிருத்திகள் யாவற்றும் பஞ்சீகிருத பஞ்சபூதங்களாலுண்டானவைகளாம். அவற்றிற்கு ரூபமும் நாமமுமிருப்பதால் நாசமுடையப்பட்ட அசத்தென்றும், இச்சிதம்பரனென்னும் நாமம், அவைகளெல்லாஞ் சேர்ந்து உருக்கொண்ட எனது தேகத்திற்கேயன்றி என் தேஹம் என்று கூறுமிடத்துள்ள யான் என்பவனுக்கல்லவென்றும், பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது. இந்த நான், எனது என்றுரைப்பது இன்னது அல்லது இன்னான் என்று சற்றும் புலப்படவில்லை. எல்லா

மூணர்ந்த தேவரீர் கிருபைகூர்ந்து இதை அருளிச்செய்யவேண்டும்" என்று நமஸ்கரித்தான்.

யோகிஸ்வரர்—அவனது தீக்ஷண்யத்திற்குச் சந்தோஷித்து, "அப்பா குழந்தாய்! நீ கேட்குங் கேள்வியானது நான்குமறைகளும் ஆறுசாஸ்திரங்களும் பதினெண் புராணங்களும் அறிந்துகொள்ளவில்லையென்று முறையிடுமாகில் அற்பனாகிய என்னாற் சொல்லமுடியுமோ முடியாது. ஆயினும் எனக்குத் தெரிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் கேள். ஸ்தூலமும் சூட்சுமமும் நான் அல்லவென்று கண்டாயே. இனிக் காரணம் மஹாகாரணம் என்னும் இரண்டு சரீரங்கள் கூடவிருக்கிறது. அவை யாவையெனில், பஞ்சதன்மாத்திரைகளை வெவ்வேறாய் விவகரித்துப் பார்க்குமிடத்து அவையெல்லாம் மித்தையாய் ஒன்றுமில்லாமற்போனபடியால், இப்படி ஒன்றுமில்லையென்று தோற்றுவதே காரணசரீரம். இதற்கு அகங்காரதத்துவமென்றும், அவித்தையென்றும், ஸ்தூல சூட்சுமங்களுக்குக் காரணமென்றும், பிராந்தியென்றும் சொல்லுவார்கள். ஆனாலிப்படி ஒன்றுந் தெரியாமலிருப்பது அவித்தையாதலால் இந்த அவித்தை அல்லது காரணசரீரமும் நான் அல்ல என்று தெளிவாயாக. தமோகுணப் பிரதானமான அகங்கார தத்துவமென்னுங் காரணசரீரத்தை நீக்கினால், பிறகு சுத்த சத்துவகுண பிரதானமான மகதத்துவமென்னும் பிரத்தியேகாத்மாவுக்கே மஹாகாரண சரீரம் என்று பேர். இதற்குச் சித் என்றும், சைதன்யம் என்றும், போதம் என்றும், கூடஸ்தன் என்றும், சாக்ஷி என்றும் பலநாமங்கள் சொல்லுவார்கள். இப்படி வியஷ்டி சமஷ்டி அகண்டாகார விருத்திகளுடைய பரியாய நாமங்களோடே கூடியிருக்கிற மூலப்பிரகிருதி யென்னும் மஹாகாரண சரீரம், சாக்ஷியமென்னும் பிரபஞ்சத்தைக் குறித்து வந்தது. ஆகையால் இப்பிரபஞ்சம் காலத்திரயத்திலும் நான் என்பதனிடத்தில்லை என்றுணர்ந்து இம்மஹா காரணசரீரமும் இதனிடத்தில் அத்தியஸ்தமாய்த் தோற்றுகிற சர்வநாமங்களும் நான் அல்லவென்று நீக்கிவிடுவாய். ஓ குழந்தாய்! இனி சாக்ஷி, சாக்ஷிரஹிதமாய், நினைப்பு மறப்பில்லாத, த்யானத்யேயமில்லாத, தூஷணீம்பூதனா யிருக்கப்பட்ட சுகஸ்வரூபமே, குருவாக்கியத்தால் தான் என்றறிந்துநின்றதே மூலப்பிரகிருதிரஹிதமான தன்னுடைய ஸ்வரூபம். இந்த ஸ்வரூப வர்ணனீய நாமங்கள் எப்படி யென்றால், சத்தே சுயமாயிருப்பதாற் சித்தாயிற்று, சித்தே சுயமாய்த் தோற்று

தலாற் சத்தாயிற்று, இரண்டாம்வஸ்து இதற்கில்லாதபடியால் ஆனந்தமாயிற்று. ஆகையாற் சத்துச்சித்தானந்த அகண்டானந்த நிர்விசேஷானந்த ஸ்வரூபமாய், நிராகார நிற்குண நிர்விகற்ப நிஷ்கிரிய நிரஞ்சன நிராதார நிஷ்களங்க நிருபானந்த ஸ்வரூபமாய், அக்ஷர, அமல, அப்ரமேய, அனுச்சரிய, அனுதார, அமிர்த, அநிருபிய, அத்வைதானந்த, அபோத்ய, அசூன்ய, அங்கோத, அபரோக்ஷானந்த ஸ்வரூபமாய் ஒரு குணமுமில்லாதவனாய், ஒரு கர்மமுமில்லாதவனாய், ஒரு விகற்பமுமில்லாதவனாய், ஒருவிகாரமுமில்லாதவனாய், ஒருருவமுமில்லாதவனாய், நித்தியமுத்தனாயிருக்கப்பட்டவனே நான். முன்சொன்ன வர்ணனீய நாமங்கள் பிரபஞ்சத்தைக் குறித்து வந்ததேயன்றி வேறல்ல. அதெப்படியென்றால், அசத்தைக் குறித்துச் சத்தாயிற்று, ஜடத்தைக்குறித்துச் சித்தாயிற்று, துக்கத்தைக் குறித்து ஆனந்தமாயிற்று, ஆவரணத்தைக்குறித்து நிராவரணமாயிற்று. இப்படியே ஒன்றைக்குறித்து அதல்லவென்றுரைக்க அதன் விபரீதார்த்தமான பதம் உபயோகித்துரைக்கப்படுகிறது. ஆகையால் இந்த நாமங்கள் ஸ்வரூபத்திற்குச் சுபாவமாயில்லை. த்வைதாத்வைத ரஹிதமாய் த்யானத்யான ரஹிதமாய்க் கார்யாகாரண ரஹிதமாயிருக்குந் தன்னிடத்தில் உலகம் தோற்றும்விதம் எப்படியெனில், மூலப்பிரகிருதி என்னும் மித்தியாபுருஷன் அகங்காரதத்துவமென்னும் இல்லாத சித்திரக்கோலைக் கையிற்பிடித்து, பஞ்சதன்மாத்திரை யென்னும் இல்லாத பஞ்சவர்ணங்களால் ஸ்தூல சூட்சுமமென்னும் பொய்யான சித்திரத்தைச் சூன்யமென்னும் ஆகாசத்திலெழுதினால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கின்றதேதவிர தனது நிஜஸ்வரூபத்தில் இல்லையென்றுணர்வாயாக. ஓ சிதம்பரா! ஏதோ எனக்குத் தெரிந்தமாத்திரம் உனக்கு விளங்கும்படி நீ கேட்ட பொருளை உரைத்தேன். இப்போது நீ உன்னை அறிந்தாயா? ஒளியாமற்சொல்."

இவ்விதங்கேட்ட யோகீஸ்வரரைச் சிதம்பரசேகரன் அஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் தாரைதாரையாய்ப் பொழிய மனம்பூரித்துச் சம்பூரணனாய்த் தேகமெங்கும் மயிர்க்கூச்செறிய ஆசாரியரை நோக்கி, "தயாநிதியே! தந்தையே! தாயே! எனது பிறவித்துன்பமறுக்கும் குருஸ்வரூபமாய் எழுந்தருளிய கடவுளே! இதுவரையிற் சுட்டிக்காண்பித்து அடுக்கடுக்காய் ஐந்திந்திரியாதி பிராந்திகளை ஒவ்வொன்றாய்க் கழற்றிப் பஞ்சலோகத்தையுங் கர்ப்பத்திலடக்கியிருக்கும் பூமியை ஸ்புடஞ்செய்து ஒவ்வொன்றாய்

அகற்றி அதிதாவள்யமான மாணிக்கத்தை யெடுத்துக்காட்டி அத னெளியே அதற்குக்காரணகாரியமாயிருக்கிறதென்று உணர்த்துவது போல் ஸ்வரூபஞானத்தை உணரச்செய்த கிருபாநிதியே! அடி யேன் கிருதார்த்தனானேன். இனி அடியேன் தேவரீருக்குச் செய் யும் பிரதியுபகாரமு முளதோ! ஆகிலும் ஒரு சந்தேக முதிக்கிறது. யாதென்றால்; தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய ஸ்வரூபப்பிரியாய நாமங் கள் சர்வஞ்ஞனும், சர்வ சக்தனுமாயிருக்கும் கடவுளுக்கல்லவோ சொல்லப்படுகிறது. சர்வ வியாபியாகிய கடவுளுக்கும் ஸ்வரூபத்துக் கும் வித்தியாசமில்லாமலிருப்பது எப்படியென்று உணர்கிலேன். கிருபை செய்யவேண்டும்" என்று அஞ்சலியஸ்தனாய் நின்றான்.

யோகீஸ்வரர் அவனது பரமார்த்த சுபாவநிலையைப் பார்த்து மகிழ்ந்து உட்காரும்படிசெய்து அவனது கேள்விக்குச் சிரித்து "ஓ குழந்தாய்! நீ கேட்ட கேள்வி மிகவும் நன்றாயிருக்கிறது. அக்கேள் விக்குப் பதில் நானிதுவரையில் சொல்லிவந்ததிலேயே இருக்கிறது. நீ மறுபடியும் முன்போல் அம்பாள் சேவைசெய்து நீங்களிருவருந் தனியாயிருந்துகொண்டு சாவகாசமாய் நானுரைத்தவைகளைக் குறி த்து விசாரணை பண்ணுவீர்களானால், நீ குறித்த வித்தியாசம் புலப்படும். அப்படிப் புலப்படாதவரையில் மறுபடியும் உங்களைச் சந்தித்து உனது மயக்கத்தைத் தீர்த்து நிவர்த்திசெய்யக் கடவுள் கிருபை செய்வார்" என்றிருவரையும் மூகாம்பிகை சன்னதிக்கு அனுப்பிவைத்துத் தான் நிரதிசயானந்த சமாதியிலிருந்தார்.

21. குலசேகரப்பெருமாள் சிறைப்படுவது.

அழகாபுரத்தரசன் சேனைத்திரள் பாலைவனத்தை மிக ரகசிய மாய் முற்றுகை போட்டபடியால் குலசேகரப்பெருமாளும் அவர் மந்திரிசிரேஷ்டனும் இன்னும் பட்டணவாசிகளும் சேனையின் ஆர வாரங் கேட்கும்வரையில் தெரிந்துகொள்ளவில்லை. ஆகையால் யாவ ரும் திடுக்கிட்டு ஆச்சரியப்பட்டு உதயமானவுடன் சோமபாலனும் கோமளாங்கனும் இரவிவர்மராஜனை யுத்தத்திற்கு அழைத்துவந் திருப்பது தெரிந்து பயந்து, குலசேகரப்பெருமாளிருந்தும் பல வீனத்தையும் அவர் வியாகுலத்தையும் நினைந்து இனி என் செய் வோம் என்று வருந்தினார்கள். சங்கு முழக்கமும் பேரிகை முழக்க மும் சைன்னிய ஆரவாரமுங் கேட்டுத் திடுக்கிட்டெழுந்த குலசேக ரப்பெருமாள் தூதுவரை நடக்கும் விசேஷத்தைத் தெரிந்துவர

அனுப்பி விக்கிரமசேனனையும் மற்ற மந்திரிகளையும் வரவழைத்து, "ஓ மந்திரிமார்களே! தளகர்த்தர்களே! ஏதோ ஒரு சத்துரு சைன்னியம் நமது பட்டணத்தை முற்றுகைபோட்டுக்கொண் டிருப்பது போலிருக்கிறது. நாம் சக்கரவர்த்தியாயிருந்தும் கொஞ்சமேனும் பயமின்றி இவ்வளவு தீரத்துடன் வந்தவன் யாரோ தெரியுமாகில் சொல்லுங்கள். இனி க்ஷணப்பொழுதேனும் வீண்காலம் போக்காமல் சத்துருவை ஜெயிக்க முயலுங்கள். என் சோகத்தையும் பலவீனத்தையுந் தெரிந்து சமயம் பார்த்து வந்திருப்பவனைச் செயிக்கவேண்டும்" என்றான். இதற்குள் தூதுவர்கள் திரும்பிவந்து "ஓ மஹாராஜாவே! இங்கிருந்துபோன சோமபாலன் அழகாபுரி சென்று இரவிவர்மராஜனை அடுத்துத் தேவரீர் மர்மங்களை உரைத்துத் தன் தம்பி கோமளாங்கனுடன் அழகாபுரிராஜனைச் சைன்னியஞ் சேர்க்கவைத்து யுத்தத்திற்கு அழைத்துவந்திருக்கிறான். சேனைகள் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டு குடிகளை இமிசிக்கிறார்கள். அங்குமிங்கும் பிரவேசித்துக் கொள்ளையிடுகிறார்கள். தேவரீரை இகழ்ந்து பேசுகிறார்கள். இன்னும் இரண்டொரு நாழிகைக்குள் பட்டணத்துள் பிரவேசிப்பார்கள்போற் காண்கிறது" என்றார்கள்.

அரசன் கடுஞ்சினங்கொண்டு விக்கிரமசேனனைப் பார்க்க, விக்கிரமசேனன் பணிந்து, "ஐயனே! நானும் உங்களைப்போலவே ஆச்சரியப்படுகிறேன். இரவிமர்மன் எவ்வளவு? நம்மீது தளமெடுத்து வருவதென்றால், யானை சிங்கத்தை எதிர்த்ததுபோலிருக்கிறது. இது காலவித்தியாசமேயன்றி வேறென்ன? எல்லாம் சிவன்செயல் யுத்தம் புரிவது மிகவும் மேன்மை. இனிக் காலதாமதங்கூடாது" என, அரசன் சேனாதிபதியைப் பார்க்க, அவனும் வணங்கி "உத்திரவளித்தால் சைன்னியத்தை நடத்த இதோ சித்தமாயிருக்கிறேன்" என்று தைரியத்துடன் சொல்லிக்கொண் டிருக்கும்போது, குடிகள் ஒன்று சேர்ந்து "கூ" என்று முறையிட்டுக்கொண்டு இராஜ சபை வந்து அரசனையும் விக்ரமசேனனையும் பணிந்து "ஓ மஹானுபாவர்களே! இனி என்னசெய்கிறது? துஷ்டரான கோமளாங்கனும் சோமபாலனும் அழகாபுரத்தரசனை அழைத்து வந்து பட்டணத்தைச்சுற்றி சைன்யங்களை விடுத்து எங்களைப் பலவித இமிசைகள் செய்கிறார்கள். இனி என்ன செய்வோம். தெய்வம் உங்களையுங் கைவிட்டதுபோலிருக்கிறது. சோமபாலனை அரசனுக்கி நாங்கள் வாழோம். நீங்கள் சிங்கத்தையொத்த புஜபலமுடையவர்களாயிரு

க்க ஒரு சிற்றரசன். எதிர்க்கவருவது கடவுள் ஆக்ஞையென்றே சொல்லவேண்டும். பூர்வத்தில் நளனைப் புஷ்கரன் வென்றதுபோலு மாய்விட்டது. ஆகிலும் நீங்கள் யுத்தத்திற்கு வெளிப்படுங்கள். நாங் களும் போர்புரிய வருகிறோம். நீங்கள் பிராணனை விட்டால் நாங்க ளும் அவ்விடத்திலேயே இறக்கிறோம். தைர்யத்துடன் யுத்தம் புரியவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். அரசன் அவர்களைப் பார்த்து மனங்கலங்கி "என் பிரிய சினேகிதர்களே! சகோதரர் களே! நீங்களஞ்சவேண்டாம். இதோ நான் என் சைன்னியத்துடன் வெளிப்படுகிறேன். கடவுளிஷ்டம்போல் முடியட்டும்" என்றுரை த்து, அவர்களை யனுப்பி, யுத்தத்திற்குப் பிரயாணப்படும்படி உத்தர வளித்துக்கொண்டிருக்கும்போது, அழகாபுரத்தரசன் தூதுவர்கள் ஓர் திருமுகமெடுத்துக்கொண்டு குலசேகரப்பெருமானைத் தேடிவர, அவர்களை அழைப்பித்து "நீங்கள் வந்த காரியம் யாதோ விரைவில் உரையுங்கள்" என்றான். அவர்கள் அரசன் தைரியத்தைப்பார்த்துத் திடுக்கிட்டு "ஓ இராஜசேகரா! நாங்கள் இப்பட்டணத்தை முற்று கைபோட்டுச் சண்டைக் கெதிர்பார்த்திருக்கும் அழகாபுரியை அர சாட்சி செய்யும் இரவிவர்மபூபதியின் தூதுவர்கள். அவ்வரசன் தங் களுக்கனுப்பிய திருமுகத்தைக் கொண்டுவந்தோம். தங்களுத்திர வென்ன?" என்று சொல்லிக்கொண்டு திருமுகத்தை அரசன் முன் வைக்க, அரசன் விக்ரமசேனனைப் பார்க்க, அவர் திருமுகத்தை யெடுத்து வாசிக்கலாயினர்:—

"மஹாராஜராஜ துங்கபுங்கக் குலசிரேஷ்ட வீரசேகர சிரோன் மணி இரவிவம்சோற்பவ மஹீபதி, அழகாபுரியை நீதிவழுவாது அரசாட்சி செய்துவரும் க்ஷிதிபாலவர்க்க ரத்தின சிரோன்மணி இரவிவர்மபூபதி திருவாய்மலர்ந்தருளியபடி, பாலைவனமாளும் குல சேகரராஜனுக்கு எழுதியனுப்பும் நிருபம் யாதெனில், தாம் நீதி தவறி நடப்பதுந்தவிர, தமது பிதாவின் சகோதரர் குமாரரும் நமது உத்தம நண்பருமான பராக்ரமசேகரப்பெருமானைத் தமது பிதா வால் நியமிக்கப்பட்ட சேனாதிபதி ஸ்தானத்தினின்றும் போக்கி, அவர் குமாரனும் போர்ச்சேவகனுமான தீரபராக்ரமசூர கோமள ளாங்கசேகரப்பெருமானை யாதொரு காரணமுமின்றிக் காராக்ருகத்தி லடைத்து, அவர் ஜேஷ்டபுத்திரனாகிய குலசிரேஷ்ட புத்திசாமார்த் திய புண்ணிய புருஷோத்தமரான சோமபாலசேகரப்பெருமானை ஆவர் அரண்மனையினின்றும் பட்டணத்தினின்றுந் துரத்திவிட்டீர்.

மேற்சொன்ன பராக்ரமசேகரப்பெருமாள் எழுது உத்தமநம்பரான படியால் அவருத்தம குமாரர்கள் எம்மிடம் அபயங்கோரினபடி அப யாஸ்தங் கொடுத்திருக்கின்றோம். அவர்களுக்கு இப்பாலேவனத்தைப் பட்டங்கட்டி அரசாட்சி செய்விக்கத் தீர்மானித்திருப்பதால் தாம் அரைக்ஷணமேனும் இவ்விராஜதானியிலிராது ஓடிப்போய் உயிர் தப்பிப் பிழைக்கலாம். அப்படியல்லவென்றால் யுத்தமுகத்தி லிறக்க லாம். இவ்விரண்டிலொன்று யாம் அனுப்பியிருக்கும் இத் தூதுவர்க ளிடந்தெரிவித் தனுப்பவேண்டும். அப்படி மறுமொழி சொல்லியனு ப்பாவிடில் இனியொரு கடிகைக்கெல்லாம் நீரிருக்குமிடந்தேடிப் பிடி த்துக் கொலைசெய்து பிறகு இவ்விராஜ்ஜியத்தை ஆள்வோமென்று தீர்மானித் திருக்குஞ்செய்தி தெரிவித்திருப்பது மன்றித் தமது இமிசை சகியாது தமது சேனைகள்யாவும் நம்மிடஞ்சேர்ந்த சங்கதி யும் தெரிந்துகொள்வீராக. இங்ஙனம், மஹாராஜ ராஜசேகர ரவி வர்மபூபதி பாதஸேவித சேனாதிபதி குடாரவிக்தன்."

இப்படி நிருபத்தைவாசிக்க அரசன்கேட்டுக் கண்களில்நெருப் புப் பொறிபறக்கக் கடுஞ்சினத்துடன் கலகலவென்று சிரித்துத் தூதுவர்களைப் பார்த்து "குலசேகரன் யுத்தத்திற்குப் பயந்து உயிர் தப்பிப் பிழைப்பவனல்லவென்றும், தன்சேனை சத்துருவைச் சார்ந் தாலும் உயிரிருக்குமட்டும் போராடுவானென்றும் போய் அந்தஇரவி வர்மனுக்கு உரையுங்கள்" என்று கடிந்து சொல்லியனுப்பிச் சேனா பதியை அழைத்து "நீயும் அவ்வரசனுக்கிணங்கிச் சேனையை அனு ப்பிவிட்டுஇனியென்னவஞ்சனைசெய்யயோசித்திருக்கிறாய்?" என்ன, அவன் அடியற்ற மரம்போல அவர் பாதத்தில் விழுந்து "அப்பனே! நானொருகாலும் புறங்கூறிப் பிழைப்பவனல்லன். சைன்னியம்போ யிருந்தால் என்னை யறியாமற் போயிருக்கவேண்டும். என்பேரிற் சந் தேகிக்கலாகாது. தேவரீருக்கு ஒருகுற்றமும் என் பிராணனிருக்கு மளவுஞ் செய்யேன். தேவரீர் பாதத்திற்படுவது அடியேன் நேத் திரத்திற் படுவதா யெண்ணியிருக்கிறேன். கடவுளறியச் சத்தியம்" என்று முறையிட்டுக்கொண்டான். அவன் முகக்குறியால் வஞ்சக னல்லவென்றறிந்து விக்ரமசேனனைப் பார்க்க, அவனும் "ஐயனே! வெகுகாலமாய்ச் சோமபாலன் செய்துவந்த இராஜத்துரோகத்திற் கிணங்கிச் சைன்னியங்களில் சில தலைவர்கள் சச்சரவுபண்ண, அவர் களை அகற்றிவிட்டேன். இப்போது அவர்களுஞ்சேர்ந்துவந்து சேனை களைத் திருப்பிக்கொண்டதுபோலிருக்கிறது. எல்லாம் கடவுள்செயல்.

என்னசெய்யலாம். சேனாதிபதிமேற் குற்றமில்லை" என்றான். அரசன் சேனாதிபனைப் பார்த்து "எமக்குத் துரோகஞ் செய்யாத சேனை ஏதேனுமிருந்தால் நடத்திவாவென்றனுப்பி யுத்தகோலம் பூண்டுவரும்படி தன் மந்திரிகட்கு உத்திரவளித்து அரண்மனை புகுந்தான். மந்திரிகள் அரசன் தைரியத்தைப் புகழ்ந்துகொண்டு ஆயுதம் தரித்து வெளிப்பட, அரசனும் ஆயுதந் தரித்துப் பத்தினிகளிடம் விடைபெற்று அரண்மனையைவிட்டுநீங்கி மந்திரிகளும் சேனாதிபனும் மிருந்தசேனையும் தன்னைச் சூழ்ந்துவர சிம்மத்தைப்போற் கர்ச்சித்தான். இதைக் கண்ட குடிகள் யாவரும் யுத்தகோஷம்பண்ணி ஆரவாரித்துச் சத்துருசேனைகளுடன் கலந்து யுத்தம் பண்ணினார்கள்.

அக்காலத்திற் பீரங்கியென்னும் பெருந்துப்பாக்கி அபூர்வம். சிறு துப்பாக்கிகள்கூட யுத்தத்தில் உபயோகப்படுத்தும்படி அவ்வளவு வழக்கத்திற்கு வராதபடியால் அதிக சிரேஷ்டமாயும் அற்புதமாயும் ஓர் இராஜாங்கத்தின் சைன்னியங்களின் முக்கியதலைவர் மாத்திரம் தரித்துவந்தார்கள். மற்றவர்களுக்குப் பெரும்பாலும் குந்தம், ஈட்டி, வாள், பரிசு முதலிய சஸ்திரங்களும் பலவித திவ்யாஸ்திரங்களும் தனுசும் முக்கியமான ஆயுதங்களாயிருந்தன. ஆகையால் இருசைன்னியங்களும் நெருங்கி ஆரவாரித்து யுத்தம்பண்ண, அழகாபுரத்தரசன் சேனையிற்பாதியும், குலசேகரன் சேனையில் முக்காலும் மாண்டன. இரவிவர்மன், குலசேகரப்பெருமாள் தைரியத்தையும் அவர் கரல்மாடு தலைமாடாய்ச் சேனைகளைவெட்டிச் சாய்ப்பதையும், அவரிடசாரியிலும் வலசாரியிலுஞ் சேனாதிபனும் விக்ரமசேனனும் அவரையகலாமல் நின்றுகொண்டு கடினமாய்ச்செய்யும் யுத்தத்தையும் பார்த்துத் திகில்டைந்து இவர்களை நம்மால் வெல்லமுடியாது. இனி என் செய்வதென்று ஏங்கிநின்றான். சோமபாலனுங் கோமளாங்கனும் அவனைத்தேற்றிச் சைன்னியங்களை யெச்சரித்துக் குலசேகரப்பெருமாள் சைன்னியத்தை யெதிர்க்க விடுத்துத் தாங்கள் இரவிவர்மனுடனும் மற்ற யுத்தவீரர்களுடனுங் குலசேகரப்பெருமாளைவளைந்து கடினமானபோராடிக் குலசேகரன்சேனாதிபனை துப்பாக்கியாற்சுடவே, அவன் அரசன்பாதத்தில் நமஸ்கரிப்பவன்போல் வீழ்ந்தான். இதற்குள் குலசேகரப்பெருமாள் சைன்னியம், பெரும் வெள்ளமாய் வந்திருக்கும் சத்துருசைன்னியத்துடன் போராடி நிர்வஹிக்கமாட்டாமல் ஓடத்தலைப்பட்டன. அரசனும் மந்திரியும் வெகுநேரமாய் சைன்னியங்களுடன் போராடிப் பிறகு அரசர்களுடன்

போராட நேரிட்டதனால் அதுவரையில் சும்மாவிருந்து அப்போது தங்களை எதிர்த்துவந்த அரசர்களுடன் யுத்தம்பண்ணி வெல்லுதல் எளிதாயிருக்கவில்லை. அரசன் பலவீனப்பட்டுக் களைத்துப் பூமியில் வீழ்ந்தான். உடனே விக்ரமசேனன் சத்துருக்களுக் கிடங்கொடாமல் அரசனைப் பாதுகாத்துத் தன்னுயிரையுங் காப்பாற்றிக்கொண்டு யுத்தம் புரிந்துவந்தான். இப்படித்தன்னாலானமட்டும் போராடி இனி முடியாதென்று தோற்றவே கோமளாங்கனைக் கொல்லவெண்ணி அவனுக்கு நேராய்த் தனது வாளை ஓங்கிப்பாய்ந்து வீசினான். இதற்குள் கோமளாங்கன் மறைந்துநிற்க அவனருகில்நின்ற குடாரவிந்தன் வெட்டுண்டிறந்து வீழ்ந்தான். சமயம்பார்த்து நின்றுகொண்டிருந்தசோமபாலனுங் கோமளாங்கனுந் துணைவரோடுஓடிச்சென்று குலசேகரப்பெருமாளையும் விக்ரமசேனனையும் பிடித்து அவர்களாயுதங்களையகற்றிச்சிறைப்படுத்தினர். இதுதெரிந்து மற்றச் சைன்னியங்களுங் குடிகளுந் தங்களாலானமட்டுஞ் சண்டைசெய்து அரசனையும் விக்ரமசேனனையுஞ் சிறைமீட்க முயன்றும் முடியாமற்போகவே புறங்காட்டி யோடினர். அழகாபுரத்தரசன் ஜயபேரிகையடித்துப் பட்டணத்துட் பிரவேசித்து அரண்மனைக்கெதிராய் வரப்பார்த்த இராஜபத்தினிகளுந் தோழிகளும் விக்ரமசேனன் பண்ணியிருந்த தந்திரத்தால் அரண்மனையைவிட்டுப் பிலத்துவார வழியாய் வெளிப்பட்டு விக்ரமசேனன் கிரகத்திற்குச் சென்று அவன் மனைவியுடனுந் தங்களுக்காய் எதிர்பார்த்திருக்கும் விஜயசேகரனுடனும் இரகஸ்யமாய் மாளவதேசம் நோக்கிச் சென்றனர்.

அழகாபுரத்தரசன், சோமபால கோமளாங்கர் சஹிதம் அரண்மனைசெல்ல அங்கெவருமில்லாததைக்கண்டு ஆச்சரியப்பட்டு இராஜபத்தினிகள் மறைந்துபோனமார்க்கம் அறியாதவர்களாய் அம்முயற்சியைவிட்டுப் பொக்கிஷத்தையும் இராஜாங்கத்தையு மபகரித்துக் குடிகளையடக்கி இரவிவர்மனுக்கே பட்டங்கட்டுவித்துச் சோமபாலன் முதன் மந்திரியாகவுங் கோமளாங்கன் சேனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டு இராஜ்ய பரிபாலனம் பண்ணிவந்தனர். பராக்ரமசேகரன் மரணகாலத்திற் சோமபாலனைக் கேட்டுக்கொண்டபடி குலசேகரப்பெருமாளையும் விக்ரமசேனனையும், கோமளாங்கனையும் விக்ரமகேதுவையு மடைத்திருந்த காராக்ரகத்தில் அடைக்கச்செய்தனர். இக்காரர்க்ரகங்கள் அறையி லடைக்கப்பட்டவர்கள் வெளிப்பட்டபிறகு மிகவும் பந்தோபஸ்தாய்ப் பிலத்துவாரங்களை யடைத்

துத் சக்கபடி கட்டப்பட்டிருந்தது. பிரஜைகள் இனிச்செய்வது யாது என்று அழகர்புரத்தரசனுக்குக் கீழ்ப்படிந்து மனமில்லாமன தாய் நடந்து வந்தார்கள். மஹாதேவர் யுத்தத்திற்தப்பித்துக்கொண்டு மாறுவேஷம்பூண்டு மாளவதேசஞ் சென்று அரசனையும் விக்ரம சேனனையும் சிறையில் வைகைகப்பட்டிருப்பதை மாளவராஜனுக்கும் இராஜபத்தினிகட்குந் தெரிவித்து அரசனைச் சிறைமீட்கவேண்டிய முயற்சி செய்துவந்தார்.

22. தத்துவ உபதேசம் (தொடர்ச்சி).

சிதம்பரசேகரனும் புகழேந்தியும் ஒருவர்க்கொருவர் ஆட்சேப சமாதானங்கள் செய்துகொண்டு மனதைத் திடப்படுத்திக் குருவாக் கியங்களை நினைத்து அவரைப் பலவாறு தோத்திரம்பண்ணி நாட் கழித்துவரும்போதுஒருநாள், அம்மன் சன்னிதிக்குத் தரிசனார்த்தம் போயிருக்க அங்கு யோகீஸ்வரரைத் தரிசித்து அஞ்சலியஸ்தராய் நின்றார்கள். யோகீஸ்வரரும் அவர்களை அழைத்துக்கொண்டு தன தாச்சிரமஞ்சென்று உட்காரவைத்துச் சிதம்பரனைப் பார்த்து "உன் னை யழைத்துவரவே சன்னிதானத்திற்கு வந்தேன்" என்றார். சிதம் பரன் குருவை நமஸ்கரித்து "கருணைக்கடலான தேவரீர் பெருமை என்னாலுரைக்க முடியாது. தேவரீர் சித்தம் என் பாக்கியம்" என் றான். "நீ முன் கேட்ட கேள்விக்கு நீயே நிவர்த்தி தேடினாயா?" என்றுகேட்ட யோகீஸ்வரரை வணங்கி "அடியேன் நிவர்த்திசெய்து கொள்ளவில்லை. ஏதோ கொஞ்சங் குழப்பமாகத் தோற்றுகிறது. தேவரீர் கிருபை செய்யாவிடில் விளங்காது" என்று சிதம்பரன் உரைக்க, யோகீஸ்வரர் "ஓ குழந்தாய்! சர்வவியாபியாகிய கடவுளுக் கும் ஸ்வரூபத்திற்கும் வித்தியாசமில்லாது உரைத்தகாரணமென்ன? என்று நீ கேட்டாய். நான் சொல்லுவதைச் சற்றே கவனித்துக் கேள். "சுத்தப்பிரமத்தினிடஞ் சோதியிற் கலந்திருக்கும் அனற் போல், ஓர் சக்தி கலந்துளது. அச்சக்தி வெளிப்பட்டு சுத்தப்பிர மத்தை மறைத்தலால் அதற்குப் பரப்பிரம்மம் எனப்பெயர் வந் தது. இந்தப் பரப்பிரம்மத்தினிடத்திற் சாத்வீகம், இராஜஸம், தாம ஸம் என மூன்று குணங்கள் பிறக்கின்றன. அப்பரப்பிரம்மம், சாத் வீக குணத்தை வகிக்கும்போது பரமானந்தன் என்றும், ரஜோ

குணத்தை வகிக்கும்போது பரிபூரணன் என்றும், தமோகுணத்தை வகிக்கும்போது பரன் என்று மழைக்கப்படுவதுமன்றிச் சத்து, சித்து, ஆனந்தமென்னும் மூன்றவஸ்தைகளை யுடைத்து அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரம்மம் எனப்பேர் தரிக்கிறது. இந்தச் சச்சிதானந்த பிரம்மத்தினிடம், கானலில் ஜலந்தோற்றுவது போற் கற்பனை அல்லது ஆரோபத்தால் ஒரு சக்தி தோன்றும். இதற்கு மூலப்பிரகிருதி என்றுபெயர். இப்பிரகிருதியில் மேற்சொன்ன மூன்று குணங்களும் வியக்தமாகும். பிரகிருதியின் சாத்விக குணத்திற்கு மாயை, ரஜோகுணத்திற்கு அவித்தை, தமோகுணத்திற்கு ஆவரணம் விக்ஷேபம் என இரண்டு சக்திகள், என்பார்கள். மாயையில் பிரதிபிம்பித்த பிரம்மத்திற்கு ஈஸ்வரன் எனப்படும். இந்த மாயையில் மூன்று குணங்களும் அடங்கியிருக்கும், அதனால் அதில் பிரதிபிம்பித்தஈஸ்வரனுக்கும் மூன்றுகுணங்களும் உண்டாம். இவைகளில் சாத்விகத்திற் சாத்விகம் ரக்ஷிப்பதும், சாத்விகத்தில் ரஜஸு சிருஷ்டிப்பதும் சாத்விகத்தில் தாமஸம் ஸம்ஹரிப்பதுமாம். இந்த மாயையே, ஈஸ்வரனுக்குக் காரணசரீரம், சுழுத்தியவஸ்தை ஆனந்தமயகோசமுமாம். அவித்தையிற் பிரதிபிம்பித்த பிரம்மத்திற்குச் சிதாபாசர் அல்லது ஜீவகோடிகள் என்று பேர். இந்த அவித்தை; வெள்ளை, சிவப்பு, கறுப்பு என்று மூன்று வர்ணங்கள் கலந்தது போற் பலவர்ண அழுக்காகையால், இதிற் பிரதிபிம்பிக்கும் பிரதிபிம்பங்களும் அப்படியே பலரூப பேதங்களாயிருக்கும். இது ஜீவகோடிகட்குக் காரணசரீரம், சுழுத்தியவஸ்தை, ஆனந்தமயகோசமுமாம். தமோகுணப் பிரதிபிம்பமான ஆவரண விக்ஷேபங்களில், (1) ஆவரணம் (மூடல்) இது ஜகதீஸ்வரனையும் தத்வக்ஞானிகளையும் தவிர மற்ற ஜீவர்களனைவற்றையும் மூடியிருக்கும். அதாவது, அவைகட்குக் காரணசரீரங்களின் பேதமும், சிதாபாச சைதன்யர், சாக்ஷி என்பவைகளின் பேதங்களும் தெரியவொட்டாமல் மறைத்து, தத்துவாதிகளின் தொழில்களனைத்தையும் தனது தொழிலாக அபிமானிக்கச்செய்து, பாசபந்தங்களிற் கட்டுண்டு, ஜனன மரண முதலிய துக்கத்திலாழ்ந்து கிடக்கச்செய்யும். (2) விட்சேபம் (தோற்றம்) இந்த விட்சேப சக்தியினிடமாய் ஆகாயமும், ஆகாயத்தினிடமாய் வாயுவும், வாயுவினிடமாய் அக்கினியும், அக்கினியினிடமாய் அப்புவும், அப்புவினிடமாய்ப் பிருதிவியும் தோன்றும். பிருதிவி, அப்பு, தேயு, வாயுவென்னும் இந்த நான்கும், ஆகாயத்தினிடம் ஐக்கியமாயும், அந்த ஆகாயம் சப்தரூபமாயிருத்தலால், இவைகட்கு சூக்ஷ்ம பஞ்ச

பூதங்களென்றும், 'இவை அற்பமாய்த் தனித்தனியா யிருத்தலால் நொய்ய பூதங்களென்றும் சொல்லப்படும். மாயையில் பிரதிபிம் பித்த பிரம்மப்பிரதிபலனமான ஈஸ்வரன் ஜீவகோடிகட்குப் போக சாதன முண்டாகும்படியாய் இந்த சூட்சும பூதங்களினின்று சூட் சுமதேகமளித்தனர். எப்படியெனில், மேற்சொன்ன சூட்சுமபூதங் களுக்குச் சாத்வீக இராஜஸ தாமசகுணங்களிருப்பதால் அவற்றின் சத்துவகுணங்களை யிரண்டிரண்டாய்ப் பாகித்து அந்தக்கரணங்களை யும் ஞானேந்திரியங்களையும் அமைத்து, இராஜோகுணங்களை இரண் டிரண்டாய்ப் பாகித்துப் பஞ்சவாயுக்களையும் கர்மேந்திரியங்களையும் அமைத்தனர்.

			அந்தக்கரணம்.		ஞானேந்திரியம்.
சூட்சும ஆகாயத்தின்	சத்துவ குணத்தின்	முதற் பாதி,	உள்ளம்	பிற் பாதி,	சுரோத்திரம்,
,, வாயுவின்	,,	,,	மனம்	,,	துவக்கு,
,, அக்கினியின்	,,	,,	புத்தி	,,	சட்சு.
,, அப்புவின்	,,	,,	சித்தம்	,,	ஜிஹ்வை,
,, பிருதிவியின்	,,	,,	அஹங்காரம்	,,	ஆக்ராணம்,

இவை பத்தும் ஞானஸாதனங்களுக் குபயோகமானவை.

			பஞ்சவாயுக்கள்.		கன்மேந்திரியம்.
சூட்சும ஆகாயத்தின்	ரஜோ குணத்தின்	முதற் பாதி,	வியானன்	பிற் பாதி,	வாக்கு.
,, வாயுவின்	,,	,,	பிராணன்	,,	பாணி,
,, அக்கினியின்	,,	,,	அபானன்	,,	பாதம்.
,, அப்புவின்	,,	,,	சமானன்	,,	பாயுரு.
,, பிருதிவியின்	,,	,,	உதானன்	,,	உபஸ்தன்,

இவை பத்துங் கிரியாசாதனத்திற்கு உபயோகமானவை. இவ் விருபதும் சூட்சுமதேகமாம்,

இப்படியே ஜீவர்கள் போகபோக்கியங்களை அனுபவிக்கும் பொருட்டு சூட்சுமபூதங்களின் தமோகுணங்களைப் பஞ்சீகரித்து ஸ்தூலதேகத்தை உண்டாக்கினார். எப்படியெனில்:—

சூட்சும பூதங்களின் தமோகுணங்களில் ஒவ்வொன்றை இரண் டிரண்டாகப் பாகித்து, அவைகளின் ஒரு பங்கை நன்னான்காய்ப் பாகித்து, ஒருபூதத்தின் பாதிப்பங்கும் மற்றநான்குபூதங்களின் பாதி களில் நான்கிலொன்றுஞ் சேர்த்து ஒரு ஸ்தூலபூதம் உண்டாக்கப் பட்டது. அதாவது:—

சூட்சும ஆகாயத்தின் அரையும், சூட்சுமபிருதிவு, அப்பு, தேயு, வாயு இவைகளின் தமோகுணங்களின் அரைக்காலரைக்காலும் சேர்ந்து ஸ்தூல ஆகாயமுண்டாயிற்று. சூட்சுமவாயுவின் தமோகுண அரையும் மற்றவைகளின் அரைக்காலரைக்காலுஞ் சேர்ந்து ஸ்தூல வாயு உண்டாயிற்று. சூட்சுமதேயுவின் தமோகுண அரையும் மற்றவையின் அரைக்காலரைக்காலுஞ்சேர்ந்து ஸ்தூல அக்கினி உண்டாயிற்று. சூட்சும அப்புவின் தமோகுணப்பாதியும் மற்றவையின் அரைக்காலரைக்கால் பங்குகளுஞ்சேர்ந்து ஸ்தூல அப்பு உண்டாயிற்று. சூட்சும பிருதிவியின் தமோகுணப் பாதியும் மற்றவைகளின் அரைக்காலரைக்கால் பங்குகளுஞ் சேர்ந்து ஸ்தூலபிருதிவி உண்டாயிற்று.

இவைகளினின்று ஸ்தூலதநு உண்டான மார்க்கம் முன்னமே (20-ம்தரங்கம்)சொல்லிவந்தேனே. இப்போது பிரம்மம்முதற் சரீரிகள்வரையில் சுருக்கி உன்மனந் திடப்படும்படி உரைத்தேன். இனி நன்றாயோசித்து உனக்கும் ஜகதீஸ்வரனுக்கும் இருக்கும் வித்தியாசம் என்னவென்று சொல்வாய்'' என்றார்.

“ஓ ஸ்வாமி! நான், பிரம்மப்பிரதிபிம்மம் என்றும், பிரம்மத்திற்கும் ஸ்வரூபத்திற்கும் பிரம்மப்பிரதிபிம்ம பேதமேயன்றி வேறொரு பேதமுமில்லை என்றும் உணர்ந்தேன். தேவரீர் கிருபையை என்னவென்றுரைப்பேன்'' என்று சிதம்பரன் கைகூப்பி நின்றான்.

“ஓ சிதம்பரசேகரா! இன்னுங்கேள்! நூறு கண்ணாடிகளைச் சுற்றும் வைத்து நீ அவைகளின் மத்தியில்நின்றால், உனது ரூபம் அந்த நூறுகண்ணாடிகளிலும் பிரதிபிம்பிக்கிறதன்றோ? அதனாற் கண்ணாடிகட்கும் அவைகளிற் காணும் பிரதிபிம்பங்கட்கும் என்ன சம்பந்தம் சொல்லக்கூடும்? அவைகளை எடுத்தெறிந்துவிட்டு வேறு கண்ணாடிகளை வைக்கின் அவைகளிலும் பிரதிபிம்பங் காணப்படுகிறது. இது போன்று பிரம்மஸ்வரூபம் பல சரீரங்களிலும் பிரதிபிம்பித்திருக்கிறதென்றும், அச்சரீரங்கள் நசித்து வேறு சரீரங்கள் வரின் அவைகளிலும் பிரதிபிம்பிக்கிறதன்றி வாஸ்தவத்தில் பிரதிபிம்பங்களுக்கும் கண்ணாடிகட்கும் எவ்விதம் சம்பந்தமில்லையோ, அவ்விதமே சரீரங்கட்கும் ஸ்வரூபத்திற்கும் சம்பந்த மில்லையென்றும், கண்ணாடிகளிற் காணும் பிரதிபிம்பங்கள் உன் ரூபத்திற்கு எப்படிச் சம்பந்தமாயிருக்கிறதோ அப்படியே ஸ்வரூபமும் பிரம்மத்திற்குச் சம்பந்தப்பட்டு அப்பிரம்மத்துடன் சேர்ந்து ஐக்கியமாயிருக்கிறதென்

றுணர்வாய். இப்படித் தெளியாமலிருப்பதற்காய் ஆவரணசக்தி தனது ஏழுவஸ்தைகளால் ஜீவர்களை மூடியிருக்கும். அப்படியில்லாவிடில் பிரம்மஸ்வரூபஸ்மரணை எல்லாருக்கும் உண்டாயிருக்கும். அவையாவன:—

(1) அஞ்ஞானம்:—இத்தேகத்தையே தானாகப்பாவித்து இந்திரியங்களின் தொழில்களைத் தனது தொழிலாக அபிமானித்திருப்பது.

(2) ஆவரணம்:—கடவுளொருவர் உண்டென்பது பொய். பந்தம், மோக்ஷம் என்பவை இல்லையென் றெண்ணியிருப்பது.

(3) விக்ஷேபம்:—கடவுளொருவ ரில்லாவிடில் சிருஷ்டி ஸ்திதி சம்மாரம்முதலியவை உண்டாகா என்றெண்ணித் தெய்வபக்தி மேலிட்டுச் சற்சங்கத்திற் பழகிவருதல்.

(4) பரோக்ஷம்:—குருவைத்தேடிப் பிரம்மத்தைக் குறிப்பாய் அறிவது.

(5) அபரோக்ஷம்:—தத்துவ விசாரத்தாற் கூடஸ்தனாக விளங்குதல்.

(6) துக்கநிவர்த்தி:—ஜீவேஸ்வரபேதம் நீங்கி ஒன்றுவது.

(7) ஆனந்தம்:—துக்கம் நீங்கி எல்லாம் அடைந்தோம் என்னுஞ் சந்தோஷம்.

இவைகளில், அஞ்ஞானமும் ஆவரணமும் அசுத்தமாயாசம்பந்தம். மற்றவை இரண்டும், சுத்தாசுத்த மாயா சம்பந்தம். மிகுந்த மூன்றும் சுத்தமாயாசம்பந்தம். இவைகளைத் திருஷ்டாந்தமாயறிய ஓர் சிறுகதையுளது கேள். பத்து மனிதர்கள் வெள்ளப்பெருக்கெடுத்த ஓர் ஆற்றைக் கடந்து அக்கரை சென்று ஒவ்வொருவனும் தன்னைவிட்டு எண்ணினதில் ஒன்பதுபேர்மாத்திர மிருக்கக் கண்டு ஒருவனைக் காணோமேயென்று துக்கிக்க, வழியிற்போவோ னொருவன் அவர்கள் துக்கத்தைப் பார்த்து எண்ணினவனைச் சேர்த்துப் பத்தாவான் நீ என்று காண்பிக்க, அவர்கள் துக்கந் தீர்ந்துபோயினர். இதில் எண்ணின தன்னைப் பத்தாம் மனிதனென்று அறியாதது அஞ்ஞானம். பத்தாம் மனிதனைக் காணோமே யென்றது ஆவரணம். துக்கித்தது விக்ஷேபம். காண்பித்தபோது பத்தாவானென தன்னைக் கண்டது பரோக்ஷம். துக்கம் தீர்ந்தது அபரோக்ஷம். பதின்மருமிருக்கிறோம் என்று சந்தோஷித்ததுவே ஆனந்தமாம். அபரோக்ஷத்தால் பரோக்ஷஞானமும், விக்ஷேபத்தின் காரியமான திருசியமும், துக்கநிவர்த்தியால் ஆவரணமும், ஆனந்தத்தால் அஞ்ஞானமும் நீங்கும்.

பிரம்ம கூடஸ்தசம்மந்தம் உணரும்படி மகான்கள் சைதன்ய சதுஷ்டயம் என்னுமோர் திருஷ்டாந்தம் உரைத்திருக்கிறார்கள். அதையுங் கேட்பாயாக. (1) மஹா ஆகாயம், (2) மேகாகாயம், (3) (3) கடாகாயம், (4) கடஜல ஆகாயம் என நான்குவிதமுள. அவற்றுள் மஹாகாயம் எங்கும் நிறைந்துளது. மேகாகாயம் மேகஜலத்திற் பிரதிபிம்பித்திருப்பது. கடாகாயம் ஓர் குடத்தி லடங்கியிருக்கும் ஆகாயம். கடஜல ஆகாயம் அக்குடத்தில் ஜலம் நிறைந்திருக்கின் அந்த ஜலத்தில் பிரதிபிம்பித்திருக்கும் மகாகாயமாம். இவைகளில் மகாகாயம் பிரம்மத்திற்கும், மேகாகாயம் ஈஸ்வரனுக்கும், கடாகாயம் கூடஸ்தனுக்கும் (ஸ்வரூபத்திற்கும்) கடஜலவாகாயம் ஜீவனுக்குங் கூறப்படும். கடத்திலிருக்குமாகாயம் கடமுடைந்தவுடன் எங்கும் பூரணமாயிருக்கும் மகாகாயத்திற் கலந்துவிடுவது போல ஸ்வரூபம் கடத்தையொத்த தேஹமிறந்தவுடன் பிரம்மத்துடன் கலந்துவிடும். மேகாகாயமும் கடஜலவாகாயமும் வெறும் பிரதிபிம்பங்களாகையால் மேகம் மறைந்தவுடனும் கடஜலத்தைக் கொட்டிவிட்டவுடனும் மறைந்துபோவதுபோல ஈஸ்வரனுஞ் சீவனும் ஆரோபத்தால் உண்டான கற்பிதமே தவிர வாஸ்தவத்தில் இருப்பதல்ல. இது பிரபஞ்சாவஸ்தையாகையால் இந்தப பிரபஞ்சம் ஞானத்தாற் கெட்டவுடன் இவை மறைந்துபோம். இப்போது னது சந்தேகம் நிவர்த்தியாகவில்லையா?"

சிதம்பரன்:—"ஸ்வாமி! சந்தேகம்நிவர்த்தியாவதற்குத்தடையாதுளது? தேவரீர் எனது அன்னையைவிடத் தயாநிதியா யிருக்கிறீர்களே! இதற்குமேல் எனக்கு லபிக்கவேண்டிய பாக்யம் யாதுளது? இப்போது தேவரீர் எடுத்துரைத்த ஏழவஸ்தைகளிற் பரோக்ஷஞானமென்பது குருவைத்தேடி ஸ்வரூபஞானம்பெற்று அதையுணர்ந்தபடி நிஷ்டைசாதிப்பதெனவும், மற்ற அபரோக்ஷம்முதல் மூன்றும் பரோக்ஷத்தாற் கிடைக்கவேண்டுவதென்றுங் குறிப்பிட்டருளிச்செய்தீர்களே. ஆகையால் அடியேன்பேரில் கிருபைசெய்து ஸ்வரூபநிஷ்டையை உபதேசித்தருளவேண்டும். இனியொரு க்ஷணமேனுங் காலதாமதமின்றித் தேவரீர் கருணையாற் கடைத்தேறக் கிருபைசெய்யவேண்டும்" என்றுகூறி நமஸ்கரித்தான். யோகீஸ்வரர் மகிழ்ந்து அவனை உட்காரவைத்து அவனது சிரசினிற் தன்கரத்தை வைத்து "ஓ குழந்தாய்! உனக்கு ஸ்வரூபஞானம் உதயமாய் அனுபவமாகும்பொருட்டுச்சாமவேத மஹாவாக்கியத்தை உபதேசிக்கின்றேன். கவனமாய்க்கேள். அந்த மஹா வாக்கியமானது "தத்வமசி"

என்பதாம். இதன்பொருள், "தத்" என்றால் "அது", "த்வம்" என்றால் "நீ", "அசி" என்றால் "ஆனாய்" என்பது. இப்படி உரைப்பதற்குப் பதங்களின் அர்த்தம், அல்லது பதார்த்தம் எனப்படும். "தத்" என்றால் "பிரம்மம்", "த்வம்" என்றால் "ஸ்வரூபம்", "அசி" என்றால் இவ்விரண்டிற்குமிருக்கும் "ஐக்கியம்". இதற்கு லக்ஷ்யார்த்தம் எனப்படும். "தத்" எனில் "ஈஸ்வரன்", "த்வம்" எனில் "ஜீவன்" இவ்விரண்டும் தோன்றியழிவது. இரண்டும் ஐக்கியமாகாமல் வேறாகவேயிருக்கும். இதற்கு வாச்சியார்த்தம் என்றுரைப்பார்கள். லக்ஷியார்த்தப்படி "பிரம்மம்" "நீ" "ஆனாய்" என்பதை யுணர்ந்து, "அது" "நீ", "நீ" "அது" என்னுமுண்மையைத்தெரிந்து ஆத்மாவே பிரம்மமெனும் அசிபதார்த்த உண்மையை யுணரில் மற்றத் தத்துவவாதிகளின் புணர்ச்சியற்றவனாய்த் தனியாயிருப்பாய். இப்படி யுணர்வது குழப்பமாகில் அதற்கு மூன்று இலக்கணையுண்டு. அவையாவன:—(1) விட்ட இலக்கணை, (2) விடாதவிலக்கணை, (3) விட்டும்விடாத இலக்கணை எனவாம். இவைகளில் "த்வம்" பதார்த்தத்தை விட்ட இலக்கணையால் தரிசிக்கவேண்டும் அதாவது, ஸ்தூலம்முதல் அவித்தைவரையில் யாவற்றையும்விட்டு அவைக்கு விலட்சணமான கூடஸ்த சைதன்யத்தைத் தரிசிப்பதாம். தற்பதார்த்தத்தை விடாத இலக்கணையால் இச்சைதன்யத்தைவிடாமல் ஆனந்தோபிரம்மத்தைத் தரிசிப்பதாம். ஆனந்தமின்றி யறிவும் அறிவின்றி ஆனந்தமும் இல்லாததால் அவைகளின் பேதமான; துவிதத்தைவிட்டு அத்வைத வஸ்துவைத் தரிசிப்பது, விட்டும்விடாத இலக்கணையாம். இதனால் முன்சொன்னபடி ஈஸ்வரனும் ஜீவனும், மேகாகாய கடஜலவாகாயங்கள்போல் பொய். பிரம்மமும் கூடஸ்தனும், மகாகாய கடாகாயங்களைப்போல் நிஜம் என்றுணர்வது. இப்படியுணர்ந்து நிஷ்டை பழகும்போது அதை விக்கினம் பண்ணும்படி மூன்றுதடை நேரிடும். அவை (1) அஞ்ஞானம்: பிரம்மத்தை மறைத்து ஈஸ்வரனைக்காட்டுவது, (2) சந்தேகம்: குருவுபதேசத்தில் நம்பிக்கை யில்லாமற்போவது, (3) விபரீதம்: உலகம் மெய்யென்றும் அப்படியே தேகமே நான் என்றும் தோற்றுவது. நீ இதைக்கேட்டு வாடாதே. இவை நேரிடில் அவைகளை நிவர்த்திபண்ணும்படி மூன்று வழிகளுண்டு. (1) கேட்டல், தத்துவஞான விசாரணையைக் கேட்குதல். இதைச் சிரத்தை பக்தியுடன் கேட்பதால் அஞ்ஞானம்போம். (2) அதை இடைவிடாது விசாரிப்பதாற் சந்தேக நிவர்த்தியாம். இதற்குச் சிந்த்தல் எனப்பெயர். (3) தெளிதல்: நிஷ்டையிலிருந்து ஸ்வானுபூதியைத்

தரிசித்தலாம். இதனால் விபரீதமும் நீங்கும் என்றறிவாய். இப்படித் தெளிந்தவர்கட்கே ஜீவன்முக்தர்கள் என்றுபேர். ஜீவன் முக்தர்கள் நாலுவிதமாயுளர். (1) பிரம்மவித்து: இவர்கள் லோகோபகாரார்த்தம் உலகத்தோடு கலந்து தண்ணீரிலிருக்குந் தாமரையிலைபோல் உலகத்துடன் பற்றியும் பற்றாமலுமிருந்து சற்கருமங்கள் முதலியவற்றைச்செய்து வாழ்வார்கள். இவர்கள் எந்தத் தொழில் செய்பினுஞ்செய்யலாம். அத்தொழில்களின் தோஷகுணம் இவர்கட்கில்லை. இவர்கள் சென்றதை நினைந்து வாடுவதும் வருவதையெண்ணி ஆனந்தமுங்கொள்ளாது நிகழ்வதில் வருவதைச் சுகதுக்கமின்றி பிராரப்தமென்றும் பொறுமையுடன் அநுபவிப்பார்கள். இவர்கள் மனமடங்கி அனுபவமாய்நிற்றலால் என்னவிசேஷம் நடக்கினும் அதை ஆச்சரியமாக எண்ணார்கள். எல்லாம் பிரம்மலீலை என்றிருப்பார்கள். (2) வரன், (3) வரியான், இவ்விருவரும் சமாதிஞானத்தை அடைந்திருப்பார்கள். வரன்: தேகசஞ்சாரத்தின்பொருட்டு உணவு முதலியவைகளைத் தேடிப் புசித்து உண்பார். வரியான்: அன்னியராகிய சிஷ்யவர்க்கம் முதலானவர்களால் உணவு முதலியவற்றைப் புசித்தறிவார். தன்னாலும் இதரர்களாலும் உணவுமுதலியவற்றைக்கொள்ள அறியாதவர் நாலாவதான வரிட்டன் என்பவர். இவர் சமாதியிலதீதமானவர் என்றுணர்வாய். இந்த நால்வருக்கும் பதவி ஒன்றாயிருந்தாலும், பிரம்மவித்து பிராரப்தத்தால் நேரிடும் அளவற்ற துன்பம் அனுபவிப்பவர். மற்ற மூவரும் நிரதிசயானந்தமாய் வாழ்பவர். இதுவே இவர்களின் தாரதம்மியம். பிரம்மவித்தான ஞானிகள் உலகத்தோடு கலந்திருத்தலால் அவர்களுக்கும் உலகத்தாருக்குமுள்ள வித்தியாசம் யாதெனில், ஞானிகள் ஆகாயத்தைப்போல எங்கும் நிறைந்தும் ஒன்றுடனும் பற்றாமலிருப்பர். இவர்களைப் பூசிப்பவர்கள் திருமூர்த்திகளைப் பூசித்த பலனடைவார்கள். இனி விதேகமுக்தர்கள் விசேஷத்தையுஞ் சொல்கின்றேன் கேள். இவர்கள் சஞ்சிதம், ஆகாமியம், பிராரப்தம் என்னும் மூன்றையும் நாசஞ்செய்து தேகம் நீங்கினவுடன் ஆதிமத்தியாந்தரஹிதமான விதேகமுத்தியை யடைவார்கள். அதெப்படியெனில், சஞ்சிதம்: சென்ற ஜன்மங்களிற்செய்த பாபகர்மங்களால் இனிமேலநுபவிக்கவேண்டிய சுகதுக்கங்கள். இதை ஞானிகளாமவர் தங்கள் ஞானமென்னும் அக்கினியால் எரித்துவிடுவார்கள். ஆகாமியம்: நிகழ் ஜன்மத்திற்செய்யும் பாபகர்மங்களை இனிமேயார் ஜன்மத்தில் அநுபவிக்க நேரிடுபவை. இவைகளை ஒரு ஜன்மத்தில்

அனுபவித்துத் தீராஷிடில் இனி அனுபவிக்கவேண்டிய மிகுதி சஞ்சிதத்தோடு சேர்ந்துவரும். இவைகள் ஞானிகளை நெருங்காமல் நீங்கும். பிராரப்தம்: நிகழும் ஜன்மத்தில் அனுபவிப்பது. இதை ஞானிகள் மூன்றுவிதமாய் அனுபவித்து நீக்குவர். எப்படியென்றால், ஞானியை மூடர்கள் நிந்திப்பதால் அவர்கள் ஞானிகளின் பாபத்தை யேற்றுக்கொள்வர். சாதுக்கள் ஞானிகளைப் பூசிப்பதால் அவர்களின் புண்யகர்மங்களைக் கவர்ந்துண்பர். நிகழும் பிராரப்தத்தை யனுபவித்து நீக்குவர். காலாந்தத்தில் ஸ்தூலதேஹம் இறக்கில் சூட்சுமதேஹம் ஸ்வரூபத்தில் அடங்கும். ஞானக்கினியாற் காரண சரீரம் நீங்கும். ஆகையால், தேகமிறந்தவுடன் முன் சொன்னபடி விதேகமுத்தியை யடைவார்கள்.

இப்படி உபதேசித்துக் கடவுளைப் பிரார்த்தித்து அவனுக்கு அனுபவமாகும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று பலவாறு ஈஸ்வரரைத் துதித்துப் பிறகு யதாஸ்தானத்திருந்து "அப்பா சிதம்பரா! இனி நீயோர் ஏகாந்தவிடத்திற் சென்று நான் இதுவரையிற் போதித்தவைகளை ஒரு தரத்திற்குப் பத்துதரம் நினைத்து விசாரஞ்செய்து ஆக்ஷேப சமாதானங்கள் பண்ணிக்கொண்டு மனதைத் திடப்படுத்தி மகாவாக்கிய உண்மையைக்குறித்து ஏகாக்கிரசித்தனய் யோசித்துத் தனியாயிருக்கப் பழகுவாய். அப்படிப் பழகாவிட்டால் ஒன்று முனக்குப் பிரயோசனப்படாது. ஆகையால் இனித் தாமதம்பண்ணுதே. உன்றேழனுனக்குத் துணையாயிருப்பன்" என்னச், சிதம்பரன் வணங்கி, "ஸ்வாமீ! தேவரீரைவிட்டுப் பிரிதலாற்றேம். தேவரீருக்குப் பணிவிடை செய்துகொண்டு இவ்விடத்திலேயே ஓர் ஏகாந்த ஸ்தானத்திருப்போம்" என்றான். "ஓ குழந்தாய்! உன் இஷ்டப்படி செய்யலாம். ஆனல் நான் உன் கண்ணுக்கெப்போதும் புலப்படமாட்டேன். நீ தனியாயிருப்பது நலம். ஆகையால் எட்ட ஓரிடத்திருந்து பழகு. யாம் சொல்வதைக் கேள்" என்றுரைத்து, அவர்களிருவரையு மழைத்துக்கொண்டு அம்மன் சன்னிதானத்திற்குப்போய், ஸ்துதித்துப்பாடி அடுத்த வோர் வனத்திற் சென்று ஓர் ஏகாந்தவிடத்தைக் காட்டி ஆச்சிரம மிபற்றச்செய்து அதில் சிதம்பரனைப் பத்மாசனத்திருத்தி மஹாவாக்கிய தியானம் பண்ணும் முறையையு முபதேசித்துத் தியானிக்கச்செய்து பிறகு எழுந்திருக்கச்செய்து சொல்லுவார்: "ஓ குழந்தாய்! இது ஒரு க்ஷணத்திலும் ஒருநாளிலும் பழகுவதல்ல. மனம்பொறுத்து நானுரைத்தவை

யெல்லாம் ஆதியோடந்தமாய் நினைத்து விசாரணை பண்ணிக்கொண்டு தினந்தோறும் உனது நித்திய கடன்களை முடித்துப் பக்வத் சேவைசெய்து உணவருந்தி, மனம் சலிக்காம லிருக்கவேண்டிய யாவற்றையும் முடித்துத் திடச்சித்தமாய்க் கொஞ்சங் கொஞ்சம் பழகுவாய்" என்று கூறிப் புகழேந்தியைப் பார்த்து, "நீ இதுவரையில் எல்லாங் கேட்டிருந்தவனாகையால் நீயும் பழகலாம். அப்படி இன்றேல் உன் வைராக்கிய விரதப்படி சிதம்பரனுக்குக் காவலிருந்துகொண்டு மனோசமாதான முண்டாகும்போது பழகிவரலாம்" என்றுகூறி அவர்களை அங்குவிட்டு விடைபெற்றுத் தனதாச்சிரமஞ் சென்றார்.

புகழேந்தியும், சிதம்பரசேகரனும் ஆசாரியருத்திரவுப்படி அவ்வனத்தில் வாசஞ் செய்துகொண்டு அவருபதேசித்த சூட்சுமங்களையெல்லாம் ஆராய்ந்து வாதம்பண்ணி மனதிலுறுதிபண்ணி நிஷ்டை சாதித்து மனோசலனங்களை நாளுக்குநாள் அடக்கி மனதை வசப்படுத்தி அடிக்கடி சுப்பிரமண்யஞ் செல்வதும் ஸ்வாமிதரிசனம் பண்ணிப் பாடித் துதித்துத் திரும்பித் தாங்களிருக்கும் வனம்வருவதும், அம்பிகா தரிசனம் பண்ணுவதுமாய் நாட்கழித்து நிஷ்டை பழகிவருவாராயினர். இதற்குள் சிதம்பரசேகரனுக்கு இருபது வயதுமாய்விட்டது. புகழேந்தி தனக்குள், இராஜகுமாரன் விஷயத்தில் ஆனந்தங்கொண்டவனா யிருந்தாலும் அவன் இனி இரண்டு வருஷத்திற்குள் சத்துருவா லிறக்கவேண்டியவனா யிருக்கிறானே! என்னும் வியாகுலமேலீட்டால் விசனமடைந்து, இதைச் சிதம்பரனுக்குத் தெரிவிக்காமலே காலங்கழித்து, "சத்துரு எங்கேயிருந்து வருவானோ; எல்லாம் தியாகஞ் செய்திருக்கும் இப்பரமசாதுவுக்குச் சத்துருவு முண்டாகலாமோ கடவுளே! நீரே கடாக்ஷிக்க வேண்டும்" என்று ஈஸ்வரனைப் பிரார்த்தனைசெய்து தோழனுக்குப் பணிவிடை செய்துவந்தான்.

23. விஜயன் சிதம்பரசேகரனைக் காண்பது.

அழகாபுரத்தரசனாகிய இரவிவர்மராஜன், சோமபாலனென்னும் முதன் மந்திரியுடனும் கோமளாங்கனென்னுஞ் சேனாதிபதியுடனும் பாலவனத்தை யபகரித்து இராஜ்யபரிபாலனம் பண்ணிவருமொருநாள் காராக்கிரகஞ்சென்று குலசேகரப்பெருமாளையும் விக்ரமசேனனையும் பார்த்து, அவர் சக்கரவர்த்தியாயிருந்தபோது அனுபவித்து

வந்த சுகத்திற்கும், 'இப்போது படுந்துன்பத்திற்குஞ் சமமாயிருக்கிறதென்று சொல்லிக் கலகலவென்று சிரித்தான். குலசேகரப்பெருமாள் தேகம்மெலிந்து மனம்வாடி நடப்பதற்குஞ் சக்தியின்றி வருத்தமுற்றிருக்க, இரவிவர்மன் சிரித்ததைப்பார்த்துக் கடவுளைத் துதித்து வருந்துவாராயினர்.

"ஓ கங்காதரா! காமதகனா! பக்தவற்சலா! பரந்தாமா! ஆபத்ரக்ஷகா! சம்போ! மஹாதேவா! இதுவு முன் திருவிளையாட்டன்றோ! ஒன்றாக்கும் பொருத இரவிவர்மன் நானிட்ட கட்டளையைச் சிரசால் வகித்தும் பணங்கட்டி அழகாபுரத்தை எப்போது விட்டகல நேரிடுமோ! என்று இரவுபகல் பயந்து, குலசேகரன் என்னும் என் நாமங் கேட்டவளவில் நடுநடுங்கி இருக்குமிடந் தெரியாமல் ஓடியொளித்து நடந்துவந்தவன் இப்போது என்னைவென்று சிறையடைத்துச் சிறையில் நான்படுந் துன்பங்களைப் பார்த்து நகைக்கலாயிற்றே தெய்வமே! அருமையான என் குழந்தையைப் பரதேசம் போகச்செய்து இந்திரபதவியையொத்த என் இராஜ்ஜியத்தையுமிழந்து எனக் குயிர்க்குயிரா யிருக்கும் விக்ரமசேனனையுஞ் சிறையடைக்கச்செய்து, என் பிராண நாயகிகளையும், தகப்பனிடம் வைப்பதுபோல நம்பிக்கை வைத்திருந்த என் பிரஜைகளையுங் கைவிட்டு இப்போது காராக்ரகத்தில் சத்துருவாற் பரிகாசம்பண்ணக்கேட்டுச் சஹித்திருக்கு மிப்பிராணன் எனக்குப் பெரிதாய்ப் போய்விட்டதே! தெய்வமே! இப்பிராணனை என் குழந்தை யாவலொன்றாற் பாதுகாக்க வேண்டியிருக்கிறதே தவிர இனியெனக் கனுபவிக்க வேண்டியவை யாவை. இப்போதென் செல்வனுக்கு 21 வருஷமுமாய்விட்டது. இனி ஒரு வருஷத்துக்குள் என் கண்மணியை ஒருதரம்பார்க்க வாய்க்குமோ. ஒருமுறை பார்த்துவிட்டுப் பிராணனைமாய்க்கலாமென் றிருக்கும் என்னைப்போற் கோழையும் உலகத்திலுண்டோ?" என்றுபலவாறு பிரலாபித்துக்கொண்டிருக்குங் குலசேகரப் பெருமாளைக் காவலர்கள் அதட்டிச் சும்மாவிருக்கச் சொல்லப் பிறகும் இரவிவர்மன் சிரித்துக் காராக்கிரகத்தைவிட்டு இராஜதானி சென்று சோமபால கோமளாங்கன் முதலிய மந்திரிகளை அழைப்பித்துக் "குலசேகரப்பெருமாள் தன்புத்திரனைப் பார்க்க ஆவலாய் உயிரை மாய்க்காம லிருக்கிறாராம். அப்புத்திரனைத் தேடிப்பிடிக்க வேண்டியதா யிருக்கிறதே. நீங்கள் சும்மாவிருப்பது நலமோ. "சிறிய பாம்பாயினும் பெரியதடியால் அடிக்கவேண்டும்" என்று கேட்டதில்லையா?" என்றான்.

கோமளாங்கன் இரவிவர்மனை வணங்கி "அப்பனே! சிதம்பரனென்னும் ஒரே புத்திரன் சத்துருவால் இருபத்திரண்டாம் வருடமிறக்கவேண்டியவன், உயிருடன் எங்கிருக்கினும் அவனை வதைப்பது என்வேலை" என்று ரோஷத்துடனெழுந்து தனதுயிர்த்துணைச் சேவகர்களைப் பல ராஜதானிகட்கும், சிலரைக் காடு வனம் மலை முதலியவற்றிற்கும் அனுப்பிச் "சிதம்பரன் எங்கிருக்கினும் தந்திரமாய்ப் பிடித்துவாருங்கள்" என்று கட்டளையிட்டுத்தானும் சிலபேர்ச் சேவகர்களுடன் அனேக விடங்களில் தேடத்தலைப்பட்டான்.

மாளவதேசத்தில் மஹாதேவரும் விஜயனும் விக்ரமகேதுவும் பரமார்த்தகேஸரி புஜங்ககேஸரி என்னும் இராஜகுமாரர்களுக்கு வேண்டிய யோசனைகள் சொல்லி ஒருபெரிய சேனை சேர்த்துவருகையில், கோமளாங்கன் இரவிவர்மன் சபையிற்சொன்ன வார்த்தைகளைத்தூதுவரால்தெரிந்து வியாகுலமடைந்தனர். "ஓ மஹாதேவரே! நான் பாலைவனம் விட்டுவந்த நாளாய் அனேக தூதுவரை அனுப்பிச் சிதம்பரசேகரனைத் தேடிவருகிறேன். அவனுடன் நாமெல்லோரும் சேனை சகிதம்சென்று இரவிவர்மனை வதைசெய்யவேண்டுமென்பதே என்கோரிக்கை. இனி அவனைப்பாராமல் என் மனம்நிலைபெறா. நானே தேடி எங்கிருக்கினும் கண்டு அழைத்துவருகிறேன். அதற்குள் யுத்தசன்னகத்துடனிருக்க முயலுங்கள்" என்றுகூறி விஜயன் மாளவதேசம்விட்டுப் பலதேசங்களிலுந் தேடிப் பாலைவனஞ்சென்றான். மஹாதேவர் விடாமுயற்சியுடன் சைன்னியஞ் சேர்த்துவந்தார். ஒருநாள் விக்ரமகேதுவுடன் வழக்கப்படி சரசமாயிருப்பதை விட்டு மௌனமாயிருக்க, அவன் அவரை வருந்தி "நீர் மௌனமாயிருக்கவேண்டியதேன்?" என, "ஓ விக்ரமகேது! நீ கோமளாங்கனது உற்ற நண்பனல்லவா? உன்னை நம்புவதெப்படி?" என்ன, அவன் நமஸ்கரித்து வினயமாய்ப்பேசி நம்பிக்கைவரும்படி செய்ய, அவர் "நமது சக்கரவர்த்தி காராக்கிரகத்தின் உபத்திரவம் சகியாமல் எங்கே பிராணனை விடுகிறாரோ? அவருக்கு நாமெடுத்துவரும் முயற்சியையும் விஜயன் சிதம்பரனைத் தேடிப்போனதையும் தெரிவித்து தைரியப்படுத்திவரக்கூடியவர் நம்முள யாரிருக்கிறார்கள் என்று மனவருத்தமாயிருக்கிறேன்" என்றார். விக்ரமகேது மறுமொழி கூறாது எழுந்து மாளவதேசம் விட்டுப்போய் ஒருமாதத்தில் திரும்பி வந்து மஹாதேவரைக் கண்டு, தான் பாலைவனஞ் சென்று காராக்கிரகக் காவலாளிகட்குத் திரவியமளித்து வசப்படுத்தி அவர்களி

லொருவனைப்போல் வேஷமிட்டு அவனுக்குப் பதிலாய் ஒருநாள் காவலிருந்து குலசேகரப்பெருமாள் படும் வருத்தத்தையும் விக்ரமசேனர் படும் துன்பத்தையுங் கண்டு தனது வரலாற்றைச் சொல்லி, மஹாதேவர் முத்திரையைக் காண்பித்து நம்பிக்கை வரச் செய்து, அவர்கள் மனவருத்தத்தைக் கொஞ்சம் நீக்கினதாக உரைத்து, குலசேகரப்பெருமாள் தன்னிடமளித்த கணையாழியை மஹாதேவர் கையிற்கொடுத்தான். அவர் சந்தோஷித்து விக்ரமகேதுவின் புத்திசாமார்த்தியத்தைப் புகழ்ந்து கணையாழியைத் தூக்கித்திருக்கும் அரசன் மனைவிகட்கனுப்பினர். அவர்கள் அதை மார்போடணைத்து முத்தமிட்டுத் தங்கள் நாயகன்படும் துன்பத்தை நினைத்து வருந்திக் கடவுளைப் பிரார்த்தனை செய்திருந்தனர். சிதம்பரனைத் தேடிக் கோமளாங்கன் தூதுவர்கள் "தேசங்களெங்குந் திரிவதாய்த் தெரிந்து தங்களிராஜ்ஜியம் வரில் அவர்களைப் பிடிக்கவெண்ணிப் பரமார்த்தகேஸரிக்குத் தெரிவித்து யாவரும் ஜாக்கிரதையாயிருந்தனர்.

விஜயன் பாலைவனஞ் சென்று, விக்ரமசேனன் அனுப்பிக்கொண்டிருந்த தூதுவர்களைப் பலவிடங்களிலுந் தேடி ஒருவனைக் கண்டு விசாரிக்க அவன், சிதம்பரசேகரனைப் பார்க்கவில்லை என்றும், அவர் வடதிசை சென்று மூகாம்பிகை வனத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன் என்றுஞ் சொல்ல, அவனுக்குப் பத்துவராகன் அளித்துக் கோமளாங்கனுக்கு இச்சங்கதி தெரிவிக்கலாகாதென்று திட்டஞ்செய்துவிட்டு வெகு பிரயாசையுடன் மூகாம்பிகை வனஞ் சென்று எங்குந் தேடிக் காணாமல் அம்மன் சன்னிதானஞ் சென்றான். சன்னிதியில் அநேக விதமாய்ப் பாடித்துதித்துப் பிரசாதம் பெற்றுண்டு அந்தக்ஷேத்திரத்தி னொருவிடத்தில் களையால் நித்திரை போய் எழுந்து ஸ்நானம் முடித்து விபூதியணிந்து அம்மன் சன்னிதிக்கு மறுபடியுஞ் செல்ல, அன்று பிரதோஷமா யிருந்தபடியாற் சந்திகால பூஜை தரிசனத்திற்கு அநேக மகத்துக்கள்வந்து ஸ்தோத்திரஞ் செய்யுங் கோஷங்கேட்டு ஆனந்தத்துடன் சுற்றிப்பார்க்கும்போது, சிதம்பரசேகரனும் புகழேந்தியும் ஒரு பக்கமாக நின்று அம்மனைப் பலவாறு வருந்தி ஸ்துதிப்பதைக் கண்டு சந்தேகித்துத் தானுமவர்களுடன் தரிசனம் பண்ணி அவர்களுக்குத் தெரியாமல் தொடர்ந்து ஆச்சிரமஞ் சென்று, அங்கு அவர்களுக்குப் புலப்படும்படி எதிரில் நின்றான். விஜயனைச் சந்தேகித்து "நீர் யாவர்? இங்கு இந்த இரவில் கானகமென்றுணராமல் வரவேண்டிய காரணம் யாது?" என்று புகழேந்தி வினவ, விஜயன் வினைய பாவத்துடன்

"நானொரு வானப்பிரஸ்தன். திவ்ய க்ஷேத்திரங்கட்குத் தரிசனார்த்தம் போவது வழக்கம். மூகாம்பிகை தரிசனத்திற்கு வந்தேன். வழி தப்பி இங்கு வந்துவிட்டேன். இரவு போக்க ஒரு இடந் தரவேண்டுமாய்க்கோருகிறேன்" என்றான். புகழேந்தி விஜயனுக்கு ஓர் ஜாகை காண்பித்துக், கந்தமூலங்களளித்து நித்திரைபோம்படி சொல்லிச் சிதம்பரனுக்கு வேண்டிய பணிவிடை யாவும் வழக்கப்படி செய்து, அவன் நிஷ்டையிலிருந்தபின், யாது விளையுமோவென்று பயந்து விஜயனுக்குத் தெரியாமல், அவன் செய்கைகளைக் கவனித்துக்கொண்டு, நித்திரையின்றியிருந்தான். விஜயன் சற்றுநேரம் அவர்கள் சம்பாஷணையையுஞ் செய்கையையுங் கவனித்திருந்தும் இன்னதென்று தெரிந்துகொள்ளக் கூடாமையாலும் தான் இராப்பகல் அன்னாகாரமின்றிச் சஞ்சரித்தபடியால் களைமேலிட்டதாலும் தன்னை மறந்து நித்திரைபோயினன். மறுநாள் சூரியோதயத்தில், புகழேந்தி தன்னை மிக ஜாக்கிரதையாய்க் கவனிப்பதைத் தெரிந்து இவர்களிடமெப்படியுஞ் சம்பாஷித்துத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்து ஆச்சிரமம் வந்து "சிதம்பரசேகரப்பெருமாள் வாழி, புகழேந்திரி மந்திரி வாழி" என்று கூற, இருவரும் ஆச்சரியப்பட்டு இங்கு எங்களைத் தெரிந்தவர்போல வாழி கூறும் நீர் யாவர்? நீர் ஆம்மன் சன்னிதி நோக்கிச் செல்லாமல் மறுபடியு மிங்குவந்தது யாது காரணம்?" என்று புகழேந்தி வினவ, விஜயன் சிதம்பரனைப் பார்த்துச் சந்தேகம் நீங்கினவன்போல் தன் வரலாற்றையுங் குலசேகரப் பெருமாள் விருத்தாந்தத்தையும், தான் சிதம்பரனைத் தேடிவந்த காரணத்தையும், மாளவதேசத்தில் நடந்துவரும் விசேஷங்களையுஞ் சொல்லி, "இனிக் கொஞ்சமேனுந் தடையின்றி மாளவதேசம்போய்ச் சேனைகளை நடத்திக் கூடினவேகத்தில் குலசேகரப்பெருமாளைச் சிறைமீட்க முயற்சி செய்யவேண்டும்" என்று கூறினான்.

சிதம்பரசேகரனும் புகழேந்தியும் மிகவும் மனம்நொந்து சற்றுநேரம் பிரலாபித்துப் பிறகு சிதம்பரன் தேறிச் சற்று தியானித்து மனதைச் சரிபண்ணி ஆசாரியர் சொன்னவைகளை நினைத்துத் திடங்கொண்டு சும்மாவிருக்க, விஜயன் எல்லாச் சந்தேகமும் நீங்கி மறுபடியும் வருந்திக் குலசேகரப்பெருமாள் படும் கஷ்டங்களை வர்ணித்துக்கூற, அதற்கும் பேசாமலிருப்பதைப் பார்த்து வெறுப்பாகப் பேசித் "தகப்பனை ரக்ஷியாதபிள்ளை ஸ்தாவரங்கட்கு ஒப்பாவான்" என்று பல சாஸ்திரக் கோட்பாடுகளை எடுத்துரைக்க, அதற்குஞ்

சலியாமனத்துடன் தியானத்திருக்கக்கண்டு, சிதம்பரனை யதட்டிக் கோபித்துப் பல துஷ்ட வசனங்களைச் சொல்ல, அவைகளுக்கும் அசையா திருக்கக்கண்டு அதிசயித்து "இவன் பெரிய யோகி. இந் திரியஜயம் பெற்றிருக்கிறான். பிள்ளையானால் இப்படியல்லவோ விரு க்கவேண்டும்" என்று ஆனந்தமும் ஆச்சரியமுங்கொண்டு அவ்விடத் தே வசித்துச் சிதம்பரன் நித்தியகடன் முடிக்கப்போமிடத்தும், கந்தமூலபலம் அருந்துமிடத்தும், அம்மன் சன்னிதி செல்லில் அவ் விடத்தும், சரீரத்தை யொட்டின நிழலைப்போல் தொடர்ந்துகொ ண்டு, புகழேந்தி எவ்வளவு மறுத்துரைத்தும் விடாமற் பலவாறு புகழ்ந்தும், ஆச்சரியப்பட்டும், குலசேகரப்பெருமாள் கஷ்டங்களை எடுத்துரைத்தும் இப்படி யொருமாத காலமாய் அவஸ்தைப்பட் டுக் கடைசியில் சிதம்பரன் காலில் அஷ்டாங்கமாய் நமஸ்கரித்துத் தந்திரமாய் "எனக்கொரு வரமருளவேண்டும்" என்றுவேண்டினான்.

சிதம்பரன் புன்சிரிப்புடன் "நானென்னவரம் கொடுக்கமாட்டு வேன், நீர் ஊர்போய்ச் சேரும்" என்று சொல்ல, விஜயன் அவன் குர லோசையைக்கேட்டுச் சந்தோஷித்தனாய் "நீ க்ஷத்திரியனாகையால் நான் யாசிக்கும்பொருளை அளிக்கவேண்டும். அளித்து க்ஷத்திரிய தர் மத்தைக் காக்கவேண்டும்" என, சிதம்பரன் விஜயனை யுற்றுநோ க்கி "ஓ இராஜகுமாரரே! நானொரு பரதேசி. உலகத்தையும், மாதா பிதாமுதலிய பந்துக்களையும், பூலோக புவர்லோக இனபங்களையும் விட்டுவிட்டவன். எனக்குத் தாய் யார்? தகப்பன் யார்? இராஜ்ஜிய மேது? என்னாலாகுங் காரியமென்ன? எனக்கு மவர்கட்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? இவ்வளவுதூரமுரைக்கும் நீர் யார்? எனக்கு இராஜ்ஜியத்திலும் பிரியமில்லை. யுத்தமும் வேண்டாம். பட்டமும் வேண்டாம். இன்னொரு அரசன் குலசேகரப்பெருமாளை ஜயித்து இராஜ்ஜியத்தை அபகரித்தால் அதற்கு யான்செய்வது யாதுளது? ஒருவனையொருவன் ஜயிப்பது க்ஷத்திரியதர்மமல்லவா? அதைக்குறி த்து வருத்தமுறுவானேன்? குலசேகரப்பெருமாளும் அப்படியிதர இராஜாக்களை ஜயித்து இராஜ்ஜியங்களை அபகரித்துச் சக்கரவர்த்தியா னாரே தவிர வேறெப்படி? நீரும் க்ஷத்திரியனாகையால் மாளவரா ஜனை யழைத்துச்சென்று பாலவனத்தரசனை ஜெயித்து இராஜ்ஜியத் தைப் பிடுங்கிக்கொள்வீர். நீருங் குலசேகரருக்குத் தம்பியல்லவா? போம். இனியென்னைத் தொந்திரவு பண்ணவேண்டாம்" என்றுரை த்துச் சமாதியிலிருந்தான். விஜயன் மனவருத்தமுற்று, இவன் சன்

யாசியாய்விட்டான். இனி என்னபோதிக்கினுங் கேளான். "குலசேகரப்பெருமாள் சிறைமீளுவதெப்படி?" என்று பலவாறு யோசித்துக் கூடிய முயற்சிகள் பண்ணியும் முடியாமல் வியாகுலத்துடன் திரும்பி, மாளவதேசத்தரசனையே போர்புரிய அழைத்துப் போவோமென்று நினைத்து அதிவேகமாய்ப் போனான். "சிதம்பரனைத் தேடி இந்தவனத்திற்குக் கோமளாங்கனாலும் தூதுவராலும் வரமுடியாது. ஒருகால்வரினுஞ் சிதம்பரன் விரக்தியைக் கண்டு யாதொரு உபத்திரவமுஞ்செய்யான். இராஜ்ஜியத்திலும் பொருளிலும் பந்துக்களிலும் நிராசையாயிருக்கும் இவனால் என்னகுற்றம் விளையுமெனப் போய்விடுவான்" என்றெண்ணிக் கோமளாங்கன் முயற்சியைச் சிதம்பரனுக்கேனும் அவன் தோழனுக்கேனுஞ் சொல்லாமற் போய்விட்டான். இராஜகுமாரனுக்கு 22-வது பிராயம் ஆரம்பமாய்விட்டது. இது முடியும்வரையும், என்னநேர்ந்தாலும் வனம்விட்டுப் போகலாகாது. யுத்தத்திற்குப் போனால் இராஜகுமாரனிறப்பதற்கையமில்லை. இவ்விஜயனையும் எப்படி நம்பலாம். கோமளாங்கன் சகோதரனல்லவோ!" என்று பலவாறு சிந்தித்துச் சந்தேகப்பட்டுக் குலசேகரப்பெருமாளும் தனது பிதாவும் துன்பப்படுவதை யுணர்ந்து வருத்தமுற்றிருந்தான் புகழேந்தி.

விஜயன் மாளவதேசத்திற்கு அதிவிரைவாகச் சென்று இராஜபத்தினிகட்கும் மஹாதேவருக்கும், தான் பிரயாசைப்பட்டுச் சிதம்பரனைத் தேடிக்கண்டதும், அங்கு நடந்தவை யாவையும் தெரிவிக்க யாவரும் விசனமடைந்தனர் மஹாதேவர் பரமார்த்தகேஸரியை அழைத்து "ஓ அரசே! நீர் குலசேகரப்பெருமாள் மருமகனல்லவோ? சிதம்பரசேகரனில்லாவிட்டால் நீரே யுமது குடைக்கீழ்ச் சேனையை நடத்திக் கோமளாங்க சோமபாலரை வதைத்து இரவிவர்மனை ஜெயித்து இராஜ்ஜியத்தைக் குலசேகரர்க்கே கொடுத்துவரலாகாதோ? இதை யான் கூறவோ?" என்றார். இராஜபத்தினிகளும் "இனிப் பிராணனை விட்டுவிடுகிறோம்." என்றுதெரிவிக்கப் பரமார்த்தகேஸரி அவர்களுக்குத் தைரியம் கூறித் தம்பியும் தானுமாய் யுத்தசன்னாகத்துடன் சேனையைநடத்தி, விஜயன், மஹாதேவர், முதலியவருடன் பிரயாணமாய் விக்ரமகேதுவைத் தூதனுப்பிக் குலசேகரப்பெருமாளுக்குத் தன்வரவைத் தெரிவித்து மிகவும் அவசரமாய்ப் பாலைவனம் நோக்கிச்சென்றனன்.

24. சிதம்பரசேகரன் மரணமும் ஜீவோத்தாரணமும்.

சிதம்பரன் நிஷ்டையிலிருக்கினும் ஸர்வோத்தமனான தனது பிதா சிறைப்பட்டிருப்பதை நினைந்து க்ஷத்திரிய வம்சத்தில் ஜனி

த்து சகல ஆயுதாப்பியாசங்களுங் கற்ற ஓர் புதல்வன் அவர்க்கிருந் தும் கஷ்டம் நேர்ந்தபோது உதவிசெய்யாமல் அற்பமான பிராண பயத்தைநாடி வனத்திற் சஞ்சரித்துத் திரிகிறோமே என்னுஞ் சாப ல்யம் அடிக்கடி மேலிட்டு மனோதிடங்கெடுவதும் ஆசாரியர் புகன்ற திவ்வியமொழிகளை நினைத்துத் தேறி நமக்குங் குலசேகரனுக்கும் என்னதொந்தம்? சிறைப்படுவது யார்? துக்கிப்பது யார்? இராஜ்ஜிய மாளுவது யார்? எதுசெய்வதும் பரப்பிரம்ம சைதன்யம்அல்லவோ? அற்பமான இச்சடத்தை "நான்" என்று பிரமித்து யாவற்றையும் அபிமானித்து சாஞ்சல்யமுண்டாவ தெதனால்? பரமார்த்தத்தில் யாவும் பிம்பப்பிரதிபிம்பமல்லவா ? இப்பிரதிபிம்பங்களனைத்தும் நாசமடைபவையாயிற்றே. அவைகட்குவருஞ் சுகதுக்கம் நாசமடை பவையே என்று பலவாறு விசாரணைபண்ணிப் பகுத்தறிந்து திடப் படுவதும் மறுபடி சாஞ்சல்ய முண்டாவதும் தேறுவதுமாய் வருத் தப்பட்டு நிஷ்டைகூடியுங் கூடாமலுஞ் சங்கடப்பட்டுக்கொண் டிருக்க, ஒருநாள் சூரியோதயத்தில் நான்கு சேவகர்களுடன் கோம ளாங்கன் வந்து, தபசுபண்ணிக்கொண்டிருக்கும் புகழேந்தியையுஞ் சிதம்பரனையும் பார்த்துச் சந்தேகித்து, இவர்கள்தானோ நாம் நாடி வந்த பிள்ளைகள்? தூதுவர்கள் சொன்ன அடையாளங்களனைத்தும் சரியாயிருக்கிறது. இவர்களோ இச்சைகளனைத்தையும் நீக்கினவர் கள் என்று கேள்விப்பட்டதுஞ்சரியே. ஆகிலும் இவர்களுடன் வார் த்தையாடிற் றெரியுமென நினைத்துச் சிதம்பரனிருக்கு மாச்சிரமஞ் சென்று வெகு பரிதாபத்துடன் "ஓ மஹாத்மாவே!, நாங்கள் வழி தப்பி இக்கானகம் வந்துவிட்டோம். பசியுந் தாகமும் மென்மேலு மதிகரித்துக் களையால் வாடியிருக்கிறோம். தயவுசெய்து ஜலமிருக்கு மிடங் காண்பிக்கவேண்டும்" என்று விநயமாய்க் கேட்டான். சிதம் பரன் கண்ணைவிழித்துப் பார்த்து ஐந்து போர்மன்னர் ஆயுதபாணி களாய்ப் புரவிமீது அதிசூரரைப்போ லெதிர்நிற்கக்கண்டு கொஞ்ச மும் அச்சமுறாமல் புகழேந்தியை யழைத்து "இவர்கள் களைதீர ஜலமளிப்பாய்" என்றுரைத்து மறுபடியும் நிஷ்டையிலிருந்தான். புகழேந்தி அச்சமுற்றுத் தனதாச்சிரமத்திலிருந்த காய்கனி வர்க் கங்களையளித்து விடாய்தீர்க்க, அவர்கள் அவனைச் சோதிக்கலாயினர்.

கோமளாங்கன்—எல்லாந் துறந்த மஹானுபாவா! எங்களுக்கிவ் வளவு உபசரணைசெய்து உணவளித்துக் களைதீர்த்த நீங்களிருவீரும் யாவர்? எங்களுக்காக இங்கிருந்தீர்போலும்? யாதுகாரணத்தால் இவ்

விளம்பிராயத்தில் உலக இன்பங்களைவிட்டு அரண்யத்தில் வசித்துக் காலந்தள்ளுகிறீர்கள்?

புகழேந்தி—ஐயா! உலகவின்பம் எப்படியிருக்கினும் துக்கத்தையே முடிவிற் கொடுப்பதென்று அவைகளை இனி அணுகாதிருக்கும்படி பற்றறவெறுத்து இங்குவந்து தவம்புரிகிறோம். நீங்கள் களைதீர்ந்திருப்பதால் எங்களைவிட்டுப் போகலாம். எங்கள் வரலாற்றைத் தெரிந்துகொள்வதில் அடையும் பயன் என்ன?

கோமளாங்கன் மிகவும் சினந்து புகழேந்தியை உற்றுப்பார்த்துச் சினமடங்கினவனைப்போற் பாவித்து உபசாரத்துடன் “நீ, விக்ரமசேனனென்னுங் குலசேகரப்பெருமாளின் முதன் மந்திரியினது புதல்வனல்லவா? அதோ தபசிலிருப்பது அச்சக்ரவர்த்தியின் புத்திரசிகாமணியாகிய சிதம்பரசேகரனல்லவா? உங்களிருவரையும் அனேக நாளாய்த் தேடிக் காணுமல் வருத்தமுற்றிருந்தேன். இன்று கடவுள் கிருபையால் கண்டேன். நீ அப்படி அஞ்ச வேண்டாம். நான் உங்களுக்கு பந்துவேதவிர சத்துருவல்ல. என் பெயர் கோமளாங்கன். குலசேகப்பெருமாளினது சிறிய தகப்பன் பிள்ளையின் இரண்டாவது குமாரன். குலசேகரப்பெருமாள் சிறையடைபட்டிருப்பதால் சிதம்பரசேகரனை அழைத்துச்சென்று பாலவனத்தைப் பட்டங்கட்டிவைக்கவேண்டுமென்று தீர்மானித்து உங்களைத் தேடிவந்தேன். இப்போது பாலவனமாளும் இரவிவர்மன் இராஜ்ஜிய மகப்பட்டவுடன் என்னை ஓட்டிவிட்டான். அவனுக்குச் சகாயமாய்நின்று இராஜ்ஜியத்தை அபகரிக்கச் செய்துவிட்டேன். அது பிசகானதென்று அறிந்து அவனை வதைத்து இராஜ்ஜியத்தை மீட்டுச் சிதம்பரசேகரனுக்கு அளிக்கப்பிரதிக்கினைசெய்துவந்தேன். ஆகையால் நீங்களிருவீரும் என்னுடன் பிரயாணப்பட்டுவரல்வேண்டும். இனிச் சாவகாசமாய் இருக்கலாகாது.

புகழேந்தி, கோமளாங்கனென்றுணர்ந்து அவன் சொற்களில் நம்பிக்கைவாராது பயந்து, இனி என்செய்வது? யாது நேரிடுமோ என்றுபயந்து “ஐயா கோமளாங்கராஜனே! சிதம்பரன், இராஜ்யமும் இன்பமும் வேண்டான். வனம்விட்டு வாரான். மாதா பிதா சுற்றம் முதலிய அனைவற்றையும் பற்றறவெறுத்து மோக்ஷமே பெரிதென்று திடமாயிருக்கிறான். இராஜ்ஜியத்தை வென்ற இரவிவர்மனும் தந்தை குலசேகரப்பெருமாளும் சமமென்று நினைத்திருக்கிறான். உங்

களுக்குச் சந்தேகமிருக்கின் அவனிடஞ்சென்று சோதித்துப்பாரு ங்கள்" எனக் கோமளாங்கன் சங்கைகளனைத்துந் தீர்ந்தவனாய் இரு வரையுந் தெரிந்துகொண்டு சிதம்பரசேகரனிடஞ் சென்று புகழே ந்திக்குச் சொல்லியபடியே சொல்லிப் பட்டணத்திற்கழைக்கவே அவன் கோமளாங்கனை வணங்கி ஆசனத்திலுட்காரவைத்து "ஓ அண்ணே! நான் தெரியாத்தனத்தால் தேவரீருக்கு மரியாதை செய் யாத குற்றத்தை மன்னிக்கவேண்டும். எனது பிதாவைப் பார்த்தது போல் தங்களைப்பார்த்து ஆனந்தமுற்றேன். என்பேரில் கிருபை கூர்ந்து இவ்வளவு பிரயாசைப்பட்டு வந்து எனக்கு இராஜ்ஜிபதவி தருவதற்காய் அழைக்கிறீர்கள். உலகவின்பத்தை வெறுத்துக் கான கமே மேலென்று பிரதிக்ஞைசெய்து தபசு பண்ணிவருதலால் நாடு நகரமும் வேண்டேன். தாயும் தகப்பனுமில்லை. "நான்" என்றுரைக் கும் இத்தேகமும் எனதல்ல. நீங்கள் அந்த இராஜ்ஜியத்தை ஆள்வ தோ வேறொருவர்க் களிக்கவோ செய்யலாம். நானொருபொழுதும் அதைக் கோருபவனல்ல" என்று கூறி நமஸ்கரித்து வழக்கப்படி தியானத்திருந்து தனக்கப்போதுதித்த மனோசாஞ்சல்யத்தை அடக் கும்படி முயன்றான். அருகிலிருந்த புகழேந்தியும் அப்படியே உரை த்து "நீங்கள் இராஜகுமாரனைவிட்டு நீங்குங்கள். அவர் நிஷ்டைக்கு ஆனிவரலாகாது" என்று வேண்டினான். கோமளாங்கன் மிகவும் மகிழ்ந்து இவனால் நமக்கு யாதொன்றுஞ் சம்பவிக்காதென்று தீர்மானித்துப் புகழேந்தியிடம் விடைபெற்றுத் தனது துணைவர்க ளோடு திரும்பினான். வழியில் அவர்களுடன் "ஓ போர்வீரர்களே! இந்தச் சன்னியாகிய பயலை வீணாகக் கொல்லுவதில் என்ன பிர யோஜனம்? எல்லாம் வெறுத்துக் கானகமே போதுமென்றிருக் கிறான். விஜயன் ஆனமட்டும் வருந்தி யழைத்தும் போகவில்லை. விஜ யன் மாளவராஜன்சபையில் இவன்விசேஷங்களையெல்லாம் சொல்லி ஒன்றிரண்டு மாதகாலம் வருந்தி யழைத்தும் இசையவில்லை என் றும், உலகவெறுப்பாயிருக்கும் இவனால் யாதொரு பிரயோசனமும் இல்லையென்றும் திரும்பிப்போனதாக அச்சபையில் இரகஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருந்ததை நமது தூதுவர்கள் தெரிந்துவந்து சொன்ன படி நாமிங்கும் கண்ணால் பார்த்துவிட்டோம். "குழந்தையும் யோகி யும் ஒன்று" என்றுகேட்டிருக்கிறோம். இவனால் நமக்குப் பயமில்லை யென்று நம்புகிறேன். தவிர இவன் நமக்கு என்ன குற்றம் செய் திருக்கிறான்?" என்று கோமளாங்கன் வினவவே மூன்று சேவகர் கள் "அப்படியே சரி" என்றொப்ப, நாலாவான் "அரசே! நீர் சொல

வது சரியாயினும் எனக்கொன்று தோற்றுவதுண்டு. விரணசேஷம், சத்துருசேஷம், ரொணசேஷம், அக்கினிசேஷம் என்னு மிவைகளை வைக்கலாகாதென்று பெரியோர்கள் சொல்வார்கள். இனி உங்கள் சித்தம்" என்றான்.

கோமளாங்கன் செவியில் இவை காய்ச்சின நாராசம்போல் பட்டன. உடனே பிரயாணத்தை நிறுத்திச் சிதம்பரனை எவ்வண்ணம் கொல்வோம்? நிராயுதனும் சன்னியாசியும் தனக்கு யாதொரு குற்றமும் செய்யாதவனுமாகிய இவனைக் கொன்றால் பெரியபாபம் நேரிடுமே என்று பலவாறெண்ணிப் பிறகு திடங்கொண்டு சேவகர்களை அவ்விடத்திலேயே நிற்கும்படி ஆக்கியாபித்து ஆயுதபாணியாய்விரைந்து சென்றான். சிதம்பரசேகரன் காலைக்கடனை முடிக்கத் தனதாச்சிரமம்விட்டுத் தடாகதீரத்திற்குப் போயிருந்தான். புகழேந்தி, கோமளாங்கன் போகவே இனித் துன்பமில்லை யென்றெண்ணிப் பண்டுபலாதிகள் சேகரம்பண்ணச் சென்றிருந்தான். கோமளாங்கன் சிதம்பரனை ஆச்சிரமத்திற் காணமல் தடாகவழிசென்று அவனைக் கண்டு கடுங்கோபம் மேலிட்டு "அடாபயலே! நீ சன்னியாசிவேஷம் பூண்டு சமயம் வாய்த்தபோது என்னைக்கொல்ல எண்ணியிருக்கிறாய். உன் பசபசப்பான தந்திர மொழிகளை நான் நம்புகிறவனல்ல. இதோ வாளுக்கிறை செய்கிறேன்" என்று கூறி வாளை ஓங்கினான். சிதம்பரன் பார்த்துத் திகைத்து க்ஷத்திரியனுகையால் ரோஷம்பூண்டு கோமளாங்கன்மீது நிமிஷத்தில் சிம்மம்போல் பாய்ந்து,

நாடி ழந்தனன் நகரினை இழந்தனன் பெற்ற
வீடி ழந்தனன் விண்ணையு மிழந்தனன் விதியாற்
காடு றைந்துயான் கடுந்தவம் புரிந்துமென் மேற்கொள்
கேடி ழந்திலை கெடுவெனப் புடைத்தனன் கிளர்ந்தே.

கோமளாங்கன் வாளை உபயோகிப்பதற்குள், தன் சக்தியெல்லாம் சேர்த்து அவன் மார்பில் அறைந்தான். கோமளாங்கன் நிலைகுலைந்து பூமியில்விழுந்து சாவுக்குச் சரியான மூர்ச்சையடைந்தான். சிதம்பரன் தடாகத்தி லிறங்கி ஸ்நானஞ்செய்து பராபரக் கடவுளை ஜலத்தில் நின்றபடியே தியானித்துக்கொண்டிருந்தான். கோமளாங்கன் மூர்ச்சை தெளிந்து எழுந்து சுற்றும் பார்த்துத் தானடிபட்டு வீழ்ந்ததை நினைத்து இவ்வளவு பலமுடைய சத்துருவை இனி ஒரு க்ஷணப்பொழுதேனும் வைக்கலாகாதென்று உருவினவாளுடன் தேடி ஜலத்தில் நிற்கும் சிதம்பரனைக் கண்டு அருகிற் செல்லப் பயந்து

வாளை உரையிலிட்டு அதிவேகமாய்த் துப்பாக்கியை யெடுத்து அவன் மார்பிற்கு லக்ஷ்யம்பார்த்துச் சுட்டான். உடனே சிதம்பரன் அரஹர மஹாதேவா என்று தடாகத்தில் வீழ்ந்தான்.

கோமளாங்கன் அருகிற்சென்று பார்த்து இரத்தம் பீரிட்டொழுகவும், சிதம்பரன் தலையுடல் கரையினும் அரையுடல் ஜலத்திலும் வீழ்ந்துகிடக்கக் கண்டு ஆனந்தமுற்று, இவனிறந்தான், இனிச் சன்னியாசியாற் பயமில்லை என்று தீர்மானித்துத் துணைவர்களை யடுத்து நடந்தவைகளைச் சொல்லிப் பாலைவனம் நோக்கிப் போயினன்.

தடாகத்தினருகில் மறைந்திருந்த யோகீஸ்வரர் அதிக துரிதமாய் ஓடிவந்து சிதம்பரனை யெடுத்து மார்போடணைத்து "அப்பா சிஷ்ய சிகாமணியே! நீ இறந்தாயோ! உன் சொற்படி 22-வது வயதாயிற்றே. சத்துரு தேடிவந்து நிரபராதியும் மகாஸாதுவுமான உன்னைக்கண்டு திரும்பினவன், பரமவாக்குப் பழுதாகாமற் போகும்படி மறுபடியும்வந்து கொலைசெய்துவிட்டானே! இனி உன்னைப்போல் பிரம்மக்யானத்திற்குரிய தீவிரபக்குவமுடைய சற்பாத்திரனை யான் எங்கே பார்க்கப்போகிறேன்" என்று பிரலாபித்துச் சிதம்பரன் மார்பைப் பரிசோதித்து அவன் முகத்தையுங் குண்டுபட்ட விடத்தையுஞ் சுத்தி செய்துகொண் டிருக்கும்போது, புகழேந்தி மனோவேக வாயுவேகமாய் ஓடிவந்து சிதம்பரன் தேகத்தின்மேல் வீழ்ந்து பிரலாபிக்க, யோகீஸ்வரர் அவனை அப்பால் நீக்கிவிட்டு யாதோ ஒரு பச்சிலையைக் கையிற்பிழிந்து ரசத்தைச் சிதம்பரன் வாயிலும் மூக்கிலும் வார்த்து மந்திரோச்சாடனம் பண்ணி "சிதம்பரசேகரா! எழுந்திரு" என்று மூன்று தடவை உரைக்கச் சிதம்பரன் நித்திரை நீங்கி எழுந்திருப்பவன்போலெழுந்து யோகீஸ்வரர் பாதத்தில் நமஸ்கரித்து ஒன்றும் பேசாமல் நின்றான். புகழேந்தி அடங்காத சந்தோஷத்துடன் ஆனந்தபாஷ்பம் பெருக அஞ்சலியஸ்தனாய் யோகீஸ்வரரைப் போற்றி செய்தான். அவர் இருவரையும் அவர்களாச்சிரமத்திற்கு அழைத்துச்சென்று அடிசிலுண்பித்து ஆயாசந்தீர்த்து பிறகு தனதாச்சிரமத்திற் கழைத்துப்போய் அருகிலுட்காரவைத்து "ஓ சிதம்பரசேகரா! உன்னை எப்போதுங் கவனித்துவருவது எனது வேலைகளில் ஒன்றாயிருந்தது. விஜயனென்றொரு ஆத்மபோத மடைந்த புண்ணியவான் உன்னிடம்வந்துசொன்னவிருத்தாந்தங்களால் உன் மனம்பலவாறு சஞ்சலப்பட்டுத்தேறிக்கொண்டிருந்தது. இன்றைக்கு

உன்னைக் கொலைசெய்துபோன துஷ்டனால் உனக்குக் கோபஞ்ஜெனித்து மனோதிடங்குறைபட்டுவிட்டது. பரமவாக்குப்பழுதுபோகாமல் நடக்கும்படி அவனே சத்துருவாய் ஏற்பட்டான். இனியுனக்கு மரண பயங் கொஞ்சமும் வேண்டாம். நீடித்த ஆயுள் கடவுள் கொடுத்திருக்கிறார். ஆகையால் நான் இனிச் சொல்வதைக் கவனித்துக்கேள். பிரபஞ்சத்திற் சற்றும் பழக்கமில்லாமல் மனோசாஞ்சல்யம் அடங்க மாட்டாது. கிரகத்திலிருந்து வியவகாரம் நடத்திக்கொண்டு சிந்தையையடக்கி நிஷ்டைபுரிந்து ஆத்மஞானம்பெற்று மோக்ஷமடைவது மஹாமேன்மை. ஜனகமஹாராஜன் பகீரதன் புரூரவச்சக்ரவர்த்தி முதலான ஞானிகள் பிரம்மவித்துக்களாயிருந்து மோக்ஷமடைந்திருக்கிறார்கள். இப்போதும் அனேகர் அப்படியே மோக்ஷமடைகிறார்கள். இடம், பொருள், ஏவல் என்னும் மூன்று பாக்கியங்களுமுடைய பிரம்மவித்துக்களுக்குக் கஷ்டமின்றி சமாதி பழகுதல் சுலபம். நீ க்ஷத்திரியன். இராஜாங்கமேற்று சமதமாதிகளை வசப்படுத்தி ஜலத்திலிருக்குந் தாமரையிலையைப்போல் உலகத்திருந்து இராஜ்ஜிய பாரஞ் செய்யினும் அதிற் பற்றின்றி ஞானம் பழகுவது மிகநன்மை. நான் உங்களிருவருக்குங் கொடுக்கும் வெகுமதிகளைத் தடை சொல்லாது பெற்றுக் காலதாமதமின்றி நாட்டுக்குச்சென்று கொலைப்படப்போகுமுங்கள்பிதாக்களை இரட்சித்து, சத்துருக்களைஜெயித்து, சக்கரவர்த்தியும் மந்திரியுமாய்ப் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்று, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் பண்ணி நீதிவழுவாது நடந்துகொண்டு, என்னுபதேசங்களை மறவாது சம்வாதம்பண்ணி விசாரணைசெய்து நிஷ்டையில் மனதைச் செலுத்தி வாழுங்கள். நான் அடிக்கடி வந்து பார்த்து மனக்கலக்கத்தை நிவர்த்திபண்ணிவருகிறேன்" என்றார்.

இதைக் கேட்ட சிதம்பரசேகரன் ஆசாரியரை நமஸ்கரித்து "அப்பனே! இகலோக பரலோக இன்பங்களைவிட்ட எனக்கு இராஜ்ஜியம் எதற்கு? யுத்தம் எதற்கு? நான் யுத்தத்திற் கொல்வதும் பந்துக்களை அல்லவோ? ஆகையால் அவையாவற்றும் என்னை அணுகாதிருக்கும்படி கருணைகூர்ந்து இவ்விடத்திலேயே ஆத்மஞானமனுபவமாம்பொருட்டு அனுக்கிரகிக்கவேண்டும்" என, யோகீஸ்வரர் அவனை ஆசிர்வதித்து "ஓ சிதம்பரா! உனக்கு ஆத்மஞான மனுபவப்படுத்துகிறன். நீ பயப்படவேண்டாம். கடவுள் கிருபை செய்வார். பந்துக்களைக் கொல்வதென்றும் யுத்தமென்றும் இராஜ்யம் யாருக்கு என்றும் கேட்டாயே? ஆத்மா நசிக்கக்கூடியதல்ல

வென்றும், நசிப்பது தேஹமென்றும், கர்மங்கள் செய்தல் யாவும் அந்தக்கரண விவகாரமென்றும், நிஷ்காமியமாய்ச் செய்கில் ஆத்மாவுக்கவைகள் பற்றக்கூடினவை அல்லவென்றும்; நான் முன்னமே சொல்லியதை மறந்தவன்போல் தேஹத்தை "நான்" எனப் பாவித்துப் பேசுவது சரியன்று. ஆத்மாவை உன்னாலும் உன்னைப்போற் கோடி கோடி ஜீவர்களாலுங் கொல்லமுடியாது. நீ கொல்வது ஜடமான தேகத்தையே. நீ உன் க்ஷத்திரியதர்மப்படி துஷ்டநிக்கிரகஞ் செய்யவேண்டும். காமக்குரோத லோபமுதலான இந்திரிய சேஷ்டைகளை வெல்வதுபோல உனது சத்துருக்களாகிய துஷ்டர்களைவென்று இராஜ்ஜியமேற்று பிரம்மவித்தாயிருந்து சமாதி பழகிவருவதால் நீ இச்சித்தபடி ஆத்மஸ்வரூப அனுபவமாம். என் வார்த்தையைத் தள்ளாதே" என்றார்.

இதைக்கேட்டு இருவரும்அவரை வணங்கி அஞ்சலியஸ்தராய்த் "தேவரீர் சித்தம் எங்கள் பாக்கியம். எங்கள் பிதாக்கள் கொலைப் படப்போகிறார்கள் என்றுரைத்தது யாதோ தெரிவிக்கவேண்டுகிறோம்" என, கோமளாங்கன் சிதம்பரனைக் கொன்றோமென்றெண்ணிப் பாலைவனஞ்சென்று உங்கள் பிதாக்களையுங் கொன்றால் சத்துருபயம் அறுமென்று நினைத்துப் போகிறான். நீங்கள் அவர்களைக் காப்பாற்றச் செல்லவேண்டும்" என்றுரைத்து, இருவருக்கும் ஒவ்வோர் புரவியும் கவசமும் சந்திராயுதமுஞ் சிருஷ்டித்துக் கொடுத்தனுப்பிச் சமாதியிலிருந்தார். சிதம்பரசேகரனும் புகழேந்தியும் ஆசாரியரை சாஷ்டாங்கமாக வணங்கி விடைபெற்றுப் புரவிகளை நடத்தி அம்மன் சன்னிதிசென்று நமஸ்கரித்துப் பிரசாதம் பெற்றுண்டு சுப்ரமண்யம்சென்று தரிசித்துத் துதித்து மனோவேகமாய்ப் பாலைவனம் சென்றனர்.

25. பட்டாபிஷேகம்.

சோமபாலன்:—"ஓ தம்பி! நீ இரகஸ்யமாய் என்னிடம் பேச வேண்டுமென்று தூதனுப்பினாயே. அஃதென்ன? உனக்காக இந்த அறையில் ஒருஜாமமளவும் எதிர்பார்த்திருக்கிறேன்."

கோமளாங்கன்:—"அண்ணே! என்னருகிலிருந்த சில போர்ச் சேவகர்களுக்கு ஒவ்வோர் வேலைபிட்டனுப்பி இங்குவரலாயிற்று. நான் சிதம்பரனைக் கொன்றது தெரிந்து இரவிவர்மன் சந்தோஷப்பட்ட

திம் குலசேகரனையும் விக்ரமசேகரனையும் கொலைசெய்தாலொழிய சத்துருபயம் நீங்காதென, சந்தோஷத்துடன் விடைதந்ததும் நீர் பார்த்தீரே? இப்பாலைவனத்தை யாளுவதற்கு என்ன அநியாயஞ் செய்தாலும் சரியே. சத்துருபயமின்றி நீடூழி வாழவேண்டிய முயற்சி எடுத்துக்கொள்வதற்கு நம்மிருவரையும் அவனது ஆயுதங்களாக நியமித்து நமது ஏவலால் எல்லாம் நடந்து வருவதாகக் காண்பித்து அதிவிசுவாசமாய்ப் பாவித்து நம்முடன் நயந்துகொண்டிருக்கும் இவனது யுக்தியையல்லவோ மெச்சத்தக்கது? எல்லா ஊழியமுஞ்செய்து நமது சுற்றத்தாரையுங் கொன்று இவ்விடத்தில் வேலைக்காரரைப்போல் எத்தனைகால மிருப்பது என்கிற மனோவியாதி மேற்கொண்டு உமதிடம் யோசனை செய்தவற்காகவே தூதனுப்பினேன்."

சோமபாலன்:—"அப்பா கோமளாங்கா! நீ சொல்வது ஏதும் எனக்குப் புரியவில்லை. நாமெப்படிச் சொல்லினும் அப்படி நடப்பித்து என்னை முதன் மந்திரியாகவும் உன்னைச் சேனாதிபதியாகவும் நியமித்து நமதிடத்தில் மிகவும் நம்பிக்கை வைத்திருக்கும் இரவிவர்மன் ஏதோ வஞ்சனை நினைத்திருப்பவன்போற் சொல்லுகிறாயே. நமது பிதாவின் கோரிக்கைப்படி குலசேகரனையும் விக்ரமசேனனையுஞ் சிறையிலடைத்தோம். இரவிவர்மராஜனை நாமகார்த்தம் வைத்துக்கொண்டு பாலைவனத்தை நாமே ஆள்கிறோம். மாளவ அரசன் விஜயன் முயற்சியாற் குலசேகரனைச் சிறைமீட்க யுத்தத்திற்கு வருவதுதெரிந்து குலசேகரனையும் விக்ரமசேனனையுங் கொலை பண்ண வுத்திரவு பண்ணினோம். அவர்களு மிதற்குள் இறந்திருப்பார்கள். மாளவராஜன் இதைக் கேட்டுத் திரும்பிப் போய்விடுவான். சிதம்பரனு மிறந்துவிட்டான். இப்படியிருக்க நமதிஷ்டப்படி நடக்கும் இரவிவர்மன் என்னவஞ்சனை நினைத்திருக்கிறான் என்று எண்ணுகிறாய்?"

கோமளாங்கன்:—"ஆஹா நன்றாயிருக்கிறது. ஒருவனுக்கு வேலைக்காரனா யிருப்பதுவோ க்ஷத்திரிய தர்மம்? நமக்குப் புஜபலமில்லையா? சேனைகள் நமது வசமல்லவா? இதுநிற்க, நமது சுற்றத்தாரைக் கொன்று இராஜ்ஜியமாள்வோன் கொஞ்சக்காலஞ் செல்லில் நாமுமவன் சத்துருக்களென்று யாரேனுங் கூறின் நம்மையுங் கொலை பண்ணல் இவனுக்குப் பெரிதாயிருக்குமா? இவைகளையெல்லாம் முன்னதாய் யோசிக்க வேண்டாமா? ஒன்றும் யோசியாமல் இப்

போது கிடைத்திருக்கிறதென்று நினைத்து உன்மத்தராய் அனுப விக்குஞ் சுகம் சுகமா? இதுதானா புத்திசாலிகள் நினைப்பது?"

சோமபாலன்:—"ஆனால் உன் எண்ணம் என்ன?"

கோமளாங்கன்—"இரவிவர்மனையும் இன்னுங் கொஞ்சநாளிற் குலசேகரன்போன ஊருக்கு அனுப்பிவிட்டு நாமிருவரும் இராஜ்ஜிய பாரமேற்று நீர் பாலவனத்திற்கும் நான் அழகாபுரத்திற்கும் அரசர்களாயிருந்து அரசாட்சி செய்யவேண்டுமென்பது என்கருத்து."

சோமபாலன் மிகவுங் கவனமாய்க் கடைசியாய்ச்சொன்ன வார்த்தைகளைக் கேட்டுத் தானிருந்த நாற்காலியின்மேல் அசைவறச் சாய்ந்து, என்து தம்பி சொல்வதுஞ் சரியே. இந்த இரவிவர்மன் பாலவனத் தரசனாயிருக்க வெகுநாளாய் ஆசைவைத்திருப்பவன். தவிர அன்று யுத்தத்திற்கு வந்தபோது குலசேகரனுக்கனுப்பிய கடிதத்தில் நமக்கு அபயாஸ்தங் கொடுத்திருப்பதாகவும் இராஜ்ஜியத்தைக் தருவதாகவும் எழுதவைத்தானே! இப்போது அவைகளை மறந்துவிட்டவனைப்போலிருக்கிறான். இன்னுங் கொஞ்சநாளிற் கோமளாங்கன் சொல்வதுபோல் நம்மையுங் கொன்றுவிட்டுச் சத்துருபயமின்றி வாழலாமென்று நினைப்பவனென்றான் ஐயமில்லை. ஆகையால் தகுந்த யுக்திபண்ணி நம்மை மோசம்பண்ணுமுன் நாமிவனை மோசம்பண்ணுவதே நன்மையென்று நினைத்துச் சிரித்துத் தம்பியைத் தழுவி "உன்யோசனை சரி" என்றான்.

அப்போது கடைவாயிலிற் கட்டியிருந்த மணி கணார் கணார் என்றடிக்கக் கேட்டு "கோமளாங்கா! இதோ இராஜாவினிடமிருந்து தூதுவன் நம்மை அவசரமாயழைக்க வந்திருப்பதுபோலிருக்கிறது. ஏதோ விசேஷமுண்டு. நாம் சீக்கிரத்தில் இராஜசபை போகவேண்டும். நாளை நாம் செய்யவேண்டிய முயற்சியைக்குறித்து யோசிப்போம். வா" என்றழைத்துக்கொண்டு கடைவாயிலில் வர, இருசேவகர்கள் எதிரில்வந்து, "அரசன் பயந்து அதிதுரிதமாய் உங்களிருவரையும் அழைத்துவரும்படி கட்டளையிட்டார்" என்று சொல்ல, இருவரும் இராஜசமுகஞ் சென்றனர்.

அரசனவர்களை எதிர்சென் றழைத்துப்போய்ச் சிம்மாஸனத் தருகி லுட்காரவைத்து மிகவும் பதைபதைப்பாய் "இச்சேவகன் கூறுவதைக் கேளுங்கள்" எனக், கோமளாங்கன் அருகில் நிற்குஞ் சேவகனைப் பார்த்து "என்ன சேதி?" என்றான். சேவகன் நடுங்கி "ஓ

மஹா இராஜாக்களே! நமது மஹாப்பிரபுவின் உத்திரவின்படி நானும் பதின்மர் சேவகர்களுங் குலசேகரப்பெருமாளையும் விக்கிரம சேன மந்திரியையும் விலங்கிட்டு எருக்கமாலை அணியச்செய்து ஊரைச்சுற்றி ஆங்காங்கு தெருக்களில் அவர்களைச் சூரியோதயத்திற் கொலைசெய்யப்படுமென்று தமுக்கடிப்பிக்கக்கேட்ட குடிகள் பிரலாபித்துக்கொண்டிருந்தார்கள். கைவிலங்கு கால்விலங்குகளுடன் அவர்கள் முன்னடக்கச் சேவகர்கள் ஆயுதபாணிகளாய்ப் பின்னடக்க அவர்களை அழைத்துக்கொண்டு படுகளம் போனோம். அங்கு, கொலையாளிகளை உருவினவாளுடன் எதிரில் நிறுத்திச் சேவகர்களை ஆயுதபாணிகளாய் இருபக்கமும் நிறுத்தி எனது சைகை பார்த்தவுடன் அவ்விருவரையும் வெட்டிவிட உத்திரவளித்தேன். அவர்கள் அரசனையும் மந்திரியையும் பார்த்துத் துக்கித்து, தங்களாற் கொலை செய்ய முடியாதென்று வாதாட, அவர்களுக்கு நமது பிரபுவின் ஆக்கினையைச் சொல்லிப் பயமுறுத்திக்கொண்டிருக்கும்போது சூரிய சந்திரர்களைப்போல இரு இளம்பிராயமுடைய யுத்தவீரர்கள் வாயுவேகமாய் இருபுரவிகளிலாரோகணித்து வாளையுருவி அட்டகாசம் பண்ணிக்கொண்டு உத்தரதிசையினின்றுவர, யாவரு மவர்களை பார்த்து ஆச்சரியமாய் நின்றனர். அதைக்கண்டு ஆக்கினையை நடத்தச் சைகைபண்ணினேன். இதற்குள் அவர்களிருவரும் நெருங்கிக் கொலையாளிகள் வாளுடன்வீழ வீசி அணியாயிருக்குஞ் சேவகர்களை எதிர்த்தார்கள். சேவகர்களும் தங்கள் பிராணனுக்கஞ்சி எதிர்த்தனர். அவர்கள் அவர்களை ஒரு கணப்பொழுதில் எமலோகம் போக்கிக் குலசேகரப்பெருமாளையும் விக்ரமசேனரையுந் தாங்களேறிவந்த புரவிகளிலேற்றி உத்தரதிசை நோக்கிச்சென்றனர். நான் மறைவாய்த் தொடர்ந்துசென்று அவர்கள் போகும் மார்க்கந் தெரிந்துவந்தேன், என்னுடன் ஐம்பது போர்ச்சேவகர்களை அனுப்பினால், அவர்களை கொலைபண்ணி வருகிறேன்" என்றான்.

கோமளாங்கன் கடுஞ்சினங்கொண்டு செய்தவையாவும் வியர்த்தமாயிற்றே என்று நினைத்துச் சேவகனைப் பார்த்து "நீ உன்வேலையில் ஜாக்கிரதையாயிருந்தா லிப்படிவாராது. நீயும் மாளாமல் இங்கு நின்று பிதற்றும் பீருவான உன்னை இதோ கொல்லுகிறேன்" என்று உடைவாளையுருவச் சோமபாலன் மறுத்துத் "தம்பி! இவனைக்கொல்வதில் என்னலாபம்? குலசேகரனும் விக்ரமசேனனுங் கொலைபடுவார்களா? அவர்களை மீட்டுச்சென்ற வாலிபர் அகப்படுவார்களா?

இவனை வைத்துக்கொண்டுதான் அவர்களைப் பிடிக்கவேண்டும். இது நிற்க, இனி முடியவேண்டியவைகளை யோசிப்போம். இந்த வாலிபர் யாவர்? பரமார்த்தகேஸரி புஜங்ககேஸரியா? விஜயனும் புகழேந்தியுமா? இதைத் தெரியவேண்டாமா?" என்றான். கோமளாங்கன் கோபந் தணிந்து வாளை உறையிலிட்டு அவ்வாலிபர்களின் ரூபச்சின்னங்களை வினவி விஜயனும்புகழேந்தியுமாயிருக்கலாம் என்றுஉத்தேசித்து ஒரு நொடியிற் பிடித்துவருகிறேனென்று அச்சேவகனுடன் 50 போர்ச் சேவகர்களை அழைத்துக்கொண்டு உத்தரதிசை நோக்கிச் சென்றனன். சிதம்பரசேகரனும் புகழேந்தியும் தங்கள் பிதாக்களுடன் பத்துநாழிகை தூரமிருக்கும் ஓர் வனத்திற் சென்று, களைதீர்த்து ஒருவர்க்கொருவர் தெரிந்துகொண்டு ஆலிங்கனம்பண்ணி அளவற்ற சந்தோஷத்திலாழ்ந்து சுகித்திருக்கும்போது கோமளாங்கனும் சேனையும் வருமாரவாரங் கேட்டு ஒரு மரமேறிஅவர்கள் வருவதைக் கண்டு ஆயுதபாணிகளாய்த் தங்கள் கவசங்களை அணிந்து பிதாக்களை ஓர் பெருமரத்தின் மறைவிலிருக்கச்செய்து தைரியங்கூறி இருவரும் புரவிகளிலாரோகணித்து யோகீஸ்வரரைத் தியானித்துச் சிங்கங்களைப்போற் கர்ஜ்ஜித்துக்கொண்டுகோமளாங்கனை எதிர்த்துச் சென்றார்கள். இதற்குள் சேவகக்கூட்டம் நெருங்கின. முன் பயந்தோடின சேவகத்தலைவன் சிதம்பரனையும் புகழேந்தியையும் கோமளாங்கனுக்குச் சுட்டிக்காண்பித்தான். அவனுஞ்சீறிச் அச்சிறுவர்களை ஒரு க்ஷணத்திற் பிடிக்கவேண்டுமென்று ஆஞ்ஞாபிக்க யாவருமவர்களைச் சுற்றிக்கொண்டனர்.

சிதம்பரனும் புகழேந்தியும் அட்டகாசம்பண்ணிச் சேவகக் கூட்டத்தைக் கால்மாடு தலைமாடாக வெட்டியெறியக் கோமளாங்கனும் நான்கு சேவகர்களும் மாத்திரம் மீந்தனர். சிதம்பரன் கோமளாங்கனையும் புகழேந்தி சேவகர்களையும் எதிர்த்துப் போராடக் கோமளாங்கன் துப்பாக்கியை உறையினின்று மெடுத்தான். இதைக் கண்ட சிதம்பரன் அதி துரிதமாய்ப் பாய்ந்து கோமளாங்கன் சிரசு கரகரவென்று சுழன்று பூமியில் விழும்படி தன் கைவாளால் வீசினான். சேவகர்களில் ஒருவன் மாத்திரம் தப்பித்துக்கொண்டு காற்றிலும் வேகமாய் ஓட, அவனைத்தொடராமல் புகழேந்தியுஞ் சிதம்பரனுந் தங்கள் பிதாக்களிடஞ்சென்று அவர்கள் மனங்களிக்க யுத்தகளத்தில் நடந்த விர்த்தாந்தங்களைச்சொல்லி ஆயாசந்தீர்ந்துக்கொண்டிருந்தார்கள். சூர்யன் அஸ்தமனமாயினான்.

ஓடிப்போன சேவகன் இரவிவர்மனுக்கும் சோமபாலனுக்கும் நடந்த சங்கதிகளைச் சொல்ல அவர்கள் திகைத்து துக்கித்து இரவில் நித்திரையின்றி "இனி யாது விளையுமோ? சிதம்பரன் இறந்திரான். கோமளாங்கன் வனத்தில் மோசம்போயிருப்பான். இனி என் செய்வது?" என்று ஒருவர்க்கொருவர் பலவாறு யோசித்துத் தம்தம் மனோராஜ்யங்களை வெளியிட்டுப் பேசிக்கொண்டிருக்கும் போது அவர்கள் செவியில் நாராசங் காய்ச்சிவிட்டதுபோல் சைன்யங்களின் ஆரவாரமுஞ் சங்குமுழக்கம் முதலிய வாத்தியகோஷங்களும் கேட்டன. அப்போது இரண்டு போர்வீரர்கள் தோன்றித் தாங்கள் பரமார்த்தகேஸரிப் பிரபுவின் தூதுவர்களென்றும், குலசேகரப் பெருமாளையும் விக்ரமசேனனையும் அழைத்துச் சென்று ஒப்புவித்து நாட்டைவிட்டு ஓடிவிடுகிறதோ அல்லது யுத்தம்புரிய வருகிறதோ செய்வீர்களென்றும் சொல்ல, இரவி வர்மன் பயந்து நடுங்கி "ஏது எல்லாச் சத்துருக்களும் ஏககாலத்தில் வந்துவிட்டார்கள்" என்று திகைத்துச் சோமபாலனைப் பதில் சொல்லி அனுப்பச் சொன்னான். அவன் "இதோ யுத்தத்திற்கு வருகிறோம்" என்றுரைத்து அவர்களை யனுப்பி இரவிவர்மனுடனும், மந்திரிகளுடனும் சேனைகளை நடத்தி வெளிப்பட்டான்.

குலசேகரப்பெருமாளும் சிறுவர்களும் சூர்யாஸ்தமனத்தின் பிறகு காட்டைவிட்டு விக்ரமசேனன் வழிகாட்டப் பாலைவனத்தருகிருக்கும் ஓர் சிறு கிராமஞ் சென்று அதன் தலைவனை யழைத்து நால்வருமிருக்க ஓரிடமும், தாங்களிருப்பது இரவிவர்மனுக்குத் தெரியக்கூடாதென்றுங் கேட்டுக்கொள்ள, அவன் மிகவும் மகிழ்ந்து நமஸ்கரித்து "அடியேன் செய்த பூஜாபலமோ தவமோ முன்னோர் செய்த புண்ணியமோ நீங்கள் என் சொற்ப கிரகத்திற்கு எழுந்தருளினீர்கள்" என்று துதித்துத் தனது கிருகத்திலேயே அமர்த்தி உபசரணைபண்ணி ஆனந்த முற்றிருக்கச் சேனைகளின் ஆரவாரங் கேட்டுப் பயந்து விக்ரமசேனனுக்குத் தெரிவித்தான். விக்கிரமசேனன் இரவில் வெளிப்பட்டுப் பட்டணத்தைக் கிட்டிப்பார்க்கப் பாலைவனத்தை வளைந்துகொண்டிருக்குஞ் சேனையைக் கண்டு சந்தேகித்து நெருங்கி சேனைத் தலைவர்களி லொருவனைச் சந்தித்தான். அத்தலைவனும் விக்ரமசேனனைத் தனதரசனிடங் கொண்டு சென்று "இவன் யாதோ சத்துருவின் தூதுவன்போ லிருக்கிறான். சுயரூபத்தை மறைத்து வேஷமிட்டுக்கொண்டு நமது சேனையின் சமீப

சாரந் தெரிந்துபோக வந்தவனைகையாற் பிடித்து வந்தேன்" என்றான். பரமார்த்தகேஸரி உற்றுப் பார்த்துச் சேவகனை அகலச் செய்து விக்கிரமசேனனை நமஸ்கரித்து ஆசனத்திருத்தி எதிரில் நிற்க, விக்ரமசேனன் மகிழ்ச்சியுடன் பரமார்த்தகேஸரியை மார்போடணைத்து முத்தமிட்டு தனது விர்த்தாந்தம் யாவும் ஒரு கணப்பொழுதி லுரைத்துச் சக்கரவர்த்தியும் குமாரனும் இருக்குமிடமுரைக்கப் பரமார்த்தகேஸரி ஆனந்தமுற்று விஜயசேகரனையும் மஹாதேவரையும் அழைத்துக்கொண்டு தனது சேனாதிபனுக்குப் பட்டணத்தை முற்றுகைபோட உத்திரவளித்துக் குலசேகரப் பெருமாளைத் தேடிச்சென்று யாவருஞ் சக்கரவர்த்தியை நமஸ்கரித்து அஞ்சலியஸ்தராய் நிற்க, அவர் மருமக்களை வாரியணைத்துக் கடவுளைத் துதித்து ஆனந்தமேலீட்டால் ஆனந்த பாஷ்யம் தாரை தாரையா யொழுகத் தனது ஆபத்து நிவாரணத்திற்கு ஏககாலத்தில் யாவரையும் ஒன்று சேர்த்துவைத்த கடவுளின் கிருபையைப் பலவாறு புகழ்ந்து சூரியோதயம் வரையில் அக்கிரகத்திலேயே யாவருமிருந்து க்ஷேமலாபாதிகளை விசாரித்துச் சிதம்பரசேகரனும் புகழேந்தியும் தங்கள் பிதாக்களைக் கொலைப்படுவதினின்று மீட்டுக் கோமளாங்கனையும் ஐம்பது போர்ச் சேவகர்களையும் நிமிஷத்தில் வதைத்ததைப் புகழ்ந்து பேசிச் சிதம்பரனது வைராக்கியத்திற்கு மெச்சிச் சூரியோதயத்தில் யாவரும் தளஞ்சென்று யுத்த கோலம் பூண்டு ஜயபேரியடித்து ஆரவாரித்தார்கள். அப்போது தூதுவர்கள் திரும்பி வந்து "இரவிவர்மனும் சோமபாலனும் யுத்தத்திற்கு வருகிறார்கள்" என்று உரைத்தனர். விக்ரமகேது சேனாதிபதியையும் பரமார்த்தகேஸரியையும் வணங்கி "யுத்தம் ஆரம்பஞ் செய்யத் தனக்கு விடைதரவேண்டும்" என்று வேண்டப் பரமார்த்தகேஸரி அவன் கோரிக்கைக்கிணங்கி உத்தரவளித்தான். இதற்குள் பட்டணமெங்கும் "குலசேகரப்பெருமாள் கொலைப்படுவதினின்றுந் தப்பித்துக்கொண்டு தனது குமாரனுடனும் மருமக்களுடனும் யுத்தத்திற்கு வருகிறார்" என்னும் வதந்தி பிறக்கவே குடிகளனைவரும் இரவிவர்மனைத் தூஷித்து, குலசேகரப்பெருமாளைப் புகழ்ந்து அவர்வசமானார்கள். குலசேகரப்பெருமாள் சைன்னியம் சோமபாலனுக்கு வசப்பட்டிருந்தவை யாவும் பயந்து இனி நாம் பிழைப்பதில்லையென்று இரவிவர்மனைவிட்டகன்றன. இரவிவர்மன் நடுங்கிச் சோமபாலனைப் பலவாறிகழ்ந்து தனது முதன்மந்திரி ஆதியில் எடுத்துக் கூறிய நல்வசனங்களைக் கேளாமல் சோமபாலன் துர்ப்போத

னைக் கிடங்கொடுத்து மோசம் போனேனென்று வருந்துவதைக் கண்ட சோமபாலன் இனி இவனைத் தேற்றுவதில் பயனில்லையென் றெண்ணிச் சேனையை நடத்தி யுத்தத்திற்கு முன்சென்றான்.

இருதறச்சேனைகளும் எதிர்த்துப்போராடின. விக்ரமகேது தன் புரவியை நீட்டித்துச் சோமபாலனை யெதிர்க்க அவன் விக்ரம கேது வைத் தன் வசமாம் பொருட்டு வேண்ட, அவன் நகைத்து "இனி யும் உன்புத்தியும் யுக்தியும் நாசமடையவில்லையா துரோகி" என்று கர்ச்சித்து சோமபாலன் நடுங்கும்படி போர்புரிய, அவனும் கர்ச் சித்தெதிர்த்தான். ஒருவர்க்கொருவர் பல ஆயுதப் பிரயோகங்கள் செய்து கடைசியில் அவன் சிரசை விக்ரமகேது தன் கைவாளால் வெட்டித்தள்ளினான். இதைக்கண்டு சேனைகள் புறங்காட்டியோடின. அவையைத் துரத்திவரும் விக்ரமகேதுவை இரவிவர்மன் எதிர்த் தான். அதுகண்டு அவன் தளகர்த்தர்கள் தைரியத்துடன் விக்ரம கேதுவைச் சுற்றிக்கொண்டார்கள். புகழேந்தி, விக்ரமகேதுவுக்கு ஆபத்து வரப்போகிறதென் றுணர்ந்து தன்புரவியை அதிவேகமாக நடத்தி ஆரவாரித்தான். விஜயன் புகழேந்திக்குதவியாய்ச்சென்றான். விக்ரமகேதுவைச் சுற்றிக்கொண்ட போர்வீரர்களை இருவருமெதிர்த் து அதோகதியாய் ஓடும்படி செய்தனர். விக்ரமகேது இரவிவர் மனைத் தாக்க அவன் போர்புரியச் சக்தியின்றி ஆயுதங்களை எறிந்து விட்டுக் கைகளைக் கூப்பிக் "குலசேகரப் பெருமான் இரக்ஷிக்க இர க்ஷிக்க" என்று கூக்குரலிட்டுப் பிரார்த்தித்தான். விஜயன் தன்றுணை வர்களை அமர்த்தி இரவிவர்மனைப் பிடித்துச்சென்று குலசேகரப் பெருமாள் முன்விட்டு நமஸ்கரிக்க, அவர் இரவிவர்மனை "என்ன வேண்டும்" என்று வினவ, அவன் அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து "பிரபுவே! நான்செய்த அபராதம் யாவும் பொறுத்து என் பிராணனை இந்தவிக்ரமகேதுவென்னும் கடோற்கஜனினின்று இர க்ஷிக்கவேண்டும். அபயம் அபயம்" என்றான்.

குலசேகரப்பெருமாள் தயவே உருவாய்க் கொண்டவராதலால் அவனுக்கு அபயாஸ்தம் அளித்து ஜயபேரி முழங்கப் பரிவாரத்து டன் பட்டணம் பிரவேசிக்கக் கண்ட குடிகள் அவரைப் போற்றி எதிர்சென்றழைத்து உற்சவங் கொண்டாடினார்கள். அரசன் தனது அரண்மனைசென்று இரவிவர்மனையும் அவன் றுணைவரையுங் காராக் கிரகத்தி லடைத்துத் தனது பந்துஜன பரிவாரங்களுடன் சந்தோஷ மாய்க் குடிகள் போற்றச் சிம்மாசனத்திருந்தான். விக்ரமகேதுவு

முன்போற் சர்வாதிகாரம் வகித்துச் சேனைகளையடக்கி நாடெங்கும் புகழுச் சமாதானம் விளைவித்து வந்தான்.

இப்படிச் சிலநாள் சென்றபிறகு மூகாம்பிகை யோகீஸ்வரர் இராஜசபைக்கு எழுந்தருள, சிதம்பரனும் புகழேந்தியும் எதிர் சென்று நமஸ்கரித்து, சோடசோபசாரங்களுஞ் செய்து அரசன் சபையில் ஆசனத்திருத்தி, ஆனந்தக்கண்ணீர் சொரியப் பல்வாறு போற்றினார்கள். ஆனந்தக் கூத்தாடினார்கள். மனமுருகப்பாடிப் புகழ்ந்து ஸ்தோத்திரம்பண்ணித் தண்டஞ் சமர்ப்பித்தார்கள். யோகீஸ்வரர் மகிழ்ந்து அவர்கட்கு ஆசிகூறிச் சிதம்பரனைத் தழுவித் தன்னை நமஸ்கரித்து நிற்கும் அரசன்முதல் யாவருக்கும் ஆசிகூறி உட்காரச் செய்தனர். புகழேந்தியெழுந்து யோகீஸ்வரர் பெருமையையும் அவர் விர்த்தாந்தத்தையும் யாவருக்குந் தெரியும்படி யுரைத்து "இந்தப் பரமாத்மாவின் உத்திரவில்லாதிருந்தால் சிதம்பரசேகரன் அரண்யம் விட்டு வருவதுமில்லை. அரசன் பிராணனை அன்று இரட்சிப்பதுமில்லை" என்றான். யாவரும் மறுபடியும் யோகீஸ்வரரை நமஸ்கரித்துப் பிரார்த்தித்தனர்.

யோகீஸ்வரர் அரசனை நோக்கி "ஓ அரசே! நீர் விர்தாப்பியரா கையால் இனி இராஜ்யபாரம் வஹித்து அரசாட்சி செய்யமுடியாது. உமக்குக் கடவுள் அருளிச்செய்தபடி பூர்ணவாயுசுடைய மஹானுபாவனுகிய புத்திரசிகாமணியிருப்பதால் அவனுக்குஉன் விரிந்தபெருமைதங்கிய இவ்வரசை யளித்துப் பட்டங்கட்டுவதைக்கண்குளிரப் பார்க்க இங்கு வந்திருக்கின்றோம்" என்றார். குலசேகரப்பெருமாள் இதைக்கேட்டு ஆனந்தங்கொண்டு அவரை நமஸ்கரித்துப் பட்டணமெங்கும் அலங்கரிக்கச்செய்து அரசசமூகங்களைவரவழைத்து நல்ல சுபதினத்தில் சிதம்பரசேகரப்பெருமாளுக்கு யோகீஸ்வரர் ஆசிகூறப் பட்டாபிஷேகஞ் செய்வித்துப் புகழேந்தியை முதன் மந்திரியாகவும் விஜயசேகரனைச் சேனாதிபதியாகவும் நியமித்து யாவருஞ் சந்தோஷ ஸாகரத்திலாழ்ந்து கடவுளைப் பிரார்த்தித்துக் குடிகள் மனங்களிக்க உலகஞ் செழிக்க வந்தனை வழிபாடுகள்செய்து மனங்களிக்க வாழ்ந்திருந்தார்கள்.

26. சந்தேக நிவர்த்தி.

யோகீஸ்வரர், சிதம்பரசேகரப்பெருமாள் என்னும் பாலவன் நாளுஞ் சக்கரவர்த்தியும் புகழேந்தி யென்னும் அவர் முதன் மந்திரியும் விஜயசேகரனென்னுஞ் சேனாதிபதியும் பணிவிடை செய்யப்

பெற்று ஆனந்தசித்தராய்ச் கொஞ்சநாளிருந்து சிதம்பரசேகரனைக் கிர்தார்த்தனுக்கவெண்ணி "அப்பா சிதம்பரா! உன் மனதில் சந்தேகங்கள் தோற்றாமல் நிஷ்டை சாதித்து வருகிறாயா?" எனச் சிதம்பரன் நமஸ்கரித்து "ஐயனே! தேவரீர் கிருபாநோக்கம் அடியேன்பேரி லிருக்கும்போது யாது குறைவு? சில சந்தேகங்கள் தோற்றுவதுண்டு. பிரம்மஸ்வரூபம் வேதங்கட்கும் மனோவாக்குக்கும் அகோசரமென்றும் பிறகு வேதவாக்கியத்தாலும் மனதாலும் அறியவேண்டுமென்றும் கூறுவதெங்ஙன்?"

யோ:—"வேதம் சப்தரூபத்தால் அந்த ஸ்வரூபத்தை உரைக்க முடியாததால்மகாவாக்கியத்தியானமாகிய அர்த்தரூபத்தால்காட்டினதேயாம். இதுவே காட்டாமற் காட்டினது. ஞானம்: அந்தக்கரணங்களுக்குத் தலைவன். ஞானத்தின் நினைவே புத்தி, மனம் என் உள்ளும் புறம்பும் சஞ்சரிப்பது. இதுவே ஞானஸ்மரணையாம். சைதன்ய ஸ்வரூபச்சாயை அந்தக்கரணங்களிற் பிரதிபிம்பிக்கும்போது அப்பிரதிபிம்பத்திற்கு விருத்தி, அறிவு என்றும், அந்தக்கரணப் பிரதிபிம்பத்திற்குச் சிதாபாசன் என்றும் சொல்லப்படும். ஓர் கண்ணுடியில் ஒரு முகத்தின் பிரதிபிம்பம் தோற்றுவதில் அப்பிரதிபிம்பத்தை விருத்திக்கும் கண்ணுடியுடன் பிரதிபிம்பத்தைச் சிதாபாசனுக்கும் உவமிக்கலாம். நூலொன்று வஸ்திரம் பலவானாற்போல் அந்தக்கரண விருத்திகளானவை பலரூப பேதங்களாய் விடுகின்றன. இப்படிப் பலரூபபேதமான ஜகத்தை அறியவேண்டுமானால் சிதாபாசனும் ஆத்மாவைத் தரிசிப்பதற்கு விருத்திமாத்திரமும் வேண்டும். இருளிலிருக்கும் ஓர் பொருளைக் காண விளக்கொளியும் கண்ணும் வேண்டுமே. சூர்யப் பிரகாசத்தல் நேத்திரம் ஒன்று போதுமல்லவா? மனதை சுத்தம் அசுத்தமென இரண்டாய்ப் பிரித்து, சுத்தமனம் விருத்தி அல்லது சித்து சம்பந்தமானதென்றும், அசுத்தமனம் ஜடமான அந்தக்கரண சம்பந்தமானதென்றும் சொல்லுவர். சுத்தமனதால் முறையே ஆத்மாவை அறியலாம். அசுத்தமனதால் அறியக்கூடாதாகையால் பிரம்மம் மனதிற் கெட்டியும் எட்டாதது எனப்படுவது?"

சிதம்பரன்:—"இப்படிப் பிரபஞ்சத்தி லுழலுகின்ற மனது அடங்கித் தன்மயமாகில் நாம் எப்படி பிராரத்துவ மனுபவித்து விவகாராதிகள் செய்வது?"

யோகீஸ்:—மனதிற்கு மூன்று குணங்களுள. ஒன்று மிகுந்தெழும்போது மற்றவையிரண்டும் அடங்கிநிற்கும். மனது இயல்பாய்ச் சத்துவ வடிவு. இராஜசும் தமசும் அத்துடன் வந்து சேர்ந்தவையாகையால் மனம் தனது சத்துவகுணத்தை விடாதிருந்தால் மற்றவை நீங்கிவிடும். அப்போது மனம் ஸ்வரூபத்தில் ஐக்கியப்பட்டுச் சலனமின்றி நிற்கும். இப்படி நிற்பதற்கு உருவநாசமென்றும், மனமென்னும் பேரின்றி விளங்குதலால் இதுவே முக்தியென்றும், இப்படி முக்திபெற்ற சத்வரூபமான மனம் சூட்சுமதேகம் நசிக்கும்போது நசித்துவிடுதலால் மன அரூபநாசமென்றும், அதனால் விதேகமுக்தி யானதென்றுங் கூறப்படும். ஸ்வரூப ஐக்கியமான மனது அச்சுகத்தை விடாதிருப்பதால் என்ன வியவகாரஞ் செய்யினும் அது சமாதியேயன்றி விவகாரங்களாகமாட்டாது. சத்வகுணமன்த்துடன் பிராரத்துவ மனுபவிக்கலாம். அப்படி அனுபவிக்கினும் அவை சஞ்சிதமாகா."

சிதம்பரன்:—"சத்வம், ரஜசு, தமசு என்னும் முக்குணங்களின் வரலாறென்ன? அவற்றை எப்படித் தெரிந்துகொள்வது? அவற்றின் விசேஷங்கள் எத்தன்மையுடையன?"

யோகீ:—"சத்வகுணம் சுவச்சமானதும்,நிர்மலமாகப் பிரகாசிப்பதும் உபத்திரவ ரஹிதமானதும் அதை அடைந்தவர்களைச் சுகத்தோடும் ஞானத்தோடும் சேர்க்கின்றதுமாம். இது பிரபலமாம்போது ஞானேந்திரியங்களின் வழியாக ஆத்மஞானம் பிறக்கும். இதிற் செய்யும் கர்மங்களுக்குப் பலன் ஞானம். இதில் மரணமடைபவர் பிரம்மாதி லோகங்களை அடைவர். இக்குணமுடையோர் தேவலோக மடைவர். ரஜோகுணம் கோரிக்கைகளின் ஸ்வரூபமாய்ப் பிராப்தமான விஷயங்களில் விருப்புண்டாகச் செய்கின்றது. அது தேகியைக் கர்மசக்தியுடன் சேர்த்துக் கர்மத்திற் பிரவேசிக்கச் செய்யும். இது பிரபலமாம்போது திரவிய விருப்பமும், சாமானியசேஷ்டையும், கர்மசக்தியும், இந்திரிய நிக்கிரகமின்மையும், இச்சையும் உண்டாகும். இதிற் செய்யுங் கர்மத்திற்குப் பலன், துக்கம். ரஜோகுணத்தால் லோபம் பிறக்கின்றது. இது பிரபலமானபோது 'மரணமடைபவன், கர்மாபேக்ஷையுடைய மத்தியலோகத்திற் பிறக்கின்றான். ரஜோகுணமுடையவர் மானிடலோகத்தில் மனிதராகப் பிறக்கிறார்கள். தமோகுணம் அஞ்ஞானத்தால் உண்டானது. அது எல்லாப் பிராணிகளையும் மோஹிக்கச்செய்து தேகியைச் சோம்பலோ

டும் நித்திரையோடுஞ் சேர்த்து, ஞானத்தை மறைக்கும். இது பிரபலமாம்போது தேகத்திற்குச் சோம்பல், மோகம் முதலியன வுண்டாம். இந்தக் காலத்தில் மரிப்பவன் நாய், பன்றி முதலிய நிகிருஷ்ட ஜன்மங்களை அடைகிறான். இதிற் கர்மஞ்செய்கில், அஞ்ஞானம் பலமாம். இக்குணமுள்ளோர் பசுவாதி ஜன்மங்களையும், நரகத்தையும் அடைகிறார்கள். இந்த மூன்று குணங்களுக்கும் ஸாக்ஷியாய்நின்று அவைகட்கு உட்படாது மனதை அடக்கியிருப்பவன் ஜீவன்முக்தனென்று தெரிந்துகொள்வாய்."

சிதம்பரன்:—"ஆனால் ஜீவன்முக்தர்களுக்கு நானென்னும் பாவமின்றி போகமுண்டாதலும் அவர்கள் கிருதகிர்த்தியராகையால் விவகரித்தலும் ஆமா?"

யோகீஸ்வரர்:—"ஜீவன்முக்தர்கள் மாகர்த்தன், மாபோகி, மாத்தியாகி என மூன்றுவிதம். (1) மாகர்த்தன் ஸ்வரூபமான தன் சன்னிதியில் நடக்குந் தேகவிவகாரங்களுக்கும் மனமிறந்த சமாதிக்கும் ஸாக்ஷியாய்க் கூடியுங் கூடாமலிருப்பார்.

(2) மாபோகி:—உணவின் ரசாரசங்களை அறியாமற் கிடைத்தவைகளைக் காட்டுத்தீப்போற் புசிப்பார்.

(3) மாத்தியாகி:—தனக்கு அன்னியமானவை யாதுபற்றினும் பற்றாமல் விளங்குவர். இவர்களே முத்தர்கள். அஞ்ஞானதிசையில் உலக விவகாரங்களும், முமுக்ஷு திசையிற் சிரவணாதியும், முக்திதிசையில் மனிதர் யாதுசெய்யினுஞ் செய்யவில்லையென்று அனுபவமுடையவரா யிருப்பார்கள். ஆகையால் முக்தர்கள் விவகாரஞ் செய்யினுஞ் செய்யாதவர்களேயாம். இவர்களுக்கு ஞான மறியாதவரைப்போற் சிரவணமும், சந்தேகிகட்குடைய தியானமும், விபரீதமுடையவர்கட்குடைய சமாதியுமாகிய இம்மூன்று தடைகளுமில்லை. பிராரத்துவத்தால் அஞ்ஞானிகளைப்போல விவகரிப்பார்கள். அப்படிவிவகரிப்பதும் ஈஸ்வரனைப்போல் உலகோபகாரார்த்தமேயன்றி, அதனால் தங்களுக்கு யாதொரு சுகதுக்கமுமில்லை."

சிதம்பரன்:—"ஜீவன்முக்தரை ஈஸ்வரனுக்கு உபமானமாய்ச் சொல்லும்படி அவர் விசேஷங்களெல்லாம் ஜீவன்முக்தர்களுக்குண்டா?"

யோகீஸ்வரர்:—"ஈஸ்வரனைப்போல மமதையும் அகந்தையும் நீங்கினவராய் மாயையின் தன்மையால் அஷ்டசித்திகளைப்பெற்ற திரிமூர்த்திகள் பெரியவர்களேயன்றி அறிவில் அவர்களுக்குக் குழ

மாய் எல்லாத் தேகங்களிலும் பரிபூரணமாயிருப்பதால் ஈஸ்வரனுக்கு உவமையிடலாம்.''

சிதம்பரன்:—''ஆனால் ஞானி முக்தியடைந்தால் அவர் எல்லா ஜீவர்களிலு மிருப்பதால், அந்த ஜீவர்களும் முக்தியடையலாமே?''

யோகீஸ்வரர்:—''அப்படியன்று. தேகங்களில் ஆத்மா ஒன்றானாலும், சிதாபாசர் அனேகவிதம். சந்திரனது பிரதிபிம்பம் பல கடங்களிலிருக்கும் ஜலங்களில் காண்கின்றது. இக்கடஜலங்கள் சிதாபாசரைப்போல எவ்வளவு காலமிருக்கினும் பிரதிபிம்பமிருக்கும். கடங்கள் நசிக்கில் பிரதிபிம்பங்கள் சந்திரனிட மெப்படிச் சேர்ந்து விடுகிறதோ அப்படிச் சிதாபாசர் நசிக்கில் மோக்ஷம் அடைவரே யன்றி சிதாபாசத்வம் நசியாவரையில் மோக்ஷமடையார். பிரம்மப் பிரதிபலனம் எல்லா ஜீவர்களிலு மிருப்பதால் ஞானி, இதரஜீவர்களிலொருவனானான். சிதாபாசனை யறிந்து நசிப்பித்து பிரம்மத்தில் ஐக்கியமானதினால் மோக்ஷமடைந்தான்.''

சிதம்பரன்;—''அஷ்டமாசித்திகள் விஸ்வாமித்திரர் முதலிய ரிஷீஸ்வரர்களுக்கு இருந்தும் திரிமூர்த்திக ளாகவில்லையே?''

யோகீஸ்வரர்:—''இவர்கள் தங்கள் தவத்தால் திரிமூர்த்திகளிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். தவம் இரண்டுவிதம்: நிஷ்காம்யம், காம்யம். காம்யத்தால் சித்தியும், நிஷ்காம்யத்தால் மோக்ஷமும் பெறலாம். இரண்டுஞ் செய்கில் இரண்டும் பெறலாம். வியாசர், விஸ்வாமித்திரர், வசிஷ்டர் முதலானவர்கள் இப்படி இரண்டு முடையவர்கள். ஜனகன், பகிரீதன், மஹாபலி முதலியவர்கள் முக்தியை மாத்திரம் அடைந்தார்கள். சில முனிவர்கள் சித்தியை மாத்திரம் அடைந்தார்கள், சித்தியிற் பயனில்லாவிடினும் இச்சாப்ராரப்தம் புசித்து ஒடுங்குவதற்கு அதை விரும்பினார்கள்.''

சிதம்பரன்:—''ஸ்வாமி! பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம் என்பவைகள் கர்மத்தினாலன்றோ வருவது. கர்ம மனுபவியாமல் தீருமா? தீருமாயின் அவைகளை என்ன செய்யவேண்டும்? கர்மஞ் செய்விப்பவனும் அனுபவிப்பவனும் ஈசுவரனாதலால் ஜீவனுக்குத் தான் செய்யுங் கர்மத்திற்குக் கர்த்திருத்வம் இல்லையாதே? அப்படியிருக்க ஒருவன் துன்புறுவதும் மற்றொருவன் சுகமனுபவிப்பதும் யாதுகாரணமோ தெரியவில்லை?''

யோகீஸ்வரர் :—"ஞானிக்கு அறிவு வளர்வதிற் கர்மங் கெடும். இதைப் பகிர்முகமாயிருப்பவர்கள் அறியார்கள். ஆகையால் கர்மஞ் செய்கிறார்கள். ஜீவசிருஷ்டி, ஈஸ்வரசிருஷ்டி என்றிரண்டுளதில் ஜீவசிருஷ்டியானவை: ஜனனமரணம் விளைவிக்கும் இராகத்வேஷாதிகளேயாம், இவை நசிக்கில் மோக்ஷமுண்டாம். ஈஸ்வரசிருஷ்டியானவை: ஸ்தாவர ஜங்கமங்கள் முதலானவையேயாம். இவை ஆத்மாவுக்கு வீடடைவதற்குச் சாதனமும், இவை நசிக்கில் வேறுரு உண்டாவதால் மோக்ஷ முண்டாகாது. ஆகையால் பிரம்மப் பிரளயத்திலும் நாசமடையுஞ் சீவர்கள் இராகத்வேஷாதிகளை ஜயித்திராவிடில் ஜன்மமுண்டாம். ஞானிக்கு அவைகள் நாசமடைந்தவுடன் மோக்ஷமாம். இதனால் கர்மாதிகள் ஜீவனால் நேரிட்டதன்றி ஈஸ்வரனால் அல்லவென்று அறிந்து அவற்றை விசாரத்தாற் கெடுக்கவேண்டும். இன்பதுன்பம் கர்மத்தைப் பொறுத்தது. துஷ்கர்மஞ் செய்கில் துன்பமுஞ் சத்கர்மத்தாற் சுகமும் ஈஸ்வரனளிப்பன். கற்பகவிருக்ஷமும் ஜலமும் நெருப்பும் தங்களை அண்டினவர்கட்குடைய தரித்திரத்தையும் தாகத்தையுங் குளிரையும் முறையே எப்படி நீக்குமோ அப்படியே தன்னை யடைபவர்கட்கு ஈஸ்வரர் கிருபைசெய்வார். இராகத்வேஷாதிகளின்வழியே செல்பவர்கட்குத் துக்க மளித்துச் சன்மார்க்கத்தில் வரும்படிசெய்வார். இதுவு மவர் கருணையே. ஜீவன் தன்னாலான முயற்சிசெய்து, கடவு ளனுக்கிரகம்பெற்று, அவர் வாக்கியமான வேதாந்த முடிவைக் குருமுகமாய்த் தெரிந்து, விவேகமுண்டாய், அஞ்ஞானம் நீங்கி, ஞானமுண்டாகில் பவம் நீங்குமென்பதே திண்ணம் என்றுணர்வாயாக."

சிதம்பரன்:—"கர்மத்தாற் பக்தி வைராக்கியம் அஷ்டசித்திகள் சாரூப முதலியவைகள் லபிக்குமே? செம்பிற் சேர்ந்த களிம்பு கழுவுதலால் போமேயன்றி அறிவால் நீங்காததுபோல் கர்மத்தாலன்றி இராகத்துவேஷாதிகள் அறிவாற் போமா? புண்ணியகர்மத்தால் தேவர்களாகியும், பாபகர்மத்தால் ஸ்தாவர மிருகங்களாகியும், மிசிர கர்மத்தால் மானிடர்களாகியும் ஜன்ம முண்டாகிறதென்றும், வருணாச்சிரமப்படி செய்யுங் கர்மமே சுகமென்றும் கூறப்படுகிறதே?"

யோகீஸ்வரர்:—"சித்து, ஜடம் இன்னவையென்று இடைவிடா விசாரத்தால் தெரிந்துகொள்ளும் அறிவினாலன்றி ஞானமுதியா. நிஷ்காமியமாய்ச் செய்யுங் கர்மத்தால் சித்தசுத்தியும், அதனால் விசாரமும், விசாரத்தால் ஞானமு முதிக்கும். காமியகர்மத்தால்

அதன் பலனை அனுபவிக்க ஜன்ம முண்டாகுமேயன்றி அறிவுண்டாகாது. அஞ்ஞானமுங் கர்மமுஞ் சிநேகிதர்கள் என்றும், அஞ்ஞானமும் அறிவும் சத்துருக்கள் என்றும் உணரவேண்டும். செம்பிற் சேருங் களிம்பை நீக்க ஓர் கருவிவேண்டுவது சரி. ஆனாற் பளிங்கிற் றோற்றும் பஞ்சவர்ணமான மாசையகற்ற அது கற்பிதத்தா லுண்டானதேயன்றி நிஜமாய் இல்லை என்றுணரும்படி மனமே போதும். இதைப்போற் கற்பிதமான ஜடத்தை பொய்யென்றுணர அறிவின்றிக் கர்மத்தால் ஆகாது. ஒருவன் ஒருபொருளை வைத்து மறக்கின், அவ்விடத்தை நினைத்துணர்ந்து அப்பொருளைக் காணவேண்டுமேயன்றிப் பலவிடங்களுக்கு ஓடினாலும், பலவாறு துக்கித்தாலுங் கிடைக்குமோ? ஆகையால், அறிவாலன்றிக் கர்மத்தால் ஞானமுதியாது. மண்தின்னுங் குழந்தைக்கு வெல்லக்கட்டியில் மருந்தை மறைத்துவைத்துக் கொடுத்து வியாதியை நீக்குந் தாயைப்போற் கிரியாகாண்டம் முதலான சாஸ்திரங்கள், மறுமையிலுண்டாகும் இன்பத்தைக்காட்டி வியாதியான இம்மையின்பத்தை நீக்குதற்கு, அறிவு என்னும் மருந்தை அம்மறுமையின்பத்தொளித்துப் புகட்டுவதால் இம்மையும் பிறகு மறுமையும் நீங்கி மோக்ஷமளிக்கச்சொன்னது என்றறிக. வேதம் போகத்தை விதிக்கவில்லை. போகமனுபவிப்பது அதை இச்சிக்கும் ஜீவர்களுக்கு இயல்பாய்விட்டது. மதுவும் மாம்சமும் புசிக்க இச்சிக்கின் யாகஞ்செய்து புசி என்றும், பெண்ணுடன் கலவிவேண்டுமேல் பெண்சாதியுடன்சேர் என்றுஞ் சொன்னால் மற்றப்படி செய்யார்களென்பதே கருத்து. பிறகு மது மாம்சாதிகளைக் கிராணித்துப்பார் என்றும், புத்திரோற்பத்திக்காய் மாத்திரம் பெண்சாதியுடன் சேர் என்றுஞ் சாஸ்திரங்களிலெடுத்துக் கூறியிருப்பதையுணர்ந்து அவைகளையும் நீக்கிவிடு என்பதே கருத்தாம். இவைகளை ஒழித்து நீக்கிய சன்யாசிக்கும் பிரம்மச்சாரிக்கும் நிந்தையில்லாததை யுணர்வாய்".

சிதம்பரன்:—"ஸ்வாமி! அஞ்ஞானமுங் கர்மமும் ஒன்றுக்கொன்று தொடராநின்றமையால் சிநேகிதர்கள் என்பது சரியே. ஆனால் ஞானமு மஞ்ஞானமும் சத்துருக்களாவது நிஜமானாற் பரிசுத்தமான பூரணசந்திரனிடத்திற் றோன்றியிருக்கும் மாசைப்போல, அஞ்ஞானம் ஞானத்துடன்சேர்ந்து ஜீவஸ்ருஷ்டிகளாகிய இராகத்வேஷாதிகளை உண்டுபண்ணுவது சரியா?"

யோகீஸ்வரர்:—"அப்பா சிதம்பரா! பிரம்மசைதன்யத்தை ஸ்வரூபஞானம், விருத்திஞானம் என்றிரண்டாகக் கூறுவார்கள். ஸ்வரூப

ஞானமே விருத்திஞானமாய்த் தோன்றும். சுஷுப்தியவஸ்தையில், அறிவின்மையென்னும் மாயையின் வசமாகாமல் தானே அறிவாக விருந்து ஸ்வரூபஞானம் அஞ்ஞானத்தை எதிரிட்டுக் காண்பதனுல் அஞ்ஞானம் விலகிநிற்கும். "நான் தூங்கினேன்" என்றறிவதால் ஸ்வரூபஞானம் அஞ்ஞானத்திற்குப் பகையாய் விளங்குகிறது. "நான் தூங்கினேன்" என்று அறியாமலிருக்குங்கால் ஸ்வரூபத்தை அஞ்ஞானம் மூடியிருப்பதாயறியவேண்டும். இப்படி மூடியிருக்கு மஞ்ஞானத்தைச் சமாதியிலுதிக்கின்ற விருத்திஞானமானது எரித்துவிடும்."

சிதம்பரன்:—"ஸ்வாமி! ஸ்வரூபத்தை மூடியிருக்கின்ற ஜடமாகிய அஞ்ஞானத்தை அந்த ஸ்வரூபஞானமே கெடுக்காமல் அதன் காரியமாய்ச் சமாதியிலுதிக்கும் விருத்தி ஞானமானது எவ்விதத்திற் கெடுக்கும்?"

யோகீஸ்வரர்:—"அப்பா! ஸ்வரூபஞானம், விருத்திஞானமென்னுமிரண்டையும், சூர்யனுக்கும் சூர்யகிரணங்கட்கும் உபமிக்கலாம். சூரியன் எங்கும் பிரகாசமாயிருக்கும்படி தனது உஷ்ணமான கிரணங்களைப் பரவவிடுதலாற் பூமியெங்கும் பிரகாசமாயிருப்பதேயன்றித் தனது கிரணங்களின் உஷ்ணத்தால் தானே பொருள்களை எரித்துவிடுகிறதில்லை. ஆனால் அக்கிரணங்களை ஓர் சூர்யகாந்தக்கல்லினிடமாகச் செலுத்தி அக்னிரூபமாய்ச் சகலவஸ்துக்களையுந் தஹிப்பித்துவிடுவதுபோலக் காரணமான ஸ்வரூபஞானத்தாற் கெடாத அஞ்ஞானம், நிஷ்டையிலுதிக்குங் காரியமான பூரணவிருத்தி ஞானத்தாற் கெடும். விருத்திஞானமென்பது விசாரத்தாலுதிப்பதென்று தெரிந்துகொள்வாய். இதனுல் அவையிரண்டும் அஞ்ஞானத்தைக் கெடுக்குங் காரியகாரணமென் றுணர்வாய்."

சிதம்பரன்:—"ஸ்வாமி! மனத்தாலும் வாக்காலும் சரீரத்தாலுஞ் செய்பவை யாவுங் கர்மமாயிற்றே! "அகம் பிரம்மம்" என உதிக்கும் விருத்திஞானமானது அந்தக்கரணமான மனதின்கண் உதிக்கும் மானசகர்மமான காரியமாகையால் அது அஞ்ஞானத்தை எரித்துவிடு மென்றுரையாமல், அக்கர்மகாரியத்திற்கு "விருத்தி ஞானம்" என்னும் மகத்தான நாமமுண்டாவானேன்?"

யோகீஸ்வரர்:—"அப்பா! விருத்திஞானம் அந்தக்கரண காரியமான கர்மமென்பது நிஜமே. ஆகிலும், சகோதரர்களான ஒருதாயின் பிள்ளைகளே கலகித்துக்கொள்வதுபோல், ஒன்றுக்கொன்று விருத்தமாம். எப்படியெனில், புருடதந்திரம் வஸ்துதந்திரம் என்றிரண்டுள

திற் புருடதந்திரமென்பது ஜபதப த்யானத்தால் உதிப்பது. இதை விவேகத்தா லுதிக்கும் விருத்திஞானமாகிய வஸ்துதந்திரங் கெடுத்துவிடும், ஆகையால் விருத்திஞானம் கர்மமாகமாட்டாது. கர்மத்தை ஒருஜீவனுற் செய்வதற்கும் ஒழிப்பதற்கும் வேறுவிதமாய்ச் செய்வதற்குங் கூடும். ஞானம் அப்படிப்பட்டதன்று.

சிதம்பரன்:—"ஸ்வாமி! புருடதந்திரமென்பது தியானத்தால் உதிக்கும் என்று அருளிச்செய்தீர்களே? அத்தியானத்தின் மகிமை எப்படிப்பட்டதென்று கிருபை செய்யவேண்டும்?"

யோகீஸ்வரர்:— "தியானமென்பது ஒன்றை மற்றென்றாய்க் கேட்டபடி பாவித்துச்செய்வது. இதற்குக் "கற்பனுயோகம்" எனப் பேர். பிரத்யக்ஷமாய்ப் பாவித்தபடி தரிசிப்பது உண்மையான ஞானம். ஞானம் அஞ்ஞானத்தைப் பார்த்த க்ஷணங் கெடுக்கும். இது கர்மமல்லவென்று அறிவாயாக. தியானயோகம் கேட்டவண்ணம் பாவித்தலும், விவேகஞானம் பாவித்தவண்ணம் காண்பதுமாமென்றுணர்க."

சிதம்பரன்:—"ஸ்வாமி! தியானம் கற்பிதமாகிய பொய்யென்றால் அது தருகின்ற கைவல்யமான முக்தியுங் கற்பிதமான பொய்யாகுமே?"

யோகீஸ்வரர்:—"தியானரூபமான பாவனை பொய். பாவனு ஸ்வரூபத்தை ஞானதிர்ஷ்டியாற் பார்ப்பது நிஜம். மரணகாலத்தில் ஒருவன் யாது சிந்திக்கின்றானோ அந்தரூபமாகவே ஜன்மமுண்டாகும். ஆகையால் ஆத்மஸ்வரூபத்தைத் தரிசிக்கில் அவனதுவேயாவான். த்யானம் முன்பு பரோக்ஷத்தையும் பிறகு அபரோக்ஷத்தையும் உபாசனு வீக்ஷண்யத்தாற் கொடுக்கக்கூடியது. இது விசாரத்தாலுதிக்கும் மோக்ஷம். இதுவே முடிவு. தியானத்தின் காரியமானது யோகம். காரணமானது ஞானம். ஆகையால் விசாரஞானமேவேண்டும்."

தியானத்தால் நிர்மலமாவது எவ்வண்ணமெனில், தேற்றாங்கொட்டையை ஜலத்திற்கரைக்க அது அந்தஜலத்திலிருக்கும் அழுக்குடன் அதுவுங் கெடுவதுபோல விருத்திஞானமென்னும் விசாரஞானம் அஞ்ஞானத்தைக் கெடுத்து அதுவுங் கெடும். பூவுலகை முழுதுமாளுஞ் சக்கரவர்த்திக்கும் நன்மை தீமையறியாத சிசுவுக்கும் எப்படிச் சமாதான முண்டாயிருக்குமோ அப்படி ஞானிகட்கு இந்த நிச்சயமிருப்பதால் மாயாகற்பனையான யாவும்பொய்யென்றும்

சொற்பனத்திற் கண்ட பொருளைப்போல அநிலுதித்த ஜகஜீவபரமும் பொய் என்றுங் கருதி சொர்க்கநரக விசாரமின்றிப் பூர்ணமாயிருப்பாய்."

27. சந்தேகநிவர்த்தி (தொடர்ச்சி).

சிதம்பரன்:—"ஸ்வாமி! அடியேன் ஐயம் நீங்கவுரைக்கும் தேவரீர் அமிர்த சமானமான வசனங்களைக் கேட்டு மனங்களித்தேன். இனியும் தேவரீரைக் கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டியவை யிருக்கின்றன. மாயாகற்பனையானதுதான் ஜகமென்பது உணர்ந்தேன். ஆகிலும் மாயை என்பது என்ன? யார் அதை உடையவர்கள்? எப்படியுண்டாயிற்று? அது உண்டாவதற்குக் காரணமென்ன? மாயை பிரம்மத்தைவிட வேறாயிருக்கின்றதா? பிரம்மமும் மாயையும் ஒன்றுதானென்றால் மாயையென்பதைப்போற் பிரம்மமும் பொய்யா? மாயையுண்டு என்பதெப்படி? அதை நீக்கும் வகையும், பிரம்மத்துடன் ஏகமாயிருப்பதென்று தரிசிக்கும் மார்க்கமும், முக்தியடையும் மார்க்கமும் இன்னபடியென்று கிருபைசெய்யவேண்டும்?"

யோகீஸ்வரர்:—"அப்பா! உன் சந்தேகங்கள் நிவர்த்தியாவதற்கே நாமிங்கிருக்கின்றோம். மாயை இன்னவிதமென்றுரைக்க முடியாததாலேயே அதற்குஅவாச்சியரூபமென்று பேர்சொல்லப்படுவது. யான், எனது என்று தேகத்தை அபிமானித்துக் கூறிக்கொண்டு ஜகம் சத்தியமென்று யார் நம்பியிருக்கிறார்களோ அவர்களே அதை யுடையவர்கள். அது இன்னவிதமா யுண்டானதென்று யாருக்கும் தெரியாது. ஆத்மஞான மில்லாமற்போவதே அது உண்டாவதற்குக் காரணம். பிரம்மத்தின் சக்திகளில் அதுவும் ஒன்றாகையால் அது பிரமத்தைவிட்டு வேறாயினதல்ல. பிரம்மமிருக்குமிடத்து மாயை யில்லாததால் பிரம்மமும் மாயையும் ஒன்றல்ல. ஆகையால் பிரம்மம் பொய்யாகமாட்டாது. அசத்தாகிய ஸ்தாவர ஸ்ருஷ்டிகள் யாவும் பலவிதமாய்ப் பூத்துக் காய்த்துக் கனிவதும், அண்டங்களிலுள்ள கரு, உருவுடன் பல விசித்திர வர்ணங்களான பறவைகளாவதும், கருப்பைகளிலிருக்குஞ் சிசுக்களின் அவயவாதிகள் சரிவுருவுற்று ஜனிப்பதுவுங் காண்கிறோம். ஆகையால் இவைகட்குக் காரணமான மாயாசக்தி ஒன்றுண்டெனவே தெளியவேண்டும். சூரியகிரணம் பகிர்முகத்திற் பொய்யான ஜலமாகவும், அந்தர்முகத்தில் நிஜமான கானலாகவுந் தோற்றுவதுபோற் பிரம்மப்ரகாசமே பகிர்முகத்தில் மாயாசக்தியாகவும், அந்தர்முகத்தில் சிற்சாயையாகவும் அனைத்திற்

கும் உள்ளீடாயிருந்து நடத்துகின்றது. மாயையை நீக்கி முக்தியடைவது எவ்விதமெனில், காரியாகாரியங்களாகிய ஜகமனைத்தையும் நீக்கிக் காரணமாகிய பிரம்மத்தை உணர்ந்து நிற்சலனமாயிருக்கின் முக்தியாம். ஜலத்திற் றலைகீழாய்த் தோன்றும் தனது நிழலைப் பார்த்து பிரமித்து, கரையிற்றோன்றும் நேரானநிழலைப் பார்த்து ஐயம் நீங்குவதுபோல் ஈஸ்வரரூபந் தரிசனமானால் அதன் திர்சியம் தானாகவே நீங்கும். ஒரு ஜீவனில் அமைந்திருக்கும் இந்திரியங்களின் செய்கை பலவாறு யிருப்பதுபோல சச்சிதானந்த இயல்பு ஆத்மாவின் விருத்தி வேற்றுமையாயிருக்கும். சத்வ ரஜோ தமோ குணங்களின் விருத்திகளான, சாந்தம், கோரம், மூடமென்பவைகள்போல, சச்சிதானந்தம் ஏகமாயிருக்கினும் விருத்திகள் பேதங்களாம். இவைகளால் வெளிப்பட்டதும் மறைப்பட்டதும் தவிர அவைகள் ஆத்மாவினிடம் இல்லாததல்லவென்று அறிவாய்."

சிதம்பரன்:—"சத்து, சித்து, ஆனந்தம் என்றால் என்ன? நாசமடையுந் தேகத்திலிருந்துந் தேகியானது அவ்வாறுயிருப்பதென்று அனுபவிப்பதெப்படி? ஊண்முதலியவை சுகத்திற்குச் சாதனமாவதுபோல ஆத்மா ஆனந்தத்திற்குச் சாதனமாகுமா?"

யோகீஸ்வரர்:—"அப்பா! சத்து: முக்காலத்தும் அழியாததென்றும், சித்து: சிற்சடபேதம் அறிவதென்றும், ஆனந்தம்: சுவானுபூதி சுகமென்றும் அறிந்து தேகியானது, தேகம் நசித்தும் அழியாததாற் சத்தென்றும், சுஷுப்தியிலும் இருளிலும் இருளையும் வஸ்துக்களையும் காண்பதாற் சித்தென்றும், விஷயங்களனைத்தினுமுள்ள பிரியம் நீங்கினும், தனது பிரியம் நீங்காததால் ஆனந்தமென்றும் அனுபவப்படவேண்டும். ஆத்மாவே ஆனந்தமாதலால் அது சாதனமாகாது. விஷயசுகம் அளவிற்கெட்டினதும், வெறுக்கக்கூடினதும், மாறிமாறி உண்டாகக் கூடினதுமாம். விஷயசுகம் நசிக்கினும் ஆத்மசுகம் நசியாது. ஆகையால் விஷயசுகம் ஆத்மானந்தமல்ல. எப்படியெனில், ஒருவன் தன்னைக் கொல்லுகிறேனென்று கூறித் தற்கொலை புரியினும், அவன் தேஹம் நசிப்பதன்றி தேஹி நசியான். ஆத்மா தற்பிரியத்திற் குறைவின்றி தேஹத்தை நீக்கினதன்றித் தன்னிடம் வெறுப்புண்டானதாலல்ல. ஆகையால் ஆத்மானந்தம் விஷயசுகங்களுக் கெட்டினதல்ல. தனங்களிலதிகம் புத்திரன், புத்திரனிலதிகம் தேஹம், தேஹத்திலதிகம் இந்திரியங்கள், இந்திரியங்களிலதிகம் ஜீவன், ஜீவனிலதிகங் கூடஸ்தன், ஆகையால் ஆத்மா

னந்தமே முக்கியம். விருப்பு வெறுப்பு உதாசீனம் இவையின்றிச் சர்வதா விளங்கும் பூரணானந்தமே ஆத்மஸ்வரூபமென்றறிவாயாக."

சிதம்பரன்:—"ஸ்வாமி! ஆனந்தம் எத்தனைவகை?"

யோகீஸ்வரர்:—"ஆனந்தம் எண்வகைப்படும்.

(1) விஷயானந்தம்:—இது போகங்களால் உண்டாவது. நித்திரையில் மனது அந்தர்முகமாகும். அதிற் சிதானந்தசாயை சேரும். அப்போது மனம் மகிழும். இந்த மகிழ்ச்சிக்கே விஷயானந்தமென்பது.

(2) பிரம்மானந்தம்:—இது சுஷுப்தியில் உண்டாவது. கூண்டிலடையும் பக்ஷியைப்போல் ஆத்மா அகமுகமாய்ப் பிரம்மத்திற் சேர்ந்து அதன் மயமாய்ச் சுகத்தை அனுபவிப்பது. இது வேதவாக்கியப்பொருளான பிரம்மானந்தம். நித்திரை செய்பவர்களிற் சிலர் புஷ்ப பஞ்சணை முதலியவைகளைத் தேடுவதுபோல ஞானபூமிகளைப் பெறுவது ஸ்தானானந்தமாம். பிரம்மானந்தத்தை யுணர்வதெப்படியெனில், அறிவிறந்து உதிக்கும் ஆனந்தம் தெளிவாகுதலாலும், ஆனந்தத்தினின்றுதிக்கும் அறிவு சுகமானதாலும், சிற்சுகம் அனுபவத்தில் ஒன்றாகையால், அது அறிவில் வரும். இப்படி ஐக்யமான ஜீவனைப் பூர்வகர்மமானது வெளியில் வரும்படி இழுக்கும். அப்படி வெளியில் வருவதால் அனுபவித்த சுகம் நீங்காது. மறக்கவும் போகாது. பிறர்க்கு உரைக்கவும் எண்ணாது".

(3) வாசனானந்தம்:—நித்திரை தெளியும்போது உண்டாவது. அதாவது சமாதியினின்று நீங்கும்போது பிரம்மானந்த ஸம்ஸ்காரத்துடன் வருவது.

(4) ஆத்மானந்தம்:—எங்கும் தனது பிரியவடிவாய்க் காண்பது. அதாவது சமாதியில் தன்னிடத்திற்றானே சுகித்திருப்பது.

(5) முக்யானந்தம்:—சமாதியிலுதிப்பது. விஷயங்களை யறியாது நித்திரையு மடையாது தேகம் ஸ்தம்பத்தைப்போலவும் அறிவு சமமாகவும் நிற்பது.

(6) நிசானந்தம்:—உபேக்ஷையிலுண்டாகும் ஆனந்தம். அதாவது சமாதியில் விருப்பு வெறுப்பின்றிச் சமரசமாயிருத்தல்.

(7) அத்வைதானந்தம்:—தன்னை ஏகமென்று நாடுஞ் சுகம். அதாவது சமாதியில் ஆனந்தம், ஆனந்தியென் றிரண்டற்ற சுகம்.

(8) வித்தியானந்தம்:—மகாவாக்ய விசாரத்தால் உதயமாவது. அதாவது சமாதியில் "அது" "நீ" என்பதின்றி ஆனந்தமேபோதமானது.

இவ்வெண்வித ஆனந்தங்களும் நிரதிசயானந்தத்தின் அம்சங்கள். இவைகள் கடலில் நுரைதோற்றுவதுபோல அதிசயமாய்ச் சமாதியில் நவநவமாய்த் தோற்றுவதால் "அதிசயானந்தம்" எனப்படும். யாவனொருவன் இந்தத் துரியாதீதத்தி லிருப்பானோ அவன் திரிமூர்த்திகளைப்போல அனுபவமுடையவனென் றுணர்க.

சிதம்பரன்:—"ஸ்வாமி! சத், சித், ஆனந்தம் என்பது வேறு வேறென்றால் விஷயங்களிற் பாயும் மனம் ஸ்திரப்படுவது எப்படி? குணரஹிதமான பிரம்மத்திற்குக் குணங்களெப்படி யுண்டாயிற்று? சச்சிதானந்தப் பொருளை அனுபவிப்பதெப்படி?

யோகீஸ்வரர்:—"அப்பா! சத், சித், ஆனந்தம் என்பது விருத்திபேதமேயன்றி வஸ்துபேதமன்று. பிரம்மம் ஒன்று. இதற்கு நிவர்த்தியில்லாததால் சத் என்றும், ஜடத்தின் விலட்சணமான பிரகாசமானதால் சித் என்றும், பிரீதிக்கு விஷயமாதலால் ஆனந்தமென்றுஞ் சொல்லப்படும். குளிர்ச்சி, நிகழ்ச்சி, வெண்மை என்ற திரிகுணங்களுடைய ஜலம் ஒன்றானாற்போலவும்; லோகிதம் உஷ்ணம் பிரகாசமென்னும் குணங்களுடைய நெருப்பு ஒன்றானாற்போலவும், சச்சிதானந்த வொற்றுமையாம். இதை விலக்கு நாமங்களான அசலம், நிரஞ்சனம், அமிர்தம் முதலியவற்றாலும்; விதி நாமங்களான நித்யம், பூரணம், ஏகம் முதலியவற்றாலுந் தெரிந்துகொள். பிரமத்தை உணருமாறு சாஸ்திரங்கள் பரியாய நாமங்களை உரைத்ததேயன்றிப் பிரம்மத்திற்குக்குணங்கள் கற்பித்ததல்ல. இருந்தது விளங்குவதாற் சத்தே சித்தென்றும், விளங்குவதே இருத்தலால் சித்தே சத்தென்றும், இந்த ஒற்றுமையிலுண்டான சுகமே ஆனந்தமென்றும் அனுபவித்தறியவேண்டியது."

சிதம்பரன்:—"பிரம்மானந்தமடைபவர் ஸ்தானானந்தமாகிய ஞானபூமிகளைப் பெறுவர் என்று அருளிச்செய்தீர்களே! ஞானபூமிகள் எவ்வகையுள? அவைகளின் விசேஷங்கள் யாவை?

யோகீஸ்வரர்:—"ஞானபூமிகள் ஏழுவகையாம். இவற்றைத் தெரிந்துகொள்வதற்குமுன், ஏழுவகையான அஞ்ஞான பூமிகளைக் கேள்.

(1) வித்து நனவு:—முன்னுள்ள அகண்டமாகிய சத்தில் உதித்த உணர்வு.

(2) நனவு:—நான் எனும் அகந்தை முளைப்பது.

(3) மஹாநனவு:—நான், எனது எனும் அகந்தைவிருத்தியாவது.

(4) நனுக்கனவு:—ஜாக்கிரத்தில் மனோராஜ்யம் பண்ணுவது.

(5) கனவு:—நித்திரையில் மனோராஜ்யம் பண்ணுவது.

(6) கனுநனவு:—முன் ஜாக்கிரத்தில் உதித்ததை மறந்து பிறகு ஞாபகத்திற்கு வருவது.

(7) சுழுத்தி:—மிகுந்த இருள் மூடிக்கொள்வது.

ஞானபூமிகள் ஏழின் விவரம்:—

(1) சுபம் விரும்பல்:—துர்ச்சங்கத்தை நீக்கிச் சிவஞானத்தை யாசிப்பது.

(2) விசாரஞ்செய்தல்:—சாதுசங்கஞ் சேர்ந்து ஞானசாஸ்த்ராப்பியாசஞ் செய்வது.

(3) நன்மனஞ்சிறுசல்:—விசாரத்தில் வெளிப்படும் பொருளை நம்பி முன்னுள்ள இச்சைகளை நீக்கிவிடல்.

(4) உண்மையில் நிலைபெற்று நிற்றல்:—ஞானப்பியாசத்தாலும் சற்சங்கப் பழக்கத்தாலும் மெய்யுணர்வு பிறப்பது.

(5) சங்கற்பமறல்:—மனம் ஸ்திரப்பட்டுப் பொய்களனைத்தையும் மறப்பது.

(6) பதார்த்தவெண்ணம் அறுத்திடல்:— அத்விதானந்த முண்டாய்த் திரிபுடி நீங்குவது.

(7) துரியம்:—பிரம்மவஸ்துவின் நிச்சயம் இருந்தவண்ணமிருக்கின்ற மோனத்தன்மை.

முதன்மூன்று பூமியிலும் ஜகந்தோன்றுதலால் அவை நனவு. நான்காவது கனவு. ஐந்தாவது பூமி சுஷுப்தி. ஆறுவது சுவானுபவம் மிகுந்த துரியம். ஏழாவது கற்பனையாவு மற்றவிடம். இது துரியாதீதம் எனவாம். ஏழாம்பூமியைத் துரியமெனவும் துரியாதீதமெனவுங் கூறிற் சந்தேகமுண்டாம், எனக் கருதி, அதனை ஜீவன்முக்தியின் திறமான துரியமெனவும், விதேஹமுத்தியைத் துரியாதீதமெனவுங் கூறினதாம். முதன்மூன்றுபூமி யேறினவர்கள் சாதகர்கள். ஜீவன்முக்தர்களல்ல. நாலாம் பூமியேறினவன் பிரம்மவித்து. ஐந்து, ஆறு, ஏழு ஏறினவன் முறையே வரன், வரியான், வரிட்டனென்னும் ஜீவன்முக்தர்களாம். மூன்று பூமியையுங் கடந்து நாலாம் பூமிக்குமுன் மரித்தவர்கள் உயர்ந்த பதவிபெற்று பூமியில் ஜனித்து, கிரமமாக மற்றப்பூமிகளிலேறி முக்தியடைவார்கள். முதற்பூமியுண்டாவதுதான் பிரயாசம். அதையடையின் மோக்ஷமெபபடியுங்

கிடைக்கும். ஒன்றிலோ இரண்டிலோ சேர்ந்தவர்கள் மிலேச்சரே யாயினும் ஜீவன்முக்தராவர்கள். இதற்கையமில்லை.”

சிதம்பரன்:—“மிலேச்சருக்கும் ஞானபூமி கைவல்யங் கொடுக்குமென்றால் துறவுபூண்டு கானகஞ்சென்று தனித்திருந்து இந்திரிய நிக்ரகம் பண்ணுவானேன்?”

யோகீஸ்வரர்:—அப்பா! துறவு: குடீசம், பகூதம், அம்சம், பரமாம்சம் என நான்குவிதமாம். இவைக்கு நிராசை காரணமேயன்றி வேஷங் காரணமல்ல. நிராசையான விராகம் மூன்றுவகையாம். (1) மந்தம்=துயரம் வரும்பொழுது சம்சாரத்தை வெறுப்பது, (2) தீவிரம்=தேகாந்தம்வரையில் சம்சாராதிகளை வெறுத்துவிடுவது, (3) தீவிரதரம்=வேதியர்க்குரிய கர்மகாண்டங்களைக் கற்பிதமென்று விடுவது. மந்தவிராகத்தால் ஒரு சன்யாசமும் பலியாது. தீவிரத்தால் குடீசமும் பகூதமுமுண்டாகும். வெளியிற் சஞ்சரிக்கக் கூடினவர்கட்குப் பகூதமும் சஞ்சாரம் செய்ய முடியாதவர்கட்குக் குடீசமும் கைக்கொள்ளத்தக்கனவை. தீவிரதரத்தில் அம்சம் பரமாம்சம் எனுந்துறவு உரித்தானவை. அம்சதுறவுடையோருக்கு மறுமையிற் சத்தியலோகத்திலும் பரமாம்சருக்கு இம்மையிலும் பிரம்மக்யானத்தால் முக்தி சித்திக்குமெனக் கொள்கை.

பரமாம்சர் அப்பியாசி அல்லது சிஞ்ஞாசு என்றும், அனுபவி அல்லது சுஞ்ஞானவான் என்றிரண்டு வகையராம். இவரில் சிஞ்ஞாசு முதல்மூன்று ஞானபூமிகளையும் ஏறினவனும். சுஞ்ஞானவான் ஏழு பூமிகளுமேறி மேலான ஜீவன்முத்தி யடைந்திருப்பவனும். சிஞ்ஞாசுக்களிற் சிலர் துறவறத்தில் சமாதி பழகி பிரம்மக்கியானமடைவர். சிலர் வருணாச்சிரமத்தின்படி இல்லறதர்மங்களை வழுவாமல் நடத்தி பிரம்மக்யானமடைவர். நீ சிஞ்ஞாசுவாதலால் இல்லறத்திருந்து நிஷ்காமிய கர்மங்களைச் செய்து தர்மங்களை நடத்தி கிருதார்த்தனாய்ப் பரிபூரணானந்தம் பெற்று வாழ்வாய்.”

28. கர்மம்.

சிதம்பரன்:—“ஸ்வாமி! கர்மமென்பது யாது? எப்படி அனுஷ்டிப்பது?”

யோகீஸ்வரர்:—“அப்பா! கர்மமெனும் பதத்திற்குச் செய்வது எனப்பொருள். நாம் யாது செய்கிறோமோ அவ்வினை கர்ம

மேயாம். இதன்றி கர்மமென்று ஒருசெய்கையின் பலனுக்கும் கூறுவதுண்டு. பூர்வஜன்ம செய்கைகளின் பலனைக் கர்மமெனப்படும். மானிடமுயற்சியின் முடிவு அறிவேயதவிற சுகமல்ல. அறிவுக்கே நாம் முயலவேண்டுவது. சுகத்திற்கு உழைப்பவர்கள் முடிவில் துக்கித்துத் தாம் அறிவுக்கு உழைப்பதாகத் தெரிந்துகொண்டு சுகமும் துக்கமும் பெரிய குருவென்றும், சத்திய நிலைமையைச் சுகத்தில் நின்றறிவதுபோல் துக்கத்தினின்றும் அறிகிறார்கள். சுகமும் துக்கமும் ஜீவனது முன்னிலையில் சலிக்கும்போது அவை ஜீவனிடமாகப் பல தழும்புகளை உண்டுபண்ணுகின்றன. இத்தழும்புகளின் மொத்தத்தொகையே மனிதனது இயல்பாய் ஏற்படுகின்றது. சிலவேளை துக்கம் சுகத்தைவிட பெரிய குருவாய்முடிகிறது. மஹான்களின் சரிதங்களை உணர்வதில் துக்கமே அவர்களுக்குப் பெரும்பாலும் அறிவைக்கொடுத்ததென் றுணரலாம். இந்த அறிவு ஒருவனுள்ளேயிருப்பதேயன்றி புறத்தினின்று வருவதல்ல. "ஒருவனுணர்ந்தான் அல்லது தெரிந்தான்" என்பது அவனது சர்வக்னத்துவமுடைய மனதிலிருந்து வெளிப்படும் அறிவேயதவிற புறத்தினின்று வருவதல்ல. பிரபஞ்சத்தின் அளவற்ற அறிவுக்கு இடம் மனதே. புறத்திற் காண்பவைகளெல்லாம் மனதை அறிவிக்கும் குறிப்பே. மனதின் ஆவரணத்தை மெல்லமெல்ல நீக்குதலால் ஒளி பிரகாசித்து அறிவுதோன்றுகிறது. ஆவரணத்தால் மூடப்பட்டவனை மூடனென்றும், ஆவரணம் திறக்கப்படுபவனை அறிகிறனென்றும், முற்றும் நீங்கினவனை ஞானி என்றும் உரைக்கப்படும். கல்லிலிருக்கும் நெருப்பைப்போல் மனம் ஞானஸ்பதமாயும் கல்லைத்தட்டில் நெருப்புப் பிரகாசிப்பதுபோல் உபதேசத்தால் மனதிலிருந்து ஞானம் வெளிப்படவும் செய்யும். இப்படியே நமது செய்கைகளாலுண்டாகும் உள்ளக்கிளர்ச்சிகள் யாவற்றும்—துக்கமும் சந்தோஷமும், நட்பும் சங்கடமும், சாபமும் அனுக்கிரகமும், புகழ்வும் இகழ்வும்,—நமது மனத்தினிடமே உண்டாகின்றன. இவைகளின்பலன்கர்மமே. மனோ வாக்குக் காயங்களி லொன்றாலாவது மனதைத்தாக்குவதால் அதன் சக்தியையும் அறிவையும் வெளிப்படுத்துகிறோம். எப்பேர்ப்பட்ட மூடனாயிருந்தாலும் ஒருகாலத்தில் யாதேனுமொரு விஷயத்தில் மஹத்துவமாய்ப் பிரவிர்த்திப்பன். சதா அப்படி மகத்துவமாய்ப் பிரவர்த்திப்பவனே ஞானி."

சிதம்பரன்:—"கர்மம் எவ்வகைப்பட்டது? ஒவ்வொன்றையும் எப்படி அனுஷ்டிப்பது?"

யோகீஸ்வரர் :—"கர்மம் மூன்றுவகையாம். மனம் வாக்குக் காயம் என்னும் திரிகரணங்களாலும் செய்யப்படுபவை. இவற்றுள் மானஸகர்மம் பிரதானமானது. மனதன்னியில் தேகத்தாலும் வாக்காலும் யாதொரு கர்மமும் செய்யமுடியாது. ஆகையால் உலகத்தில் நடக்கும் செய்கைகள் யாவற்றும், மனிதர்கட்குள் வழங்கும் வியவகாரங்கள் யாவற்றும் மனோகர்மத்தால் விளைவதே. திடச்சித்தமுடையோன் யாதொன்றைச் செய்ய ஒரேசிந்தையுடன் முயலுவானே அவன் அதை அடைகிறான். இத்திடச்சித்தம் இயல்பாலுண்டாவது. இயல்பு கர்மத்தாலுண்டாவது. அதனால் இயல்பு கர்மத்தைப்பொறுத்தது எனலாம். திடச்சித்தமுடையோர் யாவரும் மஹாத்துக்களாயிருப்பர். அவர்கள் தங்கள் மனோபலத்தால் பிரபஞ்சத்தைக் கீழ் மேலாகச்செய்யச் சக்திபெற்றவர்கள். வஸிஷ்டர் விஸ்வாமித்திரர் கௌதமர் பௌத்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் முதலிய மஹான்களே இதற்குத் திருஷ்டாந்தம். இவர்களுக்கு அனேக ஜன்ம கர்மங்களின் பலத்தாலன்றி ஒரே ஜன்மத்தில் அவ்வளவு திடச்சித்தம் வந்துவிடவில்லை.

ஒருவன் தற்செயலாய் ஒரு சுகத்தை அனுபவிக்கிறான் என்பது பிசகு. கோடிசாஸ்திரங்களை வைத்துக் காப்பாற்றுவோன் அவையை உணர்ந்தாலொழிய அறிவுடையனாவனா? நாம் செய்யும் கர்மமெம்மட்டோ அம்மட்டே நாமடையும் பலனெனக்கொள். ஆகவே நமது சுகதுக்கத்திற்கு நாமே காரணமாகிறோம். நாமெவ்வித கர்மத்தைச் செய்கிறோமோ அவ்வித கர்மபலன் இனிமேல் நாமடைவோம். ஆகையால் நமது செய்கை எத்தன்மையுடைத்தாயிருக்க வேண்டியதென்றே நாம் எப்போதும் சிந்திக்கவேண்டுவது. செய்கையைத் தெரிந்து செய்வதில் பெரிய பலனை அடையலாம். செய்கைகளனைத்தும் மூடப்பட்டிருக்கும்மனோசக்தியைவெளிப்படுத்துவதற்கென்பது சதா ஞாபகத்தில் வைக்கவேண்டும். மனிதர்களின் செய்கைகள் சாதாரணமாய்ப் பல நோக்கங்களைப் பொருத்திருக்கின்றன. சிலர் செல்வத்திற்கும், சிலர் பெருமைக்கும், சிலர் அதிகாரத்திற்கும், சிலர் மோக்ஷத்திற்கும் முயலுகின்றனர். பலர் 'செய்யக்கூடிய பாபகிர்த்தியங்களனைத்தும் செய்துவிட்டு, கோயில் குளம் கட்டிவைத்துத் தானமுதலியவற்றைச் செய்துவிட்டால் மோக்ஷமடையலாமென்றும், சிலர் புரோஹிதர்களுக்குச் செல்வமளித்தும் சிலர் புரோஹிதர்களிடம் தங்கள் பாபகிர்த்தியங்களை ஒப்புவித்தும்

பாபத்தைத் தீர்த்துக்கொள்ளலாமென்று முயற்சி செய்கிறார்கள். ஆகிலும் உலகத்திற் பலவிடங்களிலும் யாதொரு நோக்கமுமின்றிக் கர்மஞ்செய்பவர்களும் அனேகருளர். அவர்கள் கருத்து உலகத்திற்குக் குணமுண்டாகவேண்டுமென்பதே. பெருமை செல்வம் முதலியவற்றை யடையச்செய்யும் கர்மமும் உடனே பலனைத் தராவிடினும் விருதாவாகாமல் சொல்பபலனைக் காலக்கிரமத்தில் தந்து அவையும் அத்துடன் முடிவு பெறுகிறது. நோக்கமின்றிச் செய்யுங் கர்மமோ இவைகளைவிட அதிக பலனைத் தரக்கூடியது. சத்தியமாய்ப் பக்தியுடன் செய்கையை மாத்திரம் கோரி ஐந்து நிமிஷமேனும் செய்யும் நிஷ்காமிய கர்மத்தால் அளவிடக்கூடாத நன்மை விளைகிறது. இப்படிச் செய்புமொருவன் யாதேனுமொரு ஜன்மத்தில் மஹானாய் விடுகிறான். கோரிக்கைமேல் நோக்கமுடைய சாபல்யத்தை யடக்கி நிஷ்காம்யமாய்க் கர்மஞ் செய்துவரில் திடச்சித்தம் பெற்று மஹான்களுடைய இயல்பை அடையலாம்.

மனோலயம் பெற்ற மனிதன் பிரபஞ்சத்தில் சகல ஆடம்பரத்துடனிருக்கினும், அவனுக்கு ஒன்றின்மேலும் பற்றிராது. நிச்சப்தமாகவும் நிர்ச்சலனமாகவும், மலைக்குகைகளி லிருப்பவரைப்போலிருந்து மானசகர்மம் அதிதுரிதமாய்ச் செய்துகொண்டிருப்பன். அநேக விநோதமான விஷயங்கள் நடந்துகொண்டிருக்கும் ஓர் பெரிய பட்டணத்தின் வீதிவழியாய்ச் செல்லினும் அவ்விஷயங்களிலொன்றையேனுமறியாது சாந்தமாயிருப்பன். அப்படி இருக்கினும் அவன் மனதில் அதிதுரிதமாகவும் அதிவிநோதமாகவும் செய்கைகள் நடந்துகொண்டே இருக்கும். மானசகர்மம் நிஷ்காமியமாய்ச் செய்வதில் துர்விஷயங்களில் மனம் நாடாமல் அடங்கிவிடும். ஆகையால் இக்கர்மஞ்செய்பவன் முடிவில் பிரமானந்தமடைவன். இதற்குப் பூர்வஜன்ம கர்மவாஸனையே காரணமாம்."

சிதம்பரன்:—"வாஸனை என்பது யாது? கர்மம் வாஸனைக்குக் காரணமாவதெப்படி?"

யோகீஸ்வரர்:-"பூர்வகர்மப்படி ஒன்றைச்செய்யவேண்டுமென்று உதிக்கும் நினைவுக்கு வாஸனை அல்லது ஸம்ஸ்காரம் எனப்படும். மனம் அலைகள் நிறைந்த சமுத்திரத்தை யொத்தது. அலை ஒன்றடித்து அடங்கிவிடினும் அதன் சின்னம் நிற்பதுபோல் மனமெனும் சமுத்திரத்தில் நினைவு எனும் அலையுதித்து அடங்கிவிடினும் அதன் சின்னத்தை மனதில் நிலைபெறச்செய்கின்றது. இச்சின்னம் நமக்குப்

புலப்படாதிருக்கினும் அதைப்போன்ற சின்னங்களுண்டாம்படி புதிதாய் நினைவு பிறப்பதற்குக் காரணமாகிறது. இப்படிப் பிரதிவிசாரமும் ஒவ்வொரு சின்னத்தை மனதிலிருத்தி நமது புத்திக்குத் தெரியாமலே விருத்தியாக்கின்றது. நினைவு கெட்டதானல் கெட்ட சின்னங்களும் நன்மையானல் நற்சின்னங்களும் உண்டாகின்றன. இச்சின்னங்களின்மொத்தம்கெட்டதாயின் துர்விஷயங்களிலும், நன்மையாகில், சத்விஷயங்களிலும் புத்தி சென்றுகொண்டிருக்கும். இரண்டும் கலந்திருப்பின் இருவிஷயங்களிலும் பாய்ந்துகொண்டிருக்கும். இதுவே வாஸனை. நல்ல வாஸனை பெற்றோன் நற்செய்கைகளையே செய்யக்கோருவன். துர்ச்செய்கைகளில் சகவாசதோஷத்தால்மனம் நாடினும் அவ்வாஸனை அதைத் தடுத்துவிடும். ஆமை தனது கைகால்களைத் தனதோட்டினுள் இழுத்துக்கொண்டு யாது இம்சை நேரிடினும் வெளிப்படாததுபோல் நற்சின்னங்கள் பதிந்த மனதுடையோன் துர்ச்சகவாசத்தால் இம்சைப்படினும் தனது அந்தக்கரணங்களைத் தனதிஷ்டப்படி யடக்கி நன்மை செய்யப்புகுகிறுன். அவனது நற்சின்னங்கள் மனதினிட முலாவி நல்ல வாஸனையையளித்து இந்திரிய ஜயம்பெறச்செய்கிறது. இவன் யாது செய்யினும் எவ்விடத்திருக்கினும் நன்மையையே விளைவிப்பன்.

துஷ்கர்மத்தால் துர்வாஸனையுடையோன் இடைவிடா சத்சாவகாசத்தாலும் நல்லுபதேசத்தாலும் நன்மை செய்யப்புகின் அவனது துர்ச்சின்னமும் கிரமக்கிரமமாய்க் குறைவுபட்டுக் கடைசியில் நாசமடைந்து நல்ல வாஸனையும் அதன் வழியே சற்குணமும் ஏற்படுகிறது. ஆனல் பற்றறுவதன்றோ மோக்ஷசாதகம். மனதின் துர்ச்சின்னங்கள் நசிப்பதுபோல் சத்சின்னங்களும் நசிக்கவேண்டும். சத்விஷயத்திலும் நற்செய்கைகளிலும் நாடும் மனம் அவைவயை ஒரு பலனைக்கோரி அனுஷ்டித்து வருதலால் சற்சின்னங்கள், அல்லது தழும்புகள் மனதின்கண் அழுத்தமாய்ப் பதிந்துவிடுகிறது. இதனல் சத்கர்மங்களில் பற்று அதிகரிக்கின்றது. உயர்ந்த ஆயிரத்தெட்டு மாற்றுப் பசும்பொன் கயிற்ருற் கட்டுண்ணினும் அற்பான இரும்புக்கயிற்ருற் கட்டுண்ணினும் பந்தம் பந்தமேயாம். ஆகையாலன்றோ இதை நீக்கும்பொருட்டு சத்துக்கள் யாதொரு பலனையும் கோராது கர்மங்களைச்செய்ய முயலுகின்றுர்கள். நாம் உலகத்திற்குக் கடமைப்பட்டிருக்கிறேமே தவிர, உலகம் நமக்கு ஒரு விதத்திலும் கடமைப்பட்டிருக்கவில்லை. நாம்செய்யும் கர்மத்தின் பலனே நமக்கு லபிக்கத்தக்கது. ஒருவனுக்கு ஒரு உபகாரம் செய்யின் இனியோர்

ஜன்மத்திலேனும் சற்சகவாசம் கிடைக்க வழிதேடுகின்றோம். அபகாரம் செய்கிலோ துற்சகவாச முறுவோம். ஆகையால் ஒருவன் நமது சிற்றுதவியை எப்போது கோருவன், நாம் எப்போது எவ்விதத்தில் அவனுக்கு உதவிசெய்யக்கூடும் என்று, சதா எதிர்பார்த்திருக்கவேண்டும். ஒருவன் பிக்ஷை கோரில் அவனிடம் நன்றியுடையவராய் அவன் மனம் கோணுமல் பிக்ஷையிடுவதேயன்றி, அவனது குற்றங்களைப் பாராட்டி அவனைவிட நாம்பெரியோர்களென்றெண்ணி இகழ்ந்து பேசுவதினால், நாமே நமக்குத் தீங்குவிளைவித்துக்கொள்ளுகிறோம்.

ஒருவன் மனதிலுதிக்கும் நினைவு சமுத்திர அலையைப்போல் உலகத்தில் சலனம் செய்து, தனைப்போன்ற மற்றொரு நினைவை அணுகி அத்துடன் கலந்து விருத்தியாகின்றது. இப்படிக் கலப்பதற்கு எவ்வளவு தூரமேனும் எத்தனை காலங்களேனும் சஞ்சரிக்கின்றது. அந்த நினைவு கெட்டதாயின் கெட்டநினைவுடையோனையும், நல்லதாயின் நல்ல நினைவுடையோனையும் தேடிச்சென்று அவன் கெட்ட எண்ணத்தை அல்லது நல்ல எண்ணத்தை விருத்தி செய்கின்றது. இப்படியே உலகத்தில் ஒருவருக்கொருவர் தங்களெண்ணங்களைத் தங்களுக்குத் தெரியாமலே விருத்தி செய்துகொள்ளுகிறார்கள். ஆகையால் நன்மையை விரும்புவதால் நன்மையையும் தீமையை விரும்புவதால் தீமையையும் உலகத்தில் விருத்தி செய்கிறோம். ஒரு நினைப்பு உதிக்கின் எப்படியாவது எக்காலத்திலேனும் அதன் பலனைத் தராமற் போவதில்லை. ஆகையால் நமதெண்ணங்களின் தடிப்புக்குத் தக்கபடி நாம் பலனை அனுபவித்தே தீரவேண்டும். நமது நினைப்பு யாதொரு பயனையும் கோராததாயிருந்தால் அது மனதில் தனது சின்னங்களை உண்டு செய்வதுமில்லை, தடிப்பேறுவதுமில்லை. அதனைப்போன்ற நிஷ்காமிய கர்மஞ்செய்யும் மற்றொரு மனதை நாடிச்சென்று கலந்து உலகத்திற்கும் நமக்கும் மோக்ஷகாரணமாய் முடியும்.

ஆகையால் சத்கர்மங்கள் செய்வதில் பலனைக் கோராது கடவுளுக்கு அற்பிதமாய் அல்லது கடைமைப்பாடென்று அதன்மேல் பற்றில்லாது செய்வதில் அது மனத்தில் தாக்காமல் செம்பில் சேர்ந்த களிம்பைப் புளியிட்டுத் துலக்குவதால் செம்பின் களிம்பும் புளியும் விலகிச் செம்பு சுத்தமாவதுபோல், துர்விஷயத்திலும் அஞ்ஞானத்திலும் படிந்த மனதை நிஷ்காமிய கர்மத்தால் நாசப்படுத்தி இரண்டுமில்லாது களங்கமற்றிருப்பதே பந்தத்தை நீக்கிப் பற்றற்றிருப்பது என்றறிவாய்."

சிதம்பரன்:—"ஸ்வாமி! தர்மமாவது யாது? இல்வாழ்வோன் அநுஷ்டிக்கவேண்டிய தர்மம் எத்தகையது?"

யோகீஸ்வரர்:—அப்பா! கடவுளுக்குப் பிரீதியானதைச் செய்வதும் ப்ரீதியல்லாததைச் செய்யாதிருப்பதுவுமே தர்மம். அதாவது கடவுளை அண்டுவதற்கு ஏதுவான கர்மங்களைச் செய்வதும், நரகப் பிராப்திக்கு ஏதுவானவையைச் செய்யாதிருப்பதுவுமே தர்மமாம். ஒருவன் செய்கிற தர்மத்தை அவன் நிலைமையிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டுமே தவிர நமது நிலைமையிலிருந்து அறிதல்கூடாது. இல்வாழ்வோன் கடவுளிடத்துப் பக்திவைத்து அவரைத் தெரிந்து கொள்வதே அவன் ஜீவகால முயற்சியாயிருக்கவேண்டும். எப்போதும் கர்மம் செய்துகொண்டு தனக்குரிய தொழிலைச் செய்வதில் கடைமைப்பட்டிருப்பதால் யாது செய்யினும் கடவுளுக்கு அற்பிதமாகவே செய்யவேண்டும். ஒரு தொழிலைப் பலனைக் கோராது செய்வதும், பிரதியுபகார மிச்சிக்காது ஒருவனுக்கு நன்மை செய்வதும், ஒருவன் தனதிடம் நன்றியுடையனு யிருக்கவேண்டுமென் றெண்ணாமல் அவனுக்கு உபகரிப்பதும் கீர்த்தியையாவது பெயரையாவது இச்சிக்காது, ஒரு பரோபகார விஷயத்தை ஏற்படுத்துவதும் உலகத்தில் எளிதல்ல. பயந்த ஒருவன் ஜனங்கள் புகழ்ந்தால் அதிக தைரியமான வேலையையும் செய்வான். முழுமூடனானவன் உலகம் புகழுமாகில் பராக்ரமத் தொழிற்களைச் செய்துவிடுவான். ஸதா பலனை இச்சிக்காது சர்வ கர்மங்களையும் செய்பவன் மனமடங்கப் பெற்றவனே. இல்வாழ்வானது பெரிய வேலைகளிலொன்று. தேக ரக்ஷணார்த்தம் தனம் தேடுவது. பொய் சொல்லாமலும் வஞ்சிக்காமலும் அபகரிக்காமலும் தனம் தேடவேண்டும். அவனது ஜீவகாலம் கடவுளுக்காகவும் உலகத்திற்காகவும் உழைப்பதெற்கென்று எப்போதும் மறவாமலிருக்கவேண்டும். ஜலசஞ்சயங்கள் செய்துவைப்பதும் நிழலுக்கு மரங்களை நாட்டுவதும், அன்ன சத்திரம், புல் தொட்டி பாட்டைகள், வாராவதிகள் முதலியவை கட்டிவைப்பதும் செய்வதால் இல்வாழ்வோன் யோகி யடையும் பலனை யடைகிறான். பிறருக்குத் தேக கஷ்டம் நீக்குவதற்குத் தேகத்தால் உதவிசெய்வது பெரிது. ஆனால் தக்க சமயத்திலும் நெடுநாள் நிற்கும்படி செய்வது மிகப் பெரிது. ஒருவன் கஷ்டத்தை ஒரு நிமிஷமாகிலும் தீர்ப்பது உதவி செய்வதே. ஒருநாளானால் அதைவிடப் பெரிதாம். ஒரு வருஷமானால், இன்னும் பெரிதே. ஜீவகாலமெல்லாம், அவனுக்கு

உதவியாயிருத்தலே ஒருவனால் செய்யக்கூடியஉதவி. அப்படிச் செய்யும் உதவி, தத்வஞானோபதேசமேயாம். மற்றெதுவும் பூர்ணமானவையன்று. மனக்குறையே உதவி தேடுவதற்குக் காரணம். மனக்குறை நீக்குவதே பூர்ண உதவி. ஞானோதயம் மாத்திரமே மனக்குறையை நீக்குவது. ஆகையால் ஞானோபதேசஞ் செய்பவனே மனிதரில் புமான். பூர்ணஞானி ஒன்றுக்கும் அஞ்சான். ஞான உதவிக்குப் பிறகு வித்தியாதானம் சிறந்தது. வித்தையின்றி ஞானம் உதியா. வித்யாதானம் பிராணனைவிட மேன்மையானது. மூடத்தன்மை மரணத்துக்கும் அறிவு ஜீவித்திருப்பதற்கும் சரியாம். வித்யாதானத்திற்குப் பிறகு தேகதானம் சிறந்தது. நாம் மனோவாக்குக் காயத்தாற்செய்யுந் திரிவித கர்மங்களும் உலகத்திற்குப் பிரயோஜனமாயிருப்பதற்கே தவிர உண்பதற்கும் உறங்குவதற்கும் சுகத்தை அனுபவித்தற்கும் மாத்திரம் அல்ல என்பதை எப்போதும் மறவாதிருப்பாய். இல்வாழ்வோன் தன் குடும்பநிமித்தம் அனுஷ்டிக்கும் தர்மங்களில் முதன்மையானது "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனும் வாக்கியத்திற் கொப்பத் தனது மாதா பிதாக்களை எல்லா விஷயத்திலும் மனங்களிப்புண்டாகும்படி பாதுகாப்பதேயாம். மாதர் பிதுர் ஆசிர்வாதம் பெற்றவன் கடவுள் ஆசீர்வாதம் பெற்றவனாவன். அவர்களெதிரில் பரிகாசம் பண்ணுவாவது, கோபித்துக்கொள்ளவாவது, அதிர்ப்தியுண்டாகும் விதம் நடந்துகொள்ளவாவது செய்யாமல் அவர்களுக்கு நமஸ்காரம்பண்ணி அஞ்சலியஸ்தனாய்நின்று பக்தி பூர்வம் மனங்களிக்க இனிய வார்த்தைகளாடி, உபசாரம் செய்யவேண்டும். அவர்களுக்கும் தன் பெண்டீர் குழந்தைகள் அதிதிகளிருக்கின் அவர்கட்கும் அன்னபான, வஸ்திர வருமையறியாது தனது சுகத்தைத் தேடுபவன் பாபகர்மஞ் செய்கிறான். இப்படியே தன் மனைவியிடத்தும் அன்பு பாராட்டவேண்டும். மனைவியை ஆபாச வார்த்தைகள் சொல்லிக் குரோதிக்கவாவது, தனக்குக் கஷ்டங்களும் துக்கங்களும் நேரிடில் அவைநிமித்தம் மனைவியை வருத்துவதாவது செய்யாமல் தனது தேகத்தின் பகுதியென்று நம்பி அன்புபாராட்டிப் பாதுகாக்கவேண்டும். அன்னியஸ்திரீகளை மாதாவுக்கு ஒப்பென பாவித்துத் திரிகரணங்களாலும் அவர்களைத் தீண்டலாகாது. அப்படிச் செய்பவன் தனது மனைவியை வஞ்சிப்பவனும் ரௌரவாதி நரகத்திற்குப் பாத்திரனும் ஆகிறான்.

தன் புதல்வன் விஷயத்தில் செய்யவேண்டிய தர்மமாவது:— ஐந்துவயதுவரையில் மிக ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து, பிறகு வித்தியாப்பியாசம் செய்வித்து, துர்ச்சங்கத்திலும் கெட்ட விஷயத்திலும் அவன் புத்தி செல்லாமல் பாதுகாத்து, இல்வாழ்வோன் செய்யவேண்டிய விதிகள் யாவற்றையும் கற்பித்து, நடவடிக்கையில் அனுஷ்டிக்கும்படி செய்து, தந்தை தாய் குரு தெய்வம் இவர்களிடம் பக்தியுண்டாகும்படி உபதேசித்து, தகுந்தகாலத்தில் விவாஹம் செய்வித்து, சன்மார்க்கத்திற் பிரவேசிக்கச் செய்யவேண்டும். தனது புத்திரியையும் புதல்வனைக் காப்பாற்றுவதுபோல் காப்பாற்றி, கல்வி கற்பித்து இல்லற ஒழுங்கை அனுஷ்டிக்கும் விதியை உபதேசித்துத் தகுந்த காலத்தில் தகுந்த வரனுக்கு விவாஹம் செய்து கொடுத்துத் தன்னாலியன்ற உதவி செய்யவேண்டும். தனது சகோதர சகோதரிகளிடத்தும் அவர்கள் புதல்வர் புதல்விகளிடத்தும் இதர பந்துவர்க்கங்களிடத்தும் அன்பு பாராட்டித் தன்னாலியன்றமட்டும் உதவி செய்து நல்லொழுக்கமுடன் நடந்துகொள்ளவேண்டும். தனது கிராமவாசிகளிடத்தும் பேதைகளிடத்தும் தரித்திரரிடத்தும் தனது உதவியைக்கோரி வருவோரெவ்வகுப்பினராயினுமவரிடத்தும் அன்புற்று மனங்கோணச் செய்யாது நல்லொழுக்கத்துடன் ஆதரணை செய்யவேண்டும். சுகபோஜனத்தும் ஆடம்பர வஸ்திராபரணத்தும் தேகத்தை அழகு செய்துகொள்வதிலும் இச்சைவையாது தேகசுத்தியும் பரிசுத்த மனமுமுடையவனாய்ச் சர்வகாலமும் முயற்சிசெய்யத் துவஜங்கட்டி யிருத்தலும், தன்னை யெதிர்க்குஞ் சத்துருவுக்குச் சிங்கம் போன்றும், தனது நண்பருக்குக் குழந்தைபோன்றும், துஷ்டரைச் சினேகிக்கவும் புகழவும்போகாது நண்பரைப் பகுத்தறிந்து சினேகித்தலும், தனது புகழையும் பராக்கிரமத்தையும் சம்பத்தையும் கீர்த்தியையும் பிறருக்குக்கூறி மகிழ்ச்சி யடையாமலும், தனது வருமையைக் கூறி நொந்துகொள்ளாமலு மிருத்தலும் இல்வாழ்வான் அனுஷ்டிக்கவேண்டிய நெறிகளேயாம்.

இதுவுமன்றி வருமை யடைந்தோனுக்கும் குடும்பத்திற்கும், பிரம்மசாரி வானப்பிரஸ்தன் சன்னியாசி என்னும் இதர மூன்று ஆச்சிரமத்தாருக்கும், பலஹீனர் குருடர் முடவர் நாவிழந்தோர் வியாதியடைந்தோர் முதலியவருக்கும், அரசனுக்கும், தனது இராஜ்ஜியத்திற்கும், மற்றிதர உலகத்துக்கும் இல்வாழ்வோன் பெரியதுணையா யிருக்கவேண்டு மென்பதை மறக்கலாகாது. சன்

மார்க்கமாய்த் தனந்தேடி பிறர்க்குபகாரமாம்பொருட்டுசைகையுடைய சித்தவிருத்திபெற்ற இல்வாழ்வோன் மலைக்குகையில் வாசஞ்செய்து சமதமாதிகளை அடக்கப் பழகும் யோகிக்குச் சமமாவன், எனெனில், இவ்விருவரும் அடையும் பதம் ஒன்றே. இனியும் பலவித தர்மங்கள் விதித்திருப்பவைகளை நீ உணர்ந்தவனாதலால் அவற்றைக் கிரமமாக அனுஷ்டித்துச் சித்தசுத்தி பெறுவாய்.

29. தேகம் நீங்கிய தேகியின் வரலாறு.

சிதம்பரசேகரப் பெருமாள் ஆசாரிய ஸ்வாமிகளை வணங்கி "ஆண்டவனே! கருணாநிதியே! அளவிடக்கூடாத தேவரீர் கிருபைக்கு அடியேன் யாதை யுபமானமாகச் சொல்வேன். எனது சங்கைகள் யாவும் நிவர்த்தி பண்ணிக்கொண்டேன். இனி எவ்வாறு முக்தியடையப் பழகவேண்டுமோ அம்மார்க்கத்தைக் கிருபைகூர்ந்து காண்பித்தருளவேண்டும் கடவுளே!" என்று அஞ்சலியஸ்தனாய்ப் பிரார்த்தித்துநிற்க, யோகீஸ்வரர் மறுபடியு முட்காரவைத்துக் கூறுவாராயினர்.

"உனது மனம் இப்போது பட்டாபிஷேகத்தாலுஞ் சந்தேக நிவர்த்தியாலும் களிப்புற்றிருக்கினும் பிறகு கலக்கத்தைக் கொடுக்கும் விஷயத்திற் பற்றறும்படி சாதனை செய்துவந்த நீ உலகபாரம் வஹித்து விஷயாதிகளிற் பிரவேசித்தனை. ஆகையால் எதார்த்த ஸ்திதியை நாடிச் சமாதி பழகுவதில் மனக்கலக்கமுண்டாம். ஆனால் அப்படி மனம் விஷயாதிகளில் நாடாதிருக்கும்படி ஓர்யுக்திசொல்லுகிறேன் கேள்.

சாதாரண மனிதன் ஒருவனிறந்தால் பிறகு, அவன் தேஹி என்ன கதியாவது என்று நீ தெரிந்துகொண்டால் பிறகு மனம் விஷயாதிகளில் நாடும்போது அவ்வறிவு அவைகளில் பற்றவொட்டாது நிறுத்தும். ஆகையால் இதைக் கவனித்துக் கேள்.

தத்துவங்கள் ஏழாக எளிதிலுணருமாறு பிரிக்கலாம். அவை: (1) ஆத்மா, (2) புத்தி, (3) மனம், (4) காமம், (5) பிராணன், (6) லிங்கசரீரம், (7) ஸ்தூல சரீரம். இவைகளில் முதல் மூன்றும் அக்ஷரம், மற்றவை நான்கும் க்ஷரம். க்ஷராக்ஷரத்தைச் சேர்ப்பது மனது. இந்த மனமானது சுத்தாசுத்தமென விரண்டு பிரிவினை யுடைத்து. அசுத்தமனது சரீரத்தைப் பாவித்துக் காமமனதாக விளங்குகிறது.

இது ஒருபக்கத்திற் சுத்தமனதுடனும், மற்றொருபக்கத்திற் காமத்துடனும் சம்பந்தப்பட்டு மனிதனது பந்தமோக்ஷங்களுக்குக் காரணமாகிறது.

ஸ்தூலசரீரம்.

கர்ப்பத்தி லுற்பவிக்கப்போகுஞ் சிசுவின் சூட்சுமரூபம், ஸ்தூலாணுக்களால் ஸ்தூலரூபமடைகிறது. இது பிராணனது உத்தரவின்படியாம். பிராணன் ஓரதிகாரியைப்போலும், ஸ்தூல சூட்சம அணுக்கள் வேலைக்காரர்களைப்போலு மிருந்து இச்சரீரமாகியவீட்டைக் கட்டுகிறார்கள். அதிகாரியாகிய பிராணன் வீட்டைவிட்டுப் போகுங்கால் ஸ்தூலவணுக்கள், எஜமானின்றி நாசமடையும் குடும்பத்தைப்போல், தங்கள் தங்களிஷ்டப்படி பிரவிர்த்தித்துப் பிரிந்து சிதறிப்போய் வேறு ஸ்தூல சரீரமுண்டாவதற்கு உபயோகப்படுகின்றன. பிணம் அழுகிப்போவதே இப்படியணுக்கள் சிதறிப்போவதின் அடையாளம். இது ஸ்தூலசரீரத்தின் மரணம். ஒரு சரீரத்தின் மரணம் வேறொரு சரீரத்தின் உற்பத்தியாம்.

லிங்கசரீரம்.

ஸ்தூல சரீரத்திற்குச் சரியான பிரதி லிங்கசரீரம். இது சூட்சும அணுக்களால் உண்டானது. ஜீவன் இந்த லிங்கசரீரமூலமாக ஸ்தூலத்துடன் சம்பந்தப்பட்டுப் போகங்களையனுபவிக்கிறான். மரணசமயத்தில் லிங்கசரீரத்துடன் ஸ்தூலத்தைவிட்டுப் பிரிகிறான். பிரிந்தாலும் அந்தஸ்தூலம் அழியாமலிருக்கமட்டும் லிங்கசரீரம் அதைவிட்டு அதிகதூரமாய்ப் போகிறதில்லை. அது பிணத்தின்மேல் மிதந்துகொண்டிருக்கும். மரணசமயத்திலும் பிறகும் இந்தலிங்கசரீரத்தின் ரூபம் ஊதாவர்ணமாய்ச் சிலருக்குக் காணப்படும். மரணசமயத்தில் சுவாசம் ஆரம்பித்தவுடன் இந்த ஜன்மத்தில் நடந்தவிஷயங்களெல்லாம் ஜீவனுடைய திருஷ்டிக்குமுன் ஒரேகாலத்தில் தோற்றப்பட்டு, சென்ற ஜன்மத்தின் புண்ணியபாபங்களின் கணக்கேற்பட்டு இனிவரவேண்டிய ஜன்மத்தைத் தீர்மானிக்கிறான். இந்த ஜன்மத்தில் அதிக பலமான குணங்கள் யாவும் மறுஜன்மத்தில் பிறவிக்குணங்களாக வருகின்றன. ஒருஜீவன் ஒருஜன்மத்திற் சங்கீதமாவது வித்வத்தன்மையாவது ஜோதிஷமாவது ஞானவித்தையாவது அதிகமாய்ப் பழகியிருந்தால் அவை மறுஜன்மத்தில் கற்காமலே அதிசுலபமாய் வந்துவிடுவதுமன்றி மறுபடியும் விருத்தியாகும். நீயும் பூர்வஜன்மத்தில் ஞானவித்தையை நாடியிருந்திருக்கலாம். அதனாற்றான் இந்த

ஜன்மத்திற் சிறுவயதிலேயே மோக்ஷவிச்சை மேற்கொண்டு விசாரணைபண்ண ஆரம்பித்தாய்.

மரணசமயத்தில் புண்ய பாபங்களைப் பார்த்துத் தீர்மானிக்க வேண்டியதால், அச்சமையம் அதிக ப்ரீதியாயிருக்கும் பந்துக்களிலும் வஸ்துக்களிலும் மனம் நாடாதிருக்கும்படி அருகிலிருக்கும் புத்ரமித்ர களத்ராதிகள் ஜீவன்போம் சமயத்தில் பிரலாபிக்கலாகாதென்றும், சேஷ்டைகள செய்து ஜீவனுக்குத் தொந்திரவு கொடுக்கக்கூடாதென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அதிக இச்சையைத்தரித்து நிறைவேறாமலிருக்கும் தேகத்தின் லிங்கசரீரம் வீட்டிலாவது சமீபத்திலாவது காணப்படும்.

ஸ்தூலம் பிரேதமானதுபோல லிங்கமும் அழிந்துபோகின்றது. ஸ்தூலபிரேதத்திற்குச் சமீபமாகவே லிங்கபிரேதமு மிருந்துகொண்டு அத்துடன் இதுவும் நாசமடைகிறது. பிணத்தைப் புதைப்பதில் நாட்படவும் தகனஞ்செய்வதில் க்ஷணத்திலேயும் ஸ்தூல சூட்சும அணுக்கள் பிரிந்து நூதன ஸ்தூல சூட்சமசரீரங்களுண்டாக ஏற்படுகிறது.

காமம் பிராணன்.

ஸ்தூலமும் லிங்கமு மழிந்தபின் ஆத்மாவானவன் தனது மனம் புத்தி காமம் பிராணன் என்பவையுடன் காமலோகத்திற் செல்லுகிறான். இந்தக் காமலோகத்திற்குப் புவர்லோகமென்றுஞ் சொல்லலாம். இதற்கும் நாம் வஸிக்கும் பூலோகத்திற்கும் சம்பந்தமிருக்கின்றது. ஞானதிருஷ்டி யுடையவர்கள் இதைத் தெரிந்துகொள்வார்கள். இவ்விடத்தில் மனிதன், விலங்கு முதலிய எல்லா ஜீவராசிகளும் தங்கள் ஸ்தூல லிங்கதேகங்களை விட்டுவந்து வாசம் பண்ணுவதன்றி, தேவர்கள் ரிஷிகள் முதலியவர்களும் வசிக்கிறார்கள். இவ்விடம் வசிப்பவர்கட்குப் பிரக்ஞையுண்டு. ஆனால் நாம் அவர்களைச் சாதாரணமாய் அறிதல்கூடாது. லிங்கசரீரம் போனவுடன் பிராணனும் அழிந்துவிடுகிறது. பிறகு ஜீவன் காம சரீரத்துடன் காமலோகத்தில் உருதரிக்கிறான். காமத்திற்குப் பூலோகத்தில் உருவில்லை. காமலோகத்தில் உருவுண்டு. அது, ஜீவன் பூலோகத்தில் எவ்வளவு காமத்தோடிருந்தானோ அவ்வளவு பலமுடையதா யிருக்கிறது. பூலோகத்திற் காமம் கொஞ்சமா யிருந்தால், காமலோகத்தில் காமரூபமும் கொஞ்சமே. அதிகமாயிருந்தால் அதிகமே. இப்படியே

கொஞ்சரூபமானது சீக்கிரத்திலும் பலத்தரூபமானது தாமதத்திலும் அழிகிறது, இதுவே இரண்டாவது மரணமெனப்படுவது.

ஆத்மா புத்தி மனது அல்லது ஜீவன்.

காமம் பலப்படா திருக்குமாகில் அசுத்தமனது சுத்த மனதுடன் சேர்ந்து ஜீவன் சொர்க்கத்திற்குப் போகிறான். ஜீவனென்றால் இங்கு ஆத்மா புத்தி மனது என்கிற மூன்றுமாம். காமம் பலப்பட்டிருக்குமாகிற் பூலோகவிச்சை அதிகரித்து முன் பூலோகத்தில் அநுபவிக்க எண்ணியிருந்த அநுபவங்களை அநுபவிக்க அசுத்த மனதுடன் காமரூபத்தோடு ஜீவன் மறுபடியும் பூலோகத்தில் இதர மனிதர்கள் மூலமாகத் தன் போகங்களை அநுபவிக்கிறான். இப்படி யாது தேகத்தின் மூலமாக அநுபவிக்கிறானோ அந்தத் தேகத்தைக்குறித்து ஜனங்கள் அவனைப் பிசாசு பிடித்திருக்கிறதென்றும் அவன் அதனால் பல சேஷ்டைகள் பண்ணுகிறானென்றும் அவன் தேஹம் இளைக்கிறதென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்தக் காமரூபம் பலப்பட்டிருக்குஞ் சீவன் தனது சுத்தமனதுடன் அதிக காலம் காமலோகத்தில் வஸிக்கவேண்டியவனா யிருக்கிறான். தற்கொலை, அகாலமரணம், பிறரால்மரணம் முதலியவைகளால் ஜீவன் காமலோகத்தி லிருந்துகொண்டு தான் பூலோகத்தி லிருக்கவேண்டிய காலம்வரையில் பூலோகவாசிகளது மூலமாக இஷ்ட போகங்களை அநுபவிக்கிறான். சுத்த அந்தக்கரணத்துடன் பூலோகத்திற் ஜீவித்திருந்து காலம்வந்து மரணமடைந்துபோன ஜீவன் அதிக காலம் காமலோகத்திலிராமல் தன் காமரூபத்தை அந்த லோகத்தில் விட்டுவிட்டுச் சொர்க்கமடைகிறான். காமரூபம் நாளுக்குநாள் அழிந்துபோகிறது.

காமரூபத்தினின்று விடுபட்டுச் சாத்விகாநுபவங்களுடன் ஜீவன் சொர்க்கம் போகிறான். அதுவரையில் பிரக்ஞை குறைந்திருந்து சொர்க்கம் போனபிறகு முன் பிரக்ஞையுண்டாய்ப் பூலோகத்தில் தான் செய்த புண்ணியங்களின் பலத்தை அநுபவிக்கிறான். ஒருவிதையை விதைத்தால் அதுமுளைத்து அநேகபலத்தைத் தருவதுபோல் பூலோகத்தில் தான் செய்த நன்மைகளின் அளவற்ற பலத்தை அநுபவிக்கக்கூடும். நிறைவேறாத ஆசைகளெல்லாம் இவ்விடத்தில் நிறைவேறுகின்றன. சொர்க்கலோகம் போனபின் பூலோகத்திற்குப் புனர்ஜன்மகாலத்திலல்லது வரமுடியாது. ஆகையால்

சொர்க்கலோக்வாசம் அவரவர்கள் செய்த புண்ணியங்களைப் பொறுத்ததென்றுணர்வாயாக.

புனர்ஜன்மம்.

சொர்க்கலோகத்திற் ஜீவன்தான் பூலோகத்திற் செய்த புண்ணியங்களின் பலத்தை அனுபவித்துக்கொண்டு அந்த வாசக்காலத்தை முடித்துச் சொர்க்கத்தைவிட்டு வெளிப்படுகிறான். அப்படி வெளிப்படும்போது சொர்க்கத்தில் சம்பாதித்த அனுபவங்களையுஞ் சொர்க்த்தில் தான் அபிவிர்த்தி பண்ணிக்கொண்ட ஞானங்களையுங் கொண்டு வருகிறான். இத்துடன் தனக்கு சூட்சமசரீர முண்டாகும்போது பூலோகத்தில் தான் முன்செய்த பாபங்களின் பலன்களும் அத்துடன் கலந்துகொள்ளுகிறது. இந்த பாபபீஜங்கள் ஜீவன் சொர்க்கத்திலிருக்கும்போது ஜீவனை யகன்றிருந்து வெளியில் வரும்போது சேர்ந்துகொள்ளுகிறபடியால் பூமியிற் பிறகு ஜன்மமெடுக்கும்போது இந்தப் பாபபீஜங்களின் பலத்தை அனுபவிக்கிறான். ஜீவன் பரிசுத்தமாய்ச் சொரூபஞானம் பெறும்வரையில் இந்த ஜனனமரணபந்தம் உண்டாகிக்கொண்டே யிருக்கிறது. இப்படி அனேக ஜன்மங்களுக்கும் பாபபுண்ணியங்களில்லாமற்போகுமானல் ஜீவன் சொஸ்தனாய் நிர்வாண ஸ்திதியை அடைகிறான்.

சிதம்பரசேகரன்:—"ஸ்வாமி! புனர்ஜன்மம் ஆத்மாவுக்குண்டு என்பதற்கு என்ன திருஷ்டாந்தம்?"

யோகீஸ்வரர்:—"அப்பா! பூமியின்கண் நாம் பார்த்துவரும் கூன் குருடு முடம் வியாதியஸ்தர் சண்டாளர் தரித்திரர் தனிகர் சன்மார்க்கர் ஆத்மக்யானி அரசர் இப்படி மனிதர்களிலும் மிருகங்களிலும் மற்ற ஜீவிகளிலும் அனேக வித்தியாசங்களிருக்கின்றன. இப்படி ஜனனம் லபித்ததே திருஷ்டாந்தமாம். ஸர்வவியாபியும் தீனதயாபரனுமான ஈஸ்வரன் ஒருவனைக் குருடனாகவும் மற்றொருவனை இருகண்களுடையவனாகவும் சிருஷ்டித்தார் என்றால் யாதொரு காரணமுமின்றி இப்படி வருவானேன். கடவுள் பாரபக்ஷமுடையவரானதாலென்று எண்ணக்கூடாது.

சிதம்பரசேகரன்:—"ஸ்வாமி! பூர்வஜன்மக்ஞானம் நிகிர்ஷ்ட ஜன்மமுடைய ஒருவனுக்கு அற்பமேனும் உதித்தாலன்றோ, அவன் இந்த நிகிர்ஷ்ட ஜன்மத்திலேனும் அதைத் தவிர்த்துக்கொள்ள முயலுவான்? அப்படி பூர்வஜன்மக்யான மில்லாதிருக்கையால், அவன்

மறுபடியும், தானிருக்கும் நிகிர்ஷ்ட ஜன்மத்தைவிடத் தான் செய்யும் துஷ்கர்மங்களால் அதிகமான நிகிர்ஷ்ட ஜன்மமெடுக்க நேரிடுவதால், பூர்வ ஜன்மக்யான மிருக்கின் இந்த நிகிர்ஷ்ட ஜன்மத்திலேயே அதை யொழித்துக்கொள்வதற்குச் சத்கர்மங்கள் செய்ய முயலுவான். அப்படி முயலாதிருக்கையால் பூர்வஜன்மக்யானம் இந்த ஜன்மத்தில் உதிப்பதில்லையென்றோ, அல்லது புனர்ஜன்மம் இல்லையென்றோ நினைக்கவேண்டியதா யிருக்கிறதே ?"

யோகீஸ்வரர்:—"அப்பா! ஒருவன் இரண்டுநாட்குமுன் புசித்த பக்ஷணங்களை ஞாபகத்திற்கு வருத்தமுடியாமற் போகிறான். நித்திரையில் தான்காணுங் கனவை முற்றிலும் ஞாபகத்தில் வைத்திருக்கிறானு? அப்படியிருக்கச்சென்ற ஜன்மத்தில் நடந்தவைகளைக் கர்ப்ப பாத்திரத்தில் அணுவாயிருந்து பருத்துச் சிசுவாகும் வரையில் தாயின் பலவித தேஹபாதை மனோசஞ்சலங்களால் ஹிம்சைப்பட்டு ஜனனவழியில் நெருக்குண்டு வெளிப்படும்வரையில் எப்படி ஞாபகத்தில் வைத்திருப்பான்? ஆகினுஞ் சிலசிசுக்கள் சீக்கிரத்தில் நற்குண நற்செய்கைகளில் விருப்புற்றுப் பிரவர்த்திக்கின்றவைகளைப் பிறவிக்குணமென்று கூறுவதில்லையா? இவை பூர்வ ஜன்மவாஸனை யென்று நம்பலாகாதா? அப்படியே வேறு சிலசிசுக்கள் துன்மார்க்க வழியை நாடுவதுங் காண்கிறோம், இஃதும் அப்பூர்வஜன்மவாஸனையேதவிர மற்றென்ன? சிலசிசுக்கள் வியாதியுடனே பிறந்து இறக்கும் வரையில் துக்க சாகரத்தில் மூழ்கிக்கிடப்பதையும் பார்க்கிறோம். இது அக்குழந்தையின் பூர்வஜன்ம துஷ்கர்ம அனுபவமன்றி யார் குற்றமெனக் கொள்ளலாம்? யாவனொருவன் சத்கருமம், துஷ்கர்மஞ்செய்வானோ அவன், அவற்றின் பலன்களை ஒரு ஜன்மத்திலல்லது மற்றொரு ஜன்மத்தில் அனுபவிக்கிறா னென்பதற்கு இவைகளே போதுமான திருஷ்டாந்தங்களாம்.

ஜன்மம் ஆத்மாவுக்கு லபிப்பது ஆத்மாவின் சஞ்சிதப்படியாகையால் அதற்குச் சரியான அனுபவம் நேரிடும்படியான தேஹம் லபிக்கின்றது. ஆத்மாவானவன் எப்போது கர்மங்களை இச்சிக்காது ஸ்வரூப ஞானம்பெற்று சஞ்சித நிக்ரஹஞ் செய்கின்றானோ அப்போதுதான் மோக்ஷ ஸாம்பிராஜ்யத்தை யடைந்து சாஸ்தமாய் நிரதிசயானந்தத்தி லிருக்கப்பெறுகிறான்.

ஓ சிதம்பரசேகரா! நீயும் உன் தோழனும் என் பாஷ்யங்களைச் சிரத்தையுடன் கேட்டீர்களல்லவா? அவைகளினின்று கிரஹிக்கக்

கூடினவை யாவையென்றால் சர்வகருமங்களையும் நிஷ்காமமாக ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்து மனதை ஐக்கியப்படுத்தி அசலமாயிருக்கும்படி சாதகம் பண்ணிவந்தால் அந்தக்கரண இந்திரியாதி சேஷ்டைகள் உங்களுக்கு வசப்பட்டுவரும். அப்படி வரில் மேற்சொன்னபடி ஜனனமரணங்கள் குறைந்து சீக்கிரத்தில் நிர்வாணஸ்திதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிப் பெறுவது காட்டிலிருந்தாலும் வீட்டிலிருந்தாலும் செய்யத்தக்கது. ஆதலால் இராஜ்ஜியபார விஷயங்களில் நிஷ்காம்யமாய் மனதைச் செலுத்தி நடப்பித்துக்கொண்டு சமாதியையும் இடைவிடாது பழகிவருவீர்களேயாகில் உங்கள் கோரிக்கையின்படி மோக்ஷ ஸாம்பிராச்சியத்தை யடையலாம்" என்றுரைத்து மௌனமாயிருக்கும் யோகீஸ்வரரை யாவருமெழுந்து அஷ்டாங்கமாய் நமஸ்கரித்துத் துதித்துப்பாடி அவர் அனுமதிப்படி அவருடன் யாவரும் தேவாலயஞ்சென்று ஸ்வாமி தரிசனம்பண்ணிப் பலவாறு ஸ்தோத்திரம் செய்துப் பிறகு அரண்மனை சேர்ந்து அந்தக்கரண சுத்தியை நாடியிருந்தனர்.

30. சகுணோபாஸனை.

சிலநாட் சென்றபின் யோகீஸ்வரர் தமதிருப்பிடஞ் செல்லக் கருதிச் சிதம்பரனையும் புகழேந்தியையும் தனியாயழைத்து "அப்பா குழந்தைகாள்! நாம் மூகாம்பிகை தரிசனத்திற்குப் போகவேண்டியிருப்பதால் நீங்கள் விடை தரவேண்டும்" என்றார். இதைக் கேட்டு இருவரும் அவரை நமஸ்கரித்து "அப்பனே! நாங்கள் தேவரீர் பிரிவாற்றோம்" என, அவர் சிரித்து "உங்களுக்கின்னம் மனோதிடம் வரவில்லை" என்றார். அப்போது இருவருங் கைகூப்பி அவரைப் பிரார்த்தித்து "மனோதிடம் பெறும்வகை அருளவேண்டும்" என்று வேண்ட, யோகீஸ்வரர் "அப்பா! நானெவ்வளவு சொல்லியும் இன்னுங் குறையிருப்பதாக வெண்ணுகிறீர்கள். ஆகையால் தேவதா பூஜைபண்ணிக் கலக்கந் தீர்ந்திருங்கள். நான் எங்கிருக்கினுமென்ன? உங்களுக்குமெனக்கும் என்ன சம்பந்தம்? தேகத்திற்கும் தேஹிக்குமிருக்குந் தொந்தமென்ன? என்றிப்படி யோசித்துச் சித்தத்தை விசாரணையில் வைத்து ஸ்வரூபஞானத்தை மறவாதனுஷ்டிப்பதுடன் தேவதா பூஜைசெய்து கடவுளின் கிருபையும் பெறுவீர்கள்" என்று கூற, "அத்தேவதாபூஜையின் கிரமத்தை யனுக்கிரகிக்கவேண்டும்" என்றனர்.

யோகீஸ்வரர் அவர்களிருவரையுங் கடாட்சித்துக் "குழந்தைகாள்! மனோலயத்திற்கு ஹேதுவான தேவதாபூஜையைச் செய்யவேண்டும். அப்படிச் செய்யும் பூஜை க்ஷேத்திரங்களிலும் தீர்த்தஸ்தலங்களிலுமல்ல. அதற்குரியவிடம்ஹிருதயமென்றுணர்க. அரண்மனையில் மிகவும் பரிசுத்தமான ஓர் அறையை நியமித்து அதில் இ

ரர்கள் யாவரும் அநுமதியின்றிப் பிரவேசிக்காமல் ஏற்பாடுசெய்து அவ்வறையில் மஹான்கள் திருவுருக்களமைந்தபடங்களையும் ஆத்ம விசாரணைக் கனுகூலமான வேதாந்தக் கிரந்தங்களையும் மற்ற வஸ்துக்களையும் மனதிற்கு ஆனந்தம் விளைவிக்கத்தக்கவையாய் வைத்து யாதொரு சந்தடியு மில்லாதிருக்கச் செய்து, நித்திய கடன்களை முடித்துக்கொண்டு பரிசுத்தமாய் ஓராசனத்திருந்து பத்மாசனம்பூண்டு இருநயனங்களையும் மூடி அகமுகமாய் மனதைச் செலுத்தி உலகத்துள்ளோர் யாவருக்கும், மிருகம் பக்ஷி புழுமுதலிய எல்லா சிருஷ்டிகட்கும், சுபமுண்டாக வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்து ஜகதீஸ்வரனாகிய பராபரக்கடவுள் உங்கள் சரீரமாகிய க்ஷேத்திரத்தில் வாஸம்பண்ணுவதாகவும், அக்கடவுளையே உங்களிஷ்டதேவதையாகவு மெண்ணி அவ்விஷ்டதேவதையை நீங்கள் எந்த க்ஷேத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும் விக்கிரகத்தில் அதிக பக்தி செலுத்தியிருக்கிறீர்களோ அந்த விக்ரகரூபமாய்ப் பாவித்து, அலையும்படியான மனதை அந்த ரூபநோக்கத்திற் செலுத்தி க்ஷேத்திரத்திற் பூஜைசெய்வதுபோற் பக்திபூர்வம் வந்தன வழிபாடுகளுடன் அபிஷேகாதிகள் செய்து இஷ்டமான புஷ்பவர்க்கங்களா லர்ச்சித்து விபூதி கந்தவாஸனை வர்க்கங்களாற் பரிமளிக்கச்செய்து மனதிற்கிஷ்டப்படி அலங்காரங்கள்செய்து பலவிதநைவேத்தியங்களை அற்பித்து தூபதீபங்கள் கொடுத்து இஷ்டப்படி ஸ்தோத்திரம் பண்ணி வர்ணித்து உங்கள் குறைகளைச் சொல்லி நிவர்த்தி கேட்டுப் பிறகு தியானத்தால் அக்கடவுளின் விக்கிரகத்தை அந்த க்ஷேத்திரத்திலேயே வைத்துவிட்டு த்யானத்தை சம்பூர்ணம் பண்ணிக்கொண்டு எழுந்து அறையைவிட்டு நீங்கி அதில் அசுத்தமானவை யொன்றுஞ் செல்லவொட்டாமல் முத்திரைபோட்டு வேலைகளிற் பிரவேசியுங்கள். மறுநாளு மப்படியே தியானத்திலிருந்து நீங்கள் எவ்வித அலங்காரங்களுடன் அந்த க்ஷேத்திரத்தில் வைத்தீர்களோ அவ்வலங்காரங்களுடனே அக்கடவுளின் விக்கிரகத்தை உங்களிருதயத்திற்குத் திரும்பயெடுத்துவந்து முன் செய்த அலங்காரங்களையும் புஷ்பபத்ராதிகளையும் முறையே ஒவ்வொன்றாய் அகற்றி, மறுபடியும் விதிப்படி யபிஷேகாதிகள் செய்து பூஜித்து நமஸ்கரித்து வாருங்கள்.

"இப்படிச் செய்வதற்கே சகுணோபாஸனை யெனப்படுவது. இதுவரையிற் சொல்லிவந்தது பகிர்முகப்பூஜை. இதில் மனம் நிலைத்தபிறகு அவ் விக்கிரகத்தை ஹிருதயத்திலேயே சதாவைத்து முறைப்படி பூஜித்து நமஸ்கரிப்பது அகமுகபூஜை என்பார்கள். இன்னும் பலவிதமாய்ப் பாவித்து உபாசிப்பவர்களுமுண்டு. ஆனால் எல்லாவற்றிற்கும் பொருள் ஒன்றாகையால் இதுவே நீங்களனுஷ்டிக்க வேண்டுவது.

"இப்படிச் செய்வதில் நாளுக்குநாள் பக்தி யதிகரித்துத் தங்களுக்குப் பிரியமான யாவற்றையுங் கடவுளுக் கற்பித்து, மனோலயம்

பெற்று அக்கடவுளையே பிரத்தியக்ஷமாய் அகக்கண்ணால் தரிசிக்கலாம். இவைகளை அனுஷ்டித்து வாருங்கள்" என்றுரைத்து "உங்களிஷ்டமான விக்கிரகம் எது" என, இருவரும் பணிந்து "ஐயனே! தேவரீர் தரிசனமானதும் எங்கள் மனதிற்குப் பூர்ணமான மோக்ஷ விருப்பத்தை யுண்டாக்கினதும் சுப்ரமண்ய க்ஷேத்ரமானதால் அக்கடவுளின் விக்ரகத்தையே அவ்விடத் திருந்தபடியே தியானத்தால் ஹிருதயத்தில் வைத்துப் பூஜிக்கின்றோம்" என, யோகீஸ்வரர் மகிழ்ந்து அனுவதித்தசு சிதம்பரசேகரனையழைத்து அவன் சிரசில் தமது அஸ்தத்தை வைத்து "இன்றுமுதல் உனக்குச் சிதம்பரதேவர் என்று பேர்வழங்கக்கடவது" என்று நாமமுரைத்து விடைபெற்று அரண்மனை சென்று குலசேகரப்பெருமாளையும் விக்ரமசேனனையுங் கண்டு புத்திரர்கட்கு விவாஹம் முடித்துவைக்க வேண்டிய முயற்சிபண்ண உபதேசித்து அவர்கள் வணங்கி விடைகொடுக்கப் பெற்று யாவரையு மாசீர்வதித்துத் தமதிருப்பிடஞ் சென்றார்.

31. முக்தி.

குலசேகரப்பெருமாள் தமது புத்திரனுக்கு யோகீஸ்வர ரருளிச்செய்தபடி விவாஹமுடிப்பதில் சிந்தைகொண்டவராய்த் தமது பிராண சிநேகிதரும் பிரதான மந்திரியுமான விக்ரமசேனனை அருகில் வரச்செய்து தாம்கொண்ட எண்ணத்தை வெளியிட, அவர் சந்தோஷித்தராய் இராஜகுமாரனது மனோபாவங் கிரகிக்கவெண்ணி இராஜனிடம் விடைபெற்றுத் தன தரண்மனைசென்று புகழேந்தியை யழைத்து "அப்பா புத்திரா! நமது சிதம்பரதேவருக்கு விவாஹ மஹோற்சவம் நடத்தும்படி யோகீஸ்வர ருரைத்துச்சென்றதுமன்றி நமதரசனும் அதே கவலையாயிருக்கிறார். நீ யாவற்றையு முணர்ந்தவனும் இராஜகுமாரனது மனோபாவ மறிந்தவனு மாகையால் உனது யோசனையைக் கேட்போமென்று இராஜனிடம் மறுமொழி கூறாது இங்கேவந்தேன்" என்றார்.

புகழேந்தி மிகவும் மகிழ்ந்து "தந்தையே! எல்லாமுணர்ந்த தேவரீருக்கோ நான் யோசனைசொல்வது? ஆகிலும் என்னைக் கேட்டபடியாற் சொல்லுகிறேன். சிதம்பரதேவர் விவாஹத்தை விரும்பியிருப்பவரேயன்றி சன்யாசித்வம் இப்போதே பெற்றிருக்கவேண்டுமென்றிருப் பவரல்லர். ஆனாற் புத்திரோற்பத்திக்கல்லது விஷயசுகத்தைக்கோரி விவாஹத்தில் இச்சைவைத்திருப்பவருமல்லர். ஆகையால் சர்வ லக்ஷணங்களு மமைந்த ஒரு பதிவிரதாசிரோன்மணியை வதுவை செய்விக்கவேண்டும்" என்றான்.

விக்ரமசேனன் தனது குமாரன் உரைத்தபடி சர்வலட்சணங்களுமமைந்த பதிவிரதையான இராஜகன்னிகையைத் தேடுவதற்காக

அனேக இராஜதானிகட்குத் தூதனுப்பி அகப்படாமல் திகைத்துப் பிறகு தமது நண்பரான மஹாதேவரை யனுப்பி அவரால் ஆனமட்டுந்தேடி முடிவில் நிடதேசத் தரசனும் நளவம்ச ஜாதனுமான பிரதாபசந்திரனது தவத்தா லுற்பத்தியான பரிமளகந்தி யென்னும் பதிவிரதாசிரோன்மணியைச் சிதம்பரதேவருக்கும் அவ்வரசன் மந்திரியின் குமாரத்தியைத் தனது புத்திரனுக்கும் மணம் முடிக்கச் சித்தம்செய்வித்து நல்ல சுபமுகூர்த்தத்தில் பாலைவனத்தை யலங்கரித்து விவாஹம் முடித்தார்கள். பரமார்த்தகேஸரி தனது சேனையுடனும் பாலைவனத்திலேயே விவாஹமஹோற்சவம் வரையிலிருந்து சந்தோஷ சித்தனாய்க் குலசேகரப்பெருமாளிடமும் விக்ரமசேனனிடமுஞ் சிதம்பரதேவரிடமும் விடைபெற்றுத் தனது பரிவாரங்களுடன் மாளவதேசஞ்சென்று சுகித்திருந்தான்.

சிதம்பரதேவரும் புகழேந்தியும் யோகீஸ்வரர் திட்டம்பண்ணியபடி தினமும் விடாமுயற்சியுடன் மானசபூஜைசெய்து மனக்கலக்கங்களை யகற்றி இராஜ்ஜியபார நடவடிக்கையிற் கொஞ்சமேனும் தவறாது நடந்துகொண்டு வந்தார்கள்.

குலசேகரப்பெருமாள் தாம் சிறையிலடைத்த இரவிவர்மனைச் சிறைமீட்டு அவனுக்குச் சில வெகுமதிகளளித்து அழகாபுரத்திற்கனுப்பிவிட்டுச் சிலநாள் ஆனந்தமுடன் வாழ்ந்து பிறகு தன் பத்தினிகளுடனும் விக்ரமசேனனுடனும் இராஜ்யத்தை விட்டு மூகாம்பிகைவனஞ் சென்று யோகீஸ்வரர் கிருபையால் தவம்புரிந்து முக்தியடைந்தனர்.

சிதம்பரதேவர் தன்மந்திரியுடனும் விஜயசேகரனுடனும் மானசபூஜையில் திடச்சித்தம்பெற்று மனோசமாதானமும், சாந்தமும், சந்துஷ்டியு மடைந்து பிரகாசிக்கலாயினர்.

குருவருளாலும் தேவகிருபையாலும் நற்குண நற்செய்கை பகவற்பக்தி முதலிய சிரேஷ்டத்வமமைந்த ஓர் செல்வனை ஈன்று பருவகாலத்தில் ஓர் பதிவிரதையை மணஞ்செய்வித்துப் பட்டமளித்து ஏகாந்தம் விரும்பித் தனது பிதாவைப்போல் தனது மந்திரி புகழேந்தியும் விஜயசேகரனும் தொடர்ந்துவர மூகாம்பிகை வனஞ்சென்று சமாதியனுஷ்டித்து, குருவருளால் எட்டுதற்கரிய பரிபூரணமான மோக்ஷஸாம்பிராஜ்யத்தை யடைந்து கடைசியில் விதேஹமுக்தி பெற்றார். சுபம்.

சிதம்பரதேவர் சரிதம் முற்றிற்று.

குருவே நம:.